செப்டம்பர் உ தேதி
1981

# தமிழரசு

௨

JL
V21 ... Q1
N81
85371

# தமிழரசு

1-9-1981 50காசு

திருவள்ளுவர் ஆண்டு 2012

துன்மதி — ஆவணி 16

9 செப் 1981









25371

பார்வையற்றோருக்குச் சிறப்புக் கல்வி வழங்கும் பொருட்டு அரசு சுமார் 10 பள்ளிகளை நடத்தி வருகிறது. அத்துடன் இந்த ஆண்டு இரண்டு புதிய பள்ளிகளை கோயம்புத்தூரிலும், தர்மபுரியிலும் தொடங்கியிருக்கிறது. அப்பள்ளியில் 1வது வகுப்பு முதல் 5வது வகுப்பு வரை கல்வி கற்பிக்கப்படும். உணவும், உறைவிடமும் இலவசமாகும். ஒவ்வொரு பள்ளியிலும் 50 குழந்தைகள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

(ஆ) காது கேளாதோருக்கு அரசின் புதிய பள்ளிகள்

காது கேளாத குழந்தைகளுக்கென்று அரசு ஏற்கெனவே சுமார் 9 பள்ளிகளை நடத்தி வருகிறது. இந்த ஆண்டில் மேலும் இரண்டு பள்ளிகளை அரசு ஆரம்பிக்கிறது. அப்பள்ளிகள் விருதுநகரிலும், ஈரோட்டிலும் இயங்க ஆரம்பித்துள்ளன. இப்பள்ளி ஒவ்வொன்றிலும் 50 குழந்தைகள் கல்வி வசதி பெறுவார்கள். அவர்களுக்கு உணவும், உறைவிடமும் இலவசமாக வழங்கப்படும்.



**ஊனமுற்றோர் மறு வாழ்வு:**

(அ) கடும் கை கால் ஊனத்தால் பாதிக்கப்பட்டோருக்கு அரசின் புதிய பள்ளி:

கடுமையான கைகால் ஊனத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கென்று, தனியாக அரசுப் பள்ளிகள் ஏதும் இன்று வரை இல்லை. இக்குறையைப் போக்கும் நோக்கத்துடன் தமிழ்நாடு அரசு, ஓர் பள்ளியை மதுரையில் நிறுவியுள்ளது. இதில் 100 குழந்தைகள் கல்வி பயில்வார்கள். குழந்தைகளுக்கு உணவும், உறைவிடமும் இலவசம். ஒன்றாவது வகுப்பு முதல் 5வது வகுப்பு வரை அங்கு கல்வி கற்பிக்கப்படும்.

(ஆ) ஊனமுற்ற மாணவ மாணவியருக்கு கல்வி உதவித் தொகை வழங்குதல் :

ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊனமுற்ற மாணவர்கள் சாதாரணப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் தொழில் பயிற்சி நிலையங்களிலும் மற்றவர்களுடன் இணைந்து கல்வி பயின்று வருகிறார்கள். அவர்களில் 9-வது வகுப்பு அல்லது அதற்கு மேல் பொதுக் கல்வி, தொழில்கல்வி பயில்வோருக்கு மத்திய அரசின் நிதி உதவியுடன் கல்வித் தொகை வழங்கி வருகிறது. இவ்வாண்டு முதல் தமிழ்நாடு அரசு 1வது வகுப்பு முதல் 8வது வகுப்பு வரை கல்வி பயிலும் ஊனமுற்ற குழந்தைகளுக்கும் கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்த ஆரம்பித்துள்ளது. இந்த உதவித் தொகை புத்தகர், நோட்டு வாங்குவதற்காகப் பயன்படுத்த உதவிகரமாக இருக்கும் என்று கருதப்படுகிறது.

(இ) ஊனமுற்றோருக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு சிறப்புப் பயிற்சி:

ஊனமுற்ற குழந்தைகளுக்குக் கல்வி கற்பிப்பதற்குத் தனித் திறமையும், பின்னணியும், மனப் பக்குவமும் தேவை. அத்தன்மையை அடைவதற்கு ஓராண்டுக் காலம் சிறப்பு ஆசிரியர் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். சிறப்பு ஆசிரியர் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ஊனமுற்ற குழந்தைகளுக்குச் சிறப்பாகக்கல்வி வழங்க இயலும். ஆகவே இவ்வாண்டு முதல் காது கேளாத குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சியில் அதிகமான ஆசிரியர்களைச் சேர்த்துப் பயிற்சி அளிக்க அரசு முடிவு எடுத்துள்ளது. அதேபோல் கண் தெரியாத குழந்தைகளுக்கான ஆசிரியர்களுக்கும் சிறப்புப்பயிற்சி வசதியைக் கூட்டி, அதிக ஆசிரியர்கள் பயன் பெற அரசு திட்டம் தீட்டியுள்ளது.

**தொழில் பயிற்சிக்கான திட்டங்கள்:**

காது கேளாதவர்களுக்குப் பொறியியல் பணிகளில் பயிற்சி அளிக்கும் பொருட்டு கிண்டி, மதுரை ஆகிய இடங்களில் உள்ள அரசு தொழில் பயிற்சி நிலையங்களில் தனிப்பிரிவுகள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன. கிண்டியில் உள்ள பிரிவில் ''பொறிப்பகுதி பொருத்துபவர் பணியிலும்'', மதுரையில் ''மின்சாரப் பணியாளர் பணியிலும்'' பயிற்சி அளிக்கப்படும். ஆண்டுதோறும் சுமார் காதுகேளாத 40 மாணவர்கள் இப்பயிற்சியின் மூலம் பயன் பெறுவார்கள்.

இண்டியில் உள்ள கண் தெரியாதவர்களுக்கான அரசு சிறு பொறியியல் பயிற்சிக் கூடத்தை அரசு தொழில் பயிற்சிக்கூட அளவுக்கு உயர்த்துதல்:

கண்தெரியாதவர்களுக்கென்று அரசு சிறு பொறியியல் பயிற்சிக் கூடம் ஒன்று இயங்கி வருகிறது. இப்பயிற்சியின் அளவையும், தன்மையையும் உயர்த்தி, வேலைக்குரிய வாய்ப்பினைப் பெருக்குவதற்காக, இந்நிலையத்தை அரசு தொழில் பயிற்சிக் கூடத்தின் அளவிற்கு உயர்த்த அரசு தீர்மானித்துள்ளது. இதனால் கண் தெரியாதவர்கள் அரசு தொழிற் பயிற்சிக்கு இணையான பயிற்சியைப்பெறுவார்கள். அதன் மூலம் அவர்களது வேலை வாய்ப்பும் உயரும் என்று அரசு எதிர்பார்க்கிறது. இத்திட்டம் இவ்வாண்டு முதல் செயல்படத் துவங்கும்.

**வேலை வாய்பிற்குரியப் புதிய திட்டங்கள்:**

(அ) வட்டார மறுவாழ்வு நிலையங்கள் :—

ஊனமுற்றோர் மறுவாழ்வுக்காகத் தனியாக இயங்கும் அலுவலக அமைப்பு ஏதும் இதுவரை இல்லை. இக்குறையைப் போக்க நான்கு வட்டார மறுவாழ்வு



லையங்கள்'' இவ்வாண்டு நிறுப்படும். அவை சென்னை, ாவை, வேலூர், தஞ்சாவூர் கிய இடங்களில் இயங்கும். வ்வொரு நிலையத்திலும் 20 னமுற்றோரை ஒவ்வொரு ாதமும், சேர்த்து, அவர்களது வம், ஈடுபாடு, திறமை, ஊனம் யவற்றை அறிந்து, அவர்ளுக்குத் தகுந்த பயிற்சி, அல்து பணியில் அமர்த்துவதே இந்நிலையங்களின் முக்கியப்பணி ஆகும். இப்பொழுது மதுரையில் இயங்கி ரும் நிலையத்தையும் சேர்த் மொத்தம் உள்ள ஐந்து நிலையங்கள் மூலம், ஆண்டு தோறும் சுமார் 1,200 ஊனமுற்றோர் மறுவாழ்வு பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**னமுற்றோர் சுய வேலை ாய்ப்பில் ஈடுபட உதவிகள்:**

(அ) ஊனமுற்றோர் சுயவேலை வாய்ப்பில் ஈடுபட அரசு ஊக்குவிக்கும். சுய வேலைவாய்ப்பில் ஈடுபட விரும்பும் ஒவ்வொருவருக்கும் வங்கியின் மூலம் குறைந்த வட்டியில் கடன்வழங்க ஏற்பாடு செய்யப்படும். வங்கி வழங்கும் கடனுக்குச் சமமாக— அதிகபட்சம் ரூபாய் 1000-க்கு ட்பட்டு—அரசு மானியமும் ழங்கும். இத்திட்டத்திற்கு ரூபாய் 5 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

(ஆ) ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களில் வாழ்பவர்கள் வங்கியின் மூலம் கடன் உதவியும் 33.33 சதம் மானிய உதவியும் பெற்று, சிறு தொழில் தொடங்குகிறார்கள். இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும்ஊனமுற்றோர் குறைந்த பட்சம் 50 பேர் பயனடைய வேண்டும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதனால் சுமார்800-க்குக்குறையாத ஊனமுற்றவர்கள் இந்த ஆண்டு பயன் அடைவார்கள்.

**ஊனமுற்றோருக்கான ஏனைய நல் வாழ்வுத் திட்டங்கள்:**

(அ) இரு கால்களும் பழுதுபட்டோர் 100 பேருக்கு இலவச சக்கர வண்டிகள் :—

இதுவரை ஊனமுற்றோருக்கு ஆண்டுதோறும் சுமார் 1,000 மூன்று சக்கர வண்டிகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. செவிப்புலன் பழுதுபட்ட பள்ளி செல்லும்குழந்தைகளுக்குக் காது கேட்கும் கருவிகள் - சுமார் 1000 ஆண்டுதோறும் இலவசமாக வழங்கப்படுகின்றன. அத்துடன் இவ்வாண்டுஇருகால்களும் பழுதுபட்டு, நடக்க முடியாமல் இருக்கும் 100 பேருக்கு இலவசமாக சக்கரவண்டிகள் வழங்கப்பட இருக்கின்றன.

(ஆ) கண்பார்வையற்றோரில் வேலை இல்லாதிருப்போருக்கு உதவித் தொகை :

வேலை வேண்டி வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்தும், வேலை வாய்ப்புப் பெறாமல் இருக்கும் கண்பார்வையற்றோருக்கு, உதவித் தொகை வழங்கஅரசு முடிவெடுத்துள்ளது. இதற்குரிய விதிமுறைகளும், வரம்புகளும்வகுக்கப்படுகின்றன. இவ்விதிமுறைக்கு உட்படும் கண் பார்வையற்ற ஒவ்வொருவரும் மாதம் ரூபாய் 50 உதவிப்பணமாகப் பெறுவர். அவருக்கு வேலை கிடைக்கும் வரை இவ்வுதவி நீட்டிக்கப்படும்.



**ஊனமுற்றோர் விளையாட்டுப் போட்டிகள்:**

ஊனமுற்றோருக்குத் தன்னம்பிக்கையை வளர்க்கவும், அவர்களிடம் புதைந்து கிடக்கும் திறமையை வெளிக் கொணரவும் விளையாட்டுப் போட்டிகளை அரசுநடத்தத்திட்டமிட்டுள்ளது. இவ்விளையாட்டுப் போட்டிகள் முதலில் மாவட்ட அளவிலும், பின்பு மாநில அளவிலும் நடைபெறும்.

**ஊனமுற்றோர் பற்றிய கணக்கெடுப்பு:**

ஊனமுற்றோரின் எண்ணிக்கை அவர்களது பிரச்சினையின் அளவு, தன்மை ஆகியவற்றை அறிவதற்காக ஓர் கணக்கெடுப்பு நடத்தப்படும். இக்கணக்கெடுப்பின் முடிவுகள் ஊனமுற்றோரின் மறுவாழ்விற்கு மேலும் திட்டங்கள் தீட்டுவதற்குப் பயன்படுத்தப்படும்.

**பிற திட்டங்கள்:**

ஊனமுற்றோருக்கு உயர் சேவை செய்து வருபவருக்கு தமிழக அரசு இவ்வாண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் விருது வழங்கிச் சிறப்பிக்க முடிவு செய்துள்ளது.

கிராமப்புறங்களில், பள்ளி செல்லாமல் இருக்கும் ஊனமுற்ற குழந்தைகளை, பள்ளிகளில் சேர்க்கும் பொருட்டு, முயற்சிகள் எடுக்குமாறு கல்வித் துறையும், ஊரக வளர்ச்சித் துறையும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன.

புதிதாகக் கட்டப்படும் பொதுக் கட்டிடங்களில் சாய்வுப்பாதை, மின்தூக்கி ஆகிய வழிகள் ஏற்படுத்த வேண்டுமென்றும், அதன் மூலம் ஊனமுற்றோர் அத்தகைய கட்டடங்களில் சுலபமாக நடமாடுவதற்கு வழி வகை செய்ய வேண்டுமென்று அரசு மற்றும் தனியார் நிறுவனங்களை அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

தமிழக அரசின் இப்புதிய திட்டங்களால் ஊனமுற்றோரில் பலர் ஆண்டுதோறும் மறுவாழ்வு பெறுவார்கள். ஆனால், இத்திட்டமும் பணியும் இவ்வாண்டோடு முடிவதில்லை; அவை ஆண்டுதோறும் தொடரும்; வளரும்,பெருகும். அதன் பயனாக ஊனமுற்ற ஒவ்வொருவரும் எல்லா வசதியும், வாய்ப்பும் பெற்று மற்றவரைப்போல், தானும் தலை நிமிர்ந்து நடக்கும் நாள் வெகு தூரத்தில் இல்லை:

லும் மாவட்டத் தொழில் மையங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

1978-79 முதல் 1980-81 வரையான காலத்தில் சுமார் 12,800 நிரந்தரச் சான்றிதழ்களும் சுமார் 27,500 தற்காலிகச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன. 6,908 சிறு தொழில்களுக்கு ரூ. 13.99 கோடி நிதி உதவியாகத் தொழில் மையங்களால் வங்கிகளிடமிருந்து பெற்றுத் தரப்பட்டுள்ளது. இதனைத் தவிர வங்கிகளிடமிருந்து நேரடியாகவும் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், தேசிய சிறு தொழில் நிறுவனம், கதர் கிராமக் கைத்தொழில் வாரியம், சிட்கோ முதலியவற்றிலிருந்து 21,520 சிறு மற்றும் கைத்திறத் தொழில்கள் பெற்றுள்ள நிதி உதவி ரூபாய் 13.52 கோடியாகும். மூன்று ஆண்டுகளில் பதிவு பெற்ற சிறுதொழில்கள் மூலம் மட்டும் தோற்றுவிக்கப்பட்டுள்ள வேலை வாய்ப்பு 1.74 இலட்சமாகும். தொழில்மையங்களின் ஈடுபாட்டுடன் கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 40,000-க்கும் மேற்பட்ட நபர்களுக்குப் பயிற்சி வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன.

புதுக்கோட்டை, வடஆர்க்காடு, தென்னார்க்காடு, மாவட்டங்கள் மற்றும் கிழக்கு இராமநாதபுரம் போன்ற தொழில்களில் பின்தங்கிய பகுதிகள் சிறுதொழில் பதிவில் 100 சதவீத உயர்வு கண்டிருப்பது தொழில் மையங்கள் மேற்கொண்டு வரும் முனைப்பான முன்னேற்ற நடவடிக்கைகளுக்குச் சான்று கூறுகின்றன. தொழில் நிலையங்கள் மிகக் குறைவாய் இருந்து வந்திருக்கும் தஞ்சாவூர் மாவட்டத்திலும், மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களிலும் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட வளர்ச்சி காணப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ):**

சிட்கோ என்று அழைக்கப்படும் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் துவக்கத்தில் ஒரு தனியார் நிறுவனமாக 1970-ம் ஆண்டு மார்ச் திங்கள் 23-ம் நாள் நிறுவப்பட்டு, பின்னர் 1971-ம் ஆண்டு சனவரித் திங்கள் 21-ம் நாளன்று ஒரு பொது நிறுவனமாக மாற்றியமைக்கப்பட்டது. இந் நிறுவனத்தின் மூலக் குறிக்கோள் தமிழகத்தில் தொழில் வளர்ச்சியினைக் குறிப்பாக சின்னஞ் சிறு தொழில் துறைகளில் பரவலான, விரைவான வளர்ச்சியையும் முன்னேற்றத்தையும், ஊக்குவிக்கும் பணியில் ஈடுபட்டு வருவதாகும்.

**சிட்கோவின் செயல் திட்டங்கள்:**

(அ) அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் (தொழிற்பேட்டைகள்)

(ஆ) சிறு தொழில் பிரிவுகளுக்குத்தேவையான இன்றியமையா மூலப்பொருட்களை கொள்முதல் செய்து விநியோகித்தல்.

(இ) சிறுதொழில் பிரிவுகளின் உற்பத்திப் பொருட்களுக்கு விற்பனை வசதி செய்து தருதல்.

(ஈ) மேலும் 15 சதவீதம் மத்திய மூலதன மானியம்/தமிழக அரசு மானியம்வழங்குதல், நலிவுற்ற சிறுதொழில்களுக்கு முன்வரம்புத் தொகை உதவி, விற்பனை வரியை ஈடு செய்ய வட்டியில்லாக் கடன் உதவி, குறைந்தழுத்த மின்சாரத்தை உபயோகிக்கும் சிறுதொழில்களுக்கு மானியத்தொகை உதவி போன்ற ஒருமித்த திட்டங்களையும் நிறைவேற்றி வருகிறது.

தமிழ்நாட்டிலுள்ள 783 தொழிற்கூடங்களடங்கிய 33 தொழிற்பேட்டைகளை சிட்கோ, தமிழக அரசின் சார்பில் ஏற்று, தொடர்ந்து நிர்வகித்து இதன் மூலமாக 45,500 பேர்களுக்குத் தொழில் வாய்ப்பை ஏற்படுத்தி வருகிறது.

மேலும் இந் நிறுவனம் இன்றியமையாத மூலப்பொருட்கள் விநியோகத்தினை ஏற்று வெற்றிகரமாக செயல்படுத்தி வருகின்றது. சிறுதொழில் வளர்ச்சி நிறுவனங்களின் உற்பத்திப் பொருட்களுக்கு விற்பனை வசதி பெற்றுத் தருதல், நலிவடைந்த சிறுதொழில் நிறுவனங்களுக்கு முன் வரம்புத் தொகை உதவியளித்தல், மூலதன மானியம் வழங்குதல் போன்றவற்றைச் செம்மையாகச் செயல்படுத்தி வருகின்றது.

**தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்:**

கிராமப்பகுதிகளில் வேலை வாய்ப்பினை உருவாக்கவும், குறிப்பிட்ட ஊரகத்தொழில்களின் வளர்ச்சியைத் துரிதப்படுத்தவும் தொழில் கூட்டுறவுச்சங்க அமைப்பு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வமைப்பின் பயனால் வியக்கத் தகுந்த முறையில் தேயிலை மற்றும் தீப்பெட்டித் தொழில்களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. நீலகிரியிலுள்ள 12 தொழில் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் ரூ. 7 கோடிக்கு தேயிலை விற்பனை செய்துள்ளன. இதனால் 39,700 பேர்களுக்கு நேரடியாக வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. 1977-78-ம் ஆண்டில் 14 ஆக இருந்த தொழிற்கூட்டுறவுத் தீப்பெட்டிப் பணிச் சங்கங்கள் 1980-81-ல் 85 ஆக உயர்ந்துள்ளது. 1977-78-ம் ஆண்டு தீப்பெட்டி உற்பத்தியின் மதிப்பு ரூ. 5 கோடியாக இருந்தது. இப்பொழுது ரூ. 20 கோடியாக உயர்ந்துள்ளது. இந்தச் சங்கங்கள் முழுத் திறனை அடையும்போது 1.70 இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும். முன்பு தீப்பெட்டித் தொழில் இராமநாதபுரம், திருநெல்வேலி, வடஆர்க்காடு மாவட்டங்களில் மட்டுமே இயங்கி வந்தது. தற்பொழுது இத்தொழில் தர்மபுரி, கோயம்புத்தூர், புதுக்கோட்டை போன்ற மாவட்டங்களுக்கும் பரவ ஆரம்பித்துள்ளது.

கடந்த நான்கு ஆண்டுக் காலத்தில் கிராமப்புறங்களில் தமிழக அரசு எடுத்த முற்போக்கு நடவடிக்கைகளால், வறுமையை எதிர்த்து ஒரு மௌனப் புரட்சி உண்டாகியுள்ளது. மேலும் அதனைத் துரிதப்படுத்த தமிழக அரசு ஒல்லும் வகையெல்லாம் முயலுகிறது.

அதற்கு உறுதுணையாக பக்க பலமாகத் துணை புரிய மக்களை தமிழக அரசு விரும்பிக் கேட்டுக் கொள்கிறது. அருளாளர் காந்தி அடிகள் கண்ட கனவுகள் நிறைவேற, நாம் ஒன்றுபட்டு ஊரகப்பகுதிகளில் தொழில் வளம் பெருக முனைவோம்!

(சென்னை வானொலி 16-8-81).



**அட்டை சொல்லும் செய்தி**

'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்றார் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள். அவரது கொள்கை ஒவ்வொன்றையும் நடைமுறைப்படுத்தி வரும் மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் தலைமையில் வீறுநடை போட்டு வரும் தமிழக அரசு ஆதிதிராவிடர்—ஆதிதிராவிடர் அல்லாத மக்களிடையே சாதி வேறுபாடுகள் மறந்து ஒற்றுமை உணர்வை உருவாக்கும் வகையில் அண்ணல் காந்தி அடிகள், பேரறிஞர் அண்ணா ஆகியோர் கண்ட கனவை நனவாக்கும் வகையில் ஆண்டவன் முன் அனைவரும் சமம் என்ற இலட்சியத்தை நடைமுறைப் படுத்தும் வகையில் சமபந்தி பொது விருந்தினையும் திருக்கோயில்களில் கூட்டு வழிபாட்டிற்கும் ஏற்பாடு செய்திருந்தது.

**சமபந்தி-பொது விருந்து**

தமிழக அரசின் இந்தத் திட்டம் வெற்றி பெறும் என்பதற்கு அச்சாணியாக சென்னை மாண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள், மாண்புமிகு செய்தி - அறநிலையத் துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ராமச்சந்திரன் அவர்கள் ஆகியோர் ஆதிதிராவிடர் ஆதிதிராவிடர் அல்லாதோர் மத்தியில் சரி சமமாக அமர்ந்து உணவு அருந்தினார்கள். இந்த நிகழ்ச்சி புதிய வரலாற்றை உருவாக்குவதாக அமைந்திருந்தது.

முதல் நிகழ்ச்சியாக கலப்புத் திருமணம் ஒன்றினை நடத்தி வைத்தார் மாண்புமிகு முதல்வர் அவர்கள். தேவராஜன் என்ற முதலியார் வகுப்பைச் சேர்ந்த வாலிபருக்கும் ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்த சந்திரா என்ற பெண்ணுக்கும் கலப்புத் திருமணம் திருவேற்காட்டில் பிரம்மாண்டமான பந்தலில் நடந்தது.

# சமபந்தி பொது விருந்தும் கூட்டு வழிபாடும்

திருவேற்காடு அருள்மிகு தேவிகருமாரியம்மன் கோயிலில் நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சி அமைந்திருந்தது. ஆதிதிராவிடர் - ஆதிதிராவிடர் அல்லாத மக்களிடையே சாதிவேறுபாடுகள் ஒழிந்து எல்லாரும் ஒற்றுமை உணர்வுடன் வாழ வேண்டும் என்ற உன்னதமான இலட்சியத்தை அடிப்படையாகக் கொண்டு 15-8-81 அன்று தமிழ்நாட்டிலுள்ள 5ஆயிரம் திருக்கோயில்களில் ஐந்து இலட்சம் மக்கள் கூட்டு வழிபாட்டிலும் சமபந்தி பொது விருந்திலும் பங்கு பெற்றனர்.


**கலப்புத் திருமணம்**

சென்னை அருகிலுள்ள திருவேற்காடு அருள்மிகு தேவிகருமாரியம்மன் கோவில் பொது நிதியிலிருந்து விடுதலைத் திருநாளன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு

பிறகு அதே மேடையில் சமபந்திப் பொது விருந்தும் கூட்டுவழிபாடு நிகழ்ச்சியும் மங்கல இசையுடன் துவங்கியது. அறநிலையத்துறை ஆணையர் திரு யு. சுப்பிரமணியம் ஐ ஏ. எஸ்.. அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

விழாவுக்குத் தலைமை வகித்த மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் பேசுகையில் 'ஆண்டவனின் பிள்ளைகளாக உள்ள ஏழை, எளிய, தாழ்த்தப்பட்ட மக்கள் திருமணத்திற்குக் கோயில் நிதியிலிருந்து உதவி செய்ய வேண்டும்' என்ற மாண்புமிகு முதல்வர் அவர்களின் சீரிய யோசனையைத் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.





# 'சாதிக் கொடுமைகள் வேண்டாம்-அன்பு தன்னிற் செழித்திடும் வையம்'

## — மாண்புமிகு முதல்வர்

**வா**ழ வைக்கும் தெய்வமாகிய தமிழகப் பெரியோர்களே,

தாய்மார்களே,

என் இரத்தத்தின் இரத்தமான உடன் பிறப்புகளே,

முப்படைத் தளபதிகளே,

தலைமைச் செயலாளர் அவர்களே,

நீதிபதிகளே, செயலகத்தில் செயல் புரிகின்ற வல்லுநர்களே மற்றும் இந்த அரசை நடத்துவதற்கு அதிகாரிகளாக இருந்து பணியாற்றுகின்ற அத்துணை நண்பர்களே!

இந்த சுதந்திர தினத்தன்று கோட்டையிலே கொடி ஏற்றுவதற்கு, உங்கள் முன் தமிழக அரசினுடைய கருத்தினை வெளியிடுவதற்கும் வாய்ப்புத் தருகின்ற வகையில் இந்தச் சுதந்திரத்தை நமக்கு ஈட்டுத் தந்த அத்துணை தியாகிகளுக்கும் நாம் முதலில் நம்முடைய வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்ள வேண்டும், தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

உலகெங்கிலும் உள்ள பிரச்சினைகள் இந்திய துணைக் கண்டத்திலும் எதிரொலிக்கின்றன என்பதை நாம் மறந்து விடக்கூடாது என்பதே எனது முதல் வேண்டுகோள் ஆகும்.

ஒரு மனிதனுடைய உடலில் எங்கேயோ ஏதோ ஒரு பகுதியில் ஒரு வலி வந்தாலும், அந்த மனிதனுடைய வாழ்க்கையில் அது எப்படிப்பட்ட தொல்லைகளை ஏற்படுத்துமோ அதைப்போல் இந்தியத் துணைக் கண்டத்திலே எங்கே ஒரு பிரச்சினை எழுந்தாலும்


**தமிழரசு**

மலர் 12 இதழ் 5

1—9—1981

திருவள்ளுவர் ஆண்டு 2012

துன்மதி — ஆவணி 16

அது அனைத்து மாநிலங்களிலும், இந்தியக் குடிமக்கள் இருக்கின்ற ஒவ்வொரு வீட்டிலும் எதிரொலிக்கும் என்பதை இங்கே நான் கொஞ்சம் அழுத்தமாக எடுத்துக்கூறவிரும்புகிறேன். ஏதோ எங்கேயோ நடக்கிறது என்பதை எண்ணி நாம் நிம்மதியாக இருக்க விரும்புவோமானால் அந்த நோய் என்றாவது ஒருநாள் நம்மையே தாக்கலாம் என்பதை நாம் மறந்து விடுகிறோம் என்று பொருளாகும் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

நாட்டிலே இருக்கின்ற பொருளாதாரப் பிரச்சினைகள், வறுமைக் கோட்டுக்கும் கீழே உள்ள மக்களுடைய நிலைமைகள், வேலையில்லாத் திண்டாட்டம் ஆகிய இவைகள் அனைத்துக்கும் பொருளாதார அடிப்படையில் நாம் புதிய வழியை வகுத்துக்கொண்டு புதிய மாற்றத்தை ஏற்படுத்தியாக வேண்டிய கட்டாயம், நெருக்கடி என்று கூட சொல்லலாம்- இந்த நாட்டுக்கு இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

காத்துக் கிடந்த ஏமாந்த மக்களுடைய உள்ளத்தில் என்னென்ன கருத்துக்கள் உதயமாகும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கும் பொறுப்பிலே இருக்கின்ற எங்களைப் போன்றவர்கள் மறந்து விடுவதோ, சொல்வதைக் கேட்காமல் மறுத்து விடுவதோ, அலட்சியப் படுத்துவதோ நாட்டினுடைய நலனுக்கு உகந்தது அல்ல என்பதை உணர்ந்து பல திட்டங்களைத் தீட்டுவதற்கு நாங்கள் முயல்கிறோம். இந்த நேரத்தில் ஒன்றை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எங்களை வாழ்த்துகிறவர்கள், பாராட்டுகிறவர்கள், எங்களுடைய நல்ல காரியத்திற்கு துணை நிற்கின்றவர்கள், அத்துணை பேர்களுக்கும் நாங்கள் நன்றியையும், வணக்கத்தையும்,

உணர்வு மிகுந்த பாராட்டுகளையும் சொன்னாலும், அதேநேரத்தில் எங்களைத் தாக்குகிறவர்களையும், நாங்கள் மன நிம்மதியோடும், மரியாதையோடும் கவனிக்கிறோம் என்பதையும் அதை எங்களுடைய நல்ல செயல்களுக்கு எருவாக்கிக் கொள்கிறோம் என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஆத்திரப்படுவது அறிவீனம் என்பதை அமரர் அண்ணா அவர்கள் நமக்குச் சொல்லித் தந்திருக்கிறார்கள். ஆத்திரத்திற்கு அடிமைப்பட்டவன் ஆக்க வேலையைச் செய்யமுடியாது என்பதே அமரர் அண்ணா அவர்களின் திட்டவட்டமான கொள்கையாகும். சிந்திக்கிறவனால் தான் அவனால் முடிந்த அளவுக்கு எப்போதாவது செயலில் ஈடுபட முடியுமே தவிர, சிந்திக்க மறுக்கிறவர்கள் இந்த நாட்டினுடைய நிலைமையையும் மக்களின் உள்ளத்தில் எழுகின்ற எரிமலை போன்ற குமுறல்களையும் அறிவதற்குப் பின்தங்கி விடுவார்கள் அல்லது தவறி விடுவார்கள் என்பதை அமரர் அண்ணா அவர்கள் அவர்களுடைய வார்த்தைகளால் எத்தனையோ முறை நமக்குச் சொல்லித் தந்திருக்கிறார்கள். அதைப் பின்பற்றி ஆட்சியிலே இருக்கிற நாங்களும் திட்டங்கள் தீட்டினாலும் அவற்றை நிறைவேற்ற வேண்டியவர்கள் அதிகாரிகளும் மக்களும் தான் என்பதை நான் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்வதற்குப் பயன்படுத்துவதற்கு, வேண்டுகோளாக எடுத்துவைக்க விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, இந்தியா முழுவதும் நாம் அமைதியாக இருக்கிறோம் என்ற ஒரே காரணத்திற்காகவோ அல்லது நாம் வளருகிறோம், வளர முனைகின்றோம் என்ற காரணத்திற்காகவோ அண்டையிலே இருக்கிற எந்த நாடானாலும் சரி, அல்லது வேறு எங்கேயிருந்து ஆபத்துகள் வந்தாலும் சரி, குமரியிலிருந்து காஷ்மீரம் வரை நாம் அனைவரும் ஒன்றுபட்டு நின்று அந்த எதிர்ப்புகளை முறியடிப்போம் என்பதை இந்த நேரத்தில் அதிலும் குறிப்பாக இந்த சுதந்திர தினத்தன்று தமிழகத்தின் எண்ணமாக வெளியிடுகிறேன்.

யார் படை எடுத்தாலும், நம்மில் ஒருவர் உயிரோடு இருக்கும்வரை நமது சுதந்திரத்தை எந்தக் காரணத்தைக் கொண்டும் விட்டுக் கொடுக்க மாட்டோம், யாருக்கும் தலை வணங்க மாட்டோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல் நாம் அமைதியாக வாழ்கிறோம், வாழ விரும்புகிறோம். ஜாதியை ஒழித்து, மத பேதத்தைத் தகர்த்து அனைத்து மக்களும் ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்ற நம்பிக்கையில் ஒன்றுபட்டு வாழ வேண்டும் என்ற கொள்கையை, அமரர் அண்ணா அவர்கள் சொல்லித் தந்த கொள்கையை உயிராகக் கொண்டிருக்கிறோம். இதிலே மதம் குறுக்கிட்டாலும், ஜாதி குறுக்கிட்டாலும் இந்த அரசும் தமிழக மக்களும் ஒன்று சேர்ந்து அதை எதிர்ப்பார்கள்-தகர்ப்பார்கள் என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மதம் என்பது ஒழுக்க நெறி முறைகளை வகுத்துக் கொடுக்கின்ற ஒன்று ஆகும். அதை எண்ணிக்கையை அதிகரிக்கப் பயன்படுத்துவதோ அல்லது தங்கள் எண்ணத்தை எங்கோ இழுத்துச் செல்லப் பயன்படுத்துவதோ, நாம் அனுமதிக்க முடியாத ஒன்றாகும் என்பதை நம் ஒன்றுபட்ட கருத்தாக வெளியிட விரும்புகிறேன்.

ஒரு மதத்திலிருந்து இன்னொரு மதத்திற்கு மாறுகிறவர்கள் அந்த மதத்தினுடைய கோட்பாடுகளை ஏற்று மாறினால் அது அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்றே தவிர மறுப்பதற்கில்லை. ஆனால் சலுகைகள் காட்டி, வற்புறுத்தி, பயமுறுத்தி, வேறு வசதிகளை, சூழ்நிலையைச் சொல்லி மதம் மாற்றுவது இந்த நாட்டுக்கு ஒவ்வாத ஒரு கொள்கை என்பதை நான் இங்கே வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

எந்த மதத்தைச் சார்ந்தவர்களும் சம உரிமையோடு தமிழகத்தில் மட்டுமின்றி இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் வாழ்வதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிற சாசனமாகும் இந்திய அரசியல் சட்டம். இந்திய குடியரசினுடய அரசியல் சட்டம் சொல்வது நாம் மதச் சார்பற்ற நாடு என்பது தான். எந்த மதத்திற்கும் நாம் சார்பாக இருந்து இந்த நாட்டை ஆள விரும்பவில்லை என்பது அது திட்டவட்டமாக வெளியிடும் கொள்கையாகும்.

அதே நேரத்தில் அதையும் அரசியல் ஆக்கி, ஜாதியைத் தங்களுடைய எதிர்ப்புணர்ச்சிக்கு எரு ஆக்கிப் பயன்படுத்துகிறவர்கள் யாராக இருந்தாலும் மீண்டும் நான் வற்புறுத்திச் சொல்கிறேன்—சட்டம் அவர்களைத் தடை செய்யும் என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.



எந்த மதத்தைச் சேர்ந்தவர்களும் உரிமையோடு வாழலாம், உழைக்கலாம், எந்தக் குடிமகனுக்கும் உள்ள சுதந்திரம் ஒவ்வொரு மதத்தினருக்கும் உண்டு. ஆனால் இந்த ஜாதி பேதம் என்கிற நமக்கு ஒவ்வாத, தேவையற்ற, மனசாட்சி ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றை நாம் வலுவிலேயே வைத்துக் கொண்டு, அதைச் சுமந்து, நம்மை நாமே பிரித்துக் கொள்வதற்கு அதைப் பயன்படுத்துகிற கொடுமையிலிருந்து நாம் அனைவரும் விடுபடுவோம் என்கிற உறுதியை இந்தச் சுதந்திர நாளில் எடுத்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறோம்.

சுதந்திரம் உடலுக்குக் கிடைத்தது. உள்ளத்திற்கும் அது கிடைத்தாக வேண்டும். வெளிப்படையாகச் சொல்வதானால், நாம் நடமாட உரிமை உண்டு. ஆனால் நாம் நடமாடும் இடத்தை, நாம் எந்த இடத்தில் நடமாட வேண்டுமென்று விரும்புகிறோமோ அந்த இடத்தைத் தேர்ந்தெடுப்பது மனம் என்கிற வகையில் நம்பிக்கைக்கு உரியவர்கள் வாழ்க்கைக்குத் தடைக் கற்களை உருவாக்கினால் அதைத் தூக்கி எறிந்து அந்தப் பாதையைச் சமன் செய்வது ஆட்சியாளர்களின கடமை என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒன்றை நான் இந்த நேரத்தில் குறிப்பிட்டாக வேண்டும். இலங்கையில் நடைபெறும் நிகழ்ச்சிகள் உண்மையிலேயே நமக்கு நல்ல செய்திகளாகக் கிடைக்கவில்லை என்பதை இந்தச் சுதந்திர தினத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மைய அரசு அதற்கு ஆவன செய்யும் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு. இதற்கு ஆதாரமாக நான் அண்மையில் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களைச் சந்தித்துப் பேசிய போது அவர்கள் சொன்ன செய்திகளை இங்கே நான் சொல்லியாக வேண்டும். ''எந்தெந்த வகையில், எந்தெந்த வழியில் நியாய முறைப்படி, சர்வதேச முறைப்படி நாம் நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியுமோ அத்தனையையும், அங்கே வாழ்கிற இந்திய மக்களுக்காக, குறிப்பாகத் தமிழர்களுக்காக, இன்னும் சொல்லப்போனால் அனைத்து நாட்டு மக்களுக்காகவும் பாதுகாப்பைச் செய்யச் செய்வோம் என்று நீங்கள் மக்களிடத்திலே சொல்லலாம்'' என்று சொன்னார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதை நம்பி நான் காத்திருக்கிறேன். இருந்தாலும் இந்தியா சுதந்திரம் பெற்ற இந்த சுதந்திரத் தினத்தில் சொல்லுகிறேன். இந்தியாவிலிருந்து சென்ற மக்கள், அங்கே வாழ்கிற மக்கள், அதையே தங்கள் தாயகமாகக் கொண்டிருக்கிற தமிழக மக்கள் அவதியுறுவதை நான் கேட்டு எந்த எண்ணத்தையும் பிரதிபலிக்காமல் இருக்க முடியாது என்ற வேதனையை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தச் செய்தி இலங்கை அரசுக்கு இந்தியப்பேரரசால்முறையாக அனுப்பப்படும் என்பதில் எனக்குக் கொஞ்சமும் சந்தேகம் இல்லை என்பதைச் சொல்லி, பொருளாதாரத்தைச் சீர் குலைக்கிறவர்களைத் தடுக்க, பொருளாதாரத் திட்டத்தை சமத்துவமாக்க, அடிமட்டத்தில் இருக்கிற மக்கள், உழைக்கிற மக்கள் நல்வாழ்வு பெற, அவர்கள் நிம்மதியாக வாழ, வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிறவர்களை மேம்படுத்த உடல் உறுப்புகள் ஊனமாகிவிட்ட காரணத்தாலே வாழ்வை இழந்திருக்கிற நம்முடைய அன்புக்குரிய மக்கள், அவர்கள் அத்துணைப் பேர்களுக்கும் வாழ்வு அளிக்க, நாம் திட்டம் தீட்டிக் கொண்டிருக்கிறோம். அதை வெற்றிகரமாக ஆக்க வேண்டியது நம் அனைவருடைய கடமை என்பதை இந்த மாபெரும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டுள்ள நீங்கள் இந்தியத் துணைக் கண்டத்தினுடைய ஒட்டுமொத்தமான பிரச்சினைகளில் கவனம் செலுத்துவதோடு அன்றாட நிகழ்ச்சியைப் பற்றிச் சிந்தித்து தேவையற்ற பூசல்களில் நம்மை ஆட்படுத்திக் கொண்டு, மிகப் பெரிய ஆக்க வேலையைத் தடுப்பதற்கு, இடைஞ்சல் ஏற்படுத்தி விட இடம் தராமல் ஒத்துழைப்பு தந்து, விரைவிலேயே சமத்துவ, சமுதாய, பொருளாதார அமைப்பை ஏற்படுத்த உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஆண்டில் பஞ்சாயத்துத் தேர்தல்கள் நடைபெற இருக்கின்றன. நகராட்சி மன்றங்கள், மாநகராட்சி மன்றங்களுக்குத் தேர்தல்கள் இந்த ஆண்டுக்குள் நடைபெற இருக்கின்றன. அதை நடத்தியே காட்டுவோம், நடத்தியே தீருவோம் என்பதை உங்களுக்குச் சொல்வதோடு மக்கள் இதுவரையில் காட்டிய அந்த ஜனநாயகத் தத்துவ முறையைச் சீர்பட நடத்திக் காட்ட வேண்டும் என்பதை நான் வேண்டுகோளாக வைக்கிறேன்.

ஜாதி சமயங்கள் நாட்டு மக்களுக்கு நல்லது செய்வதைத் தடுப்பதற்காக இருக்குமானால் அவைகளை அறவே ஒதுக்கித் தள்ளி நாம் எல்லோரும் ஒன்று தான், எல்லோரும் ஒரே ஜாதி தான்—அது மனித ஜாதி தான்—அது அண்ணாவின் கொள்கையான ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்ற கொள்கை தான் என்பதை மனதில் கொண்டு அந்த முறையில் நல்லவர்களை, நல் அறிஞர்களை, இந்த நாட்டுக்குத் தேவையானவர்களை நீங்கள் தேர்ந்தெடுத்து உங்கள் விருப்பப்படி இந்த நாட்டில் ஜனநாயக மரபை மீண்டும் உருவாக்கித் தர வேண்டுமென்று உங்களை எல்லாம் கேட்டுக் கொண்டு கிராமங்களுக்கு, விவசாயிகளுக்கு, தொழிலாளர்களுக்கு, உழைக்கும் வர்க்கத்தினருக்கு, வியாபாரிகளுக்கு ஆக அத்துணைப் பேர்களுக்கும் நாங்கள் வாய்ப்புத் தர வேண்டும், அவர்கள் வாழ்க்கையை ஒழுங்கு படுத்தித் தர வேண்டும் என்பதற்காகத் தீட்டுகின்ற திட்டங்களுக்கு ஆதரவு தந்து வெற்றிபெறச்செய்ய வேண்டும் என்று உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்வதோடு இந்த சுதந்திர நாளில் நாம் சுதந்திர புருஷர்களாக இருக்க இந்த வாய்ப்பை வாங்கித் தந்த மகாத்மா காந்தி அவர்களுக்கும், அவரைப் பின்பற்றியவர்களுக்கும், தியாகம் செய்த சீலர்களுக்கும் நம்முடைய வணக்கத்தைக் கூறி, இந்தியத் துணைக் கண்டத்தின் சுதந்திரம் வாழ்க, இந்திய மக்கள் வாழ்க, தமிழக மக்கள் வளம் பெறுக, அண்ணா நாமம் வாழ்க என்று சொல்லி அமைகிறேன். நன்றி. வணக்கம்.

*[15.8.1981 அன்று சுதந்திர தினத்தையொட்டி சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் காலை 8 மணிக்கு தேசியக் கொடியை ஏற்றி வைத்துஆற்றிய உரை.]*




# தமிழ்நாட்டில் ஊரகத் தொழில்களின் வளர்ச்சி

## மாண்புமிகு ஊரக-தொழில் துறை அமைச்சர் திரு கே.ஏ. கிருஷ்ணசாமி

அண்ணல் காந்தியடிகள் இந்தியத்துணைக் கண்டத்திலுள்ள மக்கள் சக்தியை அதிக அளவிற்குப் பயன்படுத்திக் கொண்டு வேலை வாய்ப்புகளை விரிவாக்க வேண்டுமென்று கனவு கண்டார். அந்தக் கனவை நனவாக்குகிற வகையில் தமிழக அரசு கிராமப்புறங்களிலும் பிற்பட்ட பகுதிகளிலும் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டு மற்ற துறைகளைப்போலவே தொழில் துறையிலும் கிராமப்பகுதிகளில் வேலை வாய்ப்புகளை அதிக அளவில் உருவாக்குவதற்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. குறுகிய காலத்தில் அதிக அளவில் வேலை வாய்ப்புக்களை உருவாக்கும்போது இரண்டு கருத்துக்களைக் கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது. முதற்கண் எல்லோருக்கும் தொழில் நுட்பத்திறனை அளிக்கவேண்டுமானால் ஏராளமான பயிற்சித் திட்டங்களுக்காகப் பெருஞ்செலவு ஆவதுடன் காலமும் அதிகம் தேவைப்படும். எனவே நிறுவப்படும் தொழில்கள் பெரும்பாலும் நுணுக்கமான இயந்திரங்கள் இல்லாமலும் தொழில்பயிற்சி அதிகம் இல்லாதவர்கள் வேலைசெய்யக்கூடிய வகையிலும் அமைவது அவசியம்.

இரண்டாவதாக ஏராளமான பேருக்கு வேலை வாய்ப்புகள் அளிக்க வேண்டியிருப்பதால், வேலை தேடுவோர் எங்கெங்கு வசிக்கிறார்களோ அந்த இடங்களிலேயே அவர்களுக்கு இந்த வேலை வாய்ப்புக்கள் கிட்டும்படி தொழிற்சாலைகளை உருவாக்கவேண்டும். இல்லையென்றால் இதன் காரணமாக ஏற்படும் போக்குவரத்துப் பிரச்சினைகளைத் தவிர்க்க முடியாது. இந்த இரண்டு கருத்துக்களையும் கிராமத்தொழில்களின் மூலமே ஈடேற்றலாம். இவற்றைக் குடிசைத் தொழில்கள் என்றும் சிறுதொழில்கள் என்றும் வகைப்படுத்தலாம். அதே நேரத்தில் பெரிய, மற்றும் நடுத்தரத் தொழில்களின் வளர்ச்சியை ஊக்குவிப்பதிலும் இவ்வரசு கவனம் செலுத்தி வருகிறது. பெருந்தொழில்கள் சிறப்பாக வளர்ந்தால்தான் அதன் பயனாக சிறுதொழில்களுக்குத் தேவையான மூலப்பொருட்களும் சிறு தொழில் உற்பத்திப் பொருட்களுக்கு விற்பனை வாய்ப்புக்களும் அதிகரிக்கும். ஒரு பெரிய தொழிற்சாலையை, பின்தங்கிய பகுதிகளில் நிறுவுவதால் அந்தப் பகுதிகளில் பல சிறுதொழில்கள் உருவாவதற்கும், துணைத் தொழில்கள் வளரவும் வாய்ப்புக்கள் உண்டாகும். எனவே சிறுதொழில்கள் வளர்ச்சியுடன் நடுத்தர மற்றும் பெரிய தொழில்கள் ஒன்றுக்கொன்று உறுதுணையாக அமைந்து வளர்வது அவசியமாகிறது.

கிராமப்புறத் தொழில்களையும் தொழில் முனைவர்களையும் ஊக்கப்படுத்தக் கீழ்க்கண்ட உதவிகளையும் சலுகைகளையும் இவ்வரசு செயல்படுத்தி வருகிறது.

1. சாந்தியக்கூறான திட்டங்கள் எவையெனக் கணித்து அவைகளை உருவாக்குதல்.

2. அடிப்படை உறுதுணை வசதிகளை அமைத்தல்.

3. தொழில்களுக்குத் தேவையான மூலப்பொருட்களை, கடன் உட்பட அளித்தல்.

4. சிறுதொழில் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்காக அரசு நிறுவனத்தின் மூலம் ஆதரவு அளித்தல்.

5. சிறுதொழில் முனைவோருக்கு பயிற்சியும் தொழில் நடத்துவதற்குத் தகுந்த அறிவுரைகளும் வழங்குதல்.

மேற்கூறிய ஐந்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் ஒரு விரிவாக்க அமைப்பு தேவைப்படுகிறது. இந்த அமைப்பு ஒரு தொழில் முனைவரைத் தேடி அவருடைய பிரச்சினைகள் எவை என்று தெரிந்து கொண்டு அவருடைய குறைகள் யாவையும் கண்டு அவருக்கு வேண்டிய ஆதரவு அளிக்க வேண்டும். கூட்டுறவு வளர்ச்சி, விவசாயம் போன்ற துறைகளில் இதுபோன்ற துணை புரியும் அமைப்புகள் கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக நிலைபெற்று விட்டன. எனினும் தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரையில் சமீப காலத்தில் நிறுவப்பட்ட மாவட்டத் தொழில் மையங்களே இதுபோன்ற துணை புரியும் அமைப்புகளாகச் செயல்பட்டு வருகின்றன.

### தொழில் மையங்கள் கண்டுள்ள முன்னேற்றம்

மாவட்டத் தொழில் மையங்கள் திறன் மிக்க தொழில் விரிவாக்க அமைப்புகளாக வெற்றிகரமாகச் செயல்பட்டு வந்துள்ளன என்பதை அவற்றின் கடந்த சுமார் 3 ஆண்டுக் கால முன்னேற்றம் தெளிவுபடுத்துகிறது. தொழில் வளர்ச்சியினைத் துரிதப்படுத்துவதிலும் இதுவரையில் வளர்ச்சி அடையாத பகுதிகள் பெரும்பயனைப் பெறச் செய்வதி

## இடைநிலை. இளநிலை ஆசிரியர்— சிறப்புத் தேர்வு நிலை ஊதியம்

பத்து ஆண்டுகள் தேர்வு நிலைப் பணிக்காலம் முடியா விட்டாலும், இடைநிலை, இளநில்ல ஆசிரியர்களுக்குச் சிறப்புத் தேர்வு நிலை ஊதியம் வழங்கத் தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது.

எல்லா வகையான நிர்வாகத்திற்குட்பட்ட துவக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலை மற்றும் மேல் நிலைப் பள்ளிகளிலுள்ள நடுநிலை வகுப்புகளில் பணியாற்றும் இளநிலை, இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் இவர்கள் போன்ற ஊதியம் பெறும் பிறநிலை ஆசிரியர்கள், கைத்தொழில் ஆசிரியர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள், ஓவிய ஆசிரியர்கள் போன்றோர் பத்து ஆண்டுகள் தேர்வு நிலைப் பணிக்காலம் முடியா விட்டாலும், மொத்த பணிக காலம் இருபது ஆண்டுகள் அடிப்படையில் இடைநிலை ஆசிரியர்களுக்கு ரூ. 450-20-590-25-700-30-800 என்ற விகிதத்திலும், இளநிலை ஆசிரியர்களுக்கு ரூ. 325-10-445-15-550 என்ற விகிதத்திலும் சிறப்புத் தேர்வு நிலை ஊதியம் வழங்கத் தமிழ்நாடு அரசு ஆணையிட்டுள்ளது. இச்சலுகை 1981 ஜூன் முதல் தேதி நடைமுறைக்கு வருகிறது.

இன்றைய தினம் தமிழ்நாட்டிலுள்ள ஏறத்தாழ 5000 திருக்கோயில்களில் 5 இலட்சம் மக்கள் சாதி பேதமற்ற முறையில் பொது விருந்தில் கலந்து கொண்டிருக்கிறார்கள்.

''சாதிவேறுபாடுகளை அகற்ற இன்று அடியெடுத்துக் கொடுக்கும் வகையில், இந்த விழா எழுச்சியுடன் நடைபெறுகிறது. தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் முதியோர் ஓய்வு ஊதியத்தின் கீழ் பயன்பெறுவோர் எண்ணிக்கை 1 இலட்சத்து 51 ஆயிரத்து 224 இவர்களுக்கு மாதம் ரூ. 25 ஒய்வு ஊதியமும் வாரம் ஒருமுறை ஒரு கிலோ அரிசியையும் ஆண்டுக்கு இருமுறை புத்தாடைகளையும் இந்த அரசு வழங்கி வருகிறது. இந்தத் திட்டத்திற்காகத் தமிழக அரசு ஆண்டு ஒன்றுக்கு 7 கோடி ரூபாய் ஒதுக்கி, செலவிடுகிறது. ஏழை, எளியவர்களுக்குப் பெரிய கோயில்களில் திருமணம் செய்து கொள்ளப் பண உதவி செய்யப்பட்டு வருகிறது'' என்று குறிப்பிட்டார்.

அடுத்துப் பேசிய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் பேசுகையில், ''நாம், வேறு சாதி என்ற உணர்வு ஆதிதிராவிடர் மக்களிடையே ஏற்பட்டுள்ளது. அந்த உணர்வு இன்று முதல் அப்படி ஏற்படக்கூடாது. நாம் தீண்டத்தகாதவர்கள் என்ற உணர்வைக் குழி தோண்டிப் புதைத்துவிட வேண்டும் என்பதற்காகவே சமபந்தி போஜனம் நடத்தப்படுகிறது''. என்று குறிபிட்டார்.

பொது விருந்தில் பங்கேற்க வருகை தந்திருந்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்களுக்கும் அருள்மிகு தேவிகருமாரியம்மன் கோயில் நிர்வாகக் குழுத் தலைவர் திரு. இரா. சர்வேசுவரராவ் பொன்னாடை போர்த்தினார். அறங்காவலர்கள் திருவாளர்கள் புலவர் வேதா, எம். பி. நாராயணன், கலவை அ. கோபாலகிருஷ்ணன், வை. சுந்தரம், ஆகியோர் மாலைகளும் கைத்தறி ஆடைகளும் அணிவித்தனர். உதவி ஆணையாளர் சு. பாலசுப்ரமணியம் அவர்கள் விழா சிறப்புற நடைபெற ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

**முதல்வர் சிறப்புரை**

மாண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் தமது சிறப்புரையில், குறிப்பிட்டார்:

''சமபந்தி போஜனம் யாரையும் ஏமாற்றுவதற்கு அல்ல; என் வீட்டில்கூட ஆதிதிராவிடர்கள் சமைத்துப் போடுவதை நானும் என் நண்பர்களுடன் சாப்பிட்டு வருவதை நீங்கள் காணலாம். நாட்டிற்குத் தேவை என்றதால் தான் இப்படிப்பட்ட நல்ல நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன, நடத்தப்படுகின்றன. உலகத்திலேயே எங்கும் காண முடியாத அளவுக்குக் கலையை நம் நாட்டில் வைத்திருக்கிறோம்; கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள்கூட கோவில்களுக்கு வருவதில் தடை இல்லை.

கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள் கோவில்களுக்குப் போவதில் தவறு இல்லை. நம்பிக்கை உள்ளவர்கள் தன்னைப் பற்றி வணங்காமல் நாட்டைப் ப்ற்றி வணங்க வேண்டும். ''மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம் பழித்தது ஒழித்துவிடின்'' என்றார் திருவள்ளுவர். அதேபோல உலகம் எதை வெறுக்கிறதோ எதைப் பழிக்கிறதோ அதை நீக்கி நம்மால் முடிந்த அளவுக்கு நல்லவர்களாக நாம் இருக்க முயல வேண்டும். யாரும் குற்றம் செய்யாதவர்கள் பொய் சொல்லாதவர்கள் இல்லை; பிறருக்குத் துன்பம் வராத அளவுக்குப் பொய் சொல்வதில் தவறு இல்லை இன்று மக்களை ஏமாற்றுவதற்கே பொய் சொல்லுகிறார்கள். இப்போது 1.5 இலட்சம் பேர் 'முதியோர் ஓய்வூதியம்' பெறும் அளவுக்குப் பட்டியலை விரிவுபடுத்தியிருக்கிறோம். இன்றைக்குக் கருமாரியம்மனுக்குப் பக்தர்கள் கொடுத்த சேலையை மணமகளுக்குக் கொடுத்திருக்கிறோம்.

**கடவுளின் பிள்ளைகள்!**

''மகாத்மா காந்தி அவர்கள் ஆதிதிராவிடர்களை (அரிஜன்) கடவுளின் பிள்ளைகள் என்று சொன்னார். அதன்படி இன்று அந்தக் கடவுளின் பிள்ளைகளுக்குக் கடவுளின் பொருளைத் தந்திருக்கிறோம். நாம் திராவிடர்கள் என்று சொல்லிக் கொள்கிறோம். ஆதிதிராவிடர்கள் என்று அழைக்கிறோம். நம்மைவிட அவர்கள் இந்த நாட்டிற்கு மூத்த குடிமக்கள்- நாட்டிலே மற்றவர்களைத் தீண்டத்தகாதவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் என்று கூறுவது மன்னிக்க முடியாதது. தீண்டத்தகாதவர்களிலேயே தீண்டத்தகாதவர்கள் என்று மூன்று நான்கு பிரிவுகள் உள்ளன. அதற்கு என்ன மாற்று? ஒரு பிரிவினர் தெருப் பக்கமே போகக்கூடாது என்கிறார்களே அவர்களுக்குள்ளேயே உயர்வு தாழ்வை -எண்ணத்தை- நம்மை நாமே தாழ்ந்தவர்கள் என்று நினைக்கும் உணர்வைத் திருத்திக் கொள்ள வேண்டும்; மற்றவர்கள் மீது பரிவு காட்டித் தவறுகளைச் சுட்டிக் காட்டி அரவணைத்துச் செல்ல வேண்டும்.

**அண்ணா வழியில்!**

ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். இதுவரை எந்தப் பயனும் கிடைக்கவில்லை. சாதியற்ற சமுதாயம் மதத்தின் பெயரால் பிரிக்க முடியாத சமுதாயத்தைக் காண, தந்தை பெரியார் விரும்பினார். பேரறிஞர் அண்ணா அவர்கள் அதைக் கடைப்பிடித்தார்கள். நாங்கள் அதைப் பின்பற்றுகிறோம்.

'தேவிகருமாரியம்மன் கோயிலுக்குப் போனால் கஷ்டங்கள் தீரும்' என்று நம்பிக்கை உள்ளவர்கள் சொல்கிறார்கள். அதனால்தான் சமத்துவத்தை ஏற்படுத்த அவர்களை இங்கே அழைத்திருக்கிறோம். நீ (என்னை) கடவுளை வணங்குகிறாயா என்று கேட்காதீர்கள். எனக்கு என் தாய் தான் கடவுள்; எங்கே பிறந்தாலும், வாழ்ந்தாலும் மக்கள் அனைவரும் ஒன்று என்பதைஉணர்ந்து அமரர் பேரறிஞர் அண்ணா வழியில் நாங்கள் செயலாற்றி வருகிறோம்''.

இறுதியில் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் நன்றி கூறினார், விழாவைக் காண, திருவேற்காடு சுற்று வட்டாரத்திலிருந்து ஏராளமான ஆண்களும் பெண்களும் பல்லாயிரக்கணக்கில் திரண்டு வந்திருந்தனர்.

தொகுப்பு : **ஜி. ஆனந்தன்**



சென்னைப் பொது மருததுவமனையிலுள்ள இருதயநோய் சிகிச்சை நிறுவனம் இருதய நோய் மருத்துவத்தில் மேல்பட்டப் படிப்புக்கு மேலான முதுநிலை ஆராய்ச்சி **(Post Doctorate)** படிப்பை இந்தியாவிலேயே அதிக மாணவர்களுக்குக் கற்பித்து வருகிறது. இந்திய மருத்துவக் கழகம் இந்தியாவிலேயே முதல் தடவையாக இந்த நிறுவனத்திற்குத்தான் இருதயநோய் சிகிச்சையில் **Ph.D.** ஆராய்ச்சிக்கும் **D.Sc. (Doctorate of Science)** பட்டப் படிப்புகளைக் கற்பிக்க அனுமதி வழங்கியுள்ளது. சென்னைப்பொது மருத்துவமனையின் இருதயநோய் சிகிச்சைப் பிரிவு தென்னக மாநிலங்களில் மிகப் பெரியதாகும், இந்நிறுவனத்திற்குத் தேவையான வசதிகளை உருவாக்கினால் எதிர்காலத்தில் உலகிலுள்ள மிகச் சிறந்த இருதய நோய்ச் சிகிச்சைப் பிரிவாக அமைந்திட முடியும் என்று உறுதியுடன் சொல்லுகிறார் - இந்நிறுவனத்தின் தலைவர் டாக்டர் சி. லட்சுமிகாந்தன். அவருடைய பேட்டி இது :-

## உலகப்புகழை எட்டும்


# இருதய நோய் சிகிச்சை நிறுவனம்



### பேராசிரியர் டாக்டர் சி. இலட்சுமிகாந்தன் பேட்டி

**'இ**தயமே உங்கள் செல்வம்'

1972-ஆம் ஆண்டு உலக நல்வாழ்வு நிறுவனம் (WHO) இந்த முழக்கத்தை எழுப்பியது.




மனித உடலின் நல்வாழ்வுக்குப் பெருஞ்செல்வமாக இருப்பது இதயம்தானே! அதனை நோயிலிருந்து காப்பதுவும் வரும் நோயைத் தடுப்பதும் நமது கடமையாகும்.

இருதய நோயிலிருந்து நம்மைக் காத்து சிகிச்சை அளித்து பெருந்தொண்டாற்றி வரும் அமைப்புதான், சென்னைப் பொது மருத்துவமனையில் உள்ள இருதயநோய் சிகிச்சைப் பிரிவு. இந்தியாவிலுள்ள குறிப்பிடத் தகுந்த முக்கிய சிகிச்சைப் பிரிவுகளில் இதுவும் ஒன்றாகும். தென்னாட்டில் இந்தச் சிகிச்சைப் பிரிவுக்கு இணையான இருதய நோய்ச்சிகிச்சைப் பிரிவு அண்டை மாநிலங்கள் அனைத்திலும் கிடையாது. இப்படி பல சிறப்புகளுக்கும் பெருமைக்கு உரியதாக விளங்கும் சென்னைப் பொது மருத்துவமனை இருதய நோய் சிகிச்சை நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் டாக்டர் சி. லட்சுமிகாந்தன் சொன்னார்:—

''எங்கள் இருதய நோய் சிகிச்சை நிறுவனத்தின் நோக்கம் இருதயநோய் வராமல் தடுப்பது. இருதய நோயாளிகளுக்கு மருந்து மூலமாகவும் அறுவைச் சிகிச்சை மூலமாகவும் சிகிச்சை அளித்து குணப்படுத்துவது.

பேட்டி : வ. சம்பந்தன்



இதுதான் 'எக்கோ கார்டியோகிராம்' என்னும் ஒலி அலைகளால் இயங்கும் எலக்ட்ரானிக் கருவி.

''இருதயநோய்ச் சிகிச்சைக்குரிய மருத்துவக் கல்வியைக் கற்பிப்பது.

''இருதயநோய்ச் சிகிச்சைக்குரிய ஆராய்ச்சிகளைச் செய்வது''—முதலியனவாகும்.

சென்னைப் பொது மருத்துவமனை இருதய நோய்ச் சிகிச்சை நிறுவனத்தில் பட்ட மேல்படிப்புக்கு மேலாக முதுநிலை ஆராய்ச்சி மாணவர்களாக மருத்துவர்கள் பயில்கின்றனர். இந்தியாவில் டில்லி, சாண்டிகார், வேலூர், கான்பூர், பம்பாய் போன்ற இடங்களில் ஆராய்ச்சி மாணவர்கள் பயின்றாலும் இந்தியாவிலேயே சென்னையில் தான் அதிக பேர் பயிலுகின்றனர். வெளி மாநிலத்தவரும் இங்கு பயிலுகின்றனர்.

இந்தியாவிலேயே முதன் முறையாக இருதய நோய்ச் சிகிச்சையில் Ph.D., DSc., போன்ற பட்டப் படிப்புகளைச் சென்னை இருதய நோய்ச் சிகிச்சை நிறுவனத்தில் கற்பிக்க இந்திய மருத்துவக் கவுன்ஸில் அனுமதி வழங்கியுள்ளது. பல்கலைக்கழகமும் ஒப்புதல் வழங்கியுள்ளது.

''இங்கு மருத்துவர்களுக்கு மட்டுமல்ல ; செவிலியர்களுக்கும் மருத்துவப் பணியாளர்களுக்கும் இருதயநோய்ச் சிகிச்சை அளிப்பதில் பயிற்சி அளிக்கப்படுகிறது. நம்நாட்டின் பல மாநிலங்களைச் சேர்ந்தவர்களும் இங்கு வந்து பயிற்சி பெறுகின்றனர்.


இருதயநோய் தொடர்புடைய மருத்துவச் சிகிச்சையை எடுத்துக் கொண்டால், அண்டையிலுள்ள மாநிலங்களைச் சேர்ந்தவர்களும் இங்கு வந்து சிகிச்சை பெறுகின்றனர்.

உடலுக்கு வலியில்லாமலும் அபாயமில்லாமலும் நோய்க்கு சிகிச்சை அளிப்பதில் முன்னணியில் உள்ள இருதயநோய் சிகிச்சைப் பிரிவில் Two Dimensional Real Time Foci Scan Phased Linear Array Echocardiogram Machine குறிப்பிடத்தகுந்த ஒரு கருவியாகும்.

தென்னாட்டிலேயே முதன் முதலாக சென்னைப் பொது மருத்துவமனையில்தான் இக் கருவி வாங்கப்பட்டுள்ளது. எக்கோ கார்டியோகிராமில் நோயாளியின் இருதயத்தின் நுண்ணிய பகுதிகள், இரத்தம் சுத்திகரிப்பு அறைகள் மூடித்திறக்கும் வால்வுகள், இரத்த ஓட்டம், இதயத்துடிப்பு போன்ற அனைத்தையும் தெரிந்து கொள்ளலாம்.

இக்கருவியில் மாத வருமானம் ரூ. 300-க்கும் அதற்குக் குறைவாக உள்ளவர்களுக்கும் இலவசமாகப் பரிசோதனை செய்யப்படுகிறது. அரசு ஊழியர்கள் மத்திய அரசு ஊழியர்கள், ஆகியோருக்கும் இலவசமாகப் பரிசோதனை செய்யப்படுகிறது. இக்கருவியில் பரிசோதனை செய்து கொள்ள குறைந்தபட்சக் கட்டணமாக ரூ. 30 முதல் அதிகபட்சகட்டணமாக ரூ. 60 வரை வசூலிக்கப்படுகிறது.

இருதய உள்ளாராய்வுக் கூடத்தில் நோயாளியின் இருதயத்தின் உட்புறத்தை ஆராய்கிறார்கள்.





இதே பணிக்கு அமெரிக்கா போன்ற நாடுகளில் ரூ. 2,500 முதல் ரூ. 3,000 வரை கட்டணமாக வசூலிக்கிறார்கள்.

எக்கோகார்டியோகிராமில் சோதனை செய்து கொள்ள உலகிலேயே மிக குறைவான கட்டணம் வசூலிக்கப்படுவது சென்னைப் பொது மருத்துவமனை இருதய





இருதயத்தின் உட்புறம். வீடியோ டேப் மூலம் படமாக்கப் படுகிறது. அதை தேவைப்படும் பொழுது போட்டு நோயாளியின் இருதயம் பற்றி நன்கு தெரிந்து கொள்ளலாம்.

நோய் சிகிச்சை நிறுவனத்தில் தான்!

''நானும் டாக்டர் எஸ் தணிகாசலமும், டாக்டர் ஆர். அழகேசனும் சேர்ந்து Illustrative Echocardiography என்ற நூலை எழுதியுள்ளோம். 700 பக்கங்களுக்கு மேலுள்ள இந்த நூலில் இடம் பெற்று படங்கள் 794 ஆகும். இந்தியாவிலேயே இருதய நோய் மருத்துவம் பற்றி வெளியான முதல் நூலாகும் இது. இந்தப் பெருமையும் எங்கள் இருதய நோய்ச் சிகிச்சைப் பிரிவுக்கு உண்டு என்பதை மிகவும் தன்னடக்கத்துடன் கூறிக் கொள்ள விரும்புகிறேன். ''Non-Invasive cardiac Laboratory என்பதில் வால்வுகள் எப்படி உள்ளன. சுருங்கி உள்ளனவா துவாரம் இளகியுள்ளதா? இருதய தசைகள் எப்படி வேலை செய்கின்றன என்பதையும் தெரிந்து கொண்டு சிகிச்சை அளிக்கப்படுகின்றது. இருதய உள்ளாராய்வுக் கூடத்தில் பிலிமில் இருதயத்தின் உட்புறத்தைப் படமாக எடுத்துக் கொண்டு பின்னர் தேவைப்படும் பொழுதும் போட்டுப் பார்த்து சிகிச்சை அளிக்கப்படுகிறது.

இருதயத்தின் துடிப்பு நிமிடத்திற்குச்சராசரியாக60லிருந்து 100 வரை இருக்கும். சிலருடைய இதயத் துடிப்பு 30லிருந்து 35 வரையாகக் குறைந்து விடும். அவர்களுடைய இதயம் சீராக இயங்கவேண்டும் என்றால் அவர்களுடைய உடலில் இதயத் துடிப்பைச் சீர்படுத்தும் கருவி (Pace-Maker) என்ற கருவியைப் பொருத்திவிட வேண்டும். மார்பின் மீது சிறியதாக அறுவைச் சிகிச்சை செய்து அந்தக்கருவியை உடலின் உட்புறமாக வைத்து விட வேண்டும். இக்கருவி இருதயத் துடிப்பைச் சீராக அமைத்து விடும்.

இது உடலில் பத்து ஆண்டுகளுக்கு மேலாக வேலை செய்யும். பின்னர் இக்கருவியிலுள்ள ஜெனரேட்டரை மாற்றிவிட்டால் மீண்டும் நன்கு பயன்படும்.

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் Pace Maker ஒன்றின் விலை ரூ. 10,000ஆகும்.

இந்தியாவிலேயே இக்கருவியை அரசு ஊழியர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் இலவசமாக வழங்கும் மாநிலம் தமிழ்நாடுதான். இப்பொழுது ஓய்வு ஊதியம் பெறுபவர்களுக்கும் இலவசமாக வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இக்கருவியை மூன்று வயது குழந்தைக்கும் பொருத்தியிருக்கிறோம். 90 வயதான முதியவருக்கும் பொருத்தியிருக்கிறோம். இந்த வகையில் சென்னைப் பொது மருத்துவமனை இருதய நோய்ச் சிகிச்சைப் பிரிவு பெரும் பணியாற்றி வருகிறது.

'இருதயநோய் பெரிய மனிதர்களுக்குத்தான் வருகிறது என்று பரவலான எண்ணம் நம்நாட்டு மக்களிடம் உள்ளது. இது தவறான கருத்தாகும். பிறவிலேயே இருதய நோய் வருவது ஒரு சதவீதம்தான். நெருங்கிய உறவினர்களிடையே நிகழும் திருமணங்களால் இந்தப் பிறவி இருதய நோய் வரக்கூடும்.

இருதயநோயில் தீவிர சிகிச்சைப் பிரிவில் நோயாளியின் இருதயம் சீராக இயங்கும் வகையில் ஓய்வு அளித்து சிகிச்சை அளிக்கப்படுகிறது.


சிகிச்சைப் பிரிவுகளில் உடற்பயிற்சி முறையில் மாரடைப்பு நோய் உள்ளதா? இரத்த அழுத்தம் எப்படி உள்ளது? நீரிழிவு நோய் உள்ளதா என்பதை எல்லாம் கம்ப்யூட்டர் கணக்கெடுக்கும் வகையிலும் பரிசோதனை செய்யப்படுகிறது. சாதாரண இ.சி.ஜி.யில் தெளிவாகத் தெரியாத விவரங்களை எல்லாம்இங்கு செய்யப்படும் பரிசோதனை மூலம் அறிந்து கொள்ளலாம்.

இப்படி நோயின் அடிப்படை நிலைகள் அனைத்தையும் ஆராய்ந்து நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

''இருதயநோய் வந்தால், அவர்கள் மீண்டும் பழையபடி வேலை செய்ய முடியாது என்று ஒரு கருத்து நிலவுகிறது. இது தவறானதாகும். இருதய நோயாளிகள் குணமடைந்த பிறகு முன்பு போல பணியாற்ற முடியும். இருதய நோய் வந்தவர்கள் குணமடைந்து ராணுவத்திலேயே பணியாற்றுகிறார்கள்.

இருதயநோய்க்கு ஆரம்ப நிலையிலே சிகிச்சை அளிக்க வேண்டும். 'Stitch in time saves nine' என்பது பழமொழி. முதலிலேயே தகுந்த நேரத்தில் அளிக்க வேண்டிய சிகிச்சைகளை அளித்தால் நிச்சயம் ஆபத்தைத் தடுக்க முடியும்.

இதயத் துடிப்பைச் சீர்படுத்தும் கருவி - "Pace Maker".





**இருதய நோய் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை அளிக்கப் படுகிறது.**

''கடந்த ஏழு ஆண்டுகளில், இந்த இருதய நோய்ச் சிகிச்சைப் பிரிவைச் சேர்ந்த பேராசிரியர்கள் ஆராய்ச்சி அடிப்படையில் 100-க்கு மேற்பட்ட இருதய நோய் ஆராய்ச்சிக் கட்டுரைகளை அமெரிக்கா, அர்ஜண்டைனா, ஜப்பான், சிங்கப்பூர், பாங்காக், கனடா மற்றும் பல நாடுகளிலும் இந்தியாவின் பல பாகங்களில் நடைபெற்ற கருத்தரங்குகளில் வெளியிட்டுள்ளனர். அது மட்டுமல்லாது, 50-க்கு மேற்பட்ட கட்டுரைகளை அயல் நாட்டு மருத்துவ இதழ்களிலும், இந்தியாவில் வெளியாகும் மருத்துவ இதழ்களிலும் எழுதியுள்ளனர்.

நமது ஆராய்ச்சிகள் - சிகிச்சை முறைகள் பற்றி வெளிநாட்டவர்கள்கூட விவரங்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக யோகாசனத்தால் இருதய நோயைக் கட்டுப்படுத்துவது பற்றி நமது நிறுவனத்தில் ஆராய்ச்சி செய்தோம். இதைப் பற்றிய விவரங்களை அமெரிக்காவிலுள்ள (Bayler) பல்கலைக் கழகத்தில் கேட்டுள்ளனர்.

யோகாசனம் பற்றி ஆராய்ந்து சில முடிவுகளை எடுத்திருக்கிறோம். இருதய நோயாளிகள் சிலவகை யோகாசனம் செய்வது நல்லது. அது எந்த வகை யோகாசனம் என்பதை இருதய நோய் மருத்துவர்தான் முடிவு செய்ய முடியும். யோகாசனம் நிபுணர் முடிவு செய்யக் கூடாது.

அறிவியல் மிகுதியாக வளர்ந்துள்ள அமெரிக்கா போன்ற நாடுகளில்கூட மாரடைப்பு நோயாளிகளில் 50 சதவீதத்தினர் மாண்டு விடுகின்றனர். நமது சிகிச்சைப் பிரிவுகளில் மிகுந்த கவனத்துடன் இருதய நோயாளிகளுக்குச் சிகிச்சை அளித்து வருகிறோம். தென்னாட்டிலேயே பெரிய மருத்துவச் சிகிச்சை நிறுவனமாக இருப்பதால் அண்டை மாநிலங்களுக்கு வரும் நோயாளிகளுக்கும் சிகிச்சை அளிக்க வேண்டியவர்களாக இருக்கும் சூழ்நிலையில் உள்ளோம்.

இச்சிகிச்சைப் பிரிவின் வளர்ச்சிக்காக இன்னொரு (Cardiac catherisation Laboratory) அமைத்தால் பெரிய பயனுடையதாக இருக்கும். மேலும் இந் நிறுவனம் வளர்ச்சி அடைய இது பெருந்துணையாகும். இதன் வளர்ச்சிக்குத் தேவையான உதவிகள் செய்யப்பட்டால் சென்னைப் பொது மருத்துவமனை இருதயநோய்ச் சிகிச்சை நிறுவனம் உலகப் புகழை எய்த முடியும். உலகிலுள்ள சிறந்த இருதயநோய் சிகிச்சைப் பிரிவுகளில் ஒன்றாக ஆக்க முடியும்.

மதுரை, தஞ்சாவூர், கோவை, திருநெல்வேலி போன்ற நகரங்களில் இருதயநோய்ச் சிகிச்சைப் பிரிவை பெரியதாக உருவாக்குவது அவசியமே! அவை தொடக்க நிலையிலிருந்து செய்யப்பட வேண்டியவை. ஆனால், சென்னையிலுள்ள இருதயநோய்ச் சிகிச்சைப் பிரிவு வளர்ந்துள்ள ஒன்றாகும். வளர்ந்த நிலையில் இதன் தேவைகள் மிகுதியாக உள்ளன. அவைகளை நிறைவு செய்வது இச்சிகிச்சைப் பிரிவின் செயல்திறனை, ஆராய்ச்சியைச் சிறப்பாக்கும்''

பேராசிரியர் டாக்டர் சி. லட்சுமிகாந்தன் அவர்கள் இப்படிக் கூறியது அனைவரும் ஒப்புக் கொள்ள வேண்டிய உண்மையாகும்.

இருதயநோய்த் சிகிச்சையில் ஈடில்லாத் தொண்டாற்றி வரும் இந்நிறுவனத்தின் தேவைகளை நிறைவு செய்ய வேண்டியது அவசியமாகும்.

இன்னொரு உள்ளாராய்வுக் கூடம், கூடுதலான மருத்துவப் பணியாளர்கள் ( Para-Medical Staff ) போன்றவை பெருகுவதுடன், ஆம்புலன்ஸ் வசதியும் அதிகமாக வேண்டும்.

அமெரிக்காவில் இருதயநோய் சிகிச்சைப் பிரிவுகளுக்கு என்று தனியான ஹெலிகாப்டர்களை வைத்திருக்கிறார்கள். வளர்ந்து வரும் நமது சென்னை மாநகரின் தேவைகளைக் கருதி கூடுதலாக இன்னொரு ஆம்புலன்ஸ் வண்டியாவது இருதயநோய் சிகிச்சைப் பிரிவுக்கு என தனியாக ஒதுக்கப் படுவது மிக மிக அவசியமாகும்.

மின்சாரம் நின்றுவிட்டால், அதைச் சமாளித்துக் கொள்ள முடியும். அந்த வசதியில்லாமல் மனிதன் சில மணி நேரம் இருக்க முடியாதா என்ன? ஆனால் இருதயம் நின்றுவிட்டால்! ஆகவே இருதயநோய்ப் பிரிவுக்கு மேலும் அடிப்படை வசதிகள் செய்து தர வேண்டியது இன்றியமைததாகிறது.

திறமையும், நுட்பமான ஆற்றலும் ஆர்வமும் மிகுந்த மருத்துவர்கள் நிரம்பியுள்ள இச்சிகிச்சைப் பிரிவால் தமிழ்நாட்டுக்குப் பெருமை! இதன் தொண்டும் வளர்ச்சியும் மேலும் வளர்ந்தால் நாட்டுக்கும் பெருமை! நமக்கும் நல்வாழ்வு!

ஏனெனில், இருதயமே நமது செல்வம் !

**பிறவியிலேயே இருதய நோய்க்கு ஆளாகியுள்ள சிறுவனுக்குச் சிகிச்சை அளிக்கப்படுகிறது.**





**இருதய நோய்க் குறியியல் ஆய்வுக்கூடம். உடற்பயிற்சி செய்வது போன்ற நிலையில் இந்தப் பரிசோதனை செய்யப் படுகிறது. உடல் நிலையைப்பற்றி கம்ப்யூட்டர் முறையில் இங்கு கணக்கிடப்படுகிறது.**

## ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுக்கு மேலும் புதிய சலுகை

ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுக்கு மேலும் ஒரு புதிய சலுகையை அரசு அறிவித்துள்ளது. இதன்படி இருதய நோயாளிகளுக்கு இலவசமாக இருதயத் துடிப்பைச் சீர் செய்யும் கருவி Pace Maker வழங்கப்படும். இதுபற்றி அரசு வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

தமிழக அரசில் பணியாற்றி, ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுக்கும் அவர்களின் குடும்பத்திற்கும் மருத்துவச் சலுகை ஏற்கெனவே கொடுக்கப்பட்டு வருகிறது.

அப்படிப்பட்ட ஊழியர்களுக்கு இருதய நோய்க்காக இருதயத் துடிப்பைச் சீர் செய்யும் இயந்திரம் (பேஸ் மேக்கர்) உடம்புக்குள் வைத்துப்பொருத்துவதற்காக இலவசமாகக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை அரசு ஏற்று ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கு மட்டும் (குடும்பத்தைச் சேர்ந்த மற்றவர்களுக்கு அந்தச் சலுகை அல்ல) கொடுக்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

# மின்னணுத் தொழிலில் முன்னேறிவரும் ஓசூர்

பின்தங்கிய தர்மபுரி மாவட்டத்தின் பின்தங்கிய வட்டமான ஓசூர், தொழில் நடவடிக்கைகள் செறிந்த ஒரு முக்கிய மையமாக முன்னேறி வருகிறது. சமீப காலம் வரையில் ஓசூரில் வேளாண்மை அடிப்படையிலமைந்த பட்டுத் தொழில்தான் முக்கியமென கருதப்பட்டுவந்தது.

ஓசூர் அமைந்துள்ள இட அமைப்பே இப்பகுதியின் தொழில் வளர்ச்சிக்கு முக்கிய காரணமாகும். தொழில் நகரமான பெங்களூருக்கருகில் ஓசூர் அமைந்துள்ளதாலும், அங்குள்ள தட்பவெப்ப நிலைகள் மிகவும் உகந்ததாக உள்ளதாலும், தொழில் முனைவர்கள் பெரும் பாலானோர், ஓசூர் மற்றும் அதன் சுற்றுப்புறப்பகுதிகளில் தொழில்களை அமைப்பதற்கு முன்வருகின்றனர். இப்பகுதியில் அமைக்கப்படுகின்ற தொழிற்சாலைகள்யாவும் அவற்றின் மூலதனத்தின் மீதான 15 சதவீத மத்திய அரசின் சலுகை, கூடுதலாக மூலப் பொருள்களை இறக்குமதி செய்வதற்குரிய வசதிகள் போன்ற சில தனிச் சலுகைகளைப் பெற தகுதியுடையனவாயுள்ளன.

இந்த பின்தங்கிய பகுதியினைத் தொழில்மயமாக்குவதற்கும், இங்குள்ள மக்களின் பொருளாதார நிலையினை உயர்த்துவதற்கும் ஒரு தூண்டுகோலாக, ஓசூரில் 12.34 ஏக்கர் நிலப்பரப்பில் மின்-மின்னணுத் தொழிற்பேட்டை ஒன்றை தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது. இங்கு 22 செப்பனிட்ட மனைகள் உருவாக்கப்பட்டு, அவை அனைத்தும் தொழிலதிபர்களுக்கு ஒதுக்கப்பட்டுவிட்டன. இவை தவிர தவணைக் கொள்முதல் முறையில் 8 தொழிற்கூடங்களும், வாடகை முறையில் 4 தொழில் நிலையங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன. வசூலிக்கப்படும் கட்டணங்கள் மிகக் குறைவேயாகும்.

இந்த மின்-மின்னணுத் தொழிற்பேட்டையிலுள்ள தொழிற்சாலைகளின் உற்பத்தி மதிப்பு கடந்த மூன்றாண்டுகளில் ஆண்டொன்றுக்கு ரூ. 2 கோடியாக உயர்ந்துள்ளது. இங்கு 800 பேர் வேலை செய்கின்றனர். இவர்களில் 400 பேர் மகளிராவர். மின் சுற்று அச்சுப்பலகைகள் (Printed Circuit Boards) மின்னணு சுவர் கடிகாரங்கள் (Electronic C!ocks) தடை காப்புப் பொருள்கள் கைக் கடிகாரங்கள் (Watches) மற்றும் ''இஸ்வர்ட்டர்கள்'' போன்ற மிக நுட்பமான பொருட்களை இந்தொழிற்பேட்டையிலுள்ள பல்வேறு சிறு தொழில் நிலையங்கள் தயாரிக்கின்றன. நாடு முழுவதிலும் உள்ள மின் மருத்துவச் சாதனங்கள், ''கம்ப்யூட்டர்கள்'' ''வேளாண்மை மண் ஆய்வுகள், கல்வி உதவிச் சாதனங்கள், விண் ஆராய்ச்சி சாதனங்கள், வானொலிகள், தொலைகாட்சிகள், கட்டுப்பாட்டுச் சாதனங்கள், தொலைபேசி சாதனங்கள் போன்ற நுட்பம் வாய்ந்த சாதனங்களில் இத்தொழிற்பேட்டையில் தயாரிக்கப்படுகின்ற பொருள்களைப் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன. வரும் ஆண்டுகளில் இத்தொழிற்பேட்டையில் உற்பத்தி ரூ. 3 கோடிக்கும் அதிகமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. தகுதி படைத்தவர்கள், ஓரளவு கல்வியறிவு பெற்ற இளைஞர்கள், மற்றும் வேலை தெரிந்தவர்கள் ஆகியோருக்கு 2,000 பெருக்குமேல் வேலையளிக்கப்படும். இத்தொழிற்பேட்டையில் அமைந்துள்ள மின் மற்றும் மின்னணுத் தொழில் நிலையங்கள், ஓசூர், பெங்களூர் மற்றும் இதர பகுதிகளில் அமைந்துள்ள பெருரக தொழிற்சாலைகளுக்குத் தேவையான பொருள்களையும் தொடர்ந்து தயாரித்துக் கொடுக்கும்.

தொழில் முனைவர்கள் துவங்கவிருக்கும் தொழிலுக்குத் தக்கவாறு தொழிற்கூடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. தொழிற்கூடங்கள் வாடகை முறையிலும், தவணை முறையிலும் ஒதுக்கப்பட்டுள்ளன. இத்தொழிற்பேட்டை சேலம்-பெங்களூர் நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது. மத்திய பொதுத்துறை நிறுவனங்களான ''பாரத் எலக்ட்ரானிக்ஸ்'', இந்தியன் தொலைபேசி தொழிற்சாலை ஆகியன அருகில் அமைந்திருப்பது இத்தொழிற்பேட்டைக்கு மேலும் ஒரு சாதகமான சூழ்நிலையாகும். தொழிற்பேட்டையிலுள்ள தொழில் நிலையங்களைத் தவிர, தொழிற்பேட்டைக்கு வெளியிலும் மிக நுட்பமான மின்னணு பாகங்களைத் தயாரிக்கின்ற 3 சிறூக மின்னணுத் தொழிற் நிலையங்கள் உள்ளன.

மின்னணுத் தொழிலுக்குரிய பொது வசதி பணி நிலையத்தையும் அரசு ஓசூரில் அமைத்துள்ளது. இந்த நிலையம் இப்பகுதியில் அமைந்துள்ள தொழில் நிலையங்களுக்கு பல்வேறு சோதனை வசதிகளை அளிக்கிறது. இந்த நிலையம் வழங்கி வருகின்ற சோதனை சான்றிதழ்கள், பொருள்களை விற்பனை செய்வதற்கும் அடிப்படையாய் அமைந்துள்ளன. சிறப்பு வகை மின்னணுப் பொருள்களைத் தயாரிப்பதற்கும் இந்நிலையம்உதவியளிக்கும்.

மாநிலத் தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) சுமார் 1,153 ஏக்கர் நிலப்பரப்பில், அதன் இரண்டாவது தொழிற்பகுதியை ஓசூரில் அமைத்துள்ளது. இங்கு 796 ஏக்கர் நிலப்பரப்பில் செப்பனிட்ட மனைகள் உருவாக்கப்பட்டுள்ளன. 82 தொழில் முனைவர்களுக்கு மனைகள் ஒதுக்கப்பட்டுவிட்டன.

ஓசூரில் சில புதிய நிலையங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன. ஆண்டொன்றுக்கு 8,000 மின்னணு ''டெலிபிரிண்டர்''களைத் தயாரிக்கின்ற ஒரு மின்னணு 'டெலிபிரிண்டர்'' நிலையம் ஓசூரில் அமைக்கப்படவிருக்கிறது. இது கிண்டியிலுள்ள இந்திய அரசு நிறுவனமாக ''இந்துஸ்தான் டெலிபிரிண்டர்'' நிலையத்தின் விரிவாக்கத் திட்டமாகும். துணைத் தொழில் துறையில் பல சிறுதொழில்கள் மற்றும் சின்னஞ்சிறு தொழில்கள் மின்னணுப் பாகங்களைத் தயாரித்து வழங்குவதற்கு இந்திய அரசின் இத்தொழிற்சாலை வழிவகுக்கும்,மிக நுட்பம் வாய்ந்த''பாலிஸ்ட்ரைன் கேபாசிட்டர்கள்'' என்ற பொருள்களைத் தயாரிக்கின்ற தொழில் நிலையம் ஒன்றும் அமைக்கப்பட இருக்கிறது.

தொழில் முனைவர்களுக்கு தமிழ்நாடு அரசு வழங்கி வருகின்ற வசதிகளாலும் சலுகைகளாலும், வெகு விரைவில் பல சிறு தொழில்களும், பெரு ரகத் தொழில்களும் ஒருங்கே அமையப்பெற்ற தொழில் பகுதியாக ஓசூர் திகழும்.

# செவிலியர்க்கு ஒரு கல்லூரி

இந்தியக் குடியரசுத் தலைவரின் விருதினைத் தாங்கள் பெற்றிருக்கிறீர்களே, அந்த விருது எந்த அடிப்படையில் தங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது?

சிறந்த சமூக சேவைக்காகவும் சிறந்த செவிலியர் பணிக்காகவும் ஆண்டுதோறும் இந்திய அரசு சிறப்பு விருது வழங்கி வருகிறது. அந்தத்திட்டத்தின்படி 1980ஆம் ஆண்டிற்குரிய விருது எனக்களிக்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு பெரம்பூர் ரயில்வே மருத்துவமனையைச் சேர்ந்த சகோதரி செல்வி கே.சாவித்திரி அவர்கள் இந்த விருது பெற்றது குறிப்பிடத்தக்கது.

நமது தமிழ்நாடு மட்டும்தான் இந்த ஆண்டு இவ்விருதைப்பெற்றுள்ளதா? வேறு மாநிலங்களும் பெற்றுள்ளனவா?

தமிழ்நாட்டுக்கு மட்டுமின்றி உத்தரப் பிரதேசம், குஜராத், இமாசலப் பிரதேசம், மேகாலயா ஆகிய மாநிலங்களைச் சேர்ந்தவர்களுக்கும் இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

இவ் விருது தங்களுக்குக் கிடைத்ததைப் பற்றித் தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

குடியரசுத் தலைவர் அளித்துள்ள விருது எனக்குக் கிடைத்த விருது என நான் எண்ணவில்லை; தமிழ்நாட்டுக்கே கிடைத்துள்ள விருதாக எண்ணி மகிழ்கிறேன்.

தாங்கள் செவிலியர் பணிக்கு எப்போது வந்தீர்கள்? எப்படி வந்தீர்கள்?

1952ஆம் ஆண்டிலேயே நான் செவிலியர் பணிக்கு வந்துவிட்டேன். சிறுவயதிலிருந்தே பிறருக்குச் சேவை செய்ய வேண்டும் என்பதில் எனக்கு மிகுந்த நாட்டம் இருந்தது. வெளிநாட்டுக்குச் சென்று கல்வி கற்க வேண்டும் என்ற விருப்பமும் இருந்தது. அதனால் இங்கிலாந்துக்குச் சென்று 1947 முதல் 1952 வரை தங்கியிருந்து, செவிலியர் கல்வி கற்றுத்தேர்ந்தேன்.

அக்காலத்தில் நான் பட்டப் படிப்புப் படிக்க வில்லை. அதனால், பின்னர் சண்டிகார் சென்று, அங்குள்ள அனைத்திந்திய மருத்துவக் கல்வி, ஆய்வு மையத்தில் ( All India Institute of Medical Education ) படித்து பட்டம் பெற்றேன்.

உங்கள் குடும்பத்தில் உங்களுக்கு முன்னர் செவிலியர் பணியை எவரேனும் மேற்கொண்டிருந்தனரா? அவர்களின் கட்டாயத்தின் காரணமாகவோ ஆலோசனையின் பேரிலோ இந்தப் பணியை ஏற்றீர்களா?

எங்கள் குடும்பத்தில் எனக்கு முன்னர் எவரும் செவிலியர்பணியில் ஈடுபடவில்லை. எவருடைய கட்டாயத்தின் காரணமாகவும் நான் இந்தப் பணியில் இறங்கவில்லை. எனது உள்ளமே இதனை விரும்பியது. பிளாரன்ஸ் நைட்டிங்கேலின் வரலாற்றைப் படித்ததன் காரணமாக, செவிலியர் பணிக்கு என்னை ஒப்படைத்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் என்னுள் எழுந்தது.

சென்னையில் உள்ள செவிலியர் கல்லூரி எப்போது துவக்கப்பட்டது.?

1967ஆம் ஆண்டில் உலக சுகாதார நிறுவனத்தின் ( WHO ) உதவியுடன் துவக்கப்பட்டது. இந்தக் கல்லூரி சென்னை மருத்துவக் கல்லூரியின் நிருவாகத்தின் கீழ் உள்ளது. செவிலியர்பள்ளி சென்னை மருத்துவ மனையின் பொறுப்பில் உள்ளது.

இக்கல்லூரியில் பயில்வதற்கு மாணவியர் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்?

செவிலியர் பள்ளியில் சேருவதற்கு மேல்நிலைப்பள்ளிக் கல்வியில் தேர்ச்சி பெற்ற மாணவியர், புகுமுக வகுப்பில் தேர்ச்சிபெற்ற மாணவியர் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். ஆனால் செவிலியர் கல்லூரியில் அப்படி இல்லை. செவிலியர் பள்ளியில் படித்துத் தேர்ந்து 3 ஆண்டுகள் பணியாற்றிய செவிலியர்களே சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

**பேட்டி: தமிழ்ப்பித்தன்**

அரசு மருத்துவ மனையில் பணியாற்றிய செவிலியர் மட்டுமல்ல, தனியார் மருத்துவமனையில் பணியாற்றியவர்களும் இக்கல்லூரியில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். மற்ற மாநிலங்களைச் சேர்ந்தவர்களும் இங்கு இடம் பெறுகிறார்கள். தற்போது ஸ்ரீலங்காவைச் சேர்ந்த மாணவி ஒருவர் இக் கல்லூரியில் சேர்க்கப்பட்டிருக்கிறார்.

**சென்னை மருத்துவக் கல்லூரியின் ஓர் அங்கமாக விளங்கும் சென்னை செவிலியர் கல்லூரித் தலைவர் செல்வி பெரில் அபிகெய்ல் தேவநேசன் அவர்கள் 29.4.81 இல் குடியரசுத் தலைவர் அவர்களின் விருது பெற்றிருக்கிறார்.**

**நீலகிரி மாவட்டத்துக் கூனூரைச் சேர்ந்த இவர், செவிலியர் கல்வி வாரியத்தின் தலைவராக இந்த ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதுடன், பயிற்சி பெற்ற இந்திய செவிலியர் குழுவின் தமிழ்நாட்டுக் கிளையின் தலைவராகவும், செஞ்சிலுவைச் சங்கத்தின் தமிழ்நாட்டு வட்டாரக் கிளையின் ஆயுள் உறுப்பினராகவும் பணியாற்றி வருகிறார். பெற்ற விருது குறித்தும், பணியாற்றும் செவிலியர் கல்லூரி குறித்தும் இந்தப் பேட்டியில் கூறுகிறார்.**





**பயிற்சியாளர்களின் எண்ணிக்கை என்ன?**

1967ஆம் ஆண்டில் அரசுத் தரப்பில் 10 பேரும் தனியார் துறையில் 10 பேரும் என 20 பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். 1980ஆம் ஆண்டிலிருந்து அரசுத் தரப்பில் 20 பேர், தனியார் துறையிலிருந்து 10 பேர் ஆக 30 பேர் சேர்த்துக்கொள்ளப் படுகின்றனர்.

**செவிலியர் பட்டப் படிப்புத் தவிர வேறு ஏதாவது படிப்பு இங்கு கற்றுத் தரப்படுகின்றதா?**

1981ஆம் ஆண்டிலிருந்து Community Health Nursing and Family welfare Diploma வகுப்பு நடைபெற்று வருகிறது. இது ஓராண்டுக்காலப் படிப்பு, இதைத் தவிர ஓராண்டுக் காலம் கொண்ட செவிலியர் பயிற்சிக் கற்பிப்பு டிப்ளமா வகுப்பும் நடை பெற்று வருகிறது.

**இது போன்ற கல்லூரி இந்தியாவில் வேறு எங்கு உள்ளது?**

டெல்லி, பம்பாய், சண்டிகார், மத்தியப் பிரதேசம், அகமதாபாத், ஐதராபாத் ஆகிய இடங்களில் உள்ளன. நமது தமிழகத்தில் வேலூரில் தனியார் துறையைச் சார்ந்த கல்லூரி ஒன்றும் உள்ளது. சென்னையில் 2 ஆண்டு காலப் படிப்பு இது. ஏனைய இடங்களில் 4 ஆண்டுக் காலப் பட்டப் படிப்பாக இது விளங்குகிறது.

**இக் கல்லூரியில் பாடத் திட்டம் எப்படி வகுக்கப்படுகிறது?**

இந்திய செவிலியர் கல்விக்குழுவின் ( Nursing Council of India ) பாடத் திட்டத்துடன் நமது பாடத் திட்டமும் இணைக்கப் பெற்று பாட முறை வகுக்கப்பட்டுள்ளது. நமது மாநிலத்திற்குத் தக்கவாறும் பாட முறைகள் அமைக்கப்படுகின்றன. மன இயல், சமூகஇயல், அடிப்படை அறிவியல் ஆகியவை இங்கு கற்றுத்தரப்படுகின்றன.

ஆண்டொன்றிற்கு பாட வகுப்பு 560 மணி நேரம் நடைபெறுகிறது. மருத்துவ மனைப் பணி, நூலகம் செல்லல், கருத்தரங்கில் கலந்து கொள்ளல், கண்காணித்தல் எனச் செயல் முறைப் படிப்பு ஆண்டொன்றிற்கு 900 மணி நேரம் நடைபெறுகிறது.

**செயல் முறைப் பயிற்சியில் குறிப்பிடத்தக்க பயிற்சி ஏதேனும் உண்டா?**

உண்டு. இங்கு பயிலும் 30 மாணவியரும் சுற்று வட்டாரத்திலுள்ள கிராமங்களுக்கு அடிக்கடி சென்று முகாமிட்டு, அங்கு வாழும் மக்களுக்கு பொதுச்சுகாதாரத்தின் பயன், நோய்த்தடுப்பு முறை, நல்வாழ்வுத் திட்டம், குடும்ப நலம் ஆகியவை குறித்து அவ்வப்போது விளக்கம் செய்கின்றனர். புழு பூச்சிகள் போன்றவையால் வரும் வியாதிகள் குணமாக்கப்படலாம். பின்னர் சுற்றுப்புற அசுத்தத்தின் காரணமாக அவை மீண்டும் தோன்றி நோய்களைப் பரப்பலாம். ஆகவே அது குறித்துத் தெளிவான முறையில் பொதுமக்களுக்குப் பிரச்சாரம் செய்ய வேண்டியுள்ளது. செயல்முறைப் பயிற்சிக்கென வகுக்கப்பட்டுள்ள 900 மணி நேரத்தில் மூன்றில் ஒரு பங்கு அதாவது 300 மணிநேரம் இந்த முகாம்களில் கழிந்து விடுகிறது.

**இந்தப் பிரச்சாரப் பணி செவிலியரின் பணி தானா?**

பொதுவாக செவிலியர்கள் என்றால், அவர்கள் மருத்துவ மனையின் நான்கு சுவர்களுக்கு மத்தியில் மட்டுமே வாழ்பவர்கள் -தர்மா மீட்டரும் கையுமாக நடைபோடுவதுதான் அவர்களது வேலை என்றெல்லாம் பலர் கருதுகிறார்கள்; அது தவறு. செவிலியர் சமூக நலப்பணிகளையும் சிறப்பாக நிறைவேற்றிப் பெரும் தொண்டு செய்கிறார்கள். புறநகர்ப்பகுதிகளுக்கும், சிற்றூர்ப் பகுதிகளுக்கும் சென்று நல வாழ்வு குறித்துப் பிரச்சாரம் செய்து, மக்கள் நோய்களிலிருந்து தங்களைத் தாங்களே காத்துக் கொள்வதற்குரிய வழிவகைகளை எடுத்துச் சொல்வதும் செவிலியர் பணிதான் என்பதைப் பலர் உணர்வதில்லை.

**கிராமங்களுக்குச் செல்லும் போது அங்குள்ள மக்களை செவிலியர் கல்லூரி மாணவியர் எவ்வாறு சந்திக்கின்றனர்?**

பொதுவாக, அந்தந்தப் பகுதிகளில் உள்ள பள்ளி ஆசிரியர்கள், சமூகத் தலைவர்கள், மகளிர் மன்ற உறுப்பினர்கள் ஆகியோரைச் சந்தித்து அவர்களது உதவியுடன் பொதுமக்களிடம் சென்று நல்வாழ்வுத் திட்டத்தையும் பொதுச் சுகாதார முறையையும் போதிக்கின்றனர்.

இதிலே இன்னொரு சிறப்பும் உண்டு; செவிலியர் மாணவியர் கிராமங்களுக்குச் சென்று உடனடியாகத் திரும்பிவிடுவது கிடையாது. குறைந்தது 10 நாட்களாவது அங்கே தங்கியிருந்து மக்களோடு மக்களாகக் கலந்து, அவர்களுக்குச் சத்துணவின் பெருமை குறித்தும், குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்ப வேண்டியதன் அவசியம் குறித்தும் சொல்லி சமூக நலப் பணியையும் செய்கிறார்கள்.

**இப் பணிக்கு மக்களிடம் ஆதரவு உள்ளதா?**

'பெரும்பாலும் ஆதரவு உள்ளது; கிராமப் புறங்களில் ஒரு சில மகளிர் நல்வாழ்வுப் பிரச்சாரத்தின் அருமை பெருமையை உணராமல் செவிலியரை ஏகலதும் உண்டு; இரண்டு குழந்தைகளுக்கு மேல் பெற்றுக் கொள்ள கூடாது ' என்ற கொள்கையை எடுத்துச்சொல்லும்போது, அவர்கள்மீது எரிந்து விழுகின்றனர்; கோப வார்த்தைகளை அள்ளி வீசுகின்றனர். அப்போதெல்லாம் செவிலியர் மிகுந்த பொறுமையுடனும் உறுதியுடனும் நின்று தங்களது பிரச்சாரத்தைச் சரிவரச் செய்ய வேண்டியுள்ளது.

கிராமங்களில் மட்டுமல்ல சென்னை நகரிலும் பல குப்பங்களுக்குச் சென்று, அங்குள்ள மகளிரைச் சந்தித்து புரதச்சத்து உணவின் அவசியம் குறித்தும் செவிலியர் எடுத்துரைக்கின்றனர். கம்பு, ராகி போன்ற தானியங்களினால், ஏற்படும் நன்மைகளை வலியுறுத்திக் கூறுகின்றனர். இது செவிலியரின் களப்பணியாகும்.

இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் செவிலியர் வெறும் பிரச்சாரகராக மட்டுமில்லாமல் வழிகாட்டியாகவும் இருக்கவேண்டும். அப்போது தான் மக்கள் நாம் சொல்லும் கருத்துக்களைத் தயக்கமின்றி ஏற்பார்கள்.

**இத்தகைய களப்பணி எந்த அளவு வெற்றி பெறுகிறது?**

மக்கள் நல்வாழ்வுப் பணியில் மனித ஆற்றலைப் பயன்படுத்தும் முறை மிகுந்த பலனை அளித்து வருகிறது. மக்களுக்கு நல்ல விதத்தில நாம் வழி காண்பித்தால் அவர்கள் அதனைத் தக்கவிதத்தில் அறிந்து - உணர்ந்து-நலம் பெறுவது திண்ணம்.

**இக்கல்லூரியில் நூலகம் ஏதும் உள்ளதா?**



குடியரசுத் தலைவரிடம் விருது பெறுகிறார்

இங்கு சிறிய நூலகம் ஒன்று உள்ளது. மருத்துவ சம்பந்தமான நூல்கள்தான் இதில் இடம் பெற்றுள்ளன. ஏறக்குறைய 1750 நூல்கள் இருக்கின்றன. உள்நாட்டு, வெளிநாட்டு மருத்துவ இதழ்கள் பலவும் வரவழைக்கப் பெற்று, நூலகத்தில் சேர்த்து வைக்கப்படுகின்றன.

**பொதுவாக செவிலியர் பணி குறித்துத் தங்களின் கருத்து என்ன?**

செவிலியர் பணி நாட்டுக்கு— நாட்டின் நல்வாழ்வுக்கு மெத்தவும் பயன்படும் ஒரு தொழில். இந்தப் பணியில் ஈடுபடுவோர் தம்மை அந்தப் பணிக்கு முழுதுமாக அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும்.

பொது மக்களின் நலவாழ்வுக்கு உறுதுணையாக இருப்பவர்கள் செவிலியர்கள் என்பதை நான் பெருமையுடன் சொல்லிக்கொள்கிறேன். மருத்துவப் பணி மட்டுமல்ல, சமூகநலப் பணியையும் செவிலியர் சிறப்பாக ஆற்ற வேண்டியுள்ளது.

முன்பெல்லாம் நமது நாட்டில் செவிலியரைத் திருமணம் செய்து கொள்வதற்கு ஆடவர்கள் அஞ்சினார்கள். செவிலியர் மீது இனந்தெரியாத ஒரு வெறுப்பு-அருவை இருந்து வந்தது. கால மாற்றத்தின் காரணமாகவும் சமூகப் புரட்சிகளின் வாயிலாகவும் இப்போது அந்தக் கண்ணோட்டத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளது; துணிந்து திருமணம் செய்ய முன் வருகின்றனர். இந்த அளவுக்கு சமூகத்தில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை எண்ணி நாம் மனமகிழ வேண்டும். மாற்றத்துக்குக் காரணமான கால ஓட்டத்திற்கு நன்றி சொல்வது நியாயம்.

**தங்களின் இலட்சியப் பணி குறித்துச் சில வார்த்தைகள்....?**

நான் எந்த விருதையும் எதிர் பாராமல் கடந்த 29 ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிறேன். பிறருக்கு நாம் செய்யும் சேவையின் காரணமாக அவர்களது இதயத்தில் இடம் பெற்றால் அதுவே எனக்கு எப்போதும் கிடைத்து வரும் சிறப்பு விருது எனக் கருதுகிறேன்.

குடியரசுத் தலைவர் விருது கிடைத்ததற்காக எங்கள் கல்லூரி மாணவியரும் அலுவலர்களும் ஜூலை 7ஆம் நாளன்று எனக்கு பாராட்டு விருந்து வழங்கினார்கள். மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு எச்.வி. ஹண்டே அவர்கள், தம் துணைவியாருடன் அந்த விழாவில் கலந்து கொண்டு பாராட்டிப் பேசியதை என்னால் மறக்க இயலாது. அமைச்சர் அவர்களின் துணைவியார் அன்புடன் எனக்குப் பொன்னாடை போர்த்திய போது என் உள்ளம் நெகிழ்ந்து விட்டது. செவிலியர் பணி எனக்குத் தேடித்தந்த பெருமை இது என்பதை எண்ணி நான் மகிழ்வெய்துகிறேன். செவிலியர் கல்விப் பணியில் என்னை இன்னும் அதிக அளவில் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்ற உறுதியை நான் பெறுகிறேன். என் எண்ணம் ஈடேறும்; உறுதி நிறைவேறும்; என நம்புகிறேன்.

தமிழ் வளர்த்த பெரியார்கள் :

# கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

கரு. நாகராஜன்

**நா**ஞ்சில் நாட்டில் குமரி முனையை யடுத்து விளங்கும் சிறு நகரம் சுசீந்திரம். இந்நகருக்கு அண்மையில் வடதிசையிலே சுமார் ஒருகல் தொலைவில் உள்ளது தேரூர் என்னும் சிற்றூர். அச்சிற்றூர் செய்த பெருந்தவத்தின் பயனாய் கி.பி. 1876-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 27-ஆம் நாள் தோன்றினார் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை. இவரது தந்தையார் சிவதாணுப்பிள்ளை; தாயார் ஆதிலட்சுமி அம்மையார். தமிழ்ப்பெரும் பேராசானாகத் திகழ்ந்த மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை இம்மண்ணுலகைவிட்டுப் பிரிந்த அதே ஆண்டில் பிறந்தவர் கவிமணியாவார்.

இயற்கை வளமும், செந்தமிழ் மணமும் சேர்ந்து திகழ்ந்த தம் ஊரைப் பற்றி அவர் பாடிய 'அழகம்மை ஆசிரிய விருத்தம்' என்ற நூலில் ஒவ்வொரு பாடலிலும் தேரூர் என்பதை 'இரதபுரி' என்று குறிப்பிட்டுள்ளார்.

''செந்தமிழ் மணத்தினொடு
செல்வர்மண முங்கொடைச்
செங்கைதரு மணமும் மாறாத்
தென்னிரத புரிவாழும் என்னரிய
செல்வமே
தேவி அழகம்மை உமையே''

என்பது அப்பாடல்களில் ஒன்று.

வழி வழி தமிழ்ப்புலமை நிறைந்த குடும்பத்தில் பிறந்த கவிமணிக்குத் தமிழன்னையின் அருள் இளம் வயதிலேயே இயற்கையாக ஏற்படலாயிற்று. அந்நாளில் இருந்த சூழ்நிலைப்படி பள்ளியில் அவர் மலையாளம் கற்ற போதிலும் இல்லத்தில் தமிழ் கற்று வந்தார். உள்ளூரிலேயே தொடக்கப் பள்ளிப் படிப்பை முடித்த அவர் கோட்டாற்றில் உள்ள அரசினர் உயர் பள்ளியில் தொடர்ந்து படித்தார்.

தமது பத்தாவது வயதில் தந்தையை இழக்கும்நிலை ஏற்பட்டாலும் தாயின் விடாமுயற்சியால் கல்லூரிக்குச் சென்று கற்கவும் முற்பட்டார். ஆனால் குடும்பச் சூழ்நிலை காரணமாக எப்.ஏ. வகுப்புடன் படிப்பை நிறுத்த வேண்டியதாயிற்று. ஆங்கிலக் கல்விக்கு அப்போது முடிவுரையை எழுதினாலும் அருந்தமிழ்க் கல்விக்கு முன்னுரையை அதன் பிறகே எழுதினார். ஆம்! திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த சாந்தலிங்கத்தம்பிரான் என்ற தமிழ்ப்புலமை மிக்க பெரியோரின் தொடர்பைப் பெற்றுத் தமிழறிவை இவர் பெருக்கிக் கொண்டது அதன் பிறகே! இவரது இளமைப் பருவமென்னும் பயிர், தமிழ் நீரால் தழைத்து செழித்தது.

**கவி புனையும் ஆர்வம் :** கவிமணியின் தாய்வழிப் பாட்டனார் மாணிக்கவாசகம் பிள்ளை ஓர் சிறந்த கவிஞர். அவர் 'சாத்தா' என்னும் தெய்வத்தின் மீது 'காரியந்தாதி' என்னும் பிரபந்தம் பாடியுள்ளார். கவிமணி தம் இளம் வயதில் பெரும் பகுதியை அவருடன் தான் கழித்தார். இரவிலுங்கூட அவர் பக்கத்தில் தான் கவிமணி படுத்து உறங்குவாராம். பாட்டனார் இரவில் தான் பெரும்பாலும் கவிதையெழுதுவாராம். மொணமொணவென்று அவர் எதையாவது முணுமுணுப்பது கவிமணிக்கு நிம்மதியாக உறங்க முடியாமல் செய்துவிடுவதுண்டாம். 'ஏன் பாட்டையா என்னை உறங்கவிடாமல் முணுமுணுத்துக் கொண்டிருக்கிறீர்' என்று ஒருமுறை கேட்டுவிட்டாராம் பேரர். 'சும்மா கிடலே' என்று கூறிவிட்டுத் தொடர்ந்து கவியெழுதிக் கொண்டிருந்தாராம் பாட்டனார். அப்போதே அவரைப் போலத் தானும் பாடவேண்டும் என்ற ஆர்வம் கவிமணிக்குத் தோன்றியது.

தெய்வங்களுக்குக் கொடை கொடுப்பதாகக் கூறிக் கொண்டு உயிர்களைப் பலியிடும் வழக்கம் அவர் பிறந்த ஊராகிய தேரூரிலும் இருந்தது. அங்குள்ள நல்லமாடன் கோவிலில் ஒருமுறை நடைபெற்ற அக்கொடை நிகழ்ச்சியைக் கண்ணுற்ற கவிமணியின் நெஞ்சம் துடித்தது. அதுவே ஓர் பாடலாக வெடித்தது.

''நாடியறந் தேடியிடம் நற்தேரூர் தன்னிலமர் நல்ல
மாடனென்றும் மறவ
னென்றும்
மற்றும்பல பேர்படைத்து
முன்னாள்
கோடியறி செய்தபெருங்
கொலைஞர்வேதங் கூறிய
தீதெனவே கண்டு
ஆடினார், ஆடறுத்தார்;
அள்ளியுண்டார்; ஐயையோ
இக்கொடுமை அறிந்திலேனே''

தொடக்கக் காலத்தில் தோன்றிய பாடலாக இருந்தாலும் பண்பட்ட நிலையை இப்பாடலில் காண முடிகிறது. சாந்தலிங்கத் தம்பிரான் இவருக்குத் தமிழறிவையூட்டினார். அவருக்குப் பின் சங்கரலிங்கத்தம்பிரான் கவி புனையும் ஆர்வத்தையும் ஊட்டினார். அவரது தூண்டுதலால் விளைந்ததே 'அழகம்மை ஆசிரிய விருத்தம்' என்னும் சிறு பிரபந்தம். 'சுசிந்தை மாலை' என்ற சிறுபிரபந்தத்தையும் இவர் தம் இளம் வயதில் பாடியுள்ளார். அந்த நூல் முற்றும் இன்று கிட்டவில்லை. பாட்டனாரால் தோன்றிய ஆர்வம் இவ்வாறு படிப்படியாக வளர்ந்து வந்தது.

**புரிந்த அலுவல்கள்:** குடும்பச் சூழ்நிலையால் கல்லூரிப் படிப்பைப் பாதியிலேயே நிறுத்திய கவிமணிக்கு ஏதேனும் ஓர் அரசாங்க அலுவல் பார்க்கும் எண்ணம் எழுந்தது. எனவே, ஆசிரிய பயிற்சிபெற்று அப்பணியை மேற்கொள்ளலாயினார். கோட்டாற்றில் உள்ள தொடக்கப் பள்ளியில் இளஞ்சிறார்களுக்குக் கற்பிக்கும் இளம் பாடலாசிரியராக இவர் பணி தொடங்கியது.

குழந்தைகள் தாமே படித்து மகிழ்ந்துபாடும் பாடல்கள் தமிழில் இல்லாக் குறையை அப்பொழுதுதான் இவர் உணர்ந்தார். ஆங்கிலத்தில் அத்தகைய பாடல்கள் பல இருப்பதைப் படித்து அறிந்தவர் இவர். அதனால் தமிழிலும் அதுபோல் பாடல்களைப் படைக்க விரும்பி மழலைபேசும் குழந்தையிலிருந்து படிப்படியாகக் குழந்தைகளில் எல்லா நிலையிலும் அவர்களிடம் வழங்கும் மொழிகளிலேயே எளிய இனிய பாடல்களை இயற்றினார். இவர் தமது அன்றைய அனுபவத்தை,

''சின்னஞ் சிறுபள்ளியில்-உனக்
கொரு
சிங்காரப் பெஞ்சுமிட்டுத்
தின்னக் கனியளித்து-பாலபாடம்
செப்புவன் வா, கிளியே''

என்று பின்னர்ப் பாடியுள்ளார்.



வருங்கால ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் போதனாமுறைப் பாடசாலைகளில் ஆசிரியராகவும், பின்னர் அப்போதனாமுறைப் பாடசாலையோடு தொடர்புடைய உயர்தரப் பாடசாலையில் தமிழாசிரியராகவும் இவர் நற்பணியாற்றியுள்ளார். இவரது ஆழமான தமிழறிவும் நேர்மையான உழைப்பும் அனைவரது பாராட்டுதலையும் பெற்றுத் தந்தது. அதன் விளைவாகத் திருவனந்தபுரம் மகாராஜா பெண்கள் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராகும் அரிய வாய்ப்பும் இவருக்குக் கிட்டியது.

## இல்வாழ்க்கை

கவிமணி அரசாங்க அலுவலில் சேர்ந்த 1901-ஆம் ஆண்டிலேயே இவருக்குத் திருமணமும் நிகழ்ந்தது. நாகர்கோவிலின் வடபால் உள்ள புத்தேரி என்னும் ஊரில் வாழ்ந்த உமையம்மையார் என்ற செல்வக் குடும்பத்து நங்கையைத் தம் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றார். நல்லியல்புகளைப் பெற்ற அவ்வம்மையாருடன் கவிமணி நடத்திய இல்லற வாழ்வு ஒரு சிறந்த இலட்சிய வாழ்வாகவே இலங்கியது. எல்லாச் செல்வங்களையும் பெற்றிருந்தும் மக்கட்செல்வம் இவர்கட்கு இல்லாமையினால் அம்மையாரின் தமையனார் புதல்வர் குமாரசாமியை பிள்ளையாக ஏற்றுப் போற்றினர். அவரும் பெற்றோருக்குப் பிள்ளை செய்ய வேண்டிய கடமைகளையெல்லாம் பொறுப்புடன் செய்து வந்தார்.

''உங்கள் இல்லற வாழ்க்கை எனக்கு ஒரு பெரிய அறநூலைப் போலப் பயன்பட்டது என்று நான் சொல்வது பாராட்டு உபசாரமல்ல; உண்மையான விஷயம்'' என்று பிற்காலத்தில் கவிமணியின் துணைவியாருக்கு மூத

றிஞர் இராசாசி அவர்கள் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருப்பது அம்மையாரின் அருங்குணத்திற்கோர் நற்சான்று.

**அலுவலின் ஓய்வும் அயராத் தமிழ்ப் பணியும்:**

திருவனந்தபுரம் மகாராஜா பெண்கள் கல்லூரியில் கவிமணி ஆற்றிய தமிழ்ப்பணி கல்லூரி முதல்வராலும் பிறராலும் போற்றும்வண்ணம் அமைந்திருந்தது.

“திரு தேசிக விநாயகம் பிள்ளையவர்களையும், கல்லூரியில் அவர் செய்த தொண்டுகளையும் அவர் தம் நல்லியல்புகளையும் ஒருநாளும் என்னால் மறக்க முடியாது. நான் அவரை ஓர் ஆசிரியராக மட்டும் அன்றிச் சிறந்த அறிஞராகவும் உயர்ந்த பண்பாடுள்ளவராகவும் கருதுகிறேன்” (தேவியின் ஒலியம் பக்.38) என்று கல்லூரி முதல்வர் வாட்ஸ் அம்மையார் குறிப்பிடுகிறார்.

கல்லூரியில் பணியாற்றிய காலத்திலேயே பல புனை பெயர்களில் பல்வேறு இதழ்களில் ஆராய்ச்சிக் கட்டுரைகளை இவர் எழுதியுள்ளார். ஆண்டான் கவிராயர், ஐயம்பிள்ளை, தேவி, யதார்த்தவாதி என்பன இவர்கும் புனை பெயர்களாகும். ‘நாஞ்சில் நேசன்’ போன்ற தமிழ் இதழ்களில் மட்டுமின்றி ஆங்கில இதழ்களிலும் அவ்வப்போது கட்டுரைகளை எழுதி வரலானார். சரித்திர சம்பந்தமான கட்டுரைகளை சென்னையிலும் திருவனந்தபுரத்திலும் வெளியான பத்திரிகைகளில் எழுதியிருக்கிறார்.

நாஞ்சில்நாட்டு மருமக்கள் தாய முறையினால் அந்நாட்டு வேளாளர் குடும்பங்களில் வேரூன்றிவிட்ட அல்லல்களைக் கண்டு மனமுருகினார் கவிமணி. அத்தாய முறையினால் செயற்கையாகப் பின்னாளில் திணிக்கப்பட்டது என்பதனைத் தக்க சான்றுகளுடன் ‘மலபார் குவார்ட்டர்லி ரிவ்யூ’ என்னும் பத்திரிகையில் பெரியதொரு கட்டுரையை1909-இல் வெளியிட்டார்.

“நாஞ்சில் நாட்டு வேளாளர் பாகவழக்கு’ என்னும் 37பாடல்கள் கொண்ட கவிதை நூலையும் எழுதி வெளியிட்டார். திருவனந்தபுரத்திலிருந்து அப்போதுவெளியான ‘தமிழன்’ என்னும் பத்திரிகையில் 1917-1918ஆம் ஆண்டுகளில் வெளியான கவிதைகள் தான்‘மருமக்கள் வழி மான்மியம் என்னும் நூலாகப் பின்பு உருவெடுத்தது. அந்நூலின் மூலம் அவர் செய்த சமூகப் புரட்சி 1926ஆம் ஆண்டு வெற்றி பெற்றது. ஆம்! அப்போதைய அரசு சட்டப்படி அத் தாய முறையை அவ்வாண்டில் ஒழித்துவிட்டது.

தமது எழுத்தாற்றலினால் அரிய சமூகப் பணிகளைச் செய்துகொண்டே ஆசிரியப் பணியினையும் செம்மையாகச் செய்து வந்த கவிமணிக்கு எதிர்பாராத சோதனை ஒன்றும் நேர்ந்தது. அவரைப் பாராட்டிய வாட்ஸ் அம்மையார் ஓய்வுபெற்றபின் கல்லூரி முதல்வராகப் பொறுப்பேற்ற வேறோர் அம்மையாருக்குக் கவிமணியின் அருமை புரியவில்லை. அதனால் அவரை ஆடவர் கல்லூரிக்கு மாற்றிவிட்டு அவ்விடத்தில் வேறோர் பெண்பாலரை நியமிக்கலாமென்று நினைத்து விட்டார். கல்வித்துறைத் தலைவரும் அதை ஏற்றுக்கொண்டு கவிமணியிடம் தெரிவித்தார். ஆனால் அம் மாற்றம் தமக்குச் சரியென்று படாததால் அரசு விருப்பத்தையும் பொருட்படுத்தாது 1931ஆம் ஆண்டு தாமாகவே அலுவலிலிருந்து ஓய்வு பெற்றார் கவிமணி.

அலுவலில் ஓய்வு பெற்றாலும் அவரது அயராத் தமிழ்ப்பணி தொடர்ந்துகொண்டேயிருந்தது. ஓய்விற்குப் பின் தம் மனைவியின் பிறந்த ஊராகிய புத்தேரிக் கிராமத்திற்குச் சென்று அமைதியாய் மகிழ்வுடன் வாழலானார்.

கவிமணியின் படைப்புகள் பல திறப்பட்டன. அவை கவிதை, உரைநடை நூல்களாகவும் தனிப்பாடல்களாகவும், ஆராய்ச்சிக் கட்டுரைகளாகவும் மலர்ந்துள்ளன. மலரும் மாலையும், மருமக்கள் வழி மான்மியம், ஆசிய ஜோதி, உமர்கய்யாம் பாடல்கள்; ‘தே.வி’யின் கீர்த்தனங்கள், குழந்தைச் செல்வம் ஆகியன கவிதை நூல்களாகும். ‘மலரும் மாலையும்’ என்ற நூலில் 15 தலைப்புக்களில் 1323 பாடல்கள் அடங்கியுள்ளன. அவரது சமுதாயச் சீர்திருத்தநூலாகிய மருமக்கள் வழி மான்மியத்தில் 11 படலங்கள் உள்ளன. படலத்தின் தலைப்புகளே நகைச்சுவையும் இகழ்ச்சிக் குறிப்பும் தோன்றுமாறு அமைக்கப்பட்டுள்ளன.

1943-இல் தமிழ் நாட்டில் பொங்கி எழுந்த தமிழிசை இயக்கத்தின் அலைகள் கவிமணியின் உள்ளத்திலும் மோதின. அதன் விளைவால் தோன்றிய நூல்தான் ‘தே.வி’யின் கீர்த்தனங்கள். எட்வர்டு அர்னால்டு என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய ஆசிய ஜோதி (Light of Asia) என்ற நூலைத் தழுவி எழுதப்பட்டதே கவிமணியின் ஆசியஜோதி என்ற அரிய நூல். புத்த பிரானின் சரித்திரப்பகுதிகள் சிலவற்றைக் கூறும் இந்நூல் முதல்நூலைப் போன்ற சிறப்பைப் பெற்றுத் திகழ்கிறது. 9 தலைப்புகளில் பலவகையான யாப்பில் அமைந்த இந்நூல் 1879 அடிகளை உடையது.

பாரசீகப் பெருங்கவிஞன் உமர் கய்யாமின் பாடல்களைப் பின்பற்றி அக்கவிஞனின் கவித்துவப் பெருமையை 115 விருத்தப்பாக்களில் காட்டியுள்ளார் கவிமணி. ஆங்கிலம், வங்காளம், பிரெஞ்சு, வடமொழி, இந்தி முதலிய மொழிகளிலிருந்தும் சில சிறந்த பாடல்களை இவர் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். அவைகளும் ‘மலரும் மாலையும்’ என்ற நூலில் இடம் பெற்றுள்ளன.

மேற்கண்ட பாடல்களேயன்றி அவ்வப்போது இவர் பாடிய பல பாடல்கள் இலட்சுமி, குமரன், கலைமகள், சக்தி, ஆனந்தவிகடன், கல்கி, தமிழன், கேரள சொசைட்டி போன்ற இதழ்களில் வெளிவந்துள்ளன.

கவிமணியின் ஆராய்ச்சிக் கட்டுரைகளும், நிகழ்த்திய சொற்பொழிவுகளும் அளித்த பேட்டிகளும் ‘கவிமணியின் உரைமணிகள்’ என்ற தொகுப்பு நூலாக 1957இல் வெளிவந்துள்ளது. இந்நூல் மேடைப்பேச்சு, கட்டுரை மணிகள், சாசன ஆராய்ச்சிஎன்ற முப்பெரும் பிரிவுகளை உடையது.

இவரது கவிபுனையும் ஆற்றலைக் கண்டு வியந்த சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தினர் ‘கவிமணி’ என்ற பட்டத்தை 1940 இல் சூட்டி மகிழ்ந்தனர்.

இவரது கவிதையில் உள்ளம் பறிகொடுத்த கலைவாணர் என்.எஸ்.கே. அவர்கள் பல்லாண்டுகளுக்கு முன்னே ‘சிவகவி’ என்னும் திரைப்படத்தில் கவிமணியின் கவிதை வரிகளை வசனத்தில் மேற்கோளாகக் காட்டியிருக்கிறார்; கவிஞரின் பெயரைச் சொல்லவில்லை; ஏனெனில் அது புராணப் படம். அவர் எடுத்தாண்ட வரிகள்:


“நித்தம் நித்தம் நீராடி
நெடுமால் அருளைப் பெறலா மேல்
தத்தும் தவளை மீன்களுமத்
தனிப்பே றடைய வேண்டாவோ”

“உள்ளத் துள்ளது கவிதை—இன்பம்
உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில்—உண்மை
தெரிந்துரைப்பது கவிதை”

என்று கவிதைக்கு இலக்கணம் காட்டி, அதற்கேற்ப இனிய கவிதைகளைப் படைத்தளித்த கவிமணியவர்கள் 1954ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 26ஆம் நாள் தமது 78ஆம் வயதில் பூதவுடலை நீத்துப் புகழுடம்பு எய்தினார்.




நாட்டுக்குத் தேவை தொழில் வளர்ச்சி!
தொழில் வளர்ச்சிக்குத் தேவை
டான்சி




தொழில் துறைக்கும்
வீட்டு உபயோகத்திற்கும்
ஏற்ற பல்வேறு
சாதனங்களைத் தயாரிக்கும்
55 தொழிற்கூடங்கள்.
ஆண்டு ஒன்றுக்கு
ரூ. 23 கோடி மதிப்பு உற்பத்தி-
6000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு.

டான்சியின் தயாரிப்புகளில் சில:

- இரும்பு கட்டுமானங்கள்
- நுண்ணலைக் கோபுரங்கள் மற்றும் மின்கடத்திக் கோபுரங்கள்
- இரும்பு மற்றும் மரத்தாலான நாற்காலிகள் முதலியன
- கொல்லுலை உறுப்புகள்
- இயந்திரக் கருவிகள்
- தோல் மற்றும் தோலினாலான பொருட்கள்
- விவசாயக்கருவிகள்
- வார்ப்பட இரும்புக் குழாய்கள்
- எனாமல் பூசிய செப்புக்கம்பிகள்
- பிரெஞ்சி பாலிஷ், காஸ்கட் ஷெல்லாக் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்.

டான்சி
தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்
(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)
1, ஒயிட்ஸ் சாலை, சென்னை 600 014
தொலைபேசி: 82161
தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI

# நலிந்தவர்க்கு ஒரு நிழற்குடை



**பி. வி. கிரி.**

கலைந்த தலை, கவலை தோய்ந்த முகம், அந்தப் பெண் மணியைப் பார்க்கவே பரிதாப மாக இருக்கிறது.

கூடை முடையும் வேலை செய்யும் அந்தப் பெண்மணி, குடும்ப வண்டியை ஓட்ட முடியா மல் தடுமாறினாள். அவள் தன் தொழிலை மேம்படுத்திக்கொள்ள வும், அதன் மூலம் வாழ்க்கையில் நிமிர்ந்து நிற்கவும் உதவ முன் வருகிறது ஒரு கரம். அதுதான், 'உழைக்கும் மகளிர் மன்றம்' என்னும் Working women's Forum.

சென்னை மயிலாப்பூரில் அமைதியாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறது இந்த மகளிர் மன்றம்.

முழுக்க முழுக்கப் பெண்களா லேயே நிர்வகிக்கப்படும் இந்த மன்றத்தில், யார் யார் உறுப் பினர்கள்? ஆடம்பரமாக உடை உடுத்திக் கொண்டு, அலுவலகம் செல்லும் ஆரணங்குகளா? இல்லை இல்லை! கோழி கூவுவதற்கு முன்னே எழுந்து, கொத்தவால் சாவடிக்குப் போவோர்-வெய்யில் மழை என்று பாராமல் வீதியிலே இட்லி சுட்டு விற்போர்-தெருத் தெருவாய், வீடு வீடாய்ச் சென்று துணி விற்கும்பெண்கள்-இவர்கள் தாம் இந்த மன்றத்தின் உறுப் பினர்கள்! இல்லையென்றால், தலையில் காய்கறிக் கூடையைச் சுமந்து நிற்கும் ஒரு பெண்மணி யின் உருவத்தைத் தம் சின்ன மாக அமைத்திருப்பார்களா?

**பின்தங்கியோர் முன்னேற...**

சமுதாயத்தில் பின்தங்கி உள்ள வர்களை முன்னேற்ற வேண்டும் என்ற சிந்தனையின் விளைவாய் செயல் வடிவம் பெற்றதுதான் இந்த மகளிர் மன்றம்.

1918ஆம் ஆண்டில் இம் மன்றம் துவக்கப்பட்டபோது, இதன் உறுப்பினர்களின் எண் ணிக்கை 800 பேர்கள்தான். ஆனால், இன்றோ 8,000பேர்கள் இதன் உறுப்பினர்கள்! சென்னை நகரின் எல்லாப் பகுதிகளிலும் இதன் உறுப்பினர்கள் இருக் கிறார்கள்.


இந்த உழைக்கும் மகளிர் மன்றம் என்ன செய்கிறது?

''குழந்தை குட்டிகளோடு குடும்பத்தை நடத்தவோ வரு மானம் போதவில்லை. ஏதாவது ஒரு தொழில் செய்தால்தான், வறுமை இல்லாமல் வாழ்க்கையை நடத்த முடியும். ஆனால், அதற்குப் பணத்துக்கு எங்கே போவது?

இந்த கேள்விக்குப் பதில் தெரி யாமல், எத்தனை ஏழைக் குடும் பங்கள் ஏங்கித் தவிக்கின்றன!.

காய்கறி வியாபாரம், கண் கவர் துணி வியாபாரம் செய்தல், பூப்பைகள் தயாரித்தல், தீப் பெட்டிகள் செய்தல், தின்பண் டங்கள் தயாரித்தல், தையல் வேலை, பல்பொடி, மண்பாண் டம், சுண்ணாம்பு செய்தல், அப் பளம், ஊறுகாய், வற்றல்-இப்படி எத்தனையோ சிறு சிறு தொழில் களை வீட்டிலிருந்து கொண்டே செய்யலாமே!

இவை மட்டுமா? தேநீர் விடுதி வைக்கலாம், பால் பங்க், சிற்றுண்டி விடுதி, இறைச்சிக் கடை, பழைய பேப் பர் கடை, பொம்மைக்கடை, இப்படி சிறிய அளவிலே கடைகள் வைத்து, அன்றாட வாழ்க்கையை அல்லல் இல்லாமல் நடத்திச் செல்லலாம். எல்லாம் சரி, இதற் கெல்லாம் கொஞ்சம் 'முதல்' வேண்டாமா? அந்த 'முதலை' முதன் முதலாகக் கொடுக்கின்ற வகையிலே, இந்த உழைக்கும் மகளிர் மன்றம் உறுதுணையாய் இருந்து உதவுகின்றது. சுருங்கச் சொன்னால், இந்த மன்றம் மக ளிர்க்கு வாழ வழிகாட்டுகிறது,





அதற்குத் தேசியமயமாக்கப் பட்ட 'பாங்க் ஆப் இந்தியா' கடன் தந்து உதவுகிறது.

**சொந்தக்காலில் நிற்க...**

பெண்கள், குடிசைத் தொழில் செய்வதற்கும் - அவர்கள் சொந் தக் காலில் நின்று, சுயவேலை வாய்ப்பு பெறவும் தகுந்த ஆலோ சனைகளை வழங்கும் இந்த மன் றம் வங்கி மூலம் கடன் பெறவும் உதவுகிறது. இதன் பணி இத் தோடு நின்று விடவில்லை.

'சிறு குடும்பமே சீரான குடும் பம்' என்னும் தாரக மந்திரத் தினை இது மக்களிடையே பரப்பி வருகின்றது. இந்தத் திட்டத்திற் காக 60 பெண்கள் தேர்வு செய் யப்பட்டு, அவர்களுக்குப் பயிற்சி யும் அளிக்கப்படுகிறது.

குடும்ப நலம் தவிர, சத்துணவு சுகாதாரம் பற்றிப் போதித்தல், மகப்பேற்றுக்காகத் தாய்மார் களை மருத்துவமனைக்கு அழைத் துச் செல்லுதல், குடும்பநல அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள உதவுதல் போன்ற பல் வேறு நலப் பணிகளை இப் பெண்கள் செய்து வருகின்றனர். இதுவரை, இப்பயிற்சி பெற்ற பெண்கள் சுமார் 6,000 குடும்பங் களைச் சந்தித்து, அதன் மூலம் 30,000 பேர்களுக்குக் குடும்ப நலத்தால் விளையும் நன்மை பற்றிப் போதித்திருக்கின்றனர்.

இந்த நல்ல திட்டங்களுக்கு டில்லியிலுள்ள அகில இந்திய குடும்ப நலச் சங்கம், இன்டோ-ஜெர்மன் சமூக நலச் சங்கம், ஐக்கிய நாட்டு ஏஜென்சி நிறு வனம் ஆகியவை உதவி செய்து வருகின்றன.

இந்த உழைக்கும் மகளிர் மன்றத்தின் சார்பில், சென்னை மாநகரில் பத்து குழந்தைகள் காப்பகங்கள், இருபத்தைந்து இரவுப் பள்ளிகள், பத்து தையல் பள்ளிகள் ஆகியவையும் இயங்கி வருகின்றன என்று மகிழ்ச்சி யோடு குறிப்பிட வேண்டும். இவை மட்டுமா? கணவனால் கைவிடப்பட்ட அபலைப் பெண்கள்-விதவைகள் -ஆதரவற் றவர்கள் - ஊனமுற்றவர்கள் - இவர்களுக்கெல்லாம் இம்மன் றத்தின் கதவுகள் எந்நேரமும் திறந்திருக்கின்றன.

**சமுதாய நலப் பணிகளில்..**

முதியோர்க்கு மூக்குக் கண் ணாடி வழங்குதல், சாலை போடு தல் போன்ற சமுதாய நலப் பணி களிலும் இது தன்னை ஈடுபடுத் திக் கொண்டு, ஒரு தனி அமைப் பானது கூட்டு முயற்சி இருந்தால் எதையும் சாதிக்க முடியும் என் பதை நிரூபிக்கும் வண்ணம் செய லாற்றி வருகின்றது இம்மன்றம்.

சென்னை கலைவாணர் அரங் கில் நடந்த ஒரு விழாவில், மாண்பு மிகு தமிழக முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் 106 ஜோடிகளுக்குக் கலப்புத் திருமணம் செய்து வைத்தார்.

மகளிர் குடும்பநலப் பயிற்சி முகாம் துவக்க விழாவில் மாண்பு மிகு ஊரகத் தொழிலமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர் களும், மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் திரு. எச். வி. ஹண்டே அவர்களும், சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்திருக்கின்றனர்.

இம்மன்றத்தின் சார்பில் நடந்த விழாவில் நிலமற்ற ஏழை எளிய மகளிர்க்குக் கறவை மாடு களை, மாண்புமிகு வேளாண் மைத்துறை அமைச்சர் திரு. கா. காளிமுத்து அவர்கள் வழங்கி யுள்ளார்.



இவ்வாறு ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணும் வகையிலே இம்மன்றம் பல்வேறு உதவிகளைச் செய்து வருகின்றது.

**மனச்சுமை குறைய..**

இந்தியாவிலேயே, அடித்தளத்திலுள்ள உழைக்கும் பெண்களுக்கென்று ஒரு அமைப்பு உருவானது இதுவே முதல் தடவை எனலாம்.

ஆம். சமுதாயப் பூங்காவில் ஊன்றிய அந்த வித்தானது, இன்று மிகப் பெரிய ஆலமரமாக வளர்ந்து பரந்து காட்சியளிக்கிறது. அதன் குளுமையான நிழலிலே ஆயிரக் கணக்கான பல்நிறப் பறவைகள் பாடிக் களிக்கின்றன என்றால் அது மிகையல்லவே!

இந்த உழைக்கும் மகளிர் மன்றத்தினை உருவாக்கி, எண்ணற்ற ஏழைப் பெண்களுக்கு வாழ வழிகாட்டியவர் சமூக சேவகி திருமதி ஜெயா அருணாசலம் அவர்கள். அவர் கூறுகிறார்: ''மிகச் சாதாரண நிலையில் உள்ள ஒரு பெண்ணுக்கும், அவருக்கு உள்ள உரிமையைக் கற்றுக் கொடுப்பதுதான் இந்த மன்றத்தின் நோக்கம்.''



**திருமதி ஜெயா அருணாசலம்**

வருமானம் போதாதவர்க்ள், வாழ வழியில்லாதவர்கள், உற்றார் உறவினர் அற்ற அனாதைகள் இவர்கள் சொந்தக்காலில் நிற்க, சுயமாகச் சம்பாதிக்க, தன் உழைப்பில் தான் வாழ வழிகாட்டுகிறது இந்தப் பெருமன்றம். சுருங்கச் சொன்னால், நலிந்தவர்க்கு ஒரு நிழற்குடையாக இருந்து, அவர்கள் மனச்சுமையைக் குறைக்க உதவுகிறது இம் மகளிர் மன்றம் என்றால், அது மிகையல்ல!





## வீட்டுக்கொரு காய்கறித் தோட்டம்

"வீட்டுக்கொரு காய்கறித் தோட்டம் போட வேண்டும்!'' என்று மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து அவர்கள் கருத்து தெரிவித்தார்.

ஆடிப்பட்ட வீட்டுக் காய்கறித் தோட்டத் துவக்க விழா, ஆகஸ்டு முதல்நாள், சென்னை வில்லிங்டன் சீமாட்டி கல்வி இயல் கல்லூரியில் நடந்தது.

சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி இலட்சுமி ப்ராணேஷ் ஐ. ஏ. எஸ்., அவர்கள் தலைமை வகித்தார்.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. கா. காளிமுத்து அவர்கள் கல்லூரி வளாகத்தில் தென்னங் கன்றுகளை நட்டார். பிறகு காய்கறிகள் கண்காட்சியினைத் துவக்கி வைத்தார். அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''பட்டம் பெறுவதற்காகப் படிக்கின்ற உங்களிடம், ஆடிப் பட்டம் பற்றிச் சொல்ல வேண்டிய அவசியம் பற்றி பெருமக்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள்.

''வீட்டுத் தோட்டம் அமைக்கப் பெரிய இடம் என்று தேவையில்லை; சிறிய இடம் கிடைத்தாலே போதுமானது. இந்த விழா, ஆண்கள் கல்லூரியில் நடக்காமல், பெண்கள் கல்லூரியில் நடக்கக் காரணம் என்ன: ஆண்களுக்கு எடுத்துச் சொல்வதைக் காட்டிலும் பெண்களுக்கு எடுத்துச் சொன்னால், அது உடனே நடக்கும். ஆனால் ஆண்களால் தோட்டம் போன்ற காரியங்களைச் செய்ய முடியுமா?

''பெண்களுக்கு, குழந்தைகளுக்குத் தோட்டக்கலை பற்றிய அவசியம் பற்றியும், மேன்மை குறித்தும் எடுத்துச் சொன்னால் வீட்டுக்கும் பயன் தரும்; நாட்டுக்கும் நன்மை உண்டாகும்!"

துவக்கத்தில் கல்லூரி முதல்வர் சுலோசனாசேகர் அனைவரையும் வரவேற்றார். வேளாண்மைத் துறை இயக்குநர் திரு. சீ. அ. சுப்ரமணி, ஐ.ஏ.எஸ். தோட்டக் கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை இயக்குநர் (பொறுப்பு) திரு. வெ. லக்ஷ்மணன் ஆகியோர் வீட்டுத் தோட்டம் அவசியம் பற்றிப் பேசினார்கள்.

இறுதியில், 'மரம் வளர்ப்போமே!' என்ற பாடலுடன் மாணவிகளின் கலை நிகழ்ச்சியும் நடந்தது.

—பி.வி.ஜி



# பேரூராட்சி இயக்ககம்

பொ. சோமசுந்தரம்
பேரூராட்சிகளின் இயக்குநர்

ஊராட்சி என்பது நமது நாட்டிற்கு புதிய அமைப்பு அல்ல பன்னெடுங்காலத்துக்கு முன்னே, ஏன் இதிகாச காலத்திலேயே, நமது நாட்டில் பஞ்சாயத்து ஆட்சி முறை கிராமங்கள்தோறும் நல்ல முறையில் இயங்கி வந்தது என்பதற்கு பல சான்றுகள் உள்ளன. அந்நிய ஆட்சி முறையினால் இந்நிலை பாதிக்கப்பட்டு கிராமங்கள் நலிவடையத் தொடங்கின. நமது நாட்டிற்கு கிராமங்கள் முதுகெலும்பு. கிராமங்கள் என்பதில் சிற்றூர்களும், பேரூர்களும் அடங்கும். அந்நிய ஆட்சியில் நமது நாட்டில் பஞ்சாயத்து ஆட்சி முறை என்பது பெயரளவில் மட்டுமே செயல்பட்டு வந்தது. குறிப்பாக சொல்லப்போனால், 1920ஆம் வருஷத்தில் சென்னை ஸ்தல ஸ்தாபன சட்டம், 1920-ன் படி பஞ்சாயத்துக்களை ஜில்லா போர்டுகளுடன் இணைத்து ஒரே அங்கமாக வைத்து, போதிய வருவாயும் அதிகாரமும் இன்றி பெயரளவில் செயல்பட்டு வந்தன. நாடு சுதந்தரம் அடைந்த பிறகு நமது இந்திய அரசியல் அமைப்புச் சட்டம், 40-வது பிரிவின்படி எல்லா மாநிலங்களிலும் உள்ளாட்சி அமைப்புகள் செயல்பட தனிச் சட்டங்கள் இயற்றப்பட்டன. அதன்படி நமது மாநிலத்தில் 1950 ஆம் ஆண்டு பஞ்சாயத்துச் சட்டம் ஏற்படுத்தப்பட்டு மாநில அளவில் பஞ்சாயத்துக்களையும், நகராட்சிகளையும் இணைந்து உள்ளாட்சி நிறுவனங்களின் ஆய்வாளரின் நிருவாகத்தில் பேரூராட்சிகளும், ஊராட்சிகளும் இயங்கி வந்தன.

1952ஆம் ஆண்டில் நாடு முழுவதும் சமுதாய நலத் திட்டம், தேசிய வளர்ச்சித் திட்டம் முதலிய திட்டங்களை அமல்படுத்தி கிராமங்களை தீவிரமாக முன்னேற்ற, பல திட்டங்கள் தீட்டப்பட்டன. இந்தப் பெரிய திட்டங்களைச் செயல்படுத்தும் அதிகாரத்தையும் மக்களிடமே ஒப்படைத்து, அவர்களையும் இதில் ஈடுபடுத்த வேண்டுமென்று அரசு முடிவெடுத்தது. அரசின் இயக்கம், மக்களின் இயக்கமாக மாற வேண்டுமென்பதுதான் அரசின் நோக்கம். வளர்ச்சிப் பணிகள் நல்ல முறையில் இயங்க வேண்டுமென்றால் அவற்றை செயலாக்கும் பொறுப்பையும் அவர்களிடமே விடவேண்டுமென்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு 1958ஆம் ஆண்டு பஞ்சாயத்துச்சட்டம் இயற்றப்பட்டது. அதன்படி 2-10-1960 முதல் ஊராட்சி ஒன்றியங்கள் அமைக்கப்பட்டு அவற்றின் நிர்வாகத்தின் கீழ் ஊராட்சிகளும், பேரூராட்சிகளும் கொண்டு வரப்பட்டன. மாவட்டக் கழகங்களிலிருந்து பொறுப்புகள் ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாற்றப்பட்டன.

ஊராட்சி ஒன்றியங்களில் பெரும்பாலும் வளர்ச்சிப் பணிகளே முழுவேகத்தில் நடைபெற்று வந்தன. தன்னிறைவுத் திட்டம், ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டம், வேலை வாய்ப்புத் திட்டம், உணவுக்கு வேலைத் திட்டம் போன்ற திட்டங்கள் அகில இந்திய ரீதியில் முழு வேகத்தில் செயல்படத் துவங்கியதால் ஊராட்சி ஒன்றியத்தின் ஒரு அங்கமாக இருந்து வந்த பேரூராட்சிகள் எதிர்பார்த்த அளவில் அபிவிருத்தி அடையவும் குறிப்பாக பொதுமக்களுக்கும் செய்து தரவேண்டிய அடிப்படை வசதிகளைக்கூடச் சரிவர செய்ய இயலாத நிலையில் செயல்பட்டு வந்தன. பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, விளக்கு வசதி, சுகாதார வசதிகள், சாலை வசதிகள் வடிகால் வசதிகள் ஆகியவற்றை பெருகிவரும் மக்கள் தொகைக்கு

ஏற்ப நல்ல முறையில் செயல்பட முடியாத நிலையே இருந்து வந்தது. இதனால் அங்குள்ள மக்கள் நகரங்களுக்குக் குடியேறிபல புதிய பிரச்சினைகளையும், சங்கடங்களையும் ஏற்படுத்தினர். பெரும் நகரங்களில் பெருகி வரும் ஜனத்தொகையினால் அதிக நெரிசலும் பொருளாதாரப் பிரச்சினைகளும் ஏற்பட்டன.

உலக நாடுகள் பலவற்றிலும், இத்தகைய பிரச்சினைகள் உருவாகியுள்ளன. எனவே, அங்கும் நகரங்களுக்கு அருகில் உள்ள பேரூர்களை நல்ல முறையில் அமைத்து அவைகளைப் பெரிய நகரங்களைச் சுற்றியுள்ள வளமான பாதுகாப்பு வேலியாக ஆக்க திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன. புறநகர்ப் பகுதிகளையும் பேரூர்களையும் பொருளாதார முன்னேற்றமும், தொழில் வளமும் கொண்ட மையங்களாக மாற்றி வாழ்க்கை வசதிகளைச் செய்து கொடுத்து விட்டால், மக்கள் பெரு நகரங்களுக்கு வராமல், மனநிறைவோடு அங்கேயே வாழ்ந்து வருவார்கள். இதற்காக செயல் திட்டங்களை அரசு தீட்டி வருகின்றது. அந்த முடிவில் பிறந்ததுதான் இந்தப் புதிய 'பேரூராட்சி இயக்ககம்'.

பேரூராட்சிகளையும், ஊர் ஆட்சி நகரியங்களையும் நல்ல நிருவாக அமைப்பின் துணை கொண்டு, தொழில் முன்னேற்றமும் வாழ்க்கை வசதிகளும் நிறைந்த ஊர்களாக மாற்றியமைப்பதே இப்புதிய இயக்ககத்தின் குறிக்கோள்.

பேரூராட்சிகளை ஊராட்சி ஒன்றிய இணைப்பிலிருந்து பிரித்து, இவைகளுக்கு என ஒரு தனித் துறை ஏற்படுத்திய பெருமை தமிழக அரசுக்கு உண்டு. இந்த புதிய துறை பேரூராட்சிகளின் வருவாய் வசதிகளை விரிவுபடுத்தி, மக்கள் வாழ்க்கைக்கு அவசியமான அடிப்படை வசதிகளைப் பொதுமக்களுக்குத் திறம்பட அளித்திடவும், நகரங்களுடைய நெரிசல்களையும், வாழ்வுத் துயரங்களையும் குறைத்து மக்கள் நல்லதொரு வாழ்க்கையை அமைத்துக் கொள்ள உதவும் என்று உறுதியாக நம்பலாம். இந்த புதிய துறை மூலம் ஒரு கோடி மக்கள் பயன் பெறுவார்கள். 619 பேரூராட்சிகளும், நகரியங்களும், இத்துறையின் கீழ் செயல்பட்டு வருகின்றன. மாநிலம் ஏழு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, கீழ்க்கண்ட இடங்களில் மண்டல இயக்குநரின் தலைமையில் அவை செயல்பட்டு வருகின்றன.

1. செங்கல்பட்டு
2. கிருஷ்ணகிரி
3. புதுக்கோட்டை
4. திருப்பூர்
5. குமாரபாளையம்
6. சிவகங்கை
7. திருநெல்வேலி

இந்த புதிய துறையின் மூலம் பல்வேறு அபிவிருத்திப் பணிகளைப் பேரூராட்சிகளில் செயல்படுத்தி வருங்காலத்தில் பெரும் நகரங்களுக்கு இணையாக அதன் புறநகர்ப் பகுதியாக விளங்கி வரும். மேலும் மக்கள் பெரும் நகரங்களிலிருந்து கூட அங்குள்ள நல்ல வசதிகளையும், சுகாதார மேம்பாடுகளையும், கண்டு களிப்புற்று அங்கேயே குடியேறி தங்கள் வாழ்க்கையை தொடங்குவர் என உறுதியாக நம்பலாம். இதனால் பேரூராட்சிகளில் உள்ள மக்கள் அங்கேயே இருப்பதோடு பெரும் நகர மக்களும், பேரூராட்சிகளுக்கு வருவதன் மூலம் நகரத்தில் ஏற்பட்டுள்ள நெரிசல்கள் குறையும். மேலும் தமிழகத்திலுள்ள எல்லா பேரூராட்சிகளிலும், ''ஒருங்கிணைந்த நகர அபிவிருத்தித் திட்டங்கள்'', தமிழ்நாடு குடிநீர் வடிகால் வசதித் திட்டங்கள். மற்ற அபிவிருத்தி பணிகளைச் செய்து பேரூராட்சிகள் வளர்ந்து வரும் சமுதாயத்தில் நல்ல முன்னேற்றம் அடைந்து தமிழகம் இந்தத்துறையின் மூலம் சிறந்த சாதனை ஏற்படுத்திட வழிவகை செய்யும்.

இவ்வாறு பல்வேறு பயன்களை மக்களுக்கு அளித்து அவர்களின் வாழ்வினை வளப்படுத்தும் எண்ணத்தையே தலையாய தொண்டாக கொண்டு பணியாற்றிடும் பேரூராட்சி இயக்ககம் 13.5.1981 முதல் செயல்பட துவங்கியது. ஆனால் நாட்டிலுள்ள நல்லோர்கள் அனைவரும் அறியும் வண்ணம் அதன் தொடக்க விழா கோவை மாநகரிலே கோலாகலமாக 22.7.81 அன்று நடைபெற்றது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் இந்த புதிய துறையை தொடங்கி வைத்தார்கள். இந்த விழாவிற்கு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சித்துறை அமைச்சர் ப. குழந்தைவேலு அவர்கள் தலைமை தாங்கினார். ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறை செயலாளர் திரு. எச். பி. என். ஷெட்டி, ஐ.ஏ.எஸ். அவர்களும், பேரூராட்சி இயக்குநர் திரு. பி. சோமசுந்தரம் அவர்களும் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினர். விழாவில் கலந்துகொண்ட மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து இந்த புதிய பேரூராட்சி இயக்ககத் துறையை வரவேற்ற காட்சி கண்கொள்ளாக்காட்சியாகும்.

## கோவை மாநகராட்சி

கோயம்புத்தூர் நகராட்சி 1865-ம் ஆண்டு நகர முன்னேற்றத்தின்படி 1866-ல் தோற்றுவிக்கப்பட்டது. அந்த அமைப்பு மாவட்ட நீதிபதி தலைவராகவும் அரசு அலுவலர்கள் எழுவர் உத்தியோக சார்பற்றவர் ஐவர் மொத்தம் 12 உறுப்பினர்களை உள்ளடக்கிய நிறுவனமாகச் செயல்பட்டது. அப்போதைய நகரத்தின் பரப்பளவு 6.72 சதுர கிலோ மீட்டரும் மக்கள் தொகை 24,241 ஆகவும் ஆண்டு வருமானம் ரூ. 2,490 ஆகவும் இருந்தது. 1884-ம் ஆண்டு வாக்கெடுப்பின் மூலம் உறுப்பினர்களும் நகர மன்றத் தலைவரும் பதவி ஏற்றனர். 1933-ம் ஆண்டு வரை நகர் மன்றத் தலைவரே மன்றப் பொறுப்புடன் நிர்வாக பொறுப்பும் ஏற்று வந்தார். 1933-ம் ஆண்டில் நிர்வாகப் பொறுப்பை ஆணையாளர் என்ற அரசு அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்நகராட்சி மாநகராட்சியாக மாற்றும் பொருட்டு அரசு உத்தரவின்படி 30.6.75-ல் மன்றம் கலைக்கப்பட்டு 1.7.75 முதல் தனி அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டார். இதன் பிறகு 1.12.78 முதல் சிங்காநல்லூர் நகராட்சி, தெலுங்கு பாளையம், சங்கனூர், கணபதி, குமாரபாளையம் பேரூராட்சி விளாங்குறிச்சி பேரூராட்சியின் ஒரு பகுதி கோவை ரூரல் ஊராட்சி ஆகியவைகளை இணைத்து கோவைப் பெருநகரமாக ஆக்கப்பட்டது. இவ்வாறு இணைக்கப்பட்ட நகராட்சியின் பரப்பளவு 105.60 சதுர கிலோ மீட்டராக உயர்ந்தது. வளர்ந்து வரும் தொழில் நகரத்தின் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய அரசு நகராட்சியை 1.5.81 தேதி முதல் மாநகராட்சியாக உயர்த்தியது. 1.2.81 முதல் ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவரை முழுநேர தனி அதிகாரியாக அரசு நியமனம் செய்தது.

1866-ம் ஆண்டில் நகராட்சி தோற்றுவிக்கப்பட்ட போது 24,241 ஆக இருந்த மக்கள் தொகை 1981-ல் 69,9173 ஆக உயர்ந்துள்ளது.



# மாமியார் மெச்சிய மருமகள்

தூ. சி. தியாகராசன்,
இணை ஆராய்ச்சியாளர்,
தகவல் தொடர்பு நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோவை.

இடம் : வீடு
உறுப்பினர் : மாமியார், மருமகள் சரசு, பக்கத்து வீட்டுத்தோழி சாந்தி.

(விருத்தாசலத்திலிருந்து தன் மாமியார் வருவதையொட்டி, அன்று சரசு தடபுடலாக வீட்டில் முன்னேற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறாள். அப்போது தோழி சாந்தி வருகிறாள்.)

சாந்தி : சரசு, ஓ....சரசு என்னடீ, எங்கே இருக்கே?

சரசு : (சமையலறைக்குள்ளிருந்து) சமையலறையிலே இருக்கிறேன், யாரது?

சாந்தி : யாரதா? உன் பக்கத்து வீட்டுக்காரி சாந்தி வந்திருக்கேன் வெளியே வா.

சரசு : (சமையலறையிலிருந்து கூடத்திற்கு வந்து) ஓ...சாந்தியா. வாவா. உக்காரு.

சாந்தி : என்னடி. இன்னிக்கு ரொம்ப பிசியா இருக்கே. என்ன விசயம்?

சரசு : என்ன விசயமா? வெகு நாளைக்கப்புறம் விருத்தாசலத்திலிருந்து எங்க மாமியார் வரப்போறாங்க. வந்தவுடனே 'அது தப்பு இது தப்பு'ன்னு சொல்லக் கூடாதே. அதுக்குத்தான் இந்த ஏற்பாடு.

சாந்தி : அடேயப்பா, பரவாயில்லியே! நீ மாமியார் வர்றான்னா சில மருமக்கமாருக, தலைவலி, கால்வலின்னு சொல்லட்டு, முக்காட்டைப் போட்டுட்டு மூலையிலே படுத்துடுவாங்க. நீ என்னடான்னா மாமியாரை அழைக்கிறதுக்கு மாக்கோலம் போட்டுக்கிட்டிருக்கே. ஏய், நீ சரியான ஆள்தாண்டி, மாமியாரை மயக்கறதுக்கு திட்டம் போடறே!

சரசு : அட நீ ஒருத்தி. திட்டமுமில்லை. விட்டமுமில்லை. பொதுவா எல்லா மாமியாருமே தன்னை சும்மா உக்கார வெச்சுகிட்டு மருமகளே எல்லா வேலையும் செய்யவேணும்னு நெனைப்பாங்க. வயசாயிடுச்சு. அப்படித்தானே. நெனைப்பாங்க. நாம்ப, செய்ய வேணும்னு அதைப் புரிஞ்சு நடந்து கிட்டா எதுக்கு சண்டை வருது? இன்னிக்குப் பாரேன். மாமியார் வர்ராங்கன்னு, நானே வீடு, திண்ணையெல்லாம் சுத்தம் பண்ணி வச்சுட்டேன். பாத்ருமிலே தண்ணிக்குப் பஞ்சமில்லை. அண்டா குண்டாவெல்லாம் நெரப்பி வச்சுட்டேன். பூஜையறையிலே அவங்களுக்குப் பிடிச்ச சாமிபடம்; புடலை கூட அவங்களுக்குப்புடிச்ச கலர்லே ஒண்ணு எடுத்தாச்சு; சமையல் அவங்களுக்குப் புடிச்ச வெண்டைக்காய் சாம்பார். காலையிலேயே வீட்டுக்காரர் கிட்டே சொல்லி, பெரியகுளம் மாம்பழமும் வாங்கி வச்சுட்டேன். வந்தவுடனே நறுக்கிக் குடுக்கலாம் பாரு...

சாந்தி : பெரியகுளம் மாம்பழமா? அதென்ன புதுசா இருக்கு?

சரசு : புதுசுதான். தெரியாதா உனக்கு? கோய முத்தூர்லே தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் இருக்குதல்ல!

சாந்தி : ஆமாஞ் சொல்லு. அந்த விவசாய காலேஜ் தானே?

சரசு : அதேதான். அங்கிருந்து இந்த வருசம் மாம்பழத்திலே 'பெரியகுளம்-1 மா' அப்படீன்னு ஒரு புதுரகம் வந்திருக்கு.

சாந்தி : அப்படியா? (சிந்தனையோடு) ஆங்.... ஆமாண்டி. எனக்கும் வளரும் வேளாண் மையிலே படிச்ச ஞாபகமிருக்கு. நீலம் மாம்பழம் மாதிரி தானே?

சரசு : அந்த மாதிரி தான். ஆனா இந்த'பெரிய குளம்-1 மா' வீரிய ஒட்டு ரகம். நெறைய வருசத்துக்கு வரக்கூடிய மரம் நீலம் மாதிரியே அதிக மகசூல்.

சாந்தி : எவ்வளவு மகசூல் வரும்?

சரசு : ஒரு வருசத்துக்கு ஒரு மரத்திலிருந்து சுமார் 500 லிருந்து 1500 பழம் வரைக் கும் கெடைக்குது. நீலம் மாதிரியே கார் காலத்திலே-அதாவது செப்டம்பர் - அக்டோபர் மாசத்துலே காய்பிடிக்கும். காயெல்லாம் கொத்துக் கொத்தாய் காய்க்கும் ஒவ்வொரு வருசமும் தவறாம காய்ப்புடிக்கும் சாந்தி... ஆனா....

சாந்தி : என்னடி ஆனா......?

சரசு : நீலம் மாதிரியில்லாமே, அதுக்கு முன் னாடியே இது காய்க்கிற பருவத்துக்கு வந்துடும். அதனாலே நீலம் மாம்பழத் தைத் தாக்கற வண்டுகள் இதை அதிக மாத் 'தாக்கறதில்லே.

சாந்தி : பரவாயில்லியே இந்த பெரியகுளம் -1 மாம்பழம்.?

சரசு : அது மட்டுமில்லடி. நீலத்தைவிட அதிக ருசி. பழமும் பெரிசா இருக்கிறதாலே அதிக வெலைக்கும் போகும்.


சாந்தி : ஆங்.....எனக்கு இப்போதான் ஞாப கம் வருது. பெரியகுளத்திலிருந்து சப்போட்டா ரகமும் ஒன்னு வந்திருக்கு தல்ல?

சரசு : ஆமாண்டி அதுக்குப்பேரு பெரியகுளம்-1 சப்போட்டா.

சாந்தி : கரெக்ட் அந்த பெரியகுளம்-1 சப் போட்டாவும் இதே மாதிரி பல வரு சங்களுக்கு வர்ர மரம். இல்லையா?

சரசு : எனக்கு அது ஞாபகமிருக்கு. மத்த விவர மெல்லாம் மறந்து போச்சு.

சாந்தி : நீ எங்கே, மாமியாரை அழைக்கிற அவ சரத்திலே இதையெல்லாம் மறந் திருப்பே. சொல்றேன் கேட்டுக்கோ. இந்த பெரியகுளம்-1 சப்போட்டாவும் கொத்துக் கொத்தா காய்க்கக்கூடியது. வருசம் முழுவதும் காய்க்கக்கூடியது. அதிக மகசூல் தரும். அதாவது ஒரு வருசத்திற்கு ஒரு மரத்திலிருந்து 3,500 பழம் கெடைக்குது. எடைக்கணக்கிலே



சொன்னா சுமார் 230 கிலோ மகசூல் கெடைக்குது.

சரசு : டேஸ்ட்டெல்லாம் எப்படி?

சாந்தி : நீ அதிலே குறியா இருப்பியே. மத்த ரகத்தையெல்லாம்விட அதிக ருசி. ஆனா ஒன்று. இந்த மரம் அதிக ஒயரமா வளராது. அதனாலே நல்லா நெருக்க மாகவே நடலாம்.

சரசு : அப்படி நட்டா எக்டருக்கு எத்தனை மரம் நடலாம்?

சாந்தி : 30 அடிக்கு 30 அடி இடைவெளியிலே நட்டா, எக்டருக்கு 120 மரம் நடலாம்.

சரசு : அப்படியா? (நினைவுக்கு வந்தவளாக) ஆங்....சாந்தி இதுக்கு முன்னாடி சொன்னேனே, பெரியகுளம்-1 மாமரம் அதுக்கும் இதே மாதிரி தான். 30 அடிக்கு 30 அடி இடைவெளியிலே நட வேணும். அதுவும் எக்டருக்கு 120 மரம் வருது.

சாந்தி : இந்த வருசம் எங்க வீட்டுக்காரர்கிட்டே சொல்லி பெரியகுளம்-1 மாமரம், பெரிய குளம்-1 சப்போட்டா இரண்டையும் எங்க தோட்டத்திலே வைக்கப் போறேன்.

சரசு : வையம்மா வையி. நான் எங்க மாமி யார் வர்ரபோதெல்லாம் வந்து பறிச் சுக்கிறேன்.

சாந்தி : (சிரித்தவாறே) சரசு, என்ன இருந்தா லும் நீ இன்டலிஜென்ட்டடி!

சரசு : எப்படி?

சாந்தி : மாமியாரையே இப்படி மயக்குறியே, உன் வீட்டுக்காரரை.....

சரசு : (குறுக்கிட்டு) ஓ போடி...உனக்கு எப்போ பாத்தாலும் கிண்டல் தான்.

(இருவரும் சிரிக்கிறார்கள். அப் போது கதவு தட்டப்படுகிறது).

சாந்தி : சரசு யாரோ கதவைத் தட்டுறாங்க. யாருன்னு பாரு.

சரசு : யாரது?(கதவைத்திறந்து, மாமியாரைக் கண்டு) ஓ.. வாங்க அத்தை வாங்க வாங்க, அடியே சாந்தி, எங்க அத்தை வந்துட்டாங்க.

சாந்தி : ஓ...வாங்கம்மா....வாங்க..வாங்க...

சரசு : அத்தை, இவ என் தோழி சாந்தி, பக் கத்து வீடு.

சாந்தி : இப்போ தான் உங்களைப்பத்தி பேசிக்கிட்டிருந்தோம். கரெக்டா வந்துட்டீங்க.

சரசு : உக்காருங்க அத்தை, விருத்தாசலத்தி லிருந்து பஸ்ஸெல்லாம் ஒழுங்கா கிடைச் சதா?

மாமி : ஓ. அதெல்லாம் சரியா கெடைச்சுது. இப்பத்தான் ஊருக்கு ஊரு பஸ் உட் டுண்டே இருக்காங்களே!

சரசு : இந்தாங்க அத்தை, களைச்சுப்போயி வந்திருக்கீங்க, மொதல்லே தண்ணி குடிங்க. மாம்பழம் அரிஞ்சு வச்சிருக் கேன். சாப்பிடுங்க; ஊர்லே எல்லாரும் சௌக்கியமா?

மாமி : அங்கென்ன கொறைச்சல்? உங்க மாம னார்லிருந்து நாத்தனார் வரைக்கும் எல்லாரும் சௌக்கியம். மொதல்லே இந்தா, இதைப்புடி, விருத்தாசலத்தி லிருந்து உனக்குப் புடிச்ச முந்திரிப் பருப்பு வாங்கிட்டு வந்திருக்கேன்.

சரசு : அத்தை இதைப்பாத்தவுடனே எனக்கு ஒன்னு ஞாபகம் வருது.



மாமி : என்ன? நீ சின்ன வயசிலே முந்திரிப் பருப்புன்னு நெனைச்சுட்டு பருத்திக் கொட்டையை சாப்பிட்டியே, அதுவா?

சரசு : (சிணுங்கி) இல்லீங்கத்தை. நம்ம விவ சாயக் காலேஜ்லேயிருந்து 'விருத்தா சலம்-1-முந்திரி' அப்படீன்னு ஒரு புது ரகம் வந்திருக்கு. அதைச் சொல்ல வந் தேன.

மாமி : அதுதாண்டியம்மா இது தமிழ்நாட்டிலே வெளியாகிற மொதல் முந்திரி ரகம், இந்த ''விருத்தாசலம்-1 முந்திரி'' தான் எங்க ஊர் முந்திரி ஆராய்ச்சி நிலையத்



திலே கண்டுபுடிச்சது. இதனுடைய மகசூல் மத்த ரகத்தைவிட - 7 மடங்கு ஜாஸ்தி.

சரசு : ஆத்தாடியோவ், அப்படீன்னா?

மாமி : மத்த ரகமெல்லாம், ஒரு மரத்திலிருந்து ஒரு கிலோவுக்குக் கொறைச்சலாத்தான் மகசூல் தருது. ஆனா, இந்த விருத்தாசலம்-1 முந்திரி இருக்குதே இது ஒரு மரத்துக்கு 7-கிலோ மகசூல் தருது. ஒரு எக்டருக்குன்னு பாத்தா, மத்த ரகமெல்லாம் 30 கிலோ முந்திரி பருப்பு தான் தருது. ஆனா இந்த விருத்தாசலம்-1 ரகம் எக்டருக்கு 365 கிலோ முந்திரி பருப்பு தருது.

சரசு : அடப்பரவாயில்லியே! அப்புறம்?

மாமி : அதுமட்டுமா? இது நெறைய வருஷத்துக்கு வரக்கூடியமரம். ஒவ்வொரு வருசமும் தவறாம மகசூல் தரக்கூடியது. முந்திரிக்கொட்டை நல்லா பெரிசாவும், தரமாகவும் இருக்கிறதாலே மார்க்கட்லே நல்ல வெலைக்குப் போகும். நம்ம தமிழ்நாட்டிலே மட்டுமில்லே, மத்த மாநிலத்திலே இருக்கிற முந்திரி ஆராய்ச்சி நிலையத்துலே கூட சாகுபடி செஞ்சு பாத்து 'நல்ல ரகம்'ன்னு சொல்லியிருக்காங்க. ஆனா எக்டருக்கு எவ்வளவு கன்று வேணும்னு தான் தெரியலை?

சாந்தி : அதை நான் சொல்றேங்கம்மா. 30 அடிக்கு 30 அடி இடைவெளியிலே நட்டா எக்டருக்கு 120 முந்திரிக் கன்னுகள் தேவைப்படும். நாங்ககூட இந்த வருசம் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தில் வெளியிட்டிருக்கிற பெரியகுளம்-1 மா மரம், பெரியகுளம்-1 சப்போட்டா, விருத்தாசலம்-1 முந்திரி முனையும் போடலாம்னு இருக்கிறோம்.

மாமி : சரசு, இதையெல்லாம் ஒரு பேப்பர்லே குறிச்சுக்குடும்மா. போனவுடனே உங்க மாமனாரை ஒரு புடி புடிச்சு எல்லாத்தையும் போடவெக்கறேன்.

சரசு : அதை நான் குறிச்சுத் தர்ரேனுங்க அத்தை. மொதல்ல நீங்க வந்து குளிங்க. வெந்நீர் போட்டு வச்சிருக்கேன். அதுக்குள்ளே அவர் வந்துடுவாரு. வந்தவுடனே சாப்பிடறதுக்கு சரியா இருக்கும். இன்னிக்கு உங்களுக்குப் பிடிச்ச வெண்டைக்காய் சாம்பார் வெச்சிருக்கேன்.

மாமி : அதுதானே பாத்தேன். எள்ளுங்கிறதுக்கு முன்னாடி எண்ணெயா நிப்பியே! என்ன இருந்தாலும் என் மருமக மருமக தான்!

சரசு : நீங்க மட்டும் என்னவாம்? ஞாபகம் வச்சிருந்து, எனக்காக விருத்தாசலத்திலிருந்து முந்திரி வாங்கிட்டு வந்திருக்கீங்களே, என்ன இருந்தாலும் எங்க மாமியார், மாமியார் தான்.


## மாநிலத் தலைமைக் கணக்காயர் 1

தமிழ்நாடு : : சென்னை - 600018

### அரசு ஊழியர் வருங்கால வைப்பு நிதி 1980-81

மாநிலத் தலைமைக் கணக்காயர் 1, தமிழ்நாடு அவர்கள், அரசு ஊழியர்களின் பொது வருங்கால வைப்பு நிதி (ஜி. பி. எப்.) சம்பந்தமாக, கீழ்கண்ட பிரிவுத் தலைப்புகள் கொண்ட 1980-81ஆம் ஆண்டுக்கான கணக்கு அறிக்கைகளை (அக்கவுண்ட் சிலிப்) அனுப்பத் தொடங்கியுள்ளார்.

" G.A., POL., JUDL., C.T., REGN., MISC., S & P., L.R., JAILS., EDN., VETY., IND., ELE., SCI., CO-OP., AGRI., MEDL., P.H., CPF (M) AND A.I.S. "

மேற்கண்ட அறிக்கைகள், அரசு ஊழியர்கள் 1981-ஆம் ஆண்டு மார்ச் மாதம் எந்த அலுவலகத்தில் பணிபுரிந்தார்களோ, அந்த அலுவலக நிர்வாக அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

மேலே கூறப்பட்ட பிரிவுத் தலைப்புகளில் கணக்கு எண்களைக் கொண்டுள்ளவர்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகளைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள், இந்தக் கணக்கு அறிக்கைகள் சம்பந்தமாக ஏதாவது குறைகள் காணப்படுமேயானால் முழு விவரங்களுடன் (சம்பளப் பட்டியல் விவரங்களுடன்) கீழ்க்கண்ட விலாசதாரருக்கு எழுதும்படி கோரப்படுகிறார்கள்.

**திரு. க. விஸ்வநாதன்,**
கணக்கு அலுவலர் (F. M. I. பிரிவு)
மாநிலத் தலைமைக் கணக்காயர் அலுவலகம்1
261, அண்ணா சாலை
சென்னை - 600018.




# விருது வழங்கிய விழா!

ஏ.எல்.ஆர்

திரைப்படத் தொழிலை ஊக்குவிக்கும் பொருட்டு, சிறந்த நடிகர் - நடிகையருக்கும், படங்களுக்கும் பரிசளித்து வருகிறது தமிழக அரசு. ஆண்டுதோறும் பரிசு வழங்கிடும் அந்த உயரிய திட்டத்தின்கீழ், 1979-80 ஆம் ஆண்டில் திரையிடப்பட்ட படங்களுக்கான பரிசளிப்பு விழா, சென்னையிலுள்ள கலைவாணர் அரங்கில் (15.8.81) சிறப்பாக நடைபெற்றது.

மேதகு தமிழக ஆளுநர் திரு. சாதிக் அலி அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர்.எம். வீரப்பன் அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

படங்கள் குறித்த தகுதியை நிர்ணயிக்க அமைக்கப்பட்டிருந்த தேர்வுக் குழுவின் முடிவை முன்னாள் தலைமை நீதிபதி திரு. இராமபிரசாத் ராவ் அவர்கள் வெளியிட்டார்.



மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள், தேர்வு பெற்றோருக்குத் தனது கரத்தால் பரிசுகளையும் விருதுகளையும் வழங்கிச் சிறப்பித்தார்.

## பரிசுகள்

பரிசளிக்கப்பட்ட விவரம் பின் வருமாறு:

முதலாவது பரிசு பெற்ற சிறந்த படம்: "பசி". இப்படத்தைத் தயாரித்த பட இயக்குநர் திரு துரைக்கு ரூ. 50 ஆயிரம்தொகையும், தங்கப்பதக்கமும் வழங்கப்பட்டது.

இரண்டாவது பரிசு பெற்ற சிறந்தபடம் "புதியவார்ப்புகள்" இப் படத்தின் தயாரிப்பாளர் சார்பில் திரு. ஜெயராஜ் ரூ. 30 ஆயிரம் ரொக்கமும், வெள்ளிப் பதக்கமும் பெற்றார்.



மூன்றாவது பசுபெற்ற சிறந்த படம்:'திசைமாறிய பறவைகள்'. இப்படத்தின் தயாரிப்பாளர் திரு. பி.எஸ். வீரப்பா அவர்கள் ரூ. 20 ஆயிரமும், வெள்ளிப்பதக்க மும் பெற்றுக் கொண்டார்.

குழந்தைகளுக்கான சிறந்த படமாக ''புரந்தரதாசர்'' படம் தேர்ந்தெடுக்கப்பட்டது. இதன் தயாரிப்பாளர் திரு குஞ்சிதபாதத் திற்கு ரூ. 30 ஆயிரம் அளிக்கப் பட்டது.

சிறந்த நடிகருக்கான பரிசான பொற்பதக்கம் திரு. சிவகுமா ருக்கும் (''அவன்-அவள்-அது''), சிறந்த நடிகைக்கான பரிசு செல்வி சரிதாவுக்கும் (''ஒரு வெள்ளாடு வேங்கையாகிறது'') வழங்கப்பட்டது.

சிறந்த திரைப்பட இயக்குநர் திரு. எஸ்.பி. முத்துராமன் (''ஆறிலிருந்து அறுபது வரை'').

சிறந்த கதாசிரியர் திரு. ஜெக தீசன்(''திசைமாறிய பறவைகள்).

சிறந்த வசனகர்த்தா திரு. பாக்கியராஜ் ('புதியவார்ப்பு கள்').



சிறந்த இசையமைப்பாளர், திருவாளர்கள் சங்கர் -கணேஷ் (''பணம் பெண் பாசம்'').

சிறந்த ஒளிப்பதிவாளர், திரு. லோகநாதன் (''நினைத்தாலே இனிக்கும்'').

சிறந்த பின்னணிப் பாடகர் திரு. டி.எம். சவுந்தரராசன் (''திசை மாறிய பறவைகள்'').

சிறந்த பின்னணிப் பாடகி திருமதி. எஸ். ஜானகி (''உதிரிப் பூக்கள்''.)

சிறந்த பாடலாசிரியர்கவிஞர் திரு. வாலி (''இவர்கள் வித்தி யாசமானவர்கள்'').

'பசி 'படத்தில் நடித்த திரு. டெல்லி கணேஷ், 'அவன்-அவள்-அது' படத்தில் நடித்த திருமதி மனோரமா ஆகியோருக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்பட் டன.

தரமான படங்களைத் தயா ரிக்க ஊக்கம் அளிப்பதற்காக ஒரு இலட்சம் ரூபாய் உதவிப் பணம் வழங்கும் திட்டத்தைத் தமிழக அரசு நிறைவேற்றி வரு கிறது. அதன் கீழ். ''பசி'' படத் தயாரிப்பாளர் திருமதி லலிதா, ''எங்கள் வாத்தியார்'' படத் தயாரிப்பாளர் திரு. எம்.கே. ராதா ஆகியோருக்கு அரசின் சார்பில் தலா ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.

மறைந்த ராஜா சாண்டோ நினைவுப் பரிசுத் தொகையாக, 1979-80ஆம் ஆண்டுக்கு மறைந்த திரைப்பட அதிபர் திரு பி.ஏ. பெருமாள் அவர்களுக்காக அவர் துணைவியாருக்கும், 1978-79ஆம் ஆண்டுக்கு பழம்பெரும் பட அதி பர் திரு எஸ்.வி. பிரசாத் அவர் களுக்கும் தலா ரூ. 25 ஆயிரம் வழங்கப்பட்டது.

திரு. எல்.வி.பிரசாத் அவர்கள் தமக்களிக்கப்பட்ட தொகையை, முதல்வர் நிதியில் சேர்த்துக் கொள்ளுமாறு கூறி, மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் அளித் தார்.

## நீதிபதி உரை

மாண்புமிகு நீதிபதி திரு. பி. வேணுகோபால் அவர்கள்பேசும் போது, தேர்வு செய்யப்பட்ட முறைபற்றிப் பின் வருமாறுகுறிப் பிட்டார்:

''ஒரு திரைப்படம் வசூலில் சாதனை ஏற்படுத்தியிருக்கலாம்; ஜனரஞ்சகமாக இருந்திருக்க லாம். அதை வைத்து நாங்கள் படத்தைத் தேர்ந்தெடுக்க வில்லை. மக்களுக்குப் பயன்படும் கருத்துக்கள் உண்டா? மக்கள் மனதில் பதியும் கலைப் பண் போடு படம் இருக்கிறதா? படத் தின்மூலம் நற்பண்புகளை வலி யுறுத்தியிருக்கிறார்களா? நம் கலாச்சாரம், பண்பாடு, பாரம் பர்யத்திற்கு விரோதமில்லாமல் இருக்கிறதா? - என்பவைகளை அளவு கோளாக வைத்தே நாங்கள் இவைகளைத் தேர்வு செய்திருக்கிறோம். தேர்வுக் குழுவைச் சேர்ந்த 12 பேரும் 37 நாட்கள் 37 படங்களை, பார்த்தபிறகு ஆழ்ந்து சிந்தித்து எடுக்கப்பட்ட முடிவுகளேஇவை'.

—அவருக்குப் பிறகு தென் னிந்திய திரைப்பட வர்த்தக சங்கத் தலைவர் திரு. டி.இராமா னுஜம், தென்னிந்தியத் திரைப் படத் தயாரிப்பாளர்கள் சங்கத் தின் செயலாளர் திரு. கே. வெங்கட்ராமன், தமிழ்நாடு திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கத் தலைவர் திரு. சித்ர மகால் கே. கிருஷ்ணமூர்த்தி, தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவர் திரு. எஸ்.எஸ்.இரா ஜேந்திரன் ஆகியோர் பாராட் டுரை வழங்கினர்.

பரிசு பெற்றோர் சார்பில் திரைப்படத் துறையினர் பலரும் நன்றி தெரிவித்துப் பேசினார்கள்.

## முதல்வர் உரை

மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிறப்புரையாற்றுகை யில் குறிப்பிட்டதாவது:

இந்தப் பரிசளிப்பு விழா, திறமைமிக்க கலைஞர்களுக்கு மேலும் ஊக்கமும் உற்சாகமும் தரவும், பாராட்டவும் நடத்தப் படுகின்ற விழாவாகும்.



தமிழக அரசு 'காம்பவுண்டிங் டாக்ஸ்' என்ற வரிவிதிப்பைக் கொண்டுவர முனைந்தபோது நிறைய எதிர்ப்பு இருந்தது. ஆனால், நாங்கள் எங்கள் அனுபவத்தையே மூலதனமாக வைத்துச் செயல் பட்டோம். அதன் காரணமாக, ஆண்டுக்கு 50 படங்கள் தயாராகிக் கொண்டிருந்த நிலை மாறி, இன்று நூறு நூற்றைம்பது படங்கள் வெளியாகும் நிலை உருவாகியிருக்கிறது. தமிழக அரசு, திரைப் படத் தொழிலின் வளர்ச்சிக்கு, இயன்ற வரையில் உதவி வரும்.

இங்கு ரஜனிகாந்த் அவர்களை காண்கிறேன். கலைஞர்கள் இங்கே பெருமளவில் கலந்து கொண்டிருக்கிறார்கள். இங்கே தரப்பட்டது யாருக்கோ தந்த பரிசு என்றெண்ணாமல் மகிழ்ச்சியோடு வந்து கலந்து கொள்ளும் அனைவரையும் பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஐந்து படங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசு தருவதாக இருந்தது. ஆனால் இரண்டு படங்களே தரம் மிகுந்ததெனத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. மீதமுள்ள மூன்று லட்சத்தையும் ஏதாவது படத்திற்குத் தந்திருக்கலாமே என்றார்கள். அப்படிச் செய்தால், பாராட்டி வழங்கும் பரிசு ஆகாது; பிச்சை ஆகிவிடும்.

ஆகவே, அந்தத் தொகையையும் சேர்த்து, தரமான படங்களை, நிலைமைக்கு ஏற்றவாறு நல்ல கருத்து உள்ள படங்களைத் தயாரித்தால் அடுத்த ஆண்டில் எட்டு படங்களுக்குக் கூட பரிசளிக்க முயற்சிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். நகைச்சுவை நடிகர் - நடிகை, படத் தொகுப்பாளர் ஆகியோருக்கும் அடுத்த ஆண்டு முதல் பரிசளிப்பது என்று முடிவு செய்திருக்கிறோம்.

இங்கே பேசிய பாக்கியராஜ், தன்னுடைய குருவான பாரதிராஜாவுக்கு நன்றி என்றாரே-இப்படிப்பட்ட உணர்வு தான் ஒருவரை வளர்க்கும். ஏனென்றால் நன்றி மறந்தவர்கள் அதிகமுள்ள காலம் இது சிரித்துப் பேசுவோர்கள் எல்லாம். நண்பர்களாகிவிட மாட்டார்கள்

எஸ்.பி. முத்துராமன் அவர்கள் பேசுகையில், தமிழக அரசின் நல்ல கொள்கையை, பொதுவான கொள்கையைப் படமாக்குவதில் ஆண்டுக்குப் பதினைந்து அல்லது இருபது நாள் ஒத்துழைப்புத் தருவேன் என்றார். அரசு நிச்சயம் அதைப் பயன்படுத்திக்கொள்ளும்.

சண்டை போடுவதும் நடிப்பா என்றவர்களே, இப்போது சண்டைக்காட்சிகளை நம்பி நடிக்க ஆரம்பித்து விட்டார்கள். குத்துவதுபோல் நடிப்பது, கீழே விழுவதுபோல் நடிப்பது எல்லாம் நடிப்புத்தான். உண்மையிலேயே குத்துவது என்றால், மறுநாள் படப்பிடிப்புக்குப் புதுமுகம்தான் தேவைப்படும்.




அப்படிப்பட்ட காட்சிகளில் 'டூப்' போட்டு நடிக்கும் நடிகர்களுக்கு ஏதாவது பாதகம் ஏற்பட்டால், அவர்கள் குடும்பத்திற்கு எதிர் காலம் கிடையாது.

ஆகவே, ஒரு படத்தைத் தயாரிக்கும் பட அதிபர், அவர்களின் எதிர்காலத்தை நினைத்து பத்தாயிரம் ரூபாயோ அதற்கு அதிகமாகவோ நிதி ஒதுக்க ஏற்பாடு செய்தால், அந்த அளவுக்கு அரசும் அவர்கள் நல்வாழ்வுக்கு நிதியளிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'எல்லைக்காவலன்' என்ற பெயரில் சில ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு கதையை நான் எழுதினேன். அதை மூன்றாண்டுகளுக்கு முன்பே படம் ஆக்க நினைத்தேன். அதை நண்பர் ஒருவர் படமாக்குவார்.

கலைஞர்கள் ஓரளவுக்கேனும் எச்சரிக்கையோடும், அதேநேரத்தில் துணிவோடும் இருக்க வேண்டும். எதிர்காலக் கலை உலகம் உங்கள் கையில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. எதிர்காலக் கலை உலகம் காப்பாற்றப் பட என்னென்ன செய்யவேண்டுமோ அதை இந்த அரசு செய்யும்.

—இவ்வாறு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசினார்.



விழா முடிவில் - செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. கே.ஏ. சுந்தரம் அவர்கள் நன்றி கூறினார்.

விழா நிகழ்ச்சிகளின் அறிவிப்பாளராகச் செயல்பட்ட அரசுத் திரைப்படப் பயிற்சிக் கல்லூரி மாணவி செல்வி உஷாவுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் தஞ்சாவூர் தட்டு ஒன்றினைப் பரிசாக வழங்கினார்.





# ஹிந்து தர்மம்

## - மகாகவி பாரதியார்

ஓம் சக்

"ஊருக்கு நல்லது சொல்வேன்—எனக்கு
உண்மை தெரிந்தது சொல்வேன் ;
சீருக்கெல்லாம் முதலாகும்—ஒரு
தெய்வம் துணை செய்ய வேண்டும்"

என்னுடைய அபிப்பிராயத்தில்........இந்த சமயத்தில்.......ஹிந்துக்களெல்லாம் ஒன்று என்ற மூல மந்திரத்தை நிலைநாட்டுவதே அவசியமென்று என் புத்திக்குத் தோன்றுகிறது. ஹிந்துக்களெல்லாம் ஒரே கூட்டம். பாரத பூமியின் மக்களெல்லாம் ஒரே தாய் வயிற்றுக் குழந்தைகள். நமக்குள் மதபேதம், ஜாதிபேதம், குலபேதம், பாஷாபேதம் ஒன்றுமே கிடையாது. இந்தக் கொள்கைதான் இந்தக் காலத்துக்கு யுக்தமானது. ஹிந்து மதத்தை உண்மையாக நம்புவோரெல்லாம் ஒரே ஆத்மா, ஒரே உயிர், ஒரே உடம்பு, ஒரே ரத்தம், ஒரே சுடர் ஒன்று !

ஹிந்துக்கள் உயர்ந்த நிலைமைக்கு வர வேண்டுமானால் ஐக்கிய நெறியை உடனே அனுசரிக்க வேண்டும். உலகத்தில் புதிய ஞானம், புதிய வாழ்க்கை, புதிய அறம், புதிய நெறி தோன்றக்கூடிய காலம் பிறந்துவிட்டதென்று மேதாவிகளெல்லாரும் ஒருங்கே சொல்லுகிறார்கள். இங்ஙனம் புதிய ஞானம் பிறக்க வேண்டுமானால் அதற்கு ஹிந்துமதமே முக்கிய சாதனம் என்று நாம் சொல்லுகிறோம். சுவாமி விவேகாநந்தர், ரவீந்திரநாத் டாகூர், ஜகதீச சந்திரவஸு முதலிய பெரியோர்களும் அங்ஙனமே சொல்லுகிறார்கள். இந்தச் சமயத்தில் ஹிந்துக்கள் பிரிவு பேசலாமா? ஹிந்துக்கள் பிரிந்து கிடந்தால், ஹிந்து தர்மத்தின் மஹிமையை உலகத்தார் காண்பதெப்படி? ஹிந்து தர்மம் பெருமாள்கோயிலைப் போல! நிற்பது எங்கே நின்றாலும், அத்தனை பேருக்கும் பிரசாதமுண்டு. பகவத் சந்நிதியில் ஜாதிபேதமில்லை. அத்தனை பேரும் கலந்து நிற்கலாம். சர்வ தர்மங்களுக்கும் ஹிந்து தர்மமே வழிகாட்டி. ஹிந்து தர்மத்தை நிலை நிறுத்தினால் எல்லோருக்கும் நல்லகாலம் பிறக்கும் !

சென்னை கிருஸ்துவ கலாசாலையில் டாக்டர் மில்லர் என்று ஒரு பாதிரி இருந்தார். அவர் நல்ல புத்திசாலி என்று பெயரெடுத்தவர். அவர் ஹிந்து மதத்தைப் பற்றிப் பேசும்போது, கடவுளின் அந்தர்யாமித்தன்மையை மற்றெல்லா மதங்களைக் காட்டிலும் ஹிந்து மதத்திலேதான் தெளிவாகக் காட்டியிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார். கடவுள் சர்வாந்தர்யாமி என்பது எல்லா மதத்திலுமுண்டு. ஆனால் இங்கேதான் அதைத் தெளிவாகச் சொல்லுகிறோம்.

பாரத ஜாதி ஒன்று; பரஸ்பர அநுசரணையுடைய பல கிளைகள் கொண்ட ஒரு பொருள். நமது ஜாதீய ஒருமையை உணர்வதற்கு தேசபக்தி என்ற விழிகொண்டு பார்க்க வேண்டும். ஆனால் சுயலாபத்தைக் கருதிய அந்நியர்கள் நம்மில் வேற்றுமைகளைப் பற்றிப் பேசும்போது நமக்கு மிகவும் சந்தேகமுண்டாகிறது. அவர் உபதேசம் முடிந்து வீட்டுக்குப் போன பிறகு தனியேயிருந்து இதைப்பற்றி யோசித்துப் பார்ப்பதே தகுமென்ற எண்ணம் உண்டாகிறது.

நம்முள்ளே பொது நலத்திற்கு விரோதமான வேற்றுமைகளை அவரவர்கள் கண்ட கண்ட இடத்தில் நீக்கிக் கொள்ள வேண்டுமேயல்லாது, நமது பொதுநலச் செய்திகளைக் காட்டிலும், வேற்றுமைச் செய்திகள் வெகு முக்கியம்போல, பின்னவற்றையே, பிரமாதமாக பிரசங்கித்துக் கொண்டிருக்கலாகாது.

....ஹரிஜனங்களுக்கு நியாயம் செலுத்த வேண்டியது நம்முடைய முதற் கடமை. அவர்களுக்கு முதலாவது வேண்டியது சோறு. சென்னைப் பட்டணத்து 'பட்லர்' களைப் பற்றிப் பேச்சில்லை. கிராமங்களிலுள்ள பண்ணை ஹரிஜனங்களைப் பற்றிப் பேச்சு. அவர்களையெல்லாம் ஒன்று திரட்டு. உடனே விபூதி நாமத்தைப் பூசு. பள்ளிக்கூடம் வைத்துக் கொடு. கிணறு வெட்டிக் கொடு. இரண்டு வேளை ஸ்நானம் பண்ணச் சொல்லு. அவர்களோடு சமத்துவம் கொண்டாடு. நான் நெடுங்காலமாகச் சொல்லி வருகிறேன். அவர்

களையெல்லாம் ஒனறு சேர்த்து ஹிந்து தர்மத்தை நிலைக்கச் செய்யுங்கள். நம்முடைய பலத்தைச் சிதற விடாதேயுங்கள். மடாதிபதிகளே! நாட்டுக்கோட்டைச் செட்டியார்களே! இந்த விஷயத்தில் பணத்தை வாரிச் செலவிடுங்கள். இது நல்ல பயன் தரக் கூடிய கைங்கர்யம். தெய்வத்தின் கருணைக்குப் பாத்திரமாகும் கைங்கர்யம்.

நம்முள் ஒருவகுப்பினரை நாம் தீண்டாத வகுப்பினர் என்று விலக்கினோம். இப்போது நமது ஹிந்து ஜாதி முழுவதையும் உலகம் தீண்டாத ஜாதி என்று கருதுகிறது. உலகத்தில் எல்லா ஜாதியாரிலும் வகுப்புகள் உண்டு ஆனால் தீராத பிரிவுகள் ஏற்பட்டு ஜாதியைத் துர்பலப்படுத்தி விடுமானால் ; அதிலிருந்து நம்மைக் குறைவாக நடத்துதல் அன்னியர்களுக்கு எளிதாகிறது. ''ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்'' !

நமது ஜாதியைப் பிடித்த நோய் இன்னும் தீராமலிருக்கிறது. இதைப் பற்றி மேற்குலத்தார்கள் வேண்டிய அளவு சிரத்தை செலுத்தாமல் இருக்கின்றனர். ஹிந்து ஜனங்களின் தொகை வருஷந்தோறும் அதிபயங்கரமாகக் குறைந்து கொண்டு வருகிறது. மடாதிபதிகளும், சந்நிதானங்களும் தமது தொந்தி வளர்வதை ஞானம் வளர்வதாகக் கொண்டு ஆனந்தமடைந்து வருகின்றனர். ஹிந்து ஜனங்கள்! ஹிந்து ஜனங்கள்! நமது இரத்தம் நமது சதை, நமது எலும்பு, நமது உயிர்!

நாமே தாழ்ந்த ஸ்திதியில் இருப்போர்களை நல்ல ஸ்திதிக்குக்கொண்டு வரவேண்டும். இந்தத் தாழ்ந்தவர்களும் நமக்கு வேண்டியவர்கள்தான். ஆகையால் எழுந்திருங்கள். பெரியோர்களே! உங்கள் பிள்ளைகள் யாவரையும் தேசத்திற்கு நன்மை செய்ய அனுப்புங்கள்

வெளித் தேசத்தாருக்குத் தர்மோபதேசம் செய்கையில் நமது நாட்டில் குற்றங்கள் நடப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கலாமோ? இங்கே அநாவசியமான ஜாதி விரோதங்களும் (அன்புக்குறைவுகளும்) அவமதிப்புகளும் வளர விடலாமா? அவற்றை அழித்து உடனே அன்பையும், உடன் பிறப்பையும் நிலைநாட்டுவது நம்முடைய கடமையன்றோ ?

(ஆதாரம் : 'ஊருக்கு நல்லது'
மகாகவி பாரதியார் எழுதியது.
சென்னை ஸ்ரீ புவனேஸ்வரி பதிப்பகம்,
வெளியீடு.

தொகுத்தவர் 'ரகமி')



## 60 ஆண்டுகளுக்கு முன்பு

# கவி பாரதியார்

## விண்ணவருக்கு விருந்தாகிவிட்டார் !

**ம**க்கள் வாழ்வு நீர்மேல் குமிழி போலும்! தமிழ்நாடு போற்றும் ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார் இவ்வுலக வாழ்வைத் துறந்து விண்ணவருக்கு விருந்தாகிவிட்டார் என்ற செய்தியை அறிவிக்க நமது மனம் பதறுகிறது. சில தினங்களாக நோயினால் வருந்திக் கொண்டிருந்த அவரை மறுபடியும் ஸ்தூல சரீரத்தில் பார்க்கப் போவதில்லை என்று நாம் நினைக்கவில்லை. திங்கட்கிழமையன்று 'மித்திரன்' வேலைக்கு வந்துவிடுவதாகச் சில தினங்களுக்கு முன் சொல்லியனுப்பிய அவர் திங்கட்கிழமையன்று சாம்பராகிவிட்டது என்ன கொடுமை! 30 வயதுக்குள் தமது கவித்திறமையாலும் தேச பக்தியாலும் தமிழ்நாட்டை வசப்படுத்திவிட்ட இச் சிறுபிள்ளையின் பிரிவைத் தமிழ்நாடு எப்படிச் சகிக்குமோ அறியோம்! அன்பே உருவெடுத்தாற் போன்று விளங்கின அவரைப் பிரிந்து அவரது மனைவியும் இரண்டு பெண் குழந்தைகளும் எப்படிப் பொறுத்திருப்பரோ? கொடிய எமனுக்குத்தான் தெரியும் !

பள்ளிக்கூடத்தை விட்டுக் கிளம்பியதும் ஸ்ரீமான் ஜி. சுப்பிரமணிய அய்யரிடத்தில் 'மித்திரன்' உதவி ஆசிரியராக அமர்ந்து வேலை செய்து வரும் நாளில் 'இந்தியா' என்ற வாரப் பத்திரிகை ஒன்றைத் தாமே நடத்தி வந்தார். அதன் மூலமாக ராஜாங்கத்தாருடைய கோபத்துக்கு ஆளாகி சுமார் 10 வருஷகாலம் பிரஞ்சு இந்தியாவில் வாழ வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. பரபரப்பாக வேலை செய்யும் இயல்புடைய ஒருவர் சும்மா இருக்கும்படி நேர்ந்த காரணத்தால் அவருடைய தேகம் மெலிந்து போய், பழைய பாரதியின் சாயல் போல இரண்டு வருஷத்திற்கு முன் புதுச்சேரியிலிருந்து மீண்டும் வந்தார்.

சிறிது காலம் தம்முடைய ஊராகிய கடயத்தில் இருந்து விட்டு தமது ஆசையைக் கவர்ந்த பத்திரிகை வேலைக்குத் திரும்பி வந்து 'மித்திரன்' உதவி ஆசிரியர்களில் ஒருவராகி, தேச ஊழியம் செய்து வரும் நாளில், திடீரென்று நம்மையெல்லாம் விட்டு மறைந்துபோய் விட்டார். அவர் போய் விட்டாராயினும், அவருடைய கீர்த்தியும் எந்நாளும் பிரகாசிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

புதுச்சேரியில் வாழ்ந்த காலத்தில் 'சக்திதாஸன்' 'காளிதாஸன்' என்ற புனை பெயர்களுடன் அவர் 'மித்திர'னுக்கு அடிக்கடி எழுதி வந்ததை இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறோம். 'இந்தியா' என்ற வாரப் பத்திரிகையை அவர் நடத்தி வந்த காலத்தில் படித்தவர்கள் அவரது திறமையை நன்கு அறிந்திருப்பார்கள். அன்னமர்த்தனம் செய்துகொண்டு நூறு வயது வாழ்வதைவிட லோகோபகாரமாகச் சிந்நாள் வாழ்வது சிறந்ததேயாகுமாயினும், தம்முடைய மனைவி, மக்களுக்கு ஆதரவு எதுவுமில்லாத நிலைமையில் நமது பாரதியார் காலகதியடைந்துவிட்டது மிகவும் பரிதாபமான விஷயம். 'வேதம் நிறைந்த தமிழ்நாடு. வீரம் செறிந்த தமிழ் நாடு' என்று தமிழ்நாட்டின் பெருமையைப் பாடின ஸ்ரீ. சி. சுப்பிரமணிய பாரதியாரின் குடும்பத்தைக் காக்க தமிழ்நாடு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம். அவருடைய ஞாபகத்தைப் பாராட்டி பகல் இரண்டு மணியுடன் வேலை நிறுத்தப்படுகிறதால், ஏற்பட்ட சமாச்சாரங்கள் இன்று 'மித்திர'னில் பிரசுரமாகமாட்டா!

(மகாகவி பாரதி அமரராகிய
தினத்தன்று (12-9-'21)
'சுதேசமித்திரன்' இதழில்
வெளியான தனித்தலையங்கம்)

**(தொகுத்தளித்தவர் : 'ரகமி')**



# அரசின் அறிவிப்புகள் ஆக்கப் பணிகள்

தொகுப்பு: ஜி. ஆனந்தன்

### 1—8—81

விவசாயிகளுக்கு உடனுக்குடன் உரம், பூச்சி மருந்து கிடைக்கச் செய்யும் வேலை வாய்ப்பில்லாத பொறியாளர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தருமென தமிழக வேளாண்மைப்பொறியியல் பணிக் கூட்டுறவு இணையகத்தின் தலைவர் திரு கே. குப்புசாமி எம்.எல்.ஏ அறிவித்தார்.

### 2—8—81

தமிழகத்திலுள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம், கடந்த 3 மாத காலத்தில் 27 ஆயிரம் பேர் வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்று தமிழக வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் திரு. எம். வைத்தியலிங்கம் அவர்கள் அறிவித்தார்.

ரூ. 40 கோடி செலவில் போக்குவரத்துத் துறைக்கு 1,500 புதிய பேருந்துகளை தமிழக அரசு வாங்கும் என்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. எஸ். முத்துச்சாமி அவர்கள் அறிவித்தார்.

தொழிலாளர்களின் நலனையொட்டி பணிக்கொடைத் திருத்தச் சட்டம் கோரி டெல்லியில் நடைபெற்ற தொழிலாளர் நல அமைச்சர்கள் மாநாட்டில் தமிழக அரசின் சார்பில் வற்புறுத்தப்பட்டது என்று மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு எஸ். இராகவானந்தம் அவர்கள் அறிவித்தார்.

### 3—8—81

கொடைக்கானல் மலைப்பகுதிகளில் சாலை வசதி செய்வதற்காக 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு தனி அலுவலரின் கீழ் இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்று மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் திரு கே. ராஜாமுகமது அவர்கள் தெரிவித்தார்.

சந்தனமரம் கடத்தப்படுவதைத் தடுக்க, சந்தன மரக் கடத்தலில் ஈடுபடுவோர் மீது தமிழக அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள—விதிமுறைகளில் தக்க மாற்றங்களைச் செய்ய மத்திய அரசிடம் தமிழகஅரசு கோரியுள்ளது என்று மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் தெரிவித்தார்.

தமிழ்நாட்டின் மின் தேவையைப் பூர்த்தி செய்ய 1,200 கோடி ரூபாய் செலவில் பெருந்திட்டம் ஒன்று தீட்டப்பட்டுள்ளது என்று மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

அறந்தாங்கியில் 6 கோடி ரூபாய் செலவில் கூட்டுறவு நூற்பாலையும் இரண்டரைக்கோடி ரூபாய் செலவில் மின்தறி இணையகமும் அமைக்கப்படவிருப்பதாக மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் அறிவித்தார்.

உடல் ஊனமுற்றோர் ஆண்டாகிய இந்த ஆண்டில், மேற்கொள்ளப்பட்டுள்ள பல்வேறு திட்டங்களில் ஒன்றான, ஊனமுற்றோர்களை பொருளாதார நிலையில் உயர்த்துவதற்கு ஒவ்வொரு ஊனமுற்றோருக்கும் ரூபாய் ஆயிரம் உதவித் தொகை வழங்கும் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

### 4—8—81

மின்சார மீட்டரைப் பார்த்துக் குறிப்பு எழுதி அலுவலகத்துப் போய் பில் போடும் முறை இல்லாமல் மீட்டரைப் பார்த்த உடன் அதே இடத்திலேயே அதற்கான கட்டண 'பில்' போடும் முறையை ( Spot Billing ) செப்டம்பர் 15 முதல் அமல்படுத்தப்படும் என்று மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரன் அவர்கள் அறிவித்தார்.

கைத்தறித்துணி உற்பத்தியைப் பெருக்க ''தமிழ்நாடு கைத்தறி வாரியம்'' ஒன்றினை விரைவில் அமைக்க அரசு முடிவு எடுத்துள்ளது என்று மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு! எஸ். என். ராஜேந்திரன் அவர்கள் அறிவித்தார்.

வாடகைக் கட்டடங்களில் இயங்கும் மாநகராட்சிப் பள்ளிகளுக்கு 2 • ஆண்டுக் காலத்திற்குள் சொந்தக் கட்டிடங்கள் கட்டப்படும் என்று மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் அறிவித்தார்.

### 8—8—81

மாணவர்களுக்கு விஞ்ஞான அறிவு பெருகும் வகையில், சென்னை, திருச்சி, கோவை ஆகிய நகரங்களில் 'விஞ்ஞான மையங்கள்' அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் அறிவித்தார்.

செங்கல்பட்டு அல்லது வடஆர்க்காடு அல்லது தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கூட்டுறவுத்துறையின் மூலம் 15 கோடி ரூபாயில் சமையல் எண்ணெய் ஆலை அமைக்கப்படும் என்று மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு கா. காளிமுத்து அவர்கள் அறிவித்தார்.

## 11—8—81

இலட்சக்கணக்கான சுற்றுலாப் பயணிகளைத் கவர்ந்திழுக்கும் கன்னியாகுமரி மாவட்டத்தில் 28 கோடி ரூபாய் செலவில் பெரும் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படவிருக்கிறது என்று மாண்புமிகு செய்தி அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் அறிவித்தார்.

தமிழ்நாட்டில் மத மாற்றத்தைத் தடுக்க சட்டம் கொண்டு வருவது பற்றி தமிழக அரசு ஆலோசனை செய்து வருவதாக மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் அறிவித்தார்கள்.

பேரறிஞர் அண்ணா பிறந்த தினமான செப்டம்பர் 15ந் தேதி தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகம் துவக்குவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன என்று பல்கலைக் கழக நிபுணர் குழுவின் தலைவர் டாக்டர் திரு வ. சுப. மாணிக்கம் அவர்கள் தெரிவித்தார்.

சேதுசமுத்திரக் கால்வாய்த் திட்டம் செயல்படுத்தப்பட்டால் 900 கப்பல்கள் அதைப் பயன்படுத்தும், கப்பல் பயண நேரமும் செலவும் மிச்சமாகும் என்று மத்திய அரசு நிபுணர் குழுவிடம் தமிழக அரசு வற்புறுத்தியுள்ளது.

## 12—8—81

மாணவர்களின் வசதிக்காக விண்ணப்பம் செய்த இருநாட்களுக்குள்ளேயே வருமானச் சான்றிதழ்கள் வழங்கப்படவேண்டும் என்று வருவாய்த்துறை அலுவலர்களுக்கு ஆணை பிறப்பித்துள்ளதாக மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் தெரிவித்தார்.


## 13—8—81

விடுதலை நாளான ஆகஸ்ட் 15ந் தேதியன்று தமிழ்நாட்டிலுள்ள 5 ஆயிரம் கோயில்களில் ஆதிதிராவிட மக்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பு பிரிவினரும் ஒன்றாக உணவு அருந்தும் பொது விருந்தில் 5 இலட்சம் பேர் பங்கேற்பார்கள் என்று மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் அறிவித்தார்.

சென்னை மாநிலம் என்று பெயரை மாற்றி, தமிழகத்துக்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் வைக்க வேண்டும் என வற்புறுத்திய தமிழ்த் தியாகி அமரர் சங்கரலிங்கனாருக்கு அவரது சொந்த ஊரான விருதுநகரில் உருவச்சிலை அமைக்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் அறிவித்தார்.

## 14—8—81

நகர்ப்புற நில உச்சவரம்பு சட்டத்தில் கல்வி-மருத்துவ நிலையங்களுக்கு விதிவிலக்குத் தரப்பட்டுள்ளதாக மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் தெரிவித்தார்.



### அமரர் பாரதியாரின் இறுதி யாத்திரை

ஒரு வாரமாக ஸ்ரீ சுப்பிரமணியபாரதி தேக நோய் கொண்டு திருவல்லிக்கேணியில் அசௌகரியமாக இருந்து திடீரென்று நேற்று இரவு 1 மணிக்கு மேல் இம் மண்ணுலகை விட்டு விண்ணுலகம் அடைந்தார். அவர் இறந்த செய்தி தெரிந்தவுடன் ஸ்ரீமான்களான புதுச்சேரி ஸ்ரீநிவாசாரியர், திருமலாச்சாரி, ஹரிஹர சர்மா, கிருஷ்ணசாமி சர்மா, சின்ன ஸ்வாமி, நெல்லையப்பர், நீலகண்டன் முதலான பலர் வந்தனர்.

செய்ய வேண்டிய காரியங்கள் ஆரம்பம் செய்து, தகன கிரியையும் நடந்தது, ஹரிஹர சர்மா, கிருஷ்ணசாமி சர்மா முதலானவர்கள் பிரேதத்தைத் தூக்கிக் கொண்டு சுடுகாடு சென்றனர். அங்கு தகனத்திற்கு சற்று முன்னர் ஸ்ரீமான்கள் சக்கரை செட்டியாரும், சுரேந்திரநாத் ஆரியா தம்பதியினரும் வந்திருந்தனர். பாரதியாரைப் பற்றி ஸ்ரீமான்கள் சக்கரை செட்டியார், கிருஷ்ணசாமி சர்மா, இராமச்சந்திர அய்யர் இவர்கள் தமிழில் பேசிய பிறகு, சுரேந்திரநாத் ஆரியா தெலுங்கிலும் பேசினார். பாரதியார் இயற்றிய கீதங்கள் பாடின பிறகு தீ மூட்டப்பட்டது. பாரதியார் ஆவி நற்கதியடையும்படி எல்லோராலும் பிரார்த்திக்கப்பட்டது.

*(சுதேசமித்திரன் 12.9.1921)*

தொகுத்தளித்தவர் 'ரகமி'



# ஊனமுற்றோர் மறுவாழ்விற்கு தமிழக அரசின் புதிய திட்டங்கள்!

ஓ. பி. சோசம்மா, இ.ஆ.ப.
இயக்குநர்,
சமூக நலத்துறை, சென்னை.

"ஊனமுற்றோரும் சமுதாயத்தின் ஓர் அங்கமே. ஆகவே அவர்களுக்கு உரிய வாய்ப்புக்களும், முன்னுரிமைகளும், சலுகைகளும் வழங்கப்பட வேண்டும், அதன் மூலம் அவர்களும் மற்றவர்களை போல் வாழ்க்கையில் வளம் பெறுவதற்கு வழி வகை செய்ய வேண்டும். அதுவே ஒருங்கிணைந்த சமுதாய முன்னேற்றத்திற்கு உயரிய வழி ஆகும்" என்பது ஊனமுற்றோர் மறுவாழ்வுப் பணியில் முழுமையாக ஈடுபட்டுள்ள பல பெரியவர்களின் சீரிய கருத்தாகும்.

ஊனமுற்றோரின் உடலில்குறையிருக்கலாம். ஆனால் அவர்களது உள்ளத்தில் குறையில்லை; அவர்களது அறிவில் குறைவில்லை. ஆற்றலில் குறைவில்லை. உரிய வாய்ப்பும், வசதியும் வழங்கப்படுமானால், அவர்களும் மற்றவர்களைப் போல் சிறந்த மேதைகளாகவும், வல்லுநர்களாகவும் வளரமுடியும். ஆகவே தான் அவர்களுக்குச் சிறந்த மருத்துவ வசதியும், சிறப்புக் கல்வி வசதியும், தொழில் பயிற்சிக்குரிய வாய்ப்புக்களும் வேலை வாய்ப்புகளும் தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது. அத்தகைய வாய்ப்புக்களும், வசதிகளும், உலக ஊனமுற்றோர் ஆண்டான 1981-முதல் விரிவாக வழங்கப்படுவதற்கென்று தமிழ்நாடு அரசு பல சிறப்புத் திட்டங்களைத் தீட்டி உள்ளது. அத்திட்டங்கள் எண்ணிக்கையில்சுமார் 20ஆகும். அத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு 1981-82-ல் அரசுக்கு ஆகும் செலவு ரூபாய் 60 இலட்சம் ஆகும்.

தமிழக அரசின் இப்புதிய திட்டங்களால் மருத்துவ வசதிகள் விரிவாக்கப்படுகின்றன. சிறப்புக் கல்வி வசதிகள் பரவலாக்கப்படுகின்றன. தொழில் பயிற்சிக்குரிய புதிய வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படுகின்றன. வேலைவாய்ப்புகள் பெருக்கப்படுகின்றன. இதனால் தமிழகத்தில் ஊனமுற்றோர் பலர் பல வழிகளில் மறுவாழ்வு பெற்று வருகிறார்கள்.

1981-82-ஆம் ஆண்டில் ஊனமுற்றோர் நலனுக்காக தமிழ்நாடு அரசு நிறைவேற்றி வரும் புதிய திட்டங்களாவன:

**மருத்துவ வசதிக்கான திட்டங்கள்:**

(அ) செயற்கைக் கால் அவயவங்கள் பொருத்தும் நிலையங்கள் :

இளம் பிள்ளைவாதத்தால் பாதிக்கப்படும் குழந்தைகளுக்கு உடனடி மருத்துவ வசதி தேவை. அதன் பின் செயற்கைக் கால் உறுப்புக்கள் பொருத்தி, அவர்களை நடக்க வைக்க உதவி செய்ய வேண்டும். இத்தகைய மருத்துவ வசதிகள், சென்னை, கோவை, தஞ்சாவூர் மதுரை ஆகிய நான்கு அரசு மருத்துவ மனைகளில் கிடைக்கின்றன. அதேபோன்று இந்த ஆண்டு (1981-82) முதல் திருநெல்வேலி கடலூர் ஆகிய இரு இடங்களில் புதிதாக இரண்டு செயற்கை அவயவங்கள் பொருத்தும் நிலையங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. இதனால் கடலூர், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் உள்ளவர்களும், அதன் சுற்றுப் புறங்களில் உள்ளவர்களும் பயனடைவார்கள்.



(ஆ) புதிய செவிப் புலன்மருத்துவப் பிரிவுகள் அமைத்தல் :—

செவிப்புலன் பாதிக்கப்பட்டோருக்குச் சிறப்பு மருத்துவ வசதிகள், சென்னையிலும், வேறு சில இடங்களிலும் மட்டுமே கிடைக்கின்றன. அத்தகைய வசதி எல்லா மாவட்டத் தலைநகர்களிலும் வழங்கப்பட வேண்டும் என்பது அரசின் இலட்சியம் ஆகும். திருநெல்வேலி, தஞ்சாவூர், கோயம்புத்தூர் ஆகிய மூன்று பொது மருத்துவ மனைகளில் ''புதிய செவிப்புலன் மருத்துவப் பிரிவுகள்'' ஆரம்பிக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

**சிறப்புக் கல்வி வசதிக்கான திட்டங்கள்:**

(அ) பார்வையற்றோருக்கு அரசின் புதிய பள்ளிகள்

பார்வையற்றோருக்குச் சிறப்புக் கல்வி வழங்கும் பொருட்டு அரசு சுமார் 10 பள்ளிகளை நடத்தி வருகிறது. அத்துடன் இந்த ஆண்டு இரண்டு புதிய பள்ளிகளை கோயம்புத்தூரிலும், தர்மபுரியிலும் தொடங்கியிருக்கிறது. அப்பள்ளியில் 1வது வகுப்பு முதல் 5வது வகுப்பு வரை கல்வி கற்பிக்கப்படும். உணவும், உறைவிடமும் இலவசமாகும். ஒவ்வொரு பள்ளியிலும் 50 குழந்தைகள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

(ஆ) காது கேளாதோருக்கு அரசின் புதிய பள்ளிகள்

காது கேளாத குழந்தைகளுக்கென்று அரசு ஏற்கெனவே சுமார் 9 பள்ளிகளை நடத்தி வருகிறது. இந்த ஆண்டில் மேலும் இரண்டு பள்ளிகளை அரசு ஆரம்பிக்கிறது. அப்பள்ளிகள் விருதுநகரிலும், ஈரோட்டிலும் இயங்க ஆரம்பித்துள்ளன. இப்பள்ளி ஒவ்வொன்றிலும் 50 குழந்தைகள் கல்வி வசதி பெறுவார்கள். அவர்களுக்கு உணவும், உறைவிடமும் இலவசமாக வழங்கப்படும்.



**ஊனமுற்றோர் மறு வாழ்வு:**

(அ) கடும் கை கால் ஊனத்தால் பாதிக்கப்பட்டோருக்கு அரசின் புதிய பள்ளி:

கடுமையான கைகால் ஊனத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கென்று, தனியாக அரசுப் பள்ளிகள் ஏதும் இன்று வரை இல்லை. இக்குறையைப் போக்கும் நோக்கத்துடன் தமிழ்நாடு அரசு, ஓர் பள்ளியை மதுரையில் நிறுவியுள்ளது. இதில் 100 குழந்தைகள் கல்வி பயில்வார்கள். குழந்தைகளுக்கு உணவும், உறைவிடமும் இலவசம். ஒன்றாவது வகுப்பு முதல் 5வது வகுப்பு வரை அங்கு கல்வி கற்பிக்கப்படும்.

(ஆ) ஊனமுற்ற மாணவ மாணவியருக்கு கல்வி உதவித் தொகை வழங்குதல் :

ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊனமுற்ற மாணவர்கள் சாதாரணப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் தொழில் பயிற்சி நிலையங்களிலும் மற்றவர்களுடன் இணைந்து கல்வி பயின்று வருகிறார்கள். அவர்களில் 9-வது வகுப்பு அல்லது அதற்கு மேல் பொதுக் கல்வி, தொழில்கல்வி பயில்வோருக்கு மத்திய அரசின் நிதி உதவியுடன் கல்வித் தொகை வழங்கி வருகிறது. இவ்வாண்டு முதல் தமிழ்நாடு அரசு 1வது வகுப்பு முதல் 8வது வகுப்பு வரை கல்வி பயிலும் ஊனமுற்ற குழந்தைகளுக்கும் கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்த ஆரம்பித்துள்ளது. இந்த உதவித் தொகை புத்தகா், நோட்டு வாங்குவதற்காகப் பயன்படுத்த உதவிகரமாக இருக்கும் என்று கருதப்படுகிறது.

(இ) ஊனமுற்றோருக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு சிறப்புப் பயிற்சி:

ஊனமுற்ற குழந்தைகளுக்குக் கல்வி கற்பிப்பதற்குத் தனித் திறமையும், பின்னணியும், மனப் பக்குவமும் தேவை. அத்தன்மையை அடைவதற்கு ஓராண்டுக் காலம் சிறப்பு ஆசிரியர் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். சிறப்பு ஆசிரியர் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ஊனமுற்ற குழந்தைகளுக்குச் சிறப்பாகக்கல்வி வழங்க இயலும். ஆகவே இவ்வாண்டு முதல் காது கேளாத குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சியில் அதிகமான ஆசிரியர்களைச் சேர்த்துப் பயிற்சி அளிக்க அரசு முடிவு எடுத்துள்ளது. அதேபோல் கண் தெரியாத குழந்தைகளுக்கான ஆசிரியர்களுக்கும்சிறப்புப்பயிற்சி வசதியைக் கூட்டி, அதிக ஆசிரியர்கள் பயன் பெற அரசு திட்டம் தீட்டியுள்ளது.

**தொழில் பயிற்சிக்கான திட்டங்கள்:**

காது கேளாதவர்களுக்குப் பொறியியல் பணிகளில் பயிற்சி அளிக்கும் பொருட்டு கிண்டி, மதுரை ஆகிய இடங்களில் உள்ள அரசு தொழில் பயிற்சி நிலையங்களில் தனிப்பிரிவுகள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன. கிண்டியில் உள்ள பிரிவில் ''பொறிப்பகுதி பொருத்துபவர் பணியிலும்'', மதுரையில் ''மின்சாரப் பணியாளர் பணியிலும்'' பயிற்சி அளிக்கப்படும். ஆண்டுதோறும் சுமார் காதுகேளாத 40 மாணவர்கள் இப்பயிற்சியின் மூலம் பயன் பெறுவார்கள்.

கிண்டியில் உள்ள கண் தெரியாதவர்களுக்கான அரசு சிறு பொறியியல் பயிற்சிக் கூடத்தை அரசு தொழில் பயிற்சிக்கூட அளவுக்கு உயர்த்துதல்:

கண்தெரியாதவர்களுக்கென்று அரசு சிறு பொறியியல் பயிற்சிக் கூடம் ஒன்று இயங்கி வருகிறது. இப்பயிற்சியின் அளவையும், தன்மையையும் உயர்த்தி, வேலைக்குரிய வாய்ப்பினைப் பெருக்குவதற்காக, இந்நிலையத்தை அரசு தொழில் பயிற்சிக் கூடத்தின் அளவிற்கு உயர்த்த அரசு தீர்மானித்துள்ளது. இதனால் கண் தெரியாதவர்கள் அரசு தொழிற் பயிற்சிக்கு இணையான பயிற்சியைப்பெறுவார்கள். அதன் மூலம் அவர்களது வேலை வாய்ப்பும் உயரும் என்று அரசு எதிர்பார்க்கிறது. இத்திட்டம் இவ்வாண்டு முதல் செயல்படத் துவங்கும்.

**வேலை வாய்பிற்குரியப் புதிய திட்டங்கள்:**

(அ) வட்டார மறுவாழ்வு நிலையங்கள் :—

ஊனமுற்றோர் மறுவாழ்வுக்காகத் தனியாக இயங்கும் அலுவலக அமைப்பு ஏதும் இதுவரை இல்லை. இக்குறையைப் போக்க நான்கு வட்டார மறுவாழ்வு நிலையங்கள்'' இவ்வாண்டு நிறுவப்படும். அவை சென்னை, கோவை, வேலூர், தஞ்சாவூர் ஆகிய இடங்களில் இயங்கும். ஒவ்வொரு நிலையத்திலும் 20 ஊனமுற்றோரை ஒவ்வொரு மாதமும், சேர்த்து, அவர்களது [illegible]வம், ஈடுபாடு, திறமை, ஊனம் ஆகியவற்றை அறிந்து, அவர்களுக்குத் தகுந்த பயிற்சி, அல்லது பணியில் அமர்த்துவதே இந்நிலையங்களின் முக்கியப்பணி ஆகும். இப்பொழுது மதுரையில் இயங்கிவரும் நிலையத்தையும் சேர்த்து மொத்தம் உள்ள ஐந்து நிலையங்கள் மூலம், ஆண்டுதோறும் சுமார் 1,200 ஊனமுற்றோர் மறுவாழ்வு பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**ஊனமுற்றோர் சுய வேலை வாய்ப்பில் ஈடுபட உதவிகள்:**

(அ) ஊனமுற்றோர் சுயவேலை வாய்ப்பில் ஈடுபட அரசு ஊக்குவிக்கும். சுய வேலைவாய்ப்பில் ஈடுபட விரும்பும் ஒவ்வொருவருக்கும் வங்கியின் மூலம் குறைந்த வட்டியில் கடன்வழங்க ஏற்பாடு செய்யப்படும். வங்கி வழங்கும் கடனுக்குச் சமமாக— அதிகபட்சம் ரூபாய் 1000-க்கு உட்பட்டு—அரசு மானியமும் வழங்கும். இத்திட்டத்திற்கு ரூபாய் 5 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

(ஆ) ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களில் வாழ்பவர்கள் வங்கியின் மூலம் கடன் உதவியும் 33.33 சதம் மானிய உதவியும் பெற்று, சிறு தொழில் தொடங்குகிறார்கள். இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும்ஊனமுற்றோர் குறைந்த பட்சம் 50 பேர் பயனடைய வேண்டும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதனால் சுமார்800-க்குக்குறையாத ஊனமுற்றவர்கள் இந்த ஆண்டு பயன் அடைவார்கள்.

**ஊனமுற்றோருக்கான ஏனைய நல்வாழ்வுத் திட்டங்கள்:**

(அ) இரு கால்களும் பழுதுபட்டோர் 100 பேருக்கு இலவச சக்கர வண்டிகள் :—

இதுவரை ஊனமுற்றோருக்கு ஆண்டுதோறும் சுமார் 1,000 மூன்று சக்கர வண்டிகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. செவிப்புலன் பழுதுபட்ட பள்ளி செல்லும்குழந்தைகளுக்குக் காது கேட்கும் கருவிகள் - சுமார் 1000 ஆண்டுதோறும் இலவசமாக வழங்கப்படுகின்றன. அத்துடன் இவ்வாண்டுஇருகால்களும் பழுதுபட்டு, நடக்க முடியாமல் இருக்கும் 100 பேருக்கு இலவசமாக சக்கரவண்டிகள் வழங்கப்பட இருக்கின்றன.

(ஆ) கண்பார்வையற்றோரில் வேலை இல்லாதிருப்போருக்கு உதவித் தொகை :

வேலை வேண்டி வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்தும், வேலை வாய்ப்புப் பெறாமல் இருக்கும் கண்பார்வையற்றோருக்கு, உதவித் தொகை வழங்கஅரசு முடிவெடுத்துள்ளது. இதற்குரிய விதிமுறைகளும், வரம்புகளும்வகுக்கப்படுகின்றன. இவ்விதிமுறைக்கு உட்படும் கண் பார்வையற்ற ஒவ்வொருவரும் மாதம் ரூபாய் 50 உதவிப்பணமாகப் பெறுவர். அவருக்கு வேலை கிடைக்கும் வரை இவ்வுதவி நீட்டிக்கப்படும்.



**ஊனமுற்றோர் விளையாட்டுப் போட்டிகள்:**

ஊனமுற்றோருக்குத் தன்னம்பிக்கையை வளர்க்கவும், அவர்களிடம் புதைந்து கிடக்கும் திறமையை வெளிக் கொணரவும் விளையாட்டுப் போட்டிகளை அரசுநடத்தத்திட்டமிட்டுள்ளது. இவ்விளையாட்டுப் போட்டிகள் முதலில் மாவட்ட அளவிலும், பின்பு மாநில அளவிலும் நடைபெறும்.

**ஊனமுற்றோர் பற்றிய கணக்கெடுப்பு:**

ஊனமுற்றோரின் எண்ணிக்கை அவர்களது பிரச்சினையின் அளவு, தன்மை ஆகியவற்றை அறிவதற்காக ஓர் கணக்கெடுப்பு நடத்தப்படும். இக்கணக்கெடுப்பின் முடிவுகள் ஊனமுற்றோரின் மறுவாழ்விற்கு மேலும் திட்டங்கள் தீட்டுவதற்குப் பயன்படுத்தப்படும்.

**பிற திட்டங்கள்:**

ஊனமுற்றோருக்கு உயர் சேவை செய்து வருபவருக்கு தமிழக அரசு இவ்வாண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் விருது வழங்கிச் சிறப்பிக்க முடிவு செய்துள்ளது.

கிராமப்புறங்களில், பள்ளி செல்லாமல் இருக்கும் ஊனமுற்ற குழந்தைகளை, பள்ளிகளில் சேர்க்கும் பொருட்டு, முயற்சிகள் எடுக்குமாறு கல்வித் துறையும், ஊரக வளர்ச்சித் துறையும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன.

புதிதாகக் கட்டப்படும் பொதுக் கட்டிடங்களில் சாய்வுப்பாதை, மின்தூக்கி ஆகிய வழிகள் ஏற்படுத்த வேண்டுமென்றும், அதன் மூலம் ஊனமுற்றோர் அத்தகைய கட்டடங்களில் சுலபமாக நடமாடுவதற்கு வழி வகை செய்ய வேண்டுமென்று அரசு மற்றும் தனியார் நிறுவனங்களை அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

தமிழக அரசின் இப்புதிய திட்டங்களால் ஊனமுற்றோரில் பலர் ஆண்டுதோறும் மறுவாழ்வு பெறுவார்கள். ஆனால், இத்திட்டமும் பணியும் இவ்வாண்டோடு முடிவதில்லை; அவை ஆண்டுதோறும் தொடரும்; வளரும், பெருகும். அதன் பயனாக ஊனமுற்ற ஒவ்வொருவரும் எல்லா வசதியும், வாய்ப்பும் பெற்று மற்றவரைப்போல், தானும் தலை நிமிர்ந்து நடக்கும் நாள் வெகு தூரத்தில் இல்லை:

# மின்னலடிக்கும் ஸூப்பர் ரின் வெண்மை...



## ...இதர, டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் மிஞ்சும் வெண்மை.

பார்வைக்கு தப்பவே தப்பாத வெண்மை உங்கள் துணிகளுக்கு—வேளை தவறாத ஸூப்பர் ரின் சலவையின் வெண்மையே தனி. இதர டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் மிஞ்சுவது ஸூப்பர் ரின் வெண்மை. காரணம், மிகுந்த வெளுக்கும் சக்தி அடங்கியது ஸூப்பர் ரின்.

**நீங்களே கண்டுகொள்வீர்கள்**

இதை வெளுத்தது வேறுவித டிட்டர்ஜெண்ட் பார்





இதை வெளுத்தது ஸூப்பர் ரின்




அதிக வெளுப்பூட்டும் சக்தி படைத்தது ஸூப்பர் ரின்.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

லிண்டாஸ்-RIN




ந்திர மகிள சபா:

# ணையற்ற பணிபுரிந்த இளங்கோ

_பி.எல்.ராஜேந்திரன்

சென்னை மாநகரில் ஊனமுற்றோர் உலக நாள் விழா நடைபெற்றபோது, 1980-81-ஆம் ஆண்டின் 'சிறந்த பணியாளர்' என்பதற்கான தகுதிச் சான்றிதழ் சிலருக்கு வழங்கப்பட்டது, மாண்புமிகு முதல்வர் அவர்களால் .

ஊனமுற்ற பணியாளர்களில் மன வளர்ச்சி குன்றிய வகையினரிடையே, சென்னை-ஆந்திர மகிள சபாவின் ஓர் அங்கமான தொழில் மறுவாழ்வு நிலையத்தில் பணி புரியும் திரு. ஆர். இளங்கோவன்—அப்படி அரசுச் சான்றிதழ் பெற்றவர்களிடையே—குறிப்பிடத்தக்கவராகத் திகழ்ந்தார்.

சமூக நலத்துறை மூலம் வழங்கப்பெற்ற அந்தச் சான்றிதழ் பெற்ற திரு. ஆர். இளங்கோவனின் தகுதி, நிலை, பணிபுரியும் ஆற்றல் அவரைப் பற்றிய பிற விவரங்கள் ஆகியவற்றைக் கேட்டறிவதற்கென, ஆந்திர மகிள சபாவுக்குச் சென்றிருந்தோம்.

### ஆந்திரமா?...

ஆந்திர மகிளா சபா என்றதும், ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கும்-தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கும்தான் முக்கியத்துவம் இருக்கக்கூடும் என்ற நினைவோடு அங்கே சென்ற எங்களுக்குப் பெரும் ஏமாற்றமே காத்திருந்தது. எங்களுக்குத் தெரிந்த நர்சரி தெலுங்கிற்குக்கூட அங்கே அவசியம் ஏற்படவில்லை!



உடல் ஊனமுற்ற பெண் நுணுக்கத்தோடு பணி புரிவதை ஆழ்ந்து கவனிக்கிறார் மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்




ஆந்திர மகிள சபாவின் நிர்வாக இயக்குநரான டாக்டர் திரு.. சி. ஏ. கே. சண்முகம் அவர்கள் நல்லதமிழிலேயே நம்மை வரவேற்று நல்ல தமிழிலேயே உரையாடினார். 'ஆந்திர மகிள சபா என்ற பெயரைப் பார்த்ததும் பலபேருக்கு அப்படிச் சந்தேகம் வருவது இயற்கைதான். ஆனால் இங்கு அப்படிப் பட்ட பேதமெல்லாம் கிடையாது'' என்று அழுத்தம் திருத்தமாகச் சொன்னார் அவா. ''சிகிச்சைக்காகச் சேருவோரிலிருந்து வேலைக்கெனச் சேர்க்கப்படுவோர்வரை அப்படிப் பட்ட பாகுபாடு பார்ப்பதில்லை இங்கே!''

*1960*-ல், அப்போது காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்த திருமதி இந்திராகாந்தி அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட அமைப்பு இது.

இந்த அமைப்பு உருவாக முக்கியக் காரணம் உணர்ச்சிமயமானதாகும்.

ஹனுமந்தராவ் தம்பதியினரின் ஒரே புதல்வனான ஈஸ்வரி பிரசாத் தத்தாத்ரேயா என்ற சிறுவன் இளம்பிள்ளை வாத நோயால் பாதிக்கப்பட்டான். லட்சம் லட்சமாகச் செலவிட பெற்றோர் தயாராக இருந்தனர். ஆனால், மருத்துவம் அந்தச் சிறுவனை உயிர்ப்பித்து மகத்துவம் பெறவில்லை. அந்த அரும்பு கருகிவிட்டது!

அப்போது இந்திய நிதியமைச்சராக இருந்த திரு. சிந்தாமணி தேஷ்முக் அவர்களின் துணைவியாரான திருமதி துர்க்கா பாய் தேஷ்முக்கைச் சந்தித்தார்கள், அந்தப் பெற்றோர். தமக்கேற்பட்ட ஈடு செய்ய முடியாத இழப்பைக் கூறி, ''அப்படி இளம்பிள்ளை வாத நோயால் அவதிப்படும் குழந்தைகளைக் காப்பாற்ற ஏதாவது செய்யுங்கள்'' என்று வேண்டுகோள் விடுத்து ஒரு லட்சம் ரூபாய் நிதியையும் தந்தார்கள்.

## அறக்கட்டளை நிர்வாகம்

அந்த நிதியிலே-அந்தச் சிறுவனின் பெயரிலேயே 'ஈஸ்வரி பிரசாத் தத்தாத்ரேயா முடநீக்கு இயல் மையம்' என ஆரம்பிக்கப்பட்டது தான் அடையாறில் உள்ள இந்தப் புனிதமான அமைப்பு. திரு ஹனுமந்தராவ் அவர்களாலேயே கட்டப்பட்ட இந்த அமைப்பை இப்போது ஆந்திர மகிளசபா அறக்கட்டளை நிர்வகித்து வருகிறது. திருமதி ஹனுமந்தராவ் அவர்களே இப்போது இந்த அமைப்பினைக் கண்காணித்து வருகிறார். திருமதி வி. லட்சுமிபார்வதி அவர்கள் நிர்வாகப் பிரிவுச் செயலாளர் ஆவார்.



உடல் ஊனமுற்ற, மூளை வளர்ச்சி குன்றிய ஐந்து வயது முதல் பதினான்கு வயது வரையிலான சிறுவர் சிறுமியர் இங்கே சேர்த்துக் கொள்ளப்பட்டு சிறந்த முறையிலான சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு குணமாகி வருகிறார்கள்.

## சிகிச்சைக்குப் பணம் உண்டா?

''சிகிச்சைக்குப் பணம் உண்டா?'' என்றோம். சிறிது நிதானித்து – ''பெரிசா ஒண்ணும் இல்லை'' என்றார் நிர்வாக இயக்குநர்.

16 வயதுக்கு மேலான ஆண்களும்பெண்களும் சாந்தோமில் உள்ள இதன் மற்றொரு பிரிவில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

மருத்துவம் மட்டுமல்ல; இங்கே சேர்க்கப்படுகிறவர்கள் மனப்பக்குவம் பெற வேண்டி, மாண்டிசோரி முதல் எட்டாம் வகுப்பு வரையில் இங்கேயே கல்வியும் கற்பிக்கப்படுகிறது. அரசு அங்கீகாரம் பெற்ற கல்விமுறை, தேர்வு முறை எல்லாம் உண்டு! பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கல் நாட்டியதாகும் இந்தப் பள்ளிக் கட்டடம்!

இதயத்துடிப்பை அறிய, செவிகேளாத் தன்மையை உணர, பேசும் ஆற்றல் இழந்தவர்களின் பலவீனத்தைப் புரிந்து கொள்ள எனத் தனியொரு மாபெரும் மருத்துவமனையே நூற்றுக்கணக்கான படுக்கைகளோடும், அரிய பல கருவிகளையுடைய அறுவைச் சிகிச்சைக் கூடத்தோடும், எக்ஸ்ரே போன்றவைகளோடும் சிறந்த முறையில் செயல்பட்டு வருகிறது.

முடநீக்கு இயலில் முதிர்ந்த அனுபவம் பெற்றவரான டாக்டர் திரு. எம். நடராஜன் அவர்கள் இப்பிரிவின் தலைவராக இருந்து சீரியவண்ணம் செயல்பட்டு வருகிறார்.

முடநீக்கு இயல் பிரிவில், மாண்புமிகு நிதியமைச்சர் திரு. நாவலர் அவர்களின் துணைவியார் திருமதி டாக்டர் விசாலாட்சி நெடுஞ்செழியனும் ஒரு உறுப்பினராவார்.

மைய அரசும், மாநில அரசும் இயன்ற அளவு உதவி வரும் இந்த அமைப்பில்— வெளியே இருந்து நாள்தோறும் வந்து சிகிச்சை பெற்றுச் செல்கிறவர்களும் உண்டு. தங்கள் ஊனமுற்ற குழந்தைகளை இங்கேயே சேர்த்து, குணம் பெற்றபின் அழைத்துச் செல்கிறவர்களும் உண்டு.



அங்கக் குறையிருந்தாலும் புத்தகங்க அழகில் குறை நேராமல் பைண்ட் செ பாவையர்.



துணிகளில் பூ வேலைப் பயிற்சி

''அப்படி இங்கே குழந்தைகளைச் சேர்க்கிறவர்கள் குணம் பெற்றபின் அழைத்துக் கொண்டு போகத் தயங்குகிறார்கள்... நாள் கடத்துகிறார்கள். இதனால், புதிதாகக் குழந்தைகளைச் சேர்த்துக் கொள்வதில் எங்களுக்குச் சங்கடம் ஏற்படுகிறது'' என்று மன வருத்தத்தோடு கூறினார் நிர்வாக இயக்குநர் டாக்டர் திரு சி. ஏ. கே. சண்முகம்.

ஊனமுற்றோர்க்குப் பயன்படும் கருவிகளெல்லாம் கூட இங்கேயே செய்யப்படுகின்றன.



மாண்புமிகு அமைச்சருடன் இயக்குநர், உதவி இயக்குநர் கலந்துரையாடல்.

## சாந்தோம் பயிற்சிப் பிரிவு

திரு. ஆர். இளங்கோவனைக் காணச் சென்ற நமக்கு, அவர் அங்கே இல்லை; சாந்தோம் ரோசரிசர்ச் ரோடில் உள்ள பிரிவில் இருக்கிறார் என்று தெரிவிக்கப்பட்டது. அங்கே சென்று நம் வருகையின் குறிக்கோளைத் தெரிவித்தோம்.


அந்தப் பிரிவின் உதவி இயக்குநராக உள்ள செல்வி பி. சாவித்திரி அவர்கள் நம்மை இன்முகத்தோடு வரவேற்கிறார்.

16 வயது முதல் 24 வயது வரை ஆண்களும் பெண்களும், அச்சுக்கோத்தல், புத்தகம் பைண்ட் செய்தல், தையல், எந்திர பாகங்களைப் பொருத்தல், மின் அணுவியல் கருவிகளை இணைத்தல் போன்ற பலவகைத் தொழிலும் பயின்று வருகிற இந்த அமைப்பு சென்ற ஆண்டின் சிறந்த நிறுவனப்பரிசு பெற்றது. எல்லோருமே உடல் ஊனமுற்றவர்கள் அல்லது மன ஊனம் உடையவர்கள். இங்கே பயிலும் பெண்களுக்குமட்டும் விடுதி வசதி உண்டு. ஆண்களுக்கு? இனிமேல்தானாம்!

திருமதி அக்கம்மாள் கிருஷ்ண மூர்த்தி



ஊனமுற்ற பெண்களுக்கு அளிக்கப்படும் பயிற்சியில் காலணிகளின் மேல் உறை செய்வதும் ஒன்று...



தையல் பயிற்சி வகுப்புத் தையல்கள்.

என்பார் இயக்குநராக உள்ள இந்தப் பிரிவில் தான் மின்அணுக் கருவி பாகங்களைப்பொருத்தும் பணியாற்றி வருகிறார் திரு. ஆர். இளங்கோவன்.

உதவி இயக்குநரின் அனுமதியோடு நாமே அவரை அணுகிப் பேசுகிறோம். மிக மிக நிதானத்தோடு நம்முடைய கேள்விகளுக்குப் பதில் சொல்கிறார் அவர் :

''இங்கே, மயிலாப்பூர்தான் எனக்குச் சொந்த ஊரு. எங்க அப்பா ரங்கநாதன்..... ஹெல்த் அண்ட் ஃபேமிலி பிளானிங்ல........ டிப்டி செகரிட்டரியா இருந்து ரிடையர் ஆனவரு. அம்மா பேரு ஆர். திருமலை. நான் தான்.. எங்க ஊட்ல மூத்தவன். எனக்கு.... நாலு சிஸ்டர்ஸ். ரெண்டு பேருக்குக் கல்யாணம் ஆயாச்சி. நான்....எட்டாங்கிளாஸ் வரைக்கும் படிச்சிருக்கேன்....''

## விஷக் காய்ச்சல்

—இதற்கு மேலும் அவரைத் தொல்லைப் படுத்த விரும்பாமல் அங்கிருந்து நகர்கிறோம், உதவி இயக்குநர் செல்வி, பி. சாவித்திரி அவர்கள். நம்முடைய மற்ற சந்தேகங்களைத் தீர்த்து வைக்கிறார்.:

''1960-ல் ஏதோ விஷக்காய்ச்சல் வந்து. ஃபிட்ஸ் அட்டாக் ஆகி, அதுக்கப்புறம் இப்பிடி மனநோய்க்கு ஆளானதா சொன்னாங்க. முதல்ல, டாக்டர் போஸ் மெமோரியல் ஹாஸ்பிடல்ல இருந்திருக்கிறார். 1974-ல் தான் இங்கு வந்து சேர்ந்தார். எங்க யூனிட்லயே இளங்கோவன்தான் சீனியர் ஸ்டூடண்ட்!''

''இப்ப அந்த மனநோய் மாறீட்டுதா ?''

பயிற்றுவிப்பாளர் திரு ஆர். கோவிந்தராஜன் அவர்கள் நமது கேள்விக்குப் பதில் சொல்கிறார்—''அதெல்லாம் இப்ப எவ்வளவோ குணமாயாச்சுங்க. அதோ பாருங்களேன். அவர் இப்ப எலக்ட்ரானிக்ஸ் பார்ட்டைப் பொருத்திகிட்டிருக்கார். இப்ப இளங்கோவன் இங்கே மாதம் ஐம்பது ரூபா உதவிப் பணம் வாங்கறார் சார்! நல்லபடி, கவனமா வேலை செஞ்சதாலதான் சிறந்த பணியாளர் சர்டிபிகேட்டே இவருக்குக் கெடச்சிது!''



திரு இளங்கோவன் பணிபுரிவதைச் செம்மைப்படுத்துகிறார் பயிற்றுவிப்பாளர்.


மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன்அவர்கள் அண்மையில் அங்கே வருகை தந்ததையும், அவர்கள் பயிற்சிமுறை நடவடிக்கைகளைக் கண்டு பாராட்டியதையும் பெருமையோடு தெரிவித்தார், உதவி இயக்குநர் செல்வி பி. சாவித்திரி அவர்கள்-''கிட்டத்தட்ட ஒரு மணி நேரத்துக்குமேலேயே இங்கே ஒவ்வொரு பிரிவுக்கும் போயி, எல்லாரும் எப்படிப் பயிற்சி பெறுறாங்கண்ணு பார்த்து அதிசயிச்சிப் போயிட்டாங்க சார் மினிஸ்டர்!'' என்று கூறி புன்னகை பூத்தார் அவர்.

இந்த சாந்தோம் பிரிவில் 35 பெண்களும், 32 ஆண்களும் பயிற்சி பெற்று வருகிறார்கள். ஊனமுற்ற—அல்லது மனநோய்க்கு ஆளான அவர்கள் ஒவ்வொருவரின் விழிகளிலும் எதிர்காலத்தின் மீதான நம்பிக்கை ஒளி வீசுகிறது! விரைவிலேயே இந்த சாந்தோம் பிரிவும் அடையாறு முக்கிய மையத்தோடு இணையும் எனத் தெரிவிக்கப்படுகிறது நமக்கு!

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


கண்ணைக் கவரும் கைத்தறித் துணிகள்
வண்ண வண்ண பட்டுச் சேலைகள் ஆடவர்
மகளிர் அனைவரும் விரும்பும் அருமை
புதுமை இழையும் ஆடைகள் ஆயிரம்
வகைகள்... அழகார்ந்த ரகங்கள்
அனைத்தும் உண்டு !

# தமிழரசு




16-9-1981 50 காசு

திருவள்ளுவர் ஆண்டு 2012

துன்மதி — ஆவணி 31




Licence No. TN/MS(C)/PP-23





## பெரியார் மொழி கேளீர்

எழுத்துக்களை உருவம் மாற்றுவது, குறிப்புகள் ஏற்படுத்துவது புதிய எழுத்துக்களைச் சேர்ப்பது என்பது போலவே சில எழுத்துக்களை அதாவது அவசியமில்லாத எழுத்துக்களைக் குறைக்க வேண்டியதும் அவசியமாகும்.

மொழியின் பெருமையும், எழுத்துக்களின் மேன்மையும், அவை எளிதில் தெரிந்து கொள்ளக் கூடியதாகவும், கற்றுக்கொள்ளக் கூடியதாகவும், இருப்பதைப் பொறுத்ததே ஒழிய வேறில்லை.





தமிழர்கள் தங்கள் மொழியையும் வாழ்வையும, ஒன்றாக இணைத்துக் கொண்டவர்கள். மொழியைக் கருவி என்று நினைக்காமல், தங்களை வழிநடத்தும் துணைவன், வழிகாட்டும் வழிகாட்டி, பாடம் போதிக்கும் ஆசான், உள்ளத்து உணர்ச்சிகளை வெளியிடும் நண்பன் என்று நினைக்கிறார்கள்.

தமிழுக்கு ஆபத்து வருகிறது என்று அறிகிறபோது ஆபத்து வருமோ என்று ஐயம் தோன்றும் போது ஆபத்து வரக்கூடுமோ என்ற சந்தேகம் வரும்போது தமிழர்கள் ஆர்த்தெழுகிறார்கள்.

பேரறிஞர் அண்ணா



# தமிழரசு

மலர் 12 இதழ் 6

16-9-1981

திருவள்ளுவர் ஆண்டு 2012

துன்மதி – ஆவணி 31



# சமுதாயக் கடமை

**ஆ**சிரியப் பணியில் ஆண்டுகள் பலவற்றைக் கழித்து இந்திய நாட்டின் உயர் பதவியான குடியாசுத் தலைவராகத் திகழ்ந்து, கல்வித் துறை வளர்ச்சிக்குப் பெரிதும் தொண்டாற்றிய பெருமகனார் **டாக்டர் இராதாகிருஷ்ணன்** அவர்கள் பிறந்த நாள், ஆசிரியர் நாளாகக் கொண்டாடப்பட்டு வருவது பொருத்தமுடையதாகும். ஆசிரியர் ஒருவர் தன்னலம் கருதாத உயரிய திறம் வாய்ந்த பணியால் நாட்டின் பெரும் பதவிக்கு உயர முடிந்தது என்ற வரலாறு, ஆசிரியப் பெருமக்களின் பெருமைக்கும், சிறப்பினுக்கும் உரியதாகும். நமது நாட்டின் எதிர்காலக் குடிமக்களின் வாழ்வை, சிந்தனையை உருவாக்கிடும் சீரிய பொறுப்புமிக்க ஆசிரியர்கள், நாளைய தலைமுறைக்கு அடித்தளம் அமைப்பவர்கள். "ஒரு நாட்டின் தரம், ஆசிரியர்களின் தரத்தைப் பொறுத்தே அமைகிறது" என்று **என்றி ஆடம்** குறிப்பிட்ட மொழியும், 'ஆசிரியர்கள் எவ்வகையில் கற்பிக்கின்றனரோ, அத்திறத்தையொட்டியே நாட்டின் பண்பாடு முன்னேறுகிறது' என்று **புருபேக்கர்** அறிவுறுத்திய மொழியும் ஆசிரியர்களின் சமுதாயக் கடமையை வலியுறுத்துகிறது.

மாணவர்களின் தரத்தை உயர்த்துவதும், அவர்களின் நண்பராகவும், வழிகாட்டியாகவும், தத்துவ போதகராகவும் இருந்து வாழ்வு முறையைச் செம்மைப்படுத்துவதும் ஆசிரியர்களின் நீங்காக் கடமையாகும். "ஆசிரியர்களும் மாணவர்களும் ஒரே குடும்பத்தினர்" என்ற டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்களின் கருத்தை நினைவில் கொண்டு, ஆசிரியர்கள் பண்பாட்டு முறையில் சிறந்த கட்டுப்பாடு நிறைந்த உயரிய பெருமக்களை உருவாக்கும் பணியில் நாட்டம் கொள்ள வேண்டும். அவர்களின் சமுதாயக் கடமையை உணர்ந்தும் சமுதாயத்தில் அவர்களுக்குரிய ஒப்பரிய தகுதியை எண்ணியும் ஆசிரியப் பெருமக்கள் கடமை ஆற்றுவர் என்று நம்புகிறேன். கல்விப் பணிக்குத் தங்களை ஒப்படைக்க ஆசிரியர்கள் உறுதியெடுக்கும் நாள் இந்நாள். ஆசிரியர் நல தேசிய நிறுவனம் நடத்தும் ஆசிரியர் தின விழா வெற்றியடையவும், ஆசிரியர் பெருமக்கள் எல்லா வகையிலும் சிறப்படையவும் என் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**எம். ஜி. இராமச்சந்திரன்.**

[ஆசிரியர் தினத்தையொட்டி விடுத்த செய்தி]



# எங்கும் தமிழ்! எதிலும் தமிழ்! என்றும் தமிழ்!

மாண்புமிகு நிதியமைச்சர்
டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன்

**த**மிழகத்தின் பெருமைக்கும் புகழுக்கும் யார் யார் காரணமாக விளங்குகிறார்களோ, தங்களின் தொண்டினால் மக்களின் உள்ளத்திலே இடம் பெற்றார்களோ அவர்களை எல்லாம் போற்றிச் சிறப்பிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்கள் எடுத்துக் கூறியவற்றை நினைவு கூர்ந்து அவைகளைச் செயல்படுத்தும் கடமையும் நமக்கு உள்ளது.

அத்தகைய பெரியவர்களில் ஒருவராக விளங்கிய ரசிகமணி டி. கே. சி. அவர்கள், தமிழ்க் கவிதைகளை ரசித்து அதனைப் பிறருக்கும் எடுத்துரைத்தவர். கவிதையின் ஆழத்தை உணர்ந்தவர்கள். தமிழுக்கு—தமிழில் வளர்ந்துள்ள கலைக்கு உறுதுணையாக இருந்து அதனை வளர்க்க வேண்டும் என்று வலியுறுத்தியவர்.

தேனை வண்டு அனுபவிப்பது போல, கவிதையை ரசித்து அனுபவித்தார். தாம் என்ன கருதுகின்றாரோ அதை எவருக்கும் அஞ்சாது எடுத்துரைத்தார். பிறர் கருத்தைப் பற்றிக்கவலைப்படாமல் துணிந்து எடுத்துரைத்தார். அறிவுத்திறன் வளர்ச்சிக்கு, ஆற்றல் திறன் வளர்ச்சிக்கு எது தேவை என்பதை வலியுறுத்தினார்.

நவில்தோறும் நவில்தோறும் விளங்கும் நூல் நயம் போல, மற்றவர்க்கு நவின்று நவின்று தமிழின்பத்தைச் செய்த பண்புடையாளரான டி. கே. சி. அவர்கள் 'எங்கும் தமிழ் வேண்டும். எதிலும் தமிழ் வேண்டும். எப்பொழுதும் தமிழ் வேண்டும்.'' என்பதை வலியுறுத்தி வந்தார். தாய்மொழியினாலேயே சிந்தனை வளர முடியும் என்பதை எடுத்துரைத்தார். ஆங்கிலத்திலே சிந்திப்பது ஆங்கிலேயருக்கு நல்லதாக இருக்க முடியும். தாய்மொழி சிந்தனையாலேயே ஒருவனுடைய வளர்ச்சி அதிகமாக முடியும் தாய்மொழிச் சிந்தனையாலேயே இன்று தொழில்நுட்ப அறிவில் சிறந்து விளங்குகிறது ஜப்பான்.

தமிழில் எல்லாமா இருக்கிறது எப்படி முடியும்? என்று சிலர் டி. கே. சி. காலத்திலேயும் கேட்டார்கள். ''ஏன் முடியாது தொழில்நுட்பத் துறையில் அந்தந்தக் கலைச் சொற்களை அப்படியே பயன்படுத்திக் கொள்ளலாம்'' என்று எடுத்துரைத்தவர் டி. கே. சி.

ஆங்கில மொழியில் உள்ள கலைச்சொற்கள் எல்லாம் அந்த மொழியில் உள்ளதா? வேற்றுமொழிச் சொற்கள்தானே. அதுபோல இன்று தமிழில் பயன்படுத்திக் கொள்ளுவோம். காலப்போக்கில் அதற்கான கலைச் சொற்கள் உருவாகியே தீரும். தாய் மொழியைப் பயிற்றுமொழியாகக் கொண்டால்தான் ஆழமான உண்மையான சிந்தனை வளர முடியும் என்பதை அன்றே டி. கே. சி. எடுத்துரைத்தார்.

தமிழில் எல்லாக் கலைகளும் நன்கு வளரவேண்டும் என்று அவர் ஆசைப்பட்டார். கலைகளுக்கு எல்லாம் தலைமை தாங்குகின்ற கலையை அவர் தமது சொற்பொழிவுகளில் காட்டினார். கலைகளில் மிகச் சிறந்தது கவிதைக் கலை என்பது அவர் கருத்து.

ஓவியக்கலையில் ஒரு பகுதியைத்தான் காண முடியும். சிற்பத்தில் பருமனையும் காண முடியும். ஆனால், கவிதையில் உணர்ச்சி முழுவதையும் அதன் சுற்று சார்பிலிருந்து முன்னையும்பின்னையுமாக அனைத்தையும் காண முடியும் என்பதை எடுத்துரைத்த டி. கே. சி. தமிழ்க்கலைகள் அனைத்தின் மேன்மைகளை விளக்கினார். அவை அரிய கருவூலங்கள், அவற்றைப் போற்றி வளர்த்துக் காப்பது நம் கடமை என்பதை நினைப்பூட்டிய பெருந்தகை அவர். தமிழ் நாட்டியத்தின் பெருமையை அவர் எடுத்துரைத்தார்.

தமிழிசை வளர்ச்சிக்கும் வழிகாட்டியாக விளங்கியவர். தாய்மொழி வளர்ச்சிக்கு அனைத்திலும் ஈடுபாடு கொண்டவராக விளங்கினார்.

பெண்ணுரிமையாகட்டும் பெண்களுக்கு மதிப்பளித்தலே சமுதாய வளர்ச்சிக்கு நல்ல அடையாளம் என்பதை எடுத்துரைத்தவர்.

அனைத்துக்கும் மேலாக பண்பாட்டுக்கு உரிய மதிப்பை வாழ்க்கை முழுவதும் கொடுத்தவர். நிலத்தின் பண்பாட்டை விளைச்சல் காட்டும் மக்களின் பண்பாட்டை வாழ்க்கை முறை காட்டும் என்பதை உணர்த்திய பெருந்தகை. பண்பாட்டு நிரம்பியவராக விளங்கினார்.

'தமிழால் எல்லாம் முடியும் தமிழ்தான் தமிழர்க்குத்துணை' என்பதை எல்லாம் பலவாறு உணர்த்தியுள்ளார். தமிழுக்குத் தொண்டு செய்தோர் சாவதில்லை' தமிழுக்குப் பெருமை சேர்த்து தமிழ் வாழ்ந்தாலே தமிழர்கள் வாழமுடியும் என்பதை எடுத்துரைத்த ரசிகமணியைப் போற்றுவோம்! நாளும் தமிழ் வளர நாளும் பாடுபடுவோம்! அதுவே, அவரைப் போற்றுவதற்கு அடையாளமாகும்.

(ரசிகமணி டி. கே. சி. நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரையிலிருந்து).

# தமிழறிந்தோர் மனங்குளிரும்



மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்
திரு இராம. வீரப்பன்

"நாட்டுக்கும் மொழிக்கும் பாடுபட்டுள்ள நல்லவர்கள் அனைவரையும் போற்றிப் பாராட்ட வேண்டியது நமது கடமையாகும். அப்படி பாடுபட்ட பெருமக்கள் அனைவருக்கும் விழா எடுத்து சிறப்பிக்காவிடில் நன்றி மறந்தவர்களாவோம். செய்நன்றி கொன்றவர்களாவோம். எனவே, புரட்சித் தலைவர் தலைமையில் அமைந்த தமிழ்நாடு அரசு நாட்டுக்கு உழைத்த நல்லவர்கள் அனைவருக்கும் விழா எடுத்துச் சிறப்பிக்கின்றது.

கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய பெரியவர்கள் பலருக்கு நூற்றாண்டு விழா கொண்டாடுகிறோம். இவ்வாண்டு ரசிகமணி டி. கே. சி. அவர்களுக்கு நூற்றாண்டு விழா. அடுத்து மகாகவி பாரதியார் அவர்களின் நூற்றாண்டு விழாவை மிகச் சிறப்பாக கொண்டாடவிருக்கின்றோம்.

எந்தக் கொள்கைகளுக்காக அந்தப் பெரியவர்கள் பாடுபட்டார்களோ அவற்றை செயல்படுத்தவும் நினைவு கூறவும் இவ்விழாக்கள் பயன்படுகின்றன. எல்லாருடனும் அன்புடன் பழகும் மனிதப் பண்புமிக்கவராக ரசிகமணி டி.. கே. சி. திகழ்ந்தார். அவரால் தமிழ்ப்புலவர்கள் அனைவரையும் ஒற்றுமைப்படுத்திவைக்க முடிந்தது. தமிழுக்காக வாழ வேண்டும். தமிழ்க் கவிதைகளைக் காப்பாற்ற வேண்டும். தமிழ்க்கலைகளை வளர்க்க வேண்டும். அவைகளை ரசிக்க வேண்டும் என்ற ஆர்வம் மிகுந்து இருந்தது.

ரசிகமணி டி. கே. சி. நோபல்பரிசு பெறாதவராக இருக்கலாம். ஆனால் அதற்கும் மேலாக 'ரசிகமணி' என்ற பட்டத்தை அவர் பெற்றிருந்தார். எதை எபபடி ரசிக்க வேண்டும் என்பதை உணர்ந்திருந்தார். கவிதைத் திறனை வளர்த்தார்.

கவிமணி அவர்கள் எழுதிய பாடலில் அவர் பெயர் இல்லாதபொழுதே அது அவருடைய பாடல் என்பதை டி. கே. சி. கண்டு பிடித்தார். அதே ஆற்றலால்தான் கம்பர் எழுதிய கவிதை எது? எதை கம்பர் எழுதவில்லை என்பதை அவரால் சொல்ல முடிந்தது. கவிதை நயத்தை அவரைப் போல அழகுபட எடுத்துரைத்தவர் வேறு யாருமில்லை என்று போற்றப்படுகிறவர் ரசிகமணி டி. கே. சி

ரசிகமணி அவர்கள் நினைவாக திருக்குற்றாலத்தில் அவர் வாழ்ந்த இல்லத்தை அரசு நினைவுக்கூடமாக அமைக்கும். குற்றாலத்துக்கு வரும் இலட்சக்கணக்கான மக்கள் அந்த இல்லத்தைக் கண்டுகளிக்கும் வகையில் அவருக்கு நினைவுச் சின்னமாக அது அமைக்கப்படும்.

குற்றாலத்தில் அடுத்த ஆண்டு முதல் நடைபெறும் சாரல் விழா ரசிகமணி டி. கே. சி. அவர்களின் பெயரில் ரசிகமணி டி. கே. சி. சாரல் விழா என்ற பெயரில் நடைபெறும்.

தமிழுணர்ச்சியை-தமிழ்க் கவிதையை—தமிழிசையை வளர்த்தவரின் தொண்டினைப் பாராட்டி தமிழறிந்தோர் அனைவரும் மனங்குளிரும் வகையில் தமிழக அரசு செயல்படும். அதுவே எங்கள் கடமையாகும்.

(திருக்குற்றாலத்தில் நடைபெற்ற ரசிகமணி டி. கே. சி. நூற்றாண்டு விழாவில் ஆற்றிய உரையிலிருந்து.)

# சிந்து மக்களிடையே ஒரு தமிழ் விளையாட்டு

முனைவர்
சாலை இளந்திரையன்

இந்தியாவின் தேசிய மொழிகளிலே சிந்தியும் ஒன்று. சிந்தி மொழி பேசும் மக்கள், இப்போது பாகிஸ்தானின் ஒரு பகுதியாக உள்ள சிந்து மாகாணத்தில் வாழ்கிறார்கள். இவர்களுள் கணிசமான ஒரு தொகையினர் மராட்டியம், குஜராத் முதலான இந்திய மாநிலங்களிலும் வாழ்கிறார்கள். வணிகத்திலும் தொழில்துறைகளிலும் ஈடுபட்ட சிந்திக்காரர் பலர் இந்தியாவின் பிற பகுதிகளிலும், வாழ்ந்து வருகிறார்கள்.

தமிழகத்தில் மிகப் பரவலாக உள்ள கிட்டிப்புள் (குச்சிக்கம்பு அல்லது குச்சிஅடித்தல்) என்னும் விளையாட்டு, எப்படியோ, இந்தியாவின் வடமேற்கு எல்லையில் வாழ்ந்த சிந்திக்காரர்களிடையே சென்று செல்வாக்குப் பெற்றுள்ளது. செல்வாக்கு என்று சொல்லும்போது-தமிழர்களின் விளையாட்டைப் பின்பற்றி அவர்களும் கிட்டிப்புள் விளையாடுகிறார்கள் என்பது மட்டுமல்ல; அந்த விளையாட்டோடு தமிழ்மொழியின் சில சொற்களும் சிந்தியரிடையே நுழைந்து இன்றும் அங்கே புழக்கத்தில் இருக்கின்றன.

## தமிழ்விளையாட்டு

கிட்டிப்புள் என்பது, இரண்டு பக்கமும் சீவப்பட்ட பென்சில் போல் கூரியதாக்கப்பட்ட சுமார் 4 அங்குல அளவுள்ள ஒரு குச்சியையும், அதை ஒரு மூக்கில் தட்டி எழுப்பி, வேகமாக அடிக்கும் சுமார் இரண்டடி அளவுள்ள தடியையும் கொண்டு நடைபெறும் விளையாட்டு. இதனாலேயே இந்த விளையாட்டு 'குச்சி அடித்தல்' என்றும் 'குச்சிக்கம்பு' என்றும் பெயர் பெற்றுள்ளது. இவ்விளையாட்டு ஆங்கிலத்தில் டிப்-கேட் (Tip-Cat) என்றும் வடஇந்திய மொழிகளில் குல்லி தண்டா என்றும் சொல்லப்படுகிறது.

குச்சியின் ஒரு மூக்கிலே இலேசாகத் தட்டியதும், குச்சி கெண்டைமீன் போலத் துள்ளும்; தட்டியவர், தமது கையில் உள்ள தடியினால் அதை வேகமாக அடிப்பார். அடிப்பவரின் கை எண்ணத்துக்கும் குச்சியில் அடி விழுகின்ற வாகுக்கும் ஏற்ப, அந்தக் குச்சி 50 அடி, 60 அடி அல்லது 100 அடிக்கு அப்பால் சென்று விழும். குச்சி கனமானதாக இருந்து, அடிப்பவரும் வலுவானவராக இருந்தால், குச்சி 200[250 அடிதொலைவுக்கு அப்பால் கூடப் பறந்து சென்று விடுவது உண்டு!

இவ்வாறு குச்சி சென்று விழும் தூரத்தை, அடித்த இடத்திலிருந்து, குச்சியை அடித்த கம்பினால் அளப்பார்கள். 100 தடி, 150 தடி அல்லது 200 தடி தூரம் அடித்து விட்டால், அடித்தவர் ஓர் ஆட்டம் முடித்துவிட்டார் என்று பொருள். சிறுவர்களும் பெரியவர்களும், தங்கள் தங்கள் வசதிக்கு (ஆற்றலுக்கு) ஏற்றபடி, இத்தனை தடி ஓர் ஆட்டம் என்று முதலிலேயே வரையறுத்துக் கொள்ளுவார்கள்.

ஓர் ஆட்டக்காரர் ஒரே அடியில் ஓர் ஆட்டம் எடுத்துவிடுவதும் உண்டு; தொடர்ந்து இரண்டு மூன்று அடிகளில் ஓர் ஆட்டம் முடிப்பதும உணடு. குச்சியின் மூக்கில் தட்டி, அதைத் துள்ளச் செய்து அடிப்பார்களல்லவா ? அந்தத் துள்ளடியில் ஒவ்வொரு முறையும் மூன்று வீச்சுகள் அனுமதிக்கப்படும். மூன்று வீச்சுகளும் வெற்று வீச்சாகப் போனால் ஆட்டக்காரர் தீய்ந்தார் (அவுட் ஆனார்) என்று பொருள். இல்லாவிட்டால், அவர் தொடர்ந்து அடித்து, ஒன்று, இரண்டு, மூன்று என்று ஆட்டங்கள் எடுத்தவண்ணமாக இருப்பார். இதுதான் குச்சிக் கம்பு அல்லது கிட்டிப்புள் என்னும் விளையாட்டு.

ஓர் இடத்தில், சுமார் ஓரங்குல அகலம், மூன்று அங்குல நீளம், ஓரங்குல ஆழம் உள்ள சிறிய குழி ஒன்றைத் தோண்டி அதன் மேல் குறுக்காகப் புள்ளை வைப்பார்கள்; தடியைக் குழியின் உள்ளாகப் புள்ளின் அடியில் கொடுத்து உந்தி எறிவார்கள். இப்படி எறியும்போது, அது தரையில் விழுமுன் எதிர்க்கட்சியார் புள்ளைப் பிடித்து விட்டால் அடிப்பவர் தீய்ந்தார்; அதே போல் கீழே விழுந்த புள்ளை எடுத்து, இங்கே குழி உள்ள இடத்தில் குறுக்காக வைக்கப்பட்டுள்ள தடியில் படுமாறு எறிந்து விட்டாலும் அடித்தவர் தீய்ந்தார். அப்படி இல்லாமல், புள் தடியின் அருகில் விழுமானால், அதைத் தட்டி எழுப்பி அடிப்பார்கள். இப்படியான உந்தி எறிதலுடனும் கிட்டிப்புள் விளையாட்டு தொடங்குவது உண்டு.

## சிந்தியில் தமிழ்

குச்சியை அடித்துவிட்டு, இங்கிருந்து குச்சி சென்று விழுந்த தூரத்தைக் கையில் உள்ள தடியைக் கொண்டு அளக்கும்போது தமிழர்களாகிய நாம் ஒன்று, இரண்டு, மூன்று என்று தொடர்ந்து எண்ணுவோம்; இப்படியே, ஒவ்வொரு மொழியினரும் அவரவர் மொழிகளில் உள்ள எண்ணுப் பெயர்களைச் சொல்லியே அளப்பார்கள்; அளக்க வேண்டும். கிட்டிப்புள் விளையாட்டைப் பொறுத்த அளவிலே மட்டும், சிந்திக்காரர்கள், -இன்றைக்கும், ஒன்று முதல் பத்து வரை உள்ள எண்களைத் தமிழில் உள்ள எண்ணுப் பெயர்களாலேயே (ஒன்று, ரெண்டு, மூன்று..) சொல்லி வருகிறார்கள்!

கிட்டிப்புள் விளையாட்டில் சிந்திக்காரர்கள் பயன்படுத்தும் எண்ணுச் சொற்கள் வருமாறு : 1-அக்கட்டு ; 2-ரெய்ண்டு, லெண்டு 3-மூணு, மூண்டு ; 4-நாலு ; 5-அய்ந்து, அய்ந்து ; 6-ஆறு; 7-ஏலு ; 8-எட்டு; 9-(சிந்திமொழிச் சொல்); 10-வை.

இவைகளுள் அக்கட்டு என்பது தெலுங்குச் சொல்லான ஒக்கட்டி என்பதன் திரிபு என்று தோன்றுகிறது. இரண்டு முதல் எட்டு வரை உள்ள எண்கள், தமிழ் மக்களிடம் வழங்குகிற விதமாகவே நேராகவும் ஒலி திரிந்தும் வழங்குகின்றன. லெண்டு (இரண்டு), மூணு மூண்டு (மூன்று) முதலான சொற்கள் தமிழ் மக்களிடையிலும் கொச்சைச் சொற்களாக வழங்கி வருவனவே. வை (10) என்பது, இருவைது (இருபது), முப்பைது (முப்பது) என்பன போன்ற தெலுங்குச் சொற்களின் செல்வாக்கால் உண்டானதாக இருக்கக் கூடும் என்று தோன்றுகிறது.

எண்கள் மட்டுமல்லாமல், சிந்தி மொழியில் இந்த விளை

யாட்டுக்குப் பெயர் அமைந்துள்ள முறையும், இந்த விளையாட்டுக்கும் தமிழுக்கும் தொடர்பு உள்ளதைக் காட்டுகிறது. ஏனைய வட இந்திய மொழிகள் பலவற்றில் ''குல்லி தண்டா'' என்று பெயர் பெற்றுள்ள கிட்டிப்புள், சிந்தி மக்களிடையே மட்டும் "இட்டி தக்காரு" என்ற பெயரில் வழங்கி வருகிறது. இட்டி என்பது சிறிய குச்சியாகிய ''புள்''ளைக் குறிக்க தக்காரு என்பது தடியைக் குறிக்கிறது. ''கிட்டி'' என்னும் சொல்லே, காலப்போக்கில் 'இட்டி' என மாறி வழங்கியிருக்கக் கூடும் என்று கருத இடம் உள்ளது.

### எப்படிச் சென்றது?

கிட்டிப்புள் அல்லது குச்சி கம்பு என்பது உலகின் பல பகுதிகளில் வெவ்வேறு பெயர்களில் விளையாடப்படும் விளையாட்டாக இருக்க, சிந்தி மொழி பேசும் மக்கள் மட்டும் இதிலே தமிழ் (திராவிட) எண்களைப் பயன்படுத்தி வருவது ஏன் என்பது ஆராய்ச்சிக்கு உரியது; விளையாட்டின் பெயரிலேயும் கிட்டி, இட்டி என்னும் ஒலித் தொடர்பு இருப்பதும் சிந்திக்கத் தக்கது.

சிந்திமொழிக்காரர்கள் இப்போது இந்தியாவின் பல பகுதிகளில் வாழ்ந்து வந்தாலும் அவர்களின் சொந்த இடப் (பூர்வீகம்) இப்போது பாகிஸ்தானில் உள்ள சிந்து மாநிலமே. அங்கிருந்து தான் அவர்கள் கிட்டிப்புள் விளையாட்டை வேறு இடங்களுக்கும் கொண்டு சென்றிருக்கிறார்கள்.

சிந்து மாநிலத்தார் தமிழ் விளையாட்டை (அல்லது தங்கள் விளையாட்டில் தமிழ்ச் சொற்களை) ஏற்றதற்கு இரண்டு வாய்ப்புகள் உள்ளன: ஒன்று,— இப்போதையப் பாகிஸ்தானிலேயே உள்ள மொஞ்சோதரோ, ஆரப்பா பழந்திராவிடப் பகுதியில் வழங்கிய இந்த விளையாட்டு அந்த அந்நகரங்கள் அழிந்து மக்களில் சிலபேர் அங்கங்கே தங்கி நின்றதால், பின்வந்த சிந்தியரிடம் பரவியிருக்கலாம், அல்லது உலகின் பல பகுதிகளுக்கு வாணிபம் செய்யச் சென்ற பழந்தமிழர்கள் சிந்துப்பகுதிக்கும் சென்று அங்கே குடியேறி இருந்து இந்த விளையாட்டை அங்குள்ள மக்களிடம் பரப்பியிருக்கலாம்.

இவ்வாறு இடம் பெயர்ந்து அயல்மொழிப் பகுதிகளுக்குச் செல்வோர் தனியான குடியமைப்புகளை அமைத்துக்கொண்டு வாழ்வது வழக்கமே. முன்பு தமிழகத்திற்கு வந்த யவனர்கள் தங்கள் யவனச்சேரி (ஏணிச்சேரி) யில் வாழ்ந்துள்ளார்கள். இப்போதுகூட, பம்பாயின் தாராவியிலும் மட்டுங்காவிலும், தில்லியின் கரோல்பாக்கிலும் கல்கத்தாவின் பாலிகஞ்சிலும் தமிழர்கள் சேர்ந்திருந்து வாழ்கிறார்கள் அல்லவா?

இப்படிச் சென்றேறுவோரின் பழக்க வழக்கப் பண்பாடுகள் அங்குள்ள மக்களிடம் பரவுவதும் இயல்பே, இன்று வடநாட்டின் மேற்குறிப்பிட்ட பகுதிகளில் தமிழகத்து இட்டலி, வடை, தோசை, சாம்பார் போன்றவை சென்று செல்வாக்குப் பெற்றுள்ளன. இவைகளை வட நாட்டு மக்கள், முறையே இட்லி, படா, தோசா, சாம்பர் என்னும் சொற்களால் குறிக்கிறார்கள்.

ஒரு பழக்கம் புதிதாக ஒரு மொழிக்குரிய மக்களிடம் பரவும் போது, அப்பழக்கம் தோன்றி நிலவிய பகுதியின் மொழிச் சொற்கள் இந்தப் புதிய மொழியில், அப்படியே (அல்லது சிறிதே திரிந்து) வழங்கப்படுவதும் இயல்பே. மேற்கிலிருந்து வந்த மட்டைப் பந்து (கிரிக்கெட்) விளையாட்டினால் விக்கெட், இன்னிங்ஸ் முதலான சொற்கள் இந்திய மொழிகளில் ஏறிவிட்டன அல்லவா?

ஆக, ஏதோ ஒரு வகையில் தமிழர்களின் தொடர்பு சிந்து மாநிலத்தில் இருந்து வந்துள்ளது. தெ[illegible]மிழர்கள் வணிகத்துக்காகச் சென்றிருந்து, நாளடைவில் அந்த மக்களோடு ஒன்றிக் கலந்திருக்க வாய்ப்பு உண்டு. சில 100 ஆண்டுகளுக்கு முன்பு மலேசியாவின் மலாக்காப் பகுதியில் சென்று குடியேறிய தமிழகத்துச் செட்டியார்கள் இன்று, தங்கள் தமிழ் மொழியையே மறந்து, (மலாக்காச் செட்டிகள் என்ற பெயரோடு) அங்கே வாழ்ந்து வருவது நினைவில் கொள்ளத்தக்கது. அப்படி இல்லை என்றால், சிந்து வெளியில் நாகரிகம் பரப்பிய பழந் தமிழர்கள், இயற்கையின் சீற்றத்தை எதிர்த்து நிற்க முடியாமல் சிதறி இடம் பெயர்ந்தபோது தங்கள் கிட்டிப்புள் விளையாட்டையும் அதனோடு சில தமிழ் எண்ணுப் பெயர்ச் சொற்களையும் அங்கே விட்டுச் சென்றிருக்க வேண்டும்.

### ஆய்வு செய்க!

மொழிஇயலார், மானுடஇயலார், சமூக இயலார் முதலான துறையினர் ஆழ்ந்தஆராய்ச்சிகள் செய்தால், கிட்டிப்புள் விளையாட்டே, தமிழரின் நாகரிக வரலாற்றில் புலப்படாமல் கிடங்கும் சில பகுதிகளைத் துலாம்பரமாக்கும் என்பது திண்ணம். இன்னும் இழுபறியாக இருந்து வரும் சிந்துவெளிநாகரிகம் பற்றியசெய்திகள் விளக்கம் பெறக் கூட இதிலே வாய்ப்பு உள்ளது. (தில்லிப் பல்கலைக் கழக சிந்திமொழிப் பேராசிரியர் டாக்டர் ஜெட்லி அவர்கள் தந்த சில குறிப்புகளின் அடிப்படையில் எழுதப்பட்டது.)

## திரைப்படங்களுக்கு நிதி உதவி வழங்க அரசு நிறுவனம்

திரைப்படங்கள் தயாரிப்பதற்குப் போதுமானத் தகுதிகள் இருந்து, போதிய நிதிவசதிகள் இல்லாதிருக்கும் தயாரிப்பாளர்களுக்கு நிதி உதவி செய்வதற்காக, தமிழ் நாடு அரசு 'திரைப்பட நிதி உதவிக் கழகம்' ஒன்றினை **1956**-ஆம் ஆண்டு கம்பெனிச் சட்டத்தின்கீழ் அமைக்க முடிவு செய்துள்ளது.

இந்தக் கழகம் முறைப்படி அமைக்கப்படும் வரை, செய்தி — மக்கள் தொடர்பு இயக்குநர் மற்றும் அலுவலால் அரசு இணைச்செயலாளர், செய்தி, சுற்றுலா மற்றும் (தமிழ்) பண்பாட்டுத் துறை அவர்கள் இதன் தனி அலுவலராக இருப்பார். சென்னையிலுள்ள தமிழ்நாடு தியேட்டர் கார்ப்பரேஷனின் செயலாளர் இந்தப் புதுக் கழகத்தின் உதவித் தனி அலுவலராக இருந்து தனி அலுவலருக்கு உதவுவார்.



# தஞ்சையில் தமிழ்ப்பல்கலைக் கழகம்



பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15ஆம் நாளில்—

தஞ்சைத் தரணியில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தைத் தமிழ் நாடு அரசு தொடங்கியுள்ளது.

1981 ஜனவரித் திங்களில் மதுரையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டின் பொழுது தமிழ்நாட்டில் தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் அறிவித்தார்கள். முதல்வர் அவர்கள் கூறியதற்கு ஏற்ப தமிழ்ப் பல்கலைக்கழகம் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளில் தொடங்கப்பட்டுள்ளது.

செப்டம்பர் 15ஆம் நாள் தஞ்சை விளையாட்டு அரங்கத்திடலில் தொடங்கியுள்ள தமிழ்ப் பல்கலைக் கழகத் தொடக்க விழா மூன்று நாட்கள் நடைபெறுகிறது.

நமது நாடு விடுதலை அடைந்த பிறகு ஏற்பட்டிருக்கும் பல்கலைக் கழக வளர்ச்சியினை ஆராயும் பொழுது, தமிழகத்தில் பல்கலைக் கழகங்களின் எண்ணிக்கை அனைத்து இந்திய சராசரி நிலையிலும் கணிசமாகக் குறைவாகவே உள்ளதென்பது அனைவரும் அறிந்த செய்தியே! எனவே தமிழகத்தில் இன்னும் சில பல்கலைக் கழகங்கள் அமைய வேண்டுவது அவசியமானதும், அவசரமானதுமாகும். புதுப் பல்கலைக் கழகங்களை அமைக்கும்பொழுது, முக்கியமாகக் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய, உயர் கல்வி ஆராய்ச்சி வளர்க்கப்பட வேண்டிய அறிவுத் துறைகள் பற்றி ஆழ்ந்து எண்ண வேண்டியுள்ளது.


அப்படி எண்ணும்பொழுது இந்தியப் பண்பாட்டின், நாகரிகத்தின் அடிப்படைகளில் ஒன்றாகவும் தொன்றுமுதல் இன்றுவரை நாட்டின் கலை, சமயம், தத்துவம் ஆகிய துறைகளில் பெரும் பங்களிப்புக்கு உரிமையுடையதுமான தமிழ் மொழி, அதன் அடிப்படையில் அமைந்த வாழ்வியல் பண்பாடு ஆகியவற்றைச் சார்ந்த, துறைகட்கு ஒரு பல்கலைக் கழகம் அமைவது இன்றியமையாததாகும். தமிழையொத்த தொன்மையும், இந்தியப் பண்பாட்டிற்கு மிகுந்த முக்கியத்துவமும் உடையதான வடமொழிக்கு ஏற்கனவே பல்கலைக் கழகங்கள் அமைந்துள்ளன. அவை இந்திய அரசின் உதவியும் பல்கலைக் கழக மானியக் குழுவின் இசைவும் பெற்றுச் செயல்பட்டு வருகின்றன. அந்த அடிப்படையில் தமிழ்ப் பல்கலை கழகம் நிறுவுவதெனத் தமிழக அரசு எடுத்த முடிவைத் தமிழர்கள் மட்டுமின்றி இந்திய நாகரிகத்தின், பண்பாட்டின் ஊற்றுக்கள் அனைத்தையும் ஆழமாகவும் விரிவாகவும் ஆராய வேண்டும் என்ற எண்ணமுள்ள அனைவரும் வரவேற்பர்.

**மாழலன்**

எனவே தமிழ்நாடு அரசு தமிழ் பல்கலைக் கழகம் அமைக்க தமிழாய்ந்த அறிஞர்கள் இடம் பெற்றுள்ள வல்லுநர் குழுவை அமைத்தது.

மதுரை காமராசர் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் வ. சுப. மாணிக்கம், தமிழ்நாடு சட்ட மேலவைத் தலைவர் மாண்புமிகு சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சிவஞானம், முத்தமிழ்க் காவலர் டாக்டர் கி.ஆ.பெ. விசுவநாதம், டாக்டர் வா. செ. குழந்தைசாமி, டாக்டர் மா. நன்னன், டாக்டர் சாலை இளந்திரையன், டாக்டர் ச.வே. சுப்பிரமணியம், இரா. மீனாட்சி சுந்தரம் ஆகியோரைக் கொண்ட அந்த வல்லுநர் குழு, தமிழ்ப் பல்கலைக் கழக அமைப்பு முறை பற்றி அறிக்கை அளித்துள்ளது.

தமிழ் கூறும் நல்லுலகம் இந்தியத் துணை கண்டத்திற்கும் வெளியே பரந்து விரிந்த ஒன்றாகும். இன்றுவரை தமிழில் இல்லாத பல்வகை அறிவுத் துறைகளில் நூல்கள் ஆங்காங்கு எழுதப்படுகின்றன. அவற்றில் ஒருமையும் சீர்மையும் காண்பது, முறையான உலகு ஒன்றிய தமிழ் வளர்ச்சிக்கு இன்றியமையாதது ஆகும் என்பதைக் கவனத்தில் கொண்டு வல்லுநர் குழு தமிழ்ப் பல்கலைக்கழக அமைப்புப் பற்-



# தமிழன்னையின் தவப்புதல்வன்

(சி. என். அனந்தகிருஷ்ணன்)

தமிழாம் அன்னைதன் தவப்பெரும் புதல்வன்
கமழும் தமிழின் கண்ணியக் காவலன்;
சிந்தனைச் சிற்பி, செந்தமிழ் வித்தகன்;
சலியா துழைத்த சமத்துவ வாதி;
மூடிய முகில் கிழித்து வெளிவந்த முழுநிலா
அரசியல் மேதை ஆணவ மற்றோன்;
தத்துவ ஞானி, தமிழரின் தனிநிதி;
வக்கிரப் புத்தி வைதீக அரணை
வாளாலன்றிச் சொல்லால் சரித்தோன்.
பச்சிளங் குழவின் பால்மனம் படைத்தோன்;
பகைவரும் மெச்சும் பண்புடை யாளன்;
மாத்தமிழ் தன்மறு மலர்ச்சித்தந்தை மாண்ட
நம்பெருமையை மீட்டுத் தந்தோன்
நாடகக் கலைக்கு நல்லதோர் சான்று;
சிந்து பாடுமவர் சிங்கார உரைநடை
மேடைப் பேச்சினில் மேயதகு மன்னன்—
அன்னோன் பேச்சில்
தென்றல் வீசும், புயலும் சீறிடும்
சந்தத் தமிழது தவழ்ந்து விளையாடும்;
பொழியும் மழையிடை பூத்திடும் மின்னல்
போல் பொங்கி மகிழ்ந்திட நகைச்சுவை யுதிரும்.
வீர மூட்டும் மெய் சிலிர்த்திடும்
கோழை கூனன் குன்றென நிமிர்வான்!
இசை வயப்பட்ட புள்ளினம் போல
இப்புவி மாந்தர் கேட்டே கிடப்பர்.
தனக்கு வமையில்லாத் தமிழ்ப் பேச்சாளன்;
தரணி கண்டறியா தமிழ்ப் பேரொளி அவரே!
என்ஜீ. ஒக்களின் எண்ணருந்தந்தை-அன்னோர்
பஞ்சம் பறந்திட சலுகை பல தந்தோன்.
"வாழ்க அண்ணாவின் நாமம்! வளர்க
வளர்க அண்ணாவின் புகழ்!"

...றிய அவ்வறிக்கையில் விவரித்துள்ளது.

வல்லுநர் குழுவின் அறிக்கைக்கு ஏற்ப அமையவிருக்கும் தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைப்பு முறையும் பிற விவரமும் வருமாறு:

தஞ்சையில் அமைக்கப்படும் 'தமிழ்ப் பல்கலைக் கழகம்' "உறைவுள் தனிப் பல்கலைக் கழகமாக" (Residential Unitary University) அமையும்.

இப்பல்கலைக்கழகம் பிற பல்கலைக் கழகங்களைப் போல், நிர்வாகப் பொறுப்பில் வேந்தர், இணை வேந்தர், துணை வேந்தர் பதிவாளர் ஆகியோரைக் கொண்டதாக இருக்கும்.

இப்பல்கலைக் கழகத்தின் அமைப்பு முறை வருமாறு:

### பேரவை (Senate)

இப்பேரவை அரசு அலுவல் சார் உறுப்பினர்கள், அரசினர் அமர்த்திய உறுப்பினர்கள், பல்கலைக்கழக அலுவல்சார் உறுப்பினர்கள், தமிழ்ப் பல்கலைக் கழகம் ஏற்பளித்த நிறுவனங்களின் சார்பாளர்கள், , ஆசிரியர் சார்பாளர்கள் ஆகியோரைக் கொண்டதாக இருக்கும். இதன் உறுப்பினர்கள் எண்ணிக்கை 40-க்கு அதிகப்படாமல் இருக்கும். இதில் 50 விழுக்காடு இப்பல்கலைக் கழக ஆசிரியர்களாக இருக்க வேண்டும். அரசினரால் அமர்த்தப்படும் உறுப்பினர்கள் ஏதேனும் ஒரு துறையில் வல்லுநராக இருக்க வேண்டும்.

### ஆட்சிக்குழு (Syndicate)

ஆட்சிக் குழுவில் அரசு அலுவல்சார் உறுப்பினர்கள், அரசு அமர்த்துநர், பேரவைச் சார்பாளர்கள், புலத் தலைவர் ஆகியோர் இடம் பெறுவர். உறுப்பினர்களின் எண்ணிக்கை 12-க்கு மேற்படாமல் இருக்கும். இவற்றுள் இருவர் புலத் தலைவர்களாக இருப்பர். இதன் உறுப்பினர்கள் மூன்று ஆண்டுக் காலம் பதவி வகிப்பர். அரசு அமர்த்துநர் ஏதாவது ஒரு துறையில் வல்லுநராக இருப்பார்.

### புலங்களும், துறைகளும் :

தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் குறிக்கோள்களுக்கு ஏற்ப, புலங்கள், (Faculties) என்ற பெரும் பிரிவுகளும், துறைகள் (Departments) எனப்படும். உட்பகுதிகளும் அமைந்திருக்கும்.

குறிக்கோள்களை நிறைவேற்றத் தேவைப்படும் புலங்களும், துறைகளும் பல என்றாலும் எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் உடனடியாகத் தொடங்குவதற்கு நிதி வசதியும் வாய்ப்பும், பிறவும் இடங்கொடாமை கருதி, முன்னுரிமையாகச் சிலவற்றை மட்டும் தொடங்கப்படும். எனினும் குறிப்பிடாத பிற புதிய புல...

[தொடர்ச்சி 45-ஆம் பக்கம்]



# தமிழுக்கெனத் தனியே ஒரு பல்கலைக் கழகம்

—கவிஞர் புத்தனேரி சுப்பிரமணியம்


தமிழுக்கெனத் தனியே ஒரு
பல்கலைக் கழகம்
தஞ்சையிலே தோன்றுவதைப்
போற்றிடும் உலகம்!
அமிழ்தத் தமிழ் ஆய்வின் புது
விருந்துகள் நடக்கும்
அறிவுக் கலைக் கோயில் எனும்
பெரும்புகழ் மணக்கும்! (தமிழுக்கென...)


எங்கும் தமிழ் எதிலும் தமிழ்
எல்லாம் தமிழில்—எனப்
பொங்கும் மொழிப் பற்றின் பயன்
புதுமை விளக்கும்!
சங்கத் தமிழ் இன்றைத் தமிழ்
எல்லாம் தழைக்கும்!
தளரா அறிவியலும் கலைத்
தரமும் வளர்க்கும்! (தமிழுக்கென...)

அண்ணா மனம் போலே கலை
அனைத்தையும் பேணும்!
அறிஞர் பலர் ஆர்வத்துடன்
இணைவதைக் காணும்!
கண்ணைச் செவி தன்னை, உயர்
கருத்தையும் ஈர்க்கும்!
காலம் தனை வெல்லும் தமிழ்க்
களஞ்சியம் சேர்க்கும். (தமிழுக்கென...)

இயலிசைநா டகத்துறையின்
உயர்வைக் காக்குமே;—முதல்வர்
எம். ஜி. ஆர். இதயம் போலே
பரந்த நோக்கமே
பயன் கொழிக்கும் கலைக்கழகம்
வாழ்க வாழ்கவே!
புண்பாடு பரப்பு கின்ற
துறைகள் வெல்கவே! (தமிழுக்கென...)









# மகாகவி பாரதியார் பாடல் இசைத்தட்டு

மகாகவி பாரதியாரின் நூற்றாண்டு விழாவுடன் திரு ஏ. வி. மெய்யப்பச் செட்டியார் மறைந்த இரண்டாவது ஆண்டு நிறைவு நாளையும் இணைத்து சென்னை ராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் 12-8-81 அன்று விழா எடுக்கப்பட்டது. இதனையொட்டி, பாரதியார் பாடல்கள் அடங்கிய இசைத்தட்டு வெளியீட்டு விழாவும் சிறப்பு நிகழ்ச்சியாக நடத்தப்பட்டது.

பாரதியார் பாடல்கள் அடங்கிய முதல் இசைத்தட்டை ஏ. வி. மெய்யப்பச் செட்டியார் அவர்களின் துணைவியார் திருமதி இராஜேசுவரி அம்மையார் வெளியிட்டார். அதனை திரைப்பட இயக்குநர் திரு கே. பாலச்சந்தர் பெற்றுக் கொண்டார்.

சீரோடும் சிறப்போடும் நடைபெற்ற இந்த விழாவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் திரு ம. பொ. சிவஞானம் அவர்களும் மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்களும், பங்கேற்று சிறப்பித்தார்கள்.

''இரு பாகங்களைக் கொண்ட நீண்ட நேர ''எல். பி.'' இசைத்தட்டு, ஏ. வி. எம். புரொடக்ஷன்ஸ் தயாரித்த ''நாம்இருவர்' ''வாழ்க்கை'', ''வேதாள உலகம்'', ''பெண்'', ''ஓர் இரவு'' ஆகிய இடங்களில் இருந்து பன்னிரண்டு பாட்டுக்களை தேர்ந்து ஒலிப்பதிவுசெய்து இந்த இசைத்தட்டை வெளியிட்டுள்ளனர். அத்தனை பாடல்களும் மகாகவி பாரதியாரின் பாடல்களாகும்.

பாரதியார் குடும்பத்தைச் சேர்ந்த ரவீந்திரனுக்கு மாண்புமிகு சட்டமன்ற-மேலவைத்தலைவர் திரு. ம. பொ. சிவஞானம்அவர்கள் மாலைகள் அணிவித்து இசைத்தட்டை வழங்கினார். பாரதியார் குடும்பத்தைச் சேர்ந்த திருமதி லலிதா பாரதி, திருமதி சரோஜினி ஆகியோருக்கு திருமதி இராஜேஸ்வரி அம்மையார் மாலைகள் அணிவித்து இசைத்தட்டுக்களைக் கொடுத்தார்.

— அனந்தன் —

''இசை அமைத்த திரு சுதர்சனம், திரைப்படப் பின்னணி பாடகர்களான திருமதி டி. கே. பட்டம்மாள், திருமதி ராஜேசுவரி, திருமதி டி. கே. பகவதி, திரு வேதநாராயணன் ஆகியோருக்குப் பொன்னாடைகள் அணிவிக்கப்பட்டன. பாரதியார் பாடல்களுக்கு உரைநடை எழுதிய கவிஞர் திரு வைரமுத்துவுக்கு தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபைத் தலைவர் திரு டி. இராமானுஜம் மாலை அணிவித்து உரையாற்றினார். தமிழக அரசின் திரைப்படப் பிரிவின் தலைவரும், பிரபல திரைப்பட இயக்குநருமான திரு ப. நீலகண்டன் விழாவில் பங்கேற்று உரையாற்றினார்.

விழாவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் பேசுகையில் ''ஏ. வி. எம். சிறந்த தேச பக்தர். அவர் முத்தமிழ் வளர்த்தவர். மகாகவி பாரதியாரின் பாடல்களை, பாரதி நூற்றாண்டு விழாவையொட்டி இசைத்தட்டு வடிவத்தில் வெளியிடுவதை மனமாரப் பாராட்டுகிறேன்'' என்று குறிப்பிட்டார்.

மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் தமது தலைமையுரையில் ''அமரகவி பாரதியாரின் நூற்றாண்டு விழாவையொட்டி, பாரதியார் பாடல்கள் கொண்ட இசைத்தட்டை ஏ. வி. எம். நிறுவனத்தார் முதலில் வெளியிடுவது பெருமைக்குரியது. இத்துடன் மறைந்த ஏ. வி. எம். அவர்களின் நினைவு நாளும் சேர்ந்துள்ளது பொருத்தமானது. செய்கின்ற காரியத்தை திருந்தச் செய், சிறப்பாகச் செய், பலன் தானாக வரும் என்று நம்பியவர் ஏ. வி. எம். அவர்கள் ஆவார். 1947 ஆகஸ்ட் மாதம் 15ந் தேதி நமது நாடு சுதந்திரம் அடைந்தது. அதற்கு ஓராண்டுக்கு முன்னரே பாரதியார் பாடல்களை ''நாம் இருவர்'' திரைப்படத்தில் புகுத்தி தேசிய பக்தியை ஊட்டினார் அவர்.

பாரதியார் பாடல்களின் உரிமையைப் பெற்று அதை தேசியச் சொத்தாக எல்லோருக்கும் பொதுவானதாக ஆக்கிய பெருமையும் ஏ.வி.எம். அவர்களையே சாரும்'' என்று குறிப்பிட்டார்கள்.





# ஒரே திங்களில் ஒன்பது விழாக்கள்!

ஸி. வே. பாலு,
மக்கள் தொடர்பு அலுவலர்,
சென்னை மாநகராட்சி.

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் சென்னை மாநகராட்சி ஒன்பது சிறப்பான விழாக்களைக் கொண்டாடியுள்ளது. மாநகர மக்களின் வசதிகள் மேலும் பெருகிட, அவர்கள் வாழ்வு ஏற்ற பெற்றிட எழிலார் பணிகளை நிறைவேற்றிய விழாக்களே அவை.

இன்றைய கல்விப்பிரச்சனைகளுள் இட நெருக்கடி பெரும் பிரச்சனை! மேட்டுக்குடி மக்களே கற்க முடியும் என்ற நிலை மாறி அனைவருக்கும் கல்வி என்ற நிலை உருவாகிவிட்ட இன்பத்தமிழகத்தின் தலைநகரில் இட நெருக்கடியை அகற்ற மாநகராட்சி அயராது பாடுபடுகின்றது. அறுபது லட்சம் ரூபாயைப் பள்ளிக் கட்டடம் கட்ட ஒதுக்கியுள்ளது மாநகராட்சி. அதன் பலன், இரண்டு பள்ளிக் கட்டடத் திறப்பு விழாக்கள் இந்த மாதம் நடைபெற்றுள்ளன.

## புதிய கட்டடம்:

4.8.81 செவ்வாய்க் கிழமை மக்கள் நெருக்கம் மிகுந்த திருவல்லிக்கேணியின்வல்லபா அக்கிரகாரம் விழாக்கோலம் பூண்டிருந்தது. அங்கு மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் 10 வகுப்பறைகள் கொண்ட புதிய கட்டடத்தை மாநகராட்சிச் சிறப்பு அலுவலர் திரு. து. முருகராசு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் திறந்து வைத்தார்கள். இக்கட்டடம் ரூ. 3 இலட்சம் செலவில் கட்டப்பட்டது. விழாவில் பேசிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 369 தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளுள் 327 சொந்தக் கட்டடங்களில் இயங்குகின்றன என்றும் 42 பள்ளிகளே தனியார் கட்டடங்களுள் நடைபெறுகின்றன என்றும் கூறினார். விரைவில் அவையும் சொந்தக் கட்டடங்களுக்கு மாறும் என்ற இனிப்பான செய்தியையும் அறிவித்தார்.

மாநகராட்சி உதவி ஆணையாளர் (தெற்கு) வரவேற்புரை வழங்கினார். இவ்விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் அ. கலாநிதி, திரு. ஜேப்பியார் எம்.எல்.சி., திரு. ஆர்.டி. சீத்தாபதி, எம்.எல்.சி. செல்வி லீலாவதி, எம்.எல்.சி. முதலியோர் சிறப்புரையாற்றினர். மாநகராட்சியின் கல்வி அலுவலர் திரு. ஒ.அ. கனகசபை நன்றி கூறினார்.

## சலவைத் துறை:

ஏழைகளின சிரிப்பில் இறைவனைக் கண்டார் பேரறிஞர் அண்ணா அவர்கள்! 5.8.81 புதன் இரவு எத்தனை ஏழைகளின் முகம் சிரிப்பால் மலர்ந்தது தெரியுமா! தண்டையார்பேட்டையில் கோதண்டராமத் தெருவில், அங்கு வாழும் ஏழைச் சலவைத் தொழிலாளர்களின் குடிசைகளுக்கிடையே புதிய சலவைத் துறைக்கு அடிக்கல் நாட்டினார் உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு அவர்கள். திரு கே. ஜேப்பியார், எம்.எல்.சி. சிறப்புரையாற்ற மாநகராட்சி ஆணையர் திருமதி யாஸ்மின் அகமது, இ.ஆ.ப., நன்றி கூறினார். இவ்விழாவிற்குச் சென்னை மாநகராட்சிச் சிறப்பு அலுவலர் திரு து. முருகராசு, இ.ஆ.ப.; தலைமை தாங்க உதவி ஆணையர் (வடக்கு) வரவேற்புரை வழங்கினார்.

ஊர்க்காவல் படையினர் சிறப்பான பணியொன்றில் ஈடுபட்டிருந்தனர். போக்கு வரவு அளவுக் கணிப்புக்கான கணக்கெடுப்புப் பணியேயாகும் அது. அவர்களுக்களுக்குச் சான்றிதழ் வழங்கு விழா 11.8.81 செவ்வாய் 4.00 மணியளவில் ரிப்பன் கட்டடத்தின் புதிய உணவருந்தும் கூடத்தின் முதல் மாடியில் சென்னை மாநகராட்சிச் சிறப்பு அலுவலர் திரு. முருகராசு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

காவல் துறை ஆணையர் திரு. ஸ்ரீபால், இ.கா.ப., அவர்கள் சான்றிதழ் வழங்கிச்



சிறப்புரையாற்றினார். மாநகராட்சி ஆணையர் திருமதி யாஸ்மின் அகமது நன்றி நவின்றார்.

ஆகஸ்டு 15 விடுதலை நாள் விழா. மாநகராட்சி மூன்றுசிறப்பான விழாக்களைக் கொண்டாடி மகிழ்ந்தது அன்று! முதல் விழா, ரிப்பன் கட்டடத்தின் உச்சியிலே தாயின் மணிக்கொடியை ஏற்றிப் பட்டொளி வீசிப் பறக்கச் செய்தார் மாநகராட்சிச் சிறப்பு அலுவலர் திரு முருகராசு, இ.ஆ.ப., அவர்கள். அவர் தம் உரையில் சீரிய பல கருத்துக்களை எடுத்துக்கூறி மாநகராட்சிப் பணியாளர்களின் கடமை உணர்ச்சிக்கு வித்திட்டார்.

அணி வகுப்பு:

இரண்டாவது விழா மக்கள் பூங்காவில் உள்ள சாரணர் தலைமையகத்தில் சென்னை மாநகராட்சி பாரத சாரண சாரணிகளின் சுதந்திர தின அணிவகுப்பாக மலர்ந்தது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு ப.குழந்தைவேலு அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்து சாரண அணிவகுப்பைப் பார்வையிட்டு, ஆரம்ப நடுநிலைப் பள்ளிகளில் 1 முதல் 8ஆம் வகுப்பு வரை 1981-இல் நடந்த இறுதி யாண்டுத் தேர்வில் முதலாவதாகத் தேறிய மாணவ மாணவிகளுக்குப் பரிசுப் புத்தகங்கள் வழங்கினார். விழாவிற்கு மாநகராட்சித் தனி அலுவலரும் மாநகராட்சியின் சாரணப்படை புரவலருமான திரு து. முருகராசு, இ.ஆ.ப., தலைமை வகித்தார்.

நோய்க் கண்டுபிடிப்பு:

அடுத்த நிகழ்ச்சியே உரிமைத் திருநாளின் உயரிய நிகழ்ச்சியாகும். சென்னை மாநகராட்சியும் சென்னை மத்திய அரிமா சங்கமும் இணைந்து மாநகராட்சிப் பள்ளி மாணவ மாணவிகளுக்கு இலவசமாக நடத்தும் பல்வகை நோய்க் கண்டுபிடிப்பு இயக்கத்தை மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் திரு இரா. நெடுஞ்செழியன், அவர்கள் நுங்கம்பாக்கம் மாநகராட்சிப் பெண்கள் பள்ளியில் காலை 10.30 மணிக்குத் துவக்கி வைத்தார்கள்.
மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தலைமை வகித்தார்கள். அதே சமயம் 1981-ஆம் ஆண்டு நடைபெற்ற 10-ஆம் வகுப்பு, மற்றும் 12-ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் சிறந்து விளங்கிய மாநகராட்சி உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளி மாணவ, மாணவிகளுக்கும், ஆசிரிய, ஆசிரியைகளுக்கும் மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்கள் பரிசுகள் வழங்கினார்.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. ப. குழந்தைவேலு, அவர்கள் சிறப்புரையாற்றினார். சிங்வி அறக்கட்டளை நிறுவனத்தைச் சார்ந்த திரு.என். சுகால்சந்து ஜெயின் அவர்கள் பரிசுத் தொகை வழங்கினார்கள். சென்னை மாநகராட்சித் தனி அலுவலர் திரு.து. முருகராசு, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையும் மாநகராட்சி ஆணையர் திருமதி. யாஸ்மின் அகமது, இ.ஆ.ப., அவர்கள் நன்றியுரையும் வழங்கினார்கள்.

ஆகஸ்டு 20-ஆம் நாள் சென்னை மாநகரத்தை அழகுபடுத்தும் அருமையான பணி ஒன்று நிறைவெய்தியது. சென்னை மாநகராட்சியும் ஆந்திர வங்கியும் இணைந்து நுங்கம்பாக்கம் வள்ளுவர்கோட்டம் எதிரில் அலங்கார நீரூற்றை அமைத்தனர். இவ்வலங்கார நீரூற்றை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. ப. குழந்தைவேலு அவர்கள் துவக்கி வைத்தார்கள். தனி அலுவலர் திரு. து.முருகராசு, இ.ஆ.ப., அவர்கள் தலைமை தாங்க ஆணையர் திருமதி. யாஸ்மின் அகமது, இ.ஆ.ப., அவர்கள் நன்றி நவின்றார்.

துவக்கப் பள்ளி:

அடுத்த விழா துவக்கப்பள்ளிக் கட்டடத் திறப்பு விழா. பட்டாளம் பகுதியில் வாழும் தொழிலாளர்களின் குழந்தைகள் கல்வி கற்க நீண்ட நாட்களாகச் சொந்தக் கட்டடம் இல்லாமலிருந்தது. மும்மொழிகளில் பாடங்களை நடத்தும் முக்கியமான பள்ளி இது. தமிழ், தெலுங்கு, உருது மொழிகளைப் பேசும் மக்களின் குழந்தைகள் இப்பள்ளியில் சிறப்பாகப் பயில்கிறார்கள். இவர்களுக்குச் சரியான கட்டடம் இல்லாத நீண்டநாள் குறை இதனால் தீர்ந்தது. 3.8 இலட்சம் செலவில் கட்டப்பட்ட இக்கட்டடம் சென்னை மாநகராட்சித் தனி அலுவலர் திரு. து. முருகராசு இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.ப.குழந்தைவேலு அவர்களால் திறக்கப்பட்டது.



விளையாட்டுப் போட்டிகள்:

அடுத்த விழா, சென்னை மாநகராட்சியின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால்பொறிக்கப்பட வேண்டிய சிறப்பு விழாவாகும். தமிழ்நாடு மாநகராட்சிகளின் முதல் விளையாட்டுப் போட்டிகள் 27.8.81இல் துவங்கி 30.8.81இல் நிறைவெய்தியது. ஆரம்ப நாளன்று போட்டிகளை மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம், அவர்கள் மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில் துவக்கிவைத்தார்கள். சென்னை மாநகராட்சியின் சிறப்பு அலுவலர் திரு.து. முருகராசு, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்கள். மதுரை மாநகராட்சி ஆணையர் திரு. கே.எஸ். ஸ்ரீபதி அவர்கள் சிறப்புரை யாற்றினார்கள். கோயம்புத்தூர் மாநகராட்சித் தனி அலுவலர் திரு. எம். தங்கதுரை, இ.ஆ.ப., அவர்கள் நன்றியுரை வழங்கினார்கள். முதல் நாளன்று நடைபெற்ற கயிறு இழுக்கும் போட்டியிலும் பிற போட்டிகளிலும் சென்னை மாநகராட்சி முதன்மையாக வந்தது. 7 போட்டிகளில் 6-இல் சென்னை மாநகராட்சிக்கு முதல் இடம் கிடைத்தது.

விளையாட்டுப் போட்டிகள் தொடர்ந்து 28, 29, 30 தேதிகளில் நடைபெற்று நிறைவெய்தின. நேரு விளையாட்டரங்கம், எழும்பூர் விளையாட்டரங்கம் இராசரத்தினம் விளையாட்டரங்கம், முதலிய இடங்களில் இந்நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

பலமாடிக் கட்டடம்:

இவை நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில் இன்னொரு சிறப்பான விழாவும் கோபாலபுரத்தில் நடைபெற்றது. சென்னை மாநகராட்சி ஆயிரம் விளக்கு, கிரீம்ஸ் சாலை பல-மாடி அலுவலகம் மற்றும் அங்காடிக் கூடங்கள் அடிக்கல் நாட்டு விழா 28.8.81 அன்று கோபாலபுரம் கான்ரான் ஸ்மித் சாலையில் நடைபெற்றது.
மாண்புமிகு முதல்வர் திரு.எம்.ஜி.ஆர். அவர்கள் அடிக்கல் நாட்டி சிறப்புரையாற்றினார். மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.கே.ஏ. கிருஷ்ணசாமி, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. ப. குழந்தைவேலு, புதுடில்லியிலுள்ள மாண்புமிகு தமிழ்நாடு அரசின் தனிப்பிரதிநிதி திரு. ஆர். மோகனரங்கம், எம்.பி. தேசிய சேமிப்பு மாநில ஆலோசனைக் குழுத் துணைத் தலைவர் எஸ்.எஸ்.இராசேந்திரன், நாடாளு மன்ற உறுப்பினர் டாக்டர் அ. கலாநிதி தமிழ்நாடு சட்ட மேலவை உறுப்பினர் திரு. ஜேப்பியார் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத் தலைவரும், நிர்வாக இயக்குனருமான திரு. ஆர். நடராஜன், இ.ஆ.ப., சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. இலட்சுமி பிரானேஷ், இ.ஆ.ப., ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். சென்னை மாநகராட்சி ஆணையர் திருமதி யாஸ்மின் அகமது, இ.ஆ.ப., அவர்கள் நன்றியுரை வழங்கினார்கள். இப் பலமாடிக் கட்டடத்தின் தனிச் சிறப்பு, வரி விதிக்காமலேயே வருவாய்க்கு வழி தேடுதலாகும். இக்கட்டடம் நாற்பத்து நான்கு இலட்சரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட இருக்கிறது. இதன் மூலம் மாநகராட்சிக்கு வாடகையாக மாதம் ஒன்றுக்கு ரூ. 60,000- வரக்கூடும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

விளையாட்டுப் போட்டிகளின் நிறைவு விழா 30.8.81 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு முதல்வர் திரு.எம்.ஜி.ஆர். அவர்கள் வெற்றி பெற்றோருக்குப் பரிசுகள் வழங்கி நிறைவுரையாற்றினார்கள். இந்நிகழ்ச்சிக்குத் தமிழக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.ப. குழந்தைவேலு அவர்கள் தலைமை வகித்தார்கள். வரவேற்புரையை மாநகராட்சித்தனி அலுவலர் திரு. து. முருகராசு, இ.ஆ.ப., அவர்கள் நிகழ்த்தினார்கள். வணக்கத்திற்கு உரிய மதுரை மாநகர மேயர் திரு எஸ். கே. பாலகிருஷ்ணன் அவர்களும் சட்ட மன்ற மேலவையுறுப்பினர் திரு. ஜேப்பியார் அவர்களும், கோயம்புத்தூர் மாநகராட்சிச் சிறப்பு அலுவலர் திரு. எம். தங்கதுரை அவர்களும் வாழ்த்துரை நல்கினர். சென்னை மாநகராட்சி ஆணையர் திருமதி யாஸ்மின் அகமது அவர்கள் நன்றியுரை நவின்றார்கள். இவ்விழாவில் சிறப்பான சில போட்டிகளும் நடைபெற்றன. சென்னை-மதுரை மாநகராட்சிகளின் அலுவலர்களுக்கான கயிறு இழுக்கும் போட்டியில் மதுரை வென்றது.

சிறுவர்களுக்கான போட்டிகளும், முதியோர்கான போட்டிகளும் நடைபெற்றன. சென்னை மாநகராட்சி அதிக எண்களைப் பெற்றுமுதற் பரிசைத் தட்டியது மாநகராட்சி ஊழியர்களிடையே நல்லுறவைப் பேண இவ்விழா இனிது உதவியது என்றால் அது மிகையாகாது. நிறைவு விழாவின் முதல் நாள் மாலை சென்னை மாநகராட்சி அனைவருக்கும் சிறப்பு விருந்து அளித்தது.

இரவு கங்கை அமரனின் குழுவினரால் இன்னிசை நிகழ்ச்சியும் நடைபெற்றது. சினிமா, நட்சத்திரங்கள் திரு. நாகேஷ். திரு. ஜெய்சங்கர், திரு. ஒய்.ஜி. மகேந்திரன் ஆகியோரும் நகைச்சுவை நிகழ்ச்சியை நடத்தினர்.


மாநகர மக்களின் வசதிகள் பெருகிட வேண்டும் என்ற சீரிய குறிக்கோளின் அடிப்படையில் ஆகஸ்ட் திங்களில் சென்னை மாநகராட்சி நடத்திய ஒன்பது விழாக்களும் ஒப்பரிய விழாக்களாகத் திகழ்ந்தன என்றால் அது உண்மை-வெறும் புகழ்ச்சியல்ல!



Stenographers have enough to do getting through all the dictation given to them in a day. They obviously can't be available at all the times that you want to dictate.

Like when you're on site. Or on tour. Or at home with extra work to do. Or, quite simply, when the stenographer just does not happen to be available for any reason. In all such situations, all you need is **NETWORK DICTATION SYSTEMS**

# Now, official productivity goes on even when the steno goes off.



**Indian Communications Network Private Limited**
6-B Lakshmi Bhavan, 609 Mount Road, Madras 600 006, Gram: INTERFACE
**Phone No. 85500**

**Our present users in the Government:**
Secretary to Chief Minister—Home Secretary—Secretary Food & Co-operation—Secretary Forests & Fisheries—Secretary Prohibition & Excise—Secretary Rural Development—Secretary Health—Secretary Commercial Taxes—Secretary Agriculture—Commissioner Land Administration—Joint Secretary Public—PTC—Tiruvalluvar Transport—T.N. Housing Board—T.N. Electricity Board—TANSI—T.N. Minerals—T.N. Civil Supplies Corporation—Madras Port Trust.

ARMS/D/337



# ஆசிரியர்களுக்குப் புதிய சலுகைகள்!

ஆசிரியர் தின விழாவும்' நல்லாசிரியர்' விருது வழங்கும் விழாவும் 5-9-81 காலை சென்னை வள்ளுவர் கோட்டத்தில் சிறப்புற நடைபெற்றது.

இவ்விழாவிற்குத் தற்காலிகத் தலைமை நீதிபதி மாண்புமிகு திரு பி. ஆர். கோகுலகிருஷ்ணன் அவர்கள் தலைமை வகித்தார். தமிழ்நாட்டில் சிறந்த முறையில் தேறிய. பள்ளிக்கூடங்களுக்கு அவர் பரிசுகள் வழங்கினார்.

இந்த விழாவில், 208 நல்லாசிரியர்களுக்கான விருதுகளை மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம்அவர்கள் வழங்கினார்.

மேலும் எஸ். எஸ். எல். சி., ஓ. எஸ். எல். சி. மெட்ரிகுலேசன் ஆகிய தேர்வுகளில் மாநில அளவில் சிறந்த முறையில் வெற்றி பெற்ற மாணவ—மாணவிகளுக்கும் அவர் தங்கப் பதக்கங்களை வழங்கினார்.

விழாவில் உரையாற்றுகையில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்:

மாவட்டந் தோறும் 'ஆசிரியர் நல கவுன்சில்''கள் அமைக்கப்படும். இதில் மாவட்டக் கல்வி அதிகாரிகளும் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளும் இரண்டு அல்லது 3 மாதத்துக்கு ஒருமுறை கூடி அவரவர் பிரச்சினையை அங்கங்கே தீர்த்துக் கொள்வார்கள். இதற்காக ஆசிரியர் தினமான இன்று தமிழக அரசு உத்தரவின் கீழ் தகுதி பெற்ற கீழ்க்கண்ட ங்கங்கள் அரசினால் அங்கீகரிக்கப்பட்டு இருக்கின்றன. ஒன்று, தமிழகப் பட்டதாரி ஆசிரியர்கள் சங்கம், இரண்டு தமிழ்நாடு ஆரம்ப ஆசிரியர் கூட்டணி.

''மேல்நிலைப் பள்ளிக்கூடங்களில் உட்படுத்தப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்குச் செப்டம்பர் 1-ந் தேதி முதல் அவர்கள் இதுவரை மாதந்தோறும் வாங்கி வந்த உதவித் தொகை 25 ரூபாயானது 40 ரூபாயாக உயர்த்தப்படுகிறது.

''உட்படுத்தப் பட்டபட்டதாரி ஆசிரியர்கள் மேல்பட்டப்படிப்பு விடுமுறை பயிற்சியில் படிக்க வட்டி இல்லாத கடனாக ஒவ்வொருவருக்கும் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். இது தமிழகப் புத்தக வாரிய நிதியில் இருந்து அளிக்கப்படும்.

''இந்த அரசு என்றும் ஆசிரியர் பக்கம் இருக்கும். ஆனால் ஆசிரியர்கள் தங்கள் உயர் நிலையை மறந்து, மாணவர் நலனையும் கருத்தில் கொள்ளாமல், கல்வியைச் சீர்கேடாக்கும் முறையில் ஈடுபடுவார்களேயானால், அவர்கள் பக்கம் அரசு நிற்கும் என்று எதிர்பார்ப்பது தவறு.

''தாழ்ந்த தமிழகத்தை உயர்த்தும் பெரும் பணியில் கல்விக்குப் பெரும் பங்கு உண்டு. தமிழகக் கல்வித்துறை இந்த முயற்சியில் சிறப்பாகப் பணியாற்றுவதை பாராட்டுகிறேன்.

''நாம் எல்லோருமாகக் கூடி ஒன்றுபட்டு உழைத்து தமிழகத்து ஏழை மாணவர்களை, மறைந்த ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் போன்றவர்களாக ஆக்கப் பாடுபட வேண்டும்.

''தமிழ்நாட்டில் நர்சரிப்பள்ளிகளை அமைத்து 3 வயது முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்குக் கல்வி கற்றுத் தரும் பொறுப்பை அரசு ஏற்று நடத்தத் திட்டமிட்டுள்ளது. கிராமங்களிலும் நர்சரிப் பள்ளிகள் திறக்கப்படும். இந்தப் பள்ளிகள் இந்த ஆண்டே தொடங்கப்படும்.

"முதலில் ஏற்கெனவே உள்ள தாய்-சேய் நல விடுதிகள் நர்சரிப் பள்ளிகளாக மாற்றப்படும். பின் படிப்படியாக, தொடக்கப்பள்ளிகளுடன் நர்சரிப் பள்ளிகள் இணைந்து இயங்கும்.''

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் திரு வெங்கடசுப்பிரமணியம் பேசுகையில் ''தமிழகத்தில் ஆசிரியர்கள் புதிய சகாப்தத்தை ஏற்படுத்தி இருக்கிறார்கள்'' என்று பாராட்டினார்.

செல்வி லீலாவதி எம்.எல்.சி., பேசுகையில்,தமிழக கல்வித்துறை ஆசிரியர்களுக்கு ஆற்றிவரும் பணி பாராட்டுக்கு உரியது என்று கூறினார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி லட்சுமி பிராணேஷ் அனைவரையும் வரவேற்றார் சென்னை மாநகராட்சி தனி அதிகாரி திரு டி. முருகராசு, திரு எல். வி. ராமையா மற்றும் பலர் பேசினார்கள். முதன்மைக் கல்வி அலுவலர் திரு. டி. கிருஷ்ணமூர்த்தி நன்றி கூறினார்.

# அரும்பொருட் பாதுகாப்பு- மறு பயிற்சி

சென்னை அரசு அருங்காட்சியகம் சிறந்த தொரு இரசாயன பாதுகாப்புச் சோதனைக் கூடத்தை தன்னகத்தே கொண்டுள்ளது. அருங்காட்சியக் சேர்க்கையிலே உள்ள பழம் பொருட்களை சிறப்பாக படிமங்களை பாதுகாப்பதற்காக இந்த ஆய்வகம் 1930-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. காலப் போக்கில் இவ்வாய்வகம் பெருமளவில் பாதுகாப்பு அறிவியல் துறைக்கு தொண்டாற்றி இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் தனது பெயரை நிலை நிறுத்தியது.

**பல்கலைக் கழகங்கள்:**

அருங்காட்சியகத்துறையின் கீழ் உள்ள அருங்காட்சியகங்களுக்கு பாதுகாப்புப் பணிகளைச் செய்வதோடல்லாமல் இவ்வாய்வகம் உதவிக்காக வேண்டுகோள் விடுக்கின்ற நிறுவனங்களுக்கு கலைப்பொருட்களைப் பாதுகாக்க தனது ஒத்துழைப்பை நல்குகின்றது. தனது பாதுகாப்புத் தொழில் நுட்பத்தை மேலும் மற்ற அருங்காட்சியகங்களுடனும்



அதோடு இணைநத நிறுவனங்களாகிய தொல் பொருளாராய்ச்சித்துறையோடும் பகிர்ந்து கொள்ளும் நோக்கோடு இவ்வாய்வகம் அரும் பொருட் பாதுகாப்பு என்றதொரு மறுபயிற்சி திட்டத்தை 1975-ஆம் ஆண்டு கொண்டு வந்தது. இப்பயிற்சி காலப்போக்கில் பெருமளவில் விரும்பப் பெற்று அருங்காட்சியகம், கைவ்ண்ணம், தொல்பொருளாராய்ச்சி, அறநிலைய பாதுகாப்பு போன்ற துறைகளில் பணியாற்றுகிறவர்களையும் பல்கலைக் கழகங்களோடு இணைந்துள்ள அருங்காட்சியில், நுண்கலை, கைத்தொழில், தொல்பொருளாராய்ச்சி போன்றவற்றில் பணி புரிகிறவர்களையும் பயில்கின்றவர்களையும் ஈர்த்தது. இப்பயிற்சியானது காப்பாட்சியர்கள் (அரும்பொருட்களை கண்காணிக்கிறவர்கள்) தங்களிடத்திலுள்ள அரும்பொருட்களை எவ்வாறு பாதுகாக்கவேண்டுமென்ற அடிப்படைக் கருத்துக்களைக் கொடுப்பதற்கானதாகும். அவர்களகத்தே உள்ள அரும்பொருட்களை சிறந்த முறையில் பாதுகாக்கும் திறமையுள்ளவர்களாக பயிற்றுவிக்கவேண்டுமென்பதே இதன் நோக்கமாகும்.

**பேணும் முறை:**

இவ்வாண்டு ''அரும்பொருட்பாதுகாப்பு —7-வது மறு பயிற்சி மே-15-ஆம் நாளிலிருந்து ஜூன் 15-ஆம் நாள் வரை அரசு அருங்காட்சியக இரசாயன பாதுகாப்பு ஆய்வகத்தில் நடத்தப்பட்டது. தமிழ்நாடு, மத்திய பிரதேசம், மகாராஷ்டிரம், கர்நாடகம், குஜராத் ஆகிய மாநிலங்களிலிருந்து ஏழுபேர் பங்கெடுத்தனர். பாதுகாப்பு பற்றிய பாடங்களும் செய்முறையுமாகிய பயிற்சி கொடுக்கப்பட்டது. விதவிதமான பொருட்களாலான அரும்பொருட்களை தாக்கும் பலவித வினைகள் பற்றியும் அப்பொருட்களை பேணும் முறைகள் பற்றியும் விளக்கப்பட்டன. கலந்து கொண்டவர்களுக்கு படிமங்கள், நாணயங்கள், மரச்சிற்பங்கள், எழுத்தோலைகள், இரும்பு ஆயுதங்கள், தோல் பொம்மைகள் போன்றவற்றை சுத்தம் செய்வது பற்றியும் பாதுகாப்பு பற்றியும் பாடங்கள் கற்பிக்கப்பட்டன.

இப் பயிற்சியானது அருங்காட்சியகங்களின் இயக்குநர் திரு. என். ஹரிநாராயணா அவர்களால் மே திங்கள் 15-ஆம் நாள் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன் முடிவு விழா ஜூன் 15-ஆம் நாள் 11 மணியளவில் நடைபெற்றது. அவ்வமயம் சென்னை பல்கலைக் கழகபுராதன சரித்திர தொல்பொருளாராய்ச்சி துறைத் தலைவர் பேராசிரியர் டாக்டர் கே.வி. இராமன் அவர்கள் பங்கேற்று சிறப்புச் சொற்பொழிவாற்றி பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கினார். இரசாயன பாதுகாப்புப் பகுதி காப்பாட்சியர் திரு வே. ஜெயராஜ் நன்றி கூற விழா இனிதே முடிவுற்றது. இவ்விழாவின்போது பயிற்சியாளர்களால் பாதுகாக்கப்பட்ட அரும்பொருட்கள் அரசு அருங்காட்சியக கண்காட்சிக்கூடத்தில் காட்சிக்காக வைக்கப்பட்டன.

இப்பயிற்சியில் கலந்து கொண்டவர்கள் தங்களின் பொறுப்பிலுள்ள அரும்பொருட்களை சிறந்த முறையில் பாதுகாப்பதற்கான சிறந்த திறனைப் பெற்றுப் போக வழி செய்வதால் இந்திய கலைச் செல்வங்களை பாதுகாப்பதற்கு சென்னை அரசு அருங்காட்சியகம் செய்யும் பணிகளில் இதுவும் ஒன்றாகும்.





# தமிழ்நாடு காவல் துறை- பெண் காவல் படை

காவல் துறையைப் பொறுத்த மட்டில் இந்தியாவில் தமிழ்நாடு முன்னணியில் நிற்கும் மாநிலங்களில் ஒன்றாகும். மற்ற மாநிலங்களைக் காட்டிலும், காவல்துறை நவீனப்படுத்துதல், கம்ப்யூட்டர், வான் தந்திப் பிரிவு, விஞ்ஞான முறையில் துப்பறிதல் ஆகியவற்றில் தமிழகம் தலை நிமிர்ந்து பணிவன்பு, திறமை அனைவரும் போற்றும் நன்னடத்தை ஆகியவற்றிற்குத் தமிழ்நாட்டுக் காவலர் புகழ் பெற்றவர் ஆவார்.

பெண் காவல் பிரிவினை தோற்றுவித்துப் பயிற்சி அளிப்பதிலும் தமிழகம் முன்னே நிற்கிறது. தமிழ்நாட்டில் 800 பேர் கொண்ட பெண் காவல் பிரிவு இந்தியாவிலேயே மிக அதிகமான எண்ணிக்கை ஆகும். இத்தகைய சாதனைக்குக் காரணம் மாண்புமிகு முதல் அமைச்சர் ஆவார். 60 சார்பு ஆய்வாளர்கள், 60 தலைமைக் காவலர்கள் 600 காவலர் கொண்ட ஒரு பெரும் படையை ஆண்மையில் தோற்றுவித்தவர் அவரே.

1845-ஆம் ஆண்டு அமெரிக்காவிலுள்ள நியூயார்க் நகரில் முதல் முறையாகக் காவல் படையில் பெண்களைச் சேர்த்துக் கொண்டார்கள். ''போலீஸ் மேட்ரன்ஸ்'' என்ற பெயரில் பெண்களைப் பாதுகாத்தலுக்காக இப்படை தோற்றுவிக்கப்பட்டது. 1922-ல் பல நாடுகளைச் சார்ந்த காவல் துறைத் தலைமை அதிகாரிகள் மாநாட்டில் பெண்களையும் குழந்தைகளையும் குற்றவாளிகளையும், குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களையும் பாதுகாப்பதற்கு ஒவ்வொரு காவல் துறைக்கும் பெண்கள் அவசியம் தேவை என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இலண்டன் மாநகரத்தில் பெண் காவல் படையினர் 1907-ல் முதன் முதலில் நியமிக்கப்பட்டது என்றாலும், 1923-ஆம் ஆண்டில்தான் ஆண் காவலர்களுக்குச் சமமாக உரிமைகள் அவர்களுக்கு அளிக்கப்பட்டன.

இந்தியாவில் முதல் முறையாக 1938-ல் திருவிதாங்கூர் சமஸ்தானத்திலும், 1939-ல் உத்திர பிரதேசத்திலுள்ள கான்பூர் நகரத்திலும் பெண் காவலர்கள் நியமிக்கப்பட்டனர். 1972-ல் திருமதி கிரண்பதி என்பவர் ஐ. பி. எஸ். தேர்வில் முதல் பெண்மணியாகத் தேர்ச்சி பெற்று டில்லிமாலத்திற்கு அனுப்பப்பட்டார். 1976-ல் தமிழ்நாட்டிற்கு இரண்டு பெண் ஐ.பி.எஸ். அதிகாரிகள் தேர்ச்சிப் பெற்று அனுப்பப்பட்டனர். திருமதி திலகவதி தற்போது காவல் பயிற்சிப் பள்ளியின் முதல்வராகவும், திருமதி லத்திகா சரண் சேலத்தில் உதவி காவல் கண்காணிப்பாளராகவும் பணி புரிகின்றனர்.

**தமிழ்நாட்டில் பெண் காவல்படை:**

தமிழ்நாட்டில் 1973-ல் ஒரு சார்பு ஆய்வாளர், ஒரு தலைமைக் காவலர், 20 காவலர்கள் கொண்ட படை தோற்றுவிக்கப்



பட்டது. பின்பு 1976-ல் கோவை, திருச்சி, மதுரை ஆகிய மூன்று இடங்களிலும், ஒரு சார்பு ஆய்வாளர், ஒரு தலைமைக் காவலர் 12 காவலர்கள் கொண்ட பிரிவினர் அமைக்கப்பட்டனர். மேலும் சென்னை மதுரை, திருச்சி விமான நிலையத்தில் பயணிகளைச் சோதனை செய்வதற்குப் பெண் காவல் படையினர் நியமிக்கப்பட்டனர். மாநிலம் எங்கும் பெண் காவலர் திறமையாகப் பணிபுரிவதை உணர்ந்து தமிழக அரசு 1981-ல் 60 சார்பு ஆய்வாளர்கள் 60 தலைமைக் காவலர்கள், 600 காவலர்கள் கொண்ட மாபெரும் படையைத் தோற்றுவித்தது.

**பெண் காவலர்கள் பயிற்சி நிலையங்கள் :**

பெண் சார்பு ஆய்வாளர்களுக்குச் சென்னை அசோக் நகரிலுள்ள காவல் பயிற்சிக் கல்லூரியிலும் பெண் தலைமைக்காவலர்களுக்கும், காவலர்களுக்கும், காவல் பயிற்சிப் பள்ளி வேலூரிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது. சார்பு ஆய்வாளர்களுக்கு ஓராண்டுக் காலப் பயிற்சி மார்ச் 1981-ல் துவங்கி மார்ச் 1982-ல் முடியும். தற்போது தமிழ்நாட்டைச் சார்ந்த 77 சார்பு ஆய்வாளர்களும், பாண்டிச்சேரி மாநிலத்தைச் சார்ந்த ஒரு சார் ஆய்வாளரும் சென்னையில் பயிற்சி பெறுகின்றார்கள்.

**வயது, கல்வி மற்றும் தகுதிகள்**

(1) பெண்காவலர்—
18 வயது முதல் 26 வயது வரை,
படிப்பு 8-ஆம் வகுப்பு.

(2) பெண் தலைமைக் காவலர்—
18 வயது முதல் 26 வயது வரை,
படிப்பு—10-வது படிப்பு.

(3) பெண் சார்பு ஆய்வாளர்—
—21வயது முதல் 26 வயது வரை,
படிப்பு புகுமுக வகுப்பு—
பின்தங்கியவர்/தாழ்த்தப்பட்டவர்/பழங்குடியினர்.

பட்டப்படிப்பு—மற்றவர்கள்.

**பெண் சார்பு ஆய்வாளர்களுக்கு பயிற்சி**

பெண் சார்பு ஆய்வாளர்களுக்கு ஆண்களைப் போன்று பயிற்சி அளிக்கப்படுகிறது. சட்டம், குற்றம் சார்ந்த மருத்துவம், குற்றம் சார்ந்த அறிவியல், உளவியல், குற்ற இயல், அரசியல் சட்டம், பொதுமக்கள் தொடர்பு, காவல் துறை நிர்வாகம், காவல் துறைப் பணிகள், கூர்மையாகக் கவனித்தல் போன்றவை சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. இவையன்றி, காவல் நிலைய ஏடுகளைப் பராமரிப்பது, குற்றம் நடந்த இடத்தை நிழற் படம் பிடிப்பது, கைரேகை, காவல் ரேகை, தடயங்களைக், கண்டுபிடித்து காட்சிப் பொருள்களைப் பாதுகாப்பது, வான்தந்தி இயக்குதல், போன்றவற்றில் செய்முறை பயிற்சி அளிக்கப்படுகிறது. இவையன்றி, கட்டுப்பாடு அறை, குற்றவியல் ஆய்வகம், சிறுவர் இல்லம் மறுவாழ்வு இல்லம், பிச்சைக்காரர் இல்லம், சிறைச்சாலை ஆகிய இடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள். தமிழ் தட்டச்சு சொல்லித் தரப்படுகிறது. உடற் பயிற்சி, கவாத்து, துப்பாக்கி சுடுதல், கராத்தே, யோகாசனம் ஆகியவை கற்றுத் தரப்படுகின்றன மற்றும் விளையாட்டுக்கள், ஓட்டப்பந்தய நிகழ்ச்சிகள் அடிக்கடி நடத்தப்படுகின்றன.



**பெண் தலைமைக் காவலர்கள், பெண் காவலர்கள் பயிற்சி**

அனுமதிக்கப்பட்ட 60 தலைமைக் காவலர்களில் 30 பேர் நேரடியாகவும், 30 பேர் பதவி உயர்வு மூலமாகவும் நியமிக்கப்படுவர். நேரடியாக நியமிக்கப்படுபவர்களுக்கு ஒன்பது மாதப் பயிற்சி நடைபெறும். முதல் ஆறு மாதம் காவலர்கள் பயிற்சியும், கடைசி மூன்று மாதம் தலைமைக் காவலர்கள் பயிற்சியும் அளிக்கப்படும். பதவி உயர்வு பெற்ற தலைமைக் காவலர்கள் மூன்று மாதப் பயிற்சி மட்டும் பெறுவார்கள். காவல் பயிற்சிப்பள்ளி வேலூரில், தலைமைக் காவலர்களுக்கும், காவலர்களுக்கும், பயிற்சி பிப்ரவரி 1981-ல் துவங்கியது. காவலர்கள் பல்வேறு நாட்களில் சேர்ந்ததால் அவர்களின் பயிற்சி நிறைந்து அடியில் கண்டவாறு மாதப் பயிற்சிக்குப் பின் மாவட்டங்களுக்கு அனுப்பப்படுவார்கள்.

முதல் பிரிவு :
474 காவலர்கள்—
ஆகஸ்டு 17, 1981.

இரண்டாவது பிரிவு :
64 காவலர்கள்—
செப்டம்பர் 15, 1981.

மூன்றாவது பிரிவு :
90 காவலர்கள்—
அக்டோபர் 15, 1981.
60 தலைமைக் காவலர்கள்
அக்டோபர் 15-ஆம் நாள்



பயிற்சி முடிந்து செல்வார்கள்.



60 பெண் தலைமைக் காவலர்களுக்கும் 600 பெண் காவலர்களுக்கும் பயிற்சி அளிப்பதற்காக வேலூர் காவல் பயிற்சிப்பள்ளி, பெண் காவலர் பயிற்சிப் பள்ளியாக பிப்ரவரி 1981 முதல் மாற்றப்பட்டு அதன் முதல்வராகப் பெண் உயர் அதிகாரி திருமதி திலகவதி ஐ. பி. எஸ். அவர்கள் நியமிக்கப்பட்டார். பெண் காவலர்களுக்கும் ஆண் காவலர்களுக்கும், ஒரே விதமான பயிற்சி தான் அளிக்கப்படுகிறது. ஆறு மாதக் காலத்தில் இவர்களுக்குச் சட்டம், காவல் துறை நிர்வாகம்



காவலர் பணிகள், அரசியல்ச் சட்டம், பொதுமக்கள் தொடர்பு, விஞ்ஞான முறையில் குற்றங்களைக் கண்டுபிடித்தல், கூர்மையாகக் கவனித்தல், போன்றவைகள் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. இவையன்றி அடியில் கண்டவற்றில் செய்முறைப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

(1) காவல் நிலைய ஏடுகள் பராமரிப்பு,

(2) கைரேகை எடுத்தல்,

(3) குற்ற இடத்தைக் கூர்மையாக நோக்குதல்,

(4) வான் தந்தி, தொலைபேசி ஆகியவை இயக்குதல்,

பயிற்சிக்காலத்தில், காவலர்களை நகர்ப்புற, கிராமப்புறக் காவல் நிலையங்கள், கட்டுப்பாடுஅறை, நீதிமன்றம், சிறைச்சாலை, இளம் குற்றவாளிகள் இல்லம், மறுவாழ்வு இல்லம் ஆகிய இடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள். உடற் பயிற்சி, கவாத்து, துப்பாக்கி சுடுதல், சைக்கிள் ஓட்டுதல், கராத்தே, யோகாசனங்கள் ஆகியவை கற்றுத் தரப்படுகின்றன. மேலும் அவர்களை 9 இல்லங்களாகப் பிரித்து ஓட்டப் பந்தயங்களும், விளையாட்டுநிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன. இல்லங்களின் பெயர்கள் தேசியத் தலைவர்கள் தமிழ் அறிஞர்கள் பெயரால் உள்ளன. கண்ணகி, திரேசா, தமிழ் அஞர்கள் பெயரால் உள்ளன. கண்ணகி, திரேசா, இந்திரா, ஔவை, ஜான்சிராணி என்பவை சில பெயர்கள் :

**மாவட்டங்களில் செயல் முறைப் பயிற்சி**

காவல் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி முடிந்த பின்னர் எல்லாக் காவலர்களுக்கும் மாவட்டங்களில் இரண்டு மாதக்கால செயல் முறைப் பயிற்சி அளிக்கப்படும். இக்காலத்தில் காவல் நிலையம் எப்படி இயங்குகிறது, புகை வண்டி நிலையத்தில் எப்படி சேவை செய்யலாம் போன்றவை சொல்லிக் கொடுக்கப்படும்.

**பெண் காவலர்களின் பணிகள்**

பெண் காவலர்களின் வேலைகள் என்னென்ன?

காவல் நிலையத்தில் கைது செய்யப்பட்ட பெண்களைச் சோதனை செய்தலும், விசாரணை செய்தலும்.

பெண் கைதிகளைக் காவல் நிலையத்திலிருந்து நீதி மன்றங்களுக்கும், சிறைச்சாலைகளுக்கும் வழித்துணையாக அனுப்புதல்.


புகை வண்டி நிலையங்களில் தனியாக வரும் இளம் பெண்களுக்கு உதவி செய்தல்.

விமான நிலையத்தில் பெண்களைச் சோதனை செய்தல்.

விபச்சார விடுதிகளைச் சோதனை செய்தலும், இளம் பெண்களைக் காப்பாற்றுவதும்.

இளம் குற்றவாளிகளையும், குழந்தைகளை விசாரணை செய்தலும், அறிவுரை வழங்குதலும்.

பொதுக் கூட்டங்கள், ஊர்




வலங்கள் ஆகியவற்றில் பெண்களுக்குப் பாதுகாப்பு அளித்தல்.

பெண் கல்லூரிகள், பள்ளிகள் அருகில் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தல்.

**பயிற்சி பெறும் பெண் காவலர்களைப் பற்றிய விவரங்கள்**

இந்தியாவிலேயே மிக அதிகமான பெண் பிரிவினரை ஒரே சமயத்தில் பயிற்சி அளிக்கும் தனிப் பெருமையைத் தமிழ்நாடு பெற்றுள்ளது. தற்போது சென்னை காவல் பயிற்சிக் கல்லூரியில் 77 பெண் சார்பு ஆய்வாளர்களையும், வேலூர் காவலர் பயிற்சிப் பள்ளியில் 60 பெண் தலைமைக் காவலர்களையும், 628 பெண் காவலர்களையும் பயிற்சி அளிக்கிறது. இது ஒரு அகில இந்திய சாதனை. 628 பெண் காவலர்களை தேர்தெடுக்கும்போது பின் தங்கிய வகுப்பினர்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் போதுமான இடம் ஒதுக்கியது மட்டுமின்றி அவர்கள் ஏனைய பிரிவினருடன் போட்டியிட்டு தேர்ச்சி பெற்றதால் பலருக்கு வாய்ப்பு கிட்டியுள்ளது. அவர்கள் விவரம் :

*(1) பின்தங்கிய வகுப்பினர்—425, (2) தாழ்த்தப்பட்டவர் / பழங்குடியினர் 123, (3) மற்றவர்கள், 80, ஆக மொத்தம் 628.*

பெண் காவலர்களுக்குக் குறைந்தபட்ச கல்வி அறிவு எட்டாவது வகுப்பு என்றாலும், நிரம்பப் படித்தவர்கள் சேர்ந்துள்ளனர். அவர்கள் விவரம் :

*(1) 10-வது வகுப்புக்குக்கீழ்—126, (2) 10-வது வகுப்புக்கு மேல், 373, (3) பட்டப்படிப்புக்கு கீழ், 87, (5) பட்டதாரிகள்—42*

*17-8-81 அன்றுபயிற்சி முடிந்து வெளியேறும் பெண் காவலர்கள் விவரங்கள் அடியில் கொடுக்கப் பட்டுள்ளன.*

*(1) பின் தங்கிய வகுப்பினர், தாழ்த்தப்பட்டோர் விவரங்கள்:*

| | |
|---|---|
| (அ) பின்தங்கிய வகுப்பினர் | 330 |
| (ஆ) தாழ்த்தப்பட்டோர்/ பழங்குடியினர் | 118 |
| (இ) மற்றவர்கள் | 26 |

*(2) கல்வி விவரங்கள் :*

| | |
|---|---|
| (அ) 10-வது வகுப்புக்குக் கீழ் | 86 |
| (ஆ) 10-வது வகுப்புக்கு மேல் | 294 |
| (இ) பட்டப்படிப்புக்குக் கீழ் | 60 |
| (ஈ) பட்டதாரிகள் | 34 |

*(3) எந்த மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் :*

சென்னை—26, செங்கை கிழக்கு —16, செங்கை மேற்கு—20, தென்னார்க்காடு — 30, வட ஆர்க்காடு—30, சேலம்—29, தர்மபுரி—3, திருச்சி—26, புதுக் கோட்டை—6, தஞ்சை கிழக்கு —31, தஞ்சை மேற்கு—27, கோவை நகர்ப்புறம்-15, கோவை ஊரகம்—32, பெரியார்—17 நீலகிரி—17, மதுரை தெற்கு —18, மதுரை வடக்கு—15 முகவை கிழக்கு—20, முகவை மேற்கு—22, நெல்லை—52, குமரி—22.

பெண் காவலர்களாகத் தேர்ந்து எடுக்கப் பட்ட 474 பேருக்குப் பயிற்சி நிறைவு விழா 17-8-81ஆம் தேதியன்று வேலூரில் நடைபெற்றது.





இவ்விழாவிற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் வருகை தந்தார்.

பயிற்சி பெற்ற பெண் காவலர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அணிவகுப்பு மரியாதை அளித்துச் சிறப்பித்தார்கள். அதன்பின் மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்த ஜீப்பில் சென்று பயிற்சி பெற்ற பெண் காவலர்களைப் பார்வையிட்டார்.

பயிற்சிக் காலத்தில் சட்டப் பாடம், கவாத்துப் பாடம், துப்பாக்கி சுடுதல், விளையாட்டுப் பயிற்சி மற்றும் உடற்பயிற்சி ஆகியவற்றில் சிறந்தவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு தலா மூன்று பரிசுகள் வீதம் வழங்கப்பட்டன. மண்டலக் காவல்துறை அதிகாரி (பயிற்சி) அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். அதன் பிறகு மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிறப்புரையாற்றினார்கள்:

''தமிழ்க் குடிமகன் ஒவ்வொருவரும் தமிழர் பண்பாடு என்ன என்பதை இந்தியத் துணைக் கண்டத்துக்கே ஏன், உலகத்துக்கே எடுத்துக் காட்டாக இலட்சியக் குறிக்கோளுடன் விளங்கி வருகிறோம். அப்படிப்பட்டவர்கள் போலீஸ் துணை இல்லாமலே நாட்டைப் பாதுகாக்கும் தகுதி வாய்ந்தவர்கள் ஆவார்கள். ஆனால் பிரச்சனைகளைச் சிலர் உருவாக்கி நாட்டில் நடந்துவரும் நன்மைகளையும், அமைதியையும் கெடுக்க நினைக்கும்போது, அவர்களை மக்கள் கவனிக்க முடி



யாதபோது, இது போன்ற வீராங்கனைகள் மூலமாகச் சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட உருவாக்குகிறோம்.

''முன்காலத்தில் ஒரு நாட்டின் மீது வேறு ஒரு நாடு படை எடுக்கும்போது அந்த நாட்டைச் சேர்ந்தவர்களில் வீட்டிற்கு ஒருவரைப் படைவீரராக அனுப்ப வேண்டும் என்று இருந்தது. இப்போது அந்த நிலை இல்லாவிட்டாலும் நம்மைப் பாதுகாத்துக் கொள்ளத்தக்க வீரம் நமக்கு இருக்க வேண்டும்.


''பெண்காவலர் கனிவு, பரிவுடன் நடந்து கொள்ள வேண்டும் என்று இங்கு சொன்னார்கள். ஆனால், இங்கு நடந்த அணி வகுப்பைப் பார்க்கும்போது பெண்காவலர்கள் ஆண்களை விட மிக மிடுக்காக நடந்து வந்தார்கள். இப்படி நான் சொல்வது யாரையும் திருப்திப்படுத்துவதற்காக அல்ல. ஆண்கள் இதைத் தவறாகக் கருதவும் கூடாது, அந்த அளவுக்கு அணி வகுப்பு நடத்தப்பட்டது. ஆணுக்குப் பெண் அடிமை அல்ல, குறைந்தவர்களும் அல்ல, என்பதை இந்த வீராங்கனைகள் செய்து காட்டினார்கள். அவர்கள் நடந்து வந்த நடை, வேகம், இசை ஒலிக்கப்பட்டதற்கு ஏற்ப மென்மையாகவும் வேகமாகவும் இருந்தது. இதையெல்லாம் பார்க்கும்போது பெண்களைப் பற்றி இலக்கியங்களில் ஏதோதோ எழுதி வைத்தார்கள், எழுதுகிறோம் என்றே சொல்லித் தோன்றுகிறது. செயலில், வீரத்தில் யாருக்கும் பின் தங்கியவர்கள் அல்ல என்று செய்து காட்டப்பட்டது. இதை நான் யாருடைய முகஸ்துதிக்காகவோ, கைதட்டலுக்காகவோ சொல்லவில்லை.

"பெண் போலீசார் எண்ணிக்கை போதாது. இதை அதிகரிக்க வேண்டுமென்று சொன்னார்கள். இது குறித்து பரிசீலிக்கப்படும். பெண்காவலர் பயிற்சி பெற்றவர்களில் முதல் கிரேடு, இரண்டாவது கிரேடு என்று வேறுபாடு இருப்பதாகவும் பயிற்சி பெற்றவர்களுக்கும், பயிற்சி பெறுகின்றவர்களுக்கும் இதில் மனக்குறை இருப்பதாகவும் சொல்லப்பட்டது. இந்தக் கோரிக்கையைத் தமிழக அரசு ஒன்று, இரண்டு கிரேடு என்று இருப்பதை ஒரே கிரேடாகத் தகுதி கொடுக்க ஆவன செய்யப்படும் என்பதை அமைச்சரவை சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

''பயிற்சி பெற்ற பெண் போலீசார் பெண்களைப் பாதுகாக்கவும், நாட்டில் நல்ல நிலை உருவாக்கவும் நேரம் முழுவதையும் பயன்படுத்த வேண்டும். சீராக, செம்மையாக, நேர்மையாக செயல்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

''நீங்கள் பணியாற்றும்போது, தேவையான வாய்ப்பு வசதிகளை தமிழகஅரசு நிறைவேற்றித்தரும் என்றும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறோம். ஜாதி, மத வித்தியாசம் பாராமல் அவற்றை தூக்கி எறிந்து விட்டு ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற அண்ணாவின் கொள்கைபடி நீங்கள் உழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.''

மாண்புமிகு முதல்வர் அவர்களின் உரைக்குப்பின் பயிற்சிப் பெண்காவலர்களின் கராத்தே, யோகா, கரகம், உடற்பயிற்சி மற்றும் லஜீம் முதலிய கலை நிகழ்ச்சிகள் செய்து காட்டப்பட்டன.



# விந்தை மனிதர் திருக்குறள் பெ. இராமையா

வேலூர் ம. நாராயணன்



கம்பனும், காளமேகமும், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையும் நாள் ஒன்றுக்கு இருநூறு, முந்நூறு பாடல்களைப் பாடியதாக வரலாறு சொல்கின்றது. ஆனால், நம்மில் பெரும்பாலோர் அஃது எவ்வாறு இயலுமென்று ஐயுறுகின்றனர். நம் வாழ் நாளிலேயே, நம் கண்ணெதிரிலேயே இப்பொழுது ஒரு பெரும் புலவர் நாள் ஒன்றுக்கு இருநூற்றைம்பது தீந்தமிழ்ப்பாக்களை - அதுவும் புலவர்களுக்கே புலியாகிய வெண்பாக்களை விரைந்து பாடும் ஆற்றலைப் பெற்றிருக்கின்றார்.

தமது முப்பதாம் வயதுவரை ஒரு மண்டிக்கடையில் எளிய கணக்கராகப் பணியாற்றிய இவர், தம் தலையில் ஏற்பட்ட நரம்புக் கோளாற்றினால் பெரிதும் பாதிக்கப்பட்டு 'பார்வை' யினை முழுதுமாக இழந்துவிட்டார். எனினும் மனந்தளராது திருக்குறள், சிலம்பு, நன்னூல், கம்ப இராமாயணம், பாரதியார், பாரதிதாசன் பாடல்கள் இவற்றைத் தம் மனைவியும், மகளும் படிக்கப் பக்கமிருந்து கேட்டு நெஞ்சத்தில் பதிய வைத்துக் கொண்டார். இன்றைக்குத் திருக்குறளில் யார் எந்தக் கோணத்தில் வினாக்களை எழுப்பினாலும் அந்த வினாவிற்குரிய குறள் எண், அதிகாரம், சீர்கள், கருத்து, உவமை, அணிநலன் இவற்றையும், குறட்பாக்களையும் தலைகீழாகவும் சொல்லுகின்றனர்.

இதுமட்டுமா? பழங்காலத் தசாவதானக் கலையை நசித்துவிடாமல் காப்பாற்றிப் போற்றித் தமிழ்நாடெங்கணும் அனைவரும் வியக்கும் வண்ணம் நிகழ்த்தி வருகின்றார். தற்போது அறுபது வயதைக் கடந்து வாழ்ந்து கொண்டிருக்கின்ற ''திருக்குறள் பதின்கவனகர், கோவில்பட்டி பெ. இராமையா'' அவர்கள் அனைவரும் வியந்து பாராட்டும் விந்தை மனிதர் ஆவார்!

திரு பெ. இராமையா அவர்கள் அண்மையில் (5.4.81) வேலூர்க்கு வந்து தன்னுடைய தசாவதான நிகழ்ச்சியை நிகழ்த்தினார். நிகழ்ச்சியின் இடையில், ஒரு அன்பர் எழுந்து, ''ஐயா, 'வேலூர்' என்று தொடங்கி 'பாலாறு' என்று முடியவேண்டும் இடையில் 'பெரியார்' என்று ஒரு சொல்லும் வருமாறு ஒருவெண்பாப் பாடுங்கள்'' என்று வேண்டினார். உடனே, ஐயா அவர்கள் ''ஏன்? இந்த வெண்பாவில் 'பெரியார்' வரவேண்டும்?'' எனக் கேட்க, அந்த அன்பர், ஆம். தந்தை பெரியார் மறைந்த மண் வேலூர்தான்! எனவே, அச்சொல் வந்தால் பொருத்தமாக இருக்கும், என்றார். ''ஓகோ...! அப்படியா! சரி, எழுதிக் கொள்ளுங்கள்!'' என்று சொல்லியவாறே, பின்வரும் இந்த வெண்பாவினை விரைந்து பாடினார் அந்த கண்ணில்லாக் கவிஞர்.

''வேலூர் பெரும்பேறு பெற்றதே; மெய்மைசேர்
ஞாலம் புகழ்பெரியார் நம் தந்தை-காலம்
நிறைவெய்தி யேமறைந்தார் என்றசெய்தி நெஞ்சில்
உறைய வறண்டதுபா லாறு.''

இந்தப் பாடலின் சொற்சுவை பொருட்சுவை, அணிநலனில் மயங்கிய பார்வையாளர்கள், பலத்த கையொலி எழுப்பி, தங்களது மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

அப்பொழுதுதான், ஐயா அவர்கள் மிகவும் அடக்கத்துடன் கூறினார்: ''இதுபோன்று நாள் ஒன்றுக்கு இருநூற்றைம்பது வெண்பாக்களை என்னால் பாட இயலும்!'' என்று.

கண் பார்வையற்ற நிலையிலும், தமிழ்கூறும் நல்லுலகிற்கே பெருமை தேடித் தந்து கொண்டிருக்கிற திருக்குறள் பெ. இராமையா அவர்களின் தமிழ்த் தொண்டு வாழ்க! சிறக்க என உடல் ஊனமுற்றோர் நல ஆண்டாகிய இவ்வாண்டிலே வாழ்த்திப் போற்றி அப்பெரியாருக்கு அனைத்து உதவிகளையும் செய்திட வேண்டும் என வேண்டிக் கொள்ளுதல் சாலப் பொருத்தமுடைய ஒன்றல்லவா?

பல இன்னல்களையும் இடர்ப்பாடுகளையும் கடந்து ••••

# ஒரு லட்சத்திலிருந்து ஒரு கோடியை எட்டினோம்

## தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் சிறப்பான வளர்ச்சி




எங்களுக்கு விளம்பரங்களில் நம்பிக்கையில்லை. சாதனைகளே முக்கியம். நாங்கள் விளம்பரம் செய்தால் அதற்கு ஒரு காரண மிருக்கும். ஆரம்பத்தில் ஆண்டு விற்பனை 1.5 லட்சமே ஆயினும் அதுவே ஒரு சாதனையாக விளங்கிற்று. மூன்று ஆண்டு களுக்குப் பின் திரும்பிப் பார்த் தால் தமிழ்நாடு கனிம நிறுவனம் இந்த இடைக் காலத்தில் செய்த பணியின் சிறப்பு அந்த 1.5 லட்ச அளவை ஒரு புள்ளியோ என எண்ண வைத்து ஒரு கோடி யையும் தாண்டி நிற்கின்றது.

1978 ஏப்ரலில் தமிழ்நாடு கனிம நிறுவனம் (TAMIN) நிறுவப் பட்டது. இது ஒரு தமிழக அரசு நிறுவனம். இதன் அடிப் படைக் குறிக்கோள் சில முக்கிய தாதுப் பொருள்களை குறிப்பாக வெளிநாட்டு ஏற்று மதிக்கு உரியனவைகளை வணிக ரீதியில் கையாண்டு பயன் ஈட்டுவதாகும். தமிழ்நாடு கனிம நிறுவனம் தாதுப் பொருள்களைப் பேணிப் பாதுகாப்பதற்கும் அவற் றைச் சரிவர பயன்படுத்து வதற்கும் உரிய கோட்பாடுகளை முறையோடு கடைப் பிடித்து, மாநிலத்தின் தாதுப் பொருள் வளத்தை சரிவரப் பயன்படுத்தி நாட்டில் பெருகிக் கிடக்கும் வேலையில்லாத் திண்டாட்டத் தைக் குறைக்க இந்தத் துறை யின் மூலம் பல தொழிலாளி களுக்கு வேலை கொடுத்து உதவும் பணியிலும் ஈடுபடு கிறது.

ஏற்றுமதி வர்த்தகத்திலும் — குறிப்பாகக் கறுப்பு, மற்றும் சாம்பல் நிற கரும்பாறைக் கற்கள் ஏற்றுமதியில் தமிழ்நாடு கனிம நிறுவனம் திறம்பட செயல் பட்டுள்ளது. இந்தத் துறையில் செயல்படும் மற்ற தொழிலியல் நிறுவனங்களுக்கும், தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்குவதில் தமிழ்நாடு கனிம நிறுவனம் சிறந்து விளங்குகிறது.

TAMIN

**தமிழ்நாடு கனிம நிறுவனம்**
(ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)
9, அபிபுல்லா அவென்யு, ஆண்டர்சன் சாலை,
சென்னை–600 006 தொலைபேசி: 85338

ARIES-TAMIN-583-TAM

Tamin

# தன்னிறைவுத் திட்டத்தின் தலையாய பணிகள்

## வடஆர்க்காடு மாவட்டம்

மாண்புமிகு தமிழகமுதல்வர் அவர்கள் ''நான் சென்ற இடங்களில் எல்லாம் மக்கள் மாட மாளிகைகள் கேட்கவில்லை குடிக்க தண்ணீர்-நல்ல குடிநீர் மட்டுமே கேட்கிறார்கள். மக்களுக்கு நல்ல குடிநீர் வழங்குவதே இவ்வரசின் முதல் குறிக்கோள்' என்று தமது சொற்பொழிவொன்றில் குறிப்பிட்டார்கள். பாமர மக்களின் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்ற மாண்புமிகு முதல்வரின் நல்லெண்ணத்தால் உந்தப்பட்டு உருவாக்கப்பட்ட திட்டமே ''தன்னிறைவுத் திட்டமாகும். குடிநீர் வழங்கும் திட்டத்தைத் தலையாய திட்டமாகக் கொண்டு பிற திட்டங்களான இணைப்புச் சாலைகள், அரிசனக் குடியிருப்புக்களுக்கு மயானப் பாதை வசதி, பள்ளிக் கட்டிடம், தாய் சேய் நல விடுதிகள், ஊரக மருந்தகங்கள், சிறு பாலங்கள் கட்டுதல், பாசன மேம்பாட்டுச் சிறுதிட்டங்கள் ஆகியவற்றைத் தன்னகத்தே கொண்டதே தன்னிறைவுத் திட்டமாகும். மக்களுக்கு அனைத்து அடிப்படை வசதிகளையும் அளித்து கிராமங்களை தன்னிறைவுமையங்களாகமாற்றி கிராம வாழ் மக்களின் வாழ்வில் ஓர் புத்தொளியை உருவாக்குவதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். தமிழகத்தில் 376 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. இத்திட்டத்தினை ஒட்டுமொத்தமாக ஒரே தருணத்தில் நிறைவேற்றி முடிக்க காலம், பணம், பொருள் ஆகியவை மிக அதிகமாகத் தேவைப்படுவதால் படிப்படியாக, இத்திட்டத்தை நிறைவேற்றி முடிக்க வேண்டுமென தமிழக அரசு முடிவெடுத்தது.

முதற்கட்டமாக தமிழகத்தில் 69 ஊராட்சி ஒன்றியங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவைகளில் ''தன்னிறைவு''த் திட்டப் பணிகள் 1980-81 ஆண்டில் நிறைவேற்றப்பட்டுள்ளது. வட ஆர்க்காடு மாவட்டத்தில் முதல் கட்டமாக 5 ஊராட்சி ஒன்றியங்கள் ''தன்னிறைவு''த் திட்டம் செயலாக்கப்படும் ஒன்றியங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. அவையாவன: திருவண்ணாமலை, கீழ்பெண்ணாத்தூர், துரிஞ்சாபுரம், போளூர், கலசபாக்கம் ஆகிய ஒன்றியங்களாகும்.

### குடிநீர் வழங்குதல்:

தன்னிறைவுத் திட்டத்தின் தலையாய திட்டம் குடிநீர் வழங்குதலாகும். இத்திட்டம் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. வடார்க்காடு மாவட்டத்தில் 122 கிராமக் குடியிருப்புகளுக்கு, கடந்த 1980-81 ஆண்டில் இத்திட்டத்தின் மூலம் குடிதண்ணீர் வசதி செய்யப்பட்டுள்ளது. கலசபாக்கம் ஒன்றியத்தில் 30 குடியிருப்புகளுக்கும் போளூர் ஒன்றியத்தில் 15 குடியிருப்புகளுக்கும் கீழ்பெண்ணாத்தூர் ஒன்றியத்தில் 36 குடியிருப்புகளுக்கும் துரிஞ்சாபுரம் ஒன்றியத்தில் 6 குடியிருப்புகளுக்கும் திருவண்ணாமலை ஒன்றியத்தில் 35 குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**ஆர். நடேசன்,**
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
வடஆர்க்காடு மாவட்டம்

### இணைப்புச் சாலைகள்:

தமிழக கிராமங்களில் சில ஒன்றுக்கொன்று எவ்வித தொடர்பும் இல்லாமல் சிதறிக்கிடக்கின்றன. இதனால் அந்த கிராமங்கள் தனித்து விடப்படும் நிலை உருவாகின்றது. கிராமங்கள் தமக்குரிய வளர்ச்சியை பெறுவதற்கும் இடர்ப்பாடாக உள்ளது. இந்த நிலையை அகற்றும் வகையில் தன்னிறைவுத் திட்டக்தில் இணைப்புச்சாலைகளுக்கும் சிறப்பிடம் அளிக்கப்பட்டுள்ளது. வடார்க்காடு மாவட்டத்தில் 1980-81ம் ஆண்டு தன்னிறைவுத் திட்டம் செயல்பட்ட ஐந்து ஊராட்சி ஒன்றியங்களில் 277 இணைப்புச் சாலைகளும் 30 ஒன்றியச் சாலைகளும் போடப்பட்டுள்ளது. இதனால் கிராமங்கள் நகரங்களுடன் இணைந்து வளர்ச்சி பெறும் என்பதில் ஐயமில்லை.





### மயானச் சாலைகள்:

ஆதிதிராவிட மக்கள் இறந்தவர் உடலை எடுத்துச் செல்லும் வழிகள் பெரும்பாலும் குறுகியே கிடக்கின்றன. சில கிராமங்களில் இப்பாதை வயல் நடுவே செல்லும் வரப்பாகவே உள்ளது. சில இடங்களில் முட்புதர்கள் மண்டிக் கிடக்கின்றன. இதனால் ஏற்படும் இடர்ப்பாடுகளை உணர்ந்த தமிழக அரசு ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு மயானச்சாலைகளை அமைக்க உறுதி பூண்டு தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் செயலாற்றிவருகின்றது வடார்க்காடு மாவட்டத்தில் 1980-81 ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட்ட 5 ஊராட்சி ஒன்றியங்களில் 118 ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு மயானச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது.

### கல்வி:

கல்விக் கண் திறக்கும் பணியில் உள்ள பள்ளிகளுக்கு கூடுதல் மற்றும் புதிய பள்ளிக்கட்டிடங்கள் கட்ட இத்திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. வடார்க்காடு மாவட்டத்தில் 1980-81ல் எடுத்துக்கொள்ளப்பட்ட ஐந்து ',தன்னிறைவுத் திட்ட" ஊராட்சி ஒன்றியங்களில் 63 பள்ளிக்கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

### பாசன வசதிகள்:

சிறுகுளங்கள், சிறு ஏரிகள், சிறுகால்வாய்கள் விவசாயத்திற்கு நீர்வழங்கும் தகுதி இருந்தும் முறையாக நன்கு பராமரிக்கப்படாததால் அவற்றின் உண்மைப் பலன்கள் கிட்டவில்லை. இவைகளை மேம்படுத்தும் வகையில் வேளாண்மை செழித்தோங்கும் என்பதில் ஐயமில்லை. வடார்க்காடு மாவட்டத்தில் 1980-81 ஆண்டில் தன்னிறைவுத் திட்ட ஊராட்சி ஒன்றியங்களில் 107 சிறுபாசன மேம்பாட்டுத் திட்டப் பணிகள் 13 வரத்துக்கால்வாய் தூர் எடுத்தல் பணி, 201 சிறு பாலங்கள் அமைத்தல் முதலியன முடிக்கப்பட்டுள்ளது. தாய் சேய் நல விடுதிகள் கட்டுதலும் ஊரக மருந்தகங்கள் ஏற்படுத்துதலும் இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாகும். வடார்க்காடு மாவட்டத்தில் 1980-81ம் ஆண்டில் தன்னிறைவுத் திட்ட ஊராட்சி ஒன்றியங்களில் கிராம மருத்துவமனைகள் மகப்பேறு குழந்தைகள் நலநிலையம் குழந்தைகள் காப்பகம் ஒன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

### ஊராட்சி சமுதாய நிலையங்கள்:


ஊராட்சி சமுதாய நிலையங்கள் கட்டுவதற்கும் இத்திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. 1980-81ம்ஆண்டில் வடார்க்காடு மாவட்டத்தில் தன்னிறைது திட்ட ஊராட்சி ஒன்றியங்களில் எட்டு ஊராட்சி சமுதாய நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

### சுகாதார வசதிகள்:

சுத்தம் சுற்றுப்புறத் தூய்மையால் அமையும். சுற்றுப்புறத் தூய்மை பாதுகாக்கப்படுமேயானால் தொற்றுநோய்கள் வரா வண்ணம் தடுக்க இயலும், கிராமங்களில் பெண்களுக்கான கழிப்பிடங்கள் கட்டித்தர இத்திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. 1980-81ஆம் ஆண்டில் வடார்க்காடு மாவட்டத்தில் தன்னிறைவு திட்டம் ஊராட்சி ஒன்றியங்களில் பெண்கள் கழிப்பிடங்கள் பத்து கட்டி முடிக்கப்பட்டு உள்ளது.

தன்னிறைவுத் திட்டத்தின் இரண்டாவது கட்டமாக 120 ஊராட்சி ஒன்றியங்கள் நடப்பு நிதியாண்டில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. வடார்க்காடு மாவட்டத்தில் இவ்விரண்டாவது கட்டமாக பதினைந்து ஊராட்சி ஒன்றியங்கள் தன்னிறைவு திட்டம் செயல்படுத்துப்படும் ஊராட்சி ஒன்றியங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அவையாவன. அரக்கோணம், சோளிங்கர், அணைக்கட்டு, திமிரி, நாட்றாம்பள்ளி, கே.வி.குப்பம், குடியாத்தம், பேரணாம்பட்டு, ஆலங்காயம், கந்திலி, மேற்கு ஆரணி, அனக்காவூர், வந்தவாசி, தெள்ளார், புதுப்பாளையம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களாகும். இரண்டாவது கட்ட சிறப்புத்திட்டத்திற்காகவடஆர்க்காடுமாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 644.77 இலட்சங்களாகும். பள்ளிக்கூடங்கள் கட்டுவதற்கு தனியாக 55 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. எடுக்கப்பட்டு உள்ள வேலைகளின் எண்ணிக்கை 2117 ஆகும். ஆக தமிழ்நாடு அரசு வடஆர்க்காடு மாவட்டத்திற்குத் தன்னிறைவு திட்டத்திற்காக இதுவரை ரூ 7 கோடி ஒதுக்கியுள்ளது. தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் அனைத்து ஒன்றியங்களுக்கும் வசதிகள் கிடைக்கும். இத்திட்டம் நிறைவேற்றி முடிக்கப்பட்டவுடன், அனைத்து கிராமங்களும் முழு வளர்ச்சி பெற்று, தன்னிறைவு பெறும் என்பதில் ஐயமில்லை.

# நாட்டுக்குத் தேவை தொழில் வளர்ச்சி! தொழில் வளர்ச்சிக்குத் தேவை டான்சி



தொழில் துறைக்கும்
வீட்டு உபயோகத்திற்கும்
ஏற்ற பல்வேறு
சாதனங்களைத் தயாரிக்கும்
55 தொழிற்கூடங்கள்.
ஆண்டு ஒன்றுக்கு
ரூ. 23 கோடி மதிப்பு உற்பத்தி-
6000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு.

டான்சியின் தயாரிப்புகளில் சில:

- இரும்பு கட்டுமானங்கள்
- நுண்ணலைக் கோபுரங்கள் மற்றும் மின்கடத்திக் கோபுரங்கள்
- இரும்பு மற்றும் மரத்தாலான நாற்காலிகள் முதலியன
- கொல்லுலை உறுப்புகள்
- இயந்திரக் கருவிகள்
- தோல் மற்றும் தோலினாலான பொருட்கள்
- விவசாயக்கருவிகள்
- வார்ப்பட இரும்புக் குழாய்கள்
- எனாமல் பூசிய செப்புக்கம்பிகள்
- பிரெஞ்சி பாலிஷ், காஸ்கட் ஷெல்லாக் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்.

**டான்சி**

**தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்**

(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)

1, ஒயிட்ஸ் சாலை, சென்னை 600 014

தொலைபேசி: 82161

தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI

DIPR




ஊனமுற்றோர் உலக ஆண்டில்

# சில தமிழ்ச் சிந்தனைகள்


பேராசிரியர் டாக்டர் ந. சஞ்சீவி


உறுப்புக் குறை சிறப்புக்குறை அன்று. உண்மையைச் சொன்னால் பார்வையுடையோர் பார்வை இருப்பதால் பண்ணும் பாவங்கள் பல. என்னைக் கூட விழி வேண்டுமா, விளக்கம் வேண்டுமா என்று கேட்டால் விளக்கமே என்பேன்! மேலும் சொன்னால் - மேன்மையைச் சொன்னால் உடலின்ப ஐம்புலன்களில் செயற்பாட்டை அவித்து - உள்ளத்தின் வாயிலாகவே ஐம்புலச் செயற்பாட்டையும் அமைத்தலே உயர்வு. அதனாலேயே ஞானக் கண், அகக்கண் அல்லது அகச் செவி பற்றி மெய்யறிவுடன் பேசுவர். கண் பெற்றவரும் கடைசியில் கண்மூடி மௌனியாகித் தானே கடவுளைக் காண்கின்றனர் அமரகவி பாரதியாரும் தமது அருமையான கோவிந்தன் பாட்டில் பின்வருமாறு அருளொடு பாடுகிறார்.

*என் கண்ணை மறந்துனிரு*
*கண்களையே*
*என்னகத்தில் இசைத்துக்*
*கொண்டு*
*நின் கண்ணாற் புவியெல்லாம்*
*நீயெனவே*
*நான்கண்டு நிறைவு கொண்டு*
*வன்கண்மை மறதியுடன்*
*சோம்பர்முதற்*
*பாவமெலாம் மடித்துநெஞ்சிற்*
*புன்கண்போய் வாழ்ந்திடவே*
*கோவிந்தா*
*எனக்கமுதம் புகட்டு வாயே!*

கண் என்ற சொல்லே கள் என்பதிலிருந்தே பிறந்திருக்கக் கூடும். ள்-ண் பரிமாற்றம் தமிழில் இயற்கை (எடுத்துக்காட்டு: ஆள்-ஆண்; பெள்-பெண் எள் நெய் - எண்ணெய்). காணும் பொருள்களைக் கவர்ந்து கள்ளி-களவு செய்து மூளையில் பதிய வைப்பதாலேயே - கள்ளுதல் செய்தலாலே கள், கண் ஆயிற்று எனலாம். அறிவைத் திருடுவதாலேயே கள்ளுக்கும் அப்பெயர் எனலாம். எனவே, திருடும் ஊனக் கண்ணிலும் திருடாமல் தெருளும் ஞானக்கண்ணே நம்தேவை. மேலும், சில பல வகைகளில் ஊனக்கண்கள் இல்லாமல் இருப்பதே உயர்ந்த கண்கள் உண்டாவதற்கும் உதவியாகும்! போலும் இக்கருத்திற்கு அற்புத அன்னை டாக்டர் ஹெலன் கெல்லரின் (1880-1968)

I thank God for my handicaps for through them I have found myself, my work and my God.

*என்னும் அமுத மொழிகள் அரண் புரியும்.*

அமெரிக்க ஹெல்லன் கெல்லரும் அவருக்கு முன்பே பிரஞ்சு நாட்டு பிரேல் (1809-1852) அவர்களும் பார்வையற்றோர் கல்விக்குப் புரிந்துள்ள பணிகள் நெஞ்சை நெகிழ்விப்பன. தங்களை உயர்த்தும் முயற்சியின் தங்களைப் போன்றோரை எல்லாம் உயர்த்திய அப்பெருமக்கட்கட்கு மனித குலம் என்றென்றும் கடமைப்பட்டுள்ளது. அதிலும் சிறப்பாகப் பார்வையற்றோர்க்கு ஏற்ற எழுத்து முறையைக் கண்டு ஒழுங்கு செய்த பிரேல் அவர்கட்கு உலகம் பெரிதும் கடமைப் பட்டுள்ளது.

நம் காலத்து ஹெல்லன் கெல்லரையும், பிரேலையும் நன்றியுடன் நினைக்கும் நேரத்தில், உலகம் புகழும் மகாகவிகளாகிய ஹோமரையும், மில்டனையும் (1608 - 1674) வியப்புடன் நினைக்க வேண்டியுள்ளது. உலகப் புகழ்பெற்ற இராமாயணம், மகாபாரதம் போன்ற மகா காவியங்களைக் கிரேக்க மொழியில் சற்றொப்ப மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னே படைத்தவர் ஹோமர். அவர் பார்வையற்றவர் என்பதே நெடுங்காலமாகப் பலர் கருத்து. அவர் வாழ்க்கையைப் பற்றி உறுதியாக நாம் ஏதும் சொல்ல முடியாதெனினும் ஆங்கில மகா கவியாகிய மில்டனைப் பற்றிப் புள்ளி விவரங்களுடன் புகலலாம். ஆனால் அவர் வாழ்க்கையை-நாற்பத்து நாலாம் அகவையில் (வயதில்) அவர் தன் கண்களை - அதுவும் நாட்டுப்பணியில்-இங்கிலாந்தைக் குடியரசாக்கும் முயற்சியில்-ஓயாமல் படித்தும் எழுதியதாலேயே தனது இருவிழிப் பார்வையையும் இழந்ததை நினைத்தாலே நெஞ்சம் நெகிழ்கிறது. ஆனால் அவருடைய விடாமுயற்சி பார்வை இழந்த நிலையிலும் பொது வாழ்வில் ஈடுபடச் செய்தது. சிறைக் கொடுமைகளை அனுபவிக்கச் செய்தது. ஆயினும் அவர் தமது பார்வையை இழந்தபின் -பதினைந்தாண்டுகட்கு அப்புறம் 'சுவர்க்க இழப்பு' (Paradise lost) என்ற பெருங்காப்பியத்தை எழுதியுள்ளார். தம் இறுதி ஏழாண்டுகளில் அவர் எழுதிய புகழ் பெற்ற இலக்கியங்களுள் ஒன்று 'சுவர்க்கமீட்சி' (Paradise regained).

இவ்வாறு, மேல்நாட்டு மேதைகள் பார்வையற்ற நிலையிலும் பார்வை படைத்தோரெல்லாம் எழுத்தெழுத்தாய்ப் பார்த்துப் படிக்கப் பாரகாவியங்களைப்

படைத்துத் தந்துள்ளமையை நினைக்கும்போது இன்பத் தமிழ் இலக்கியத்திற்கும் இவ்வாறுபணி புரிந்தோர் இல்லையா என்ற எண்ணம் எழுதல் இயற்கை. நம் எண்ணத்தில் மண் விழுந்து விடாமல் காப்பாற்றுகின்றார்கள் இரட்டையரும் அந்தக் கவியும். இவர்களைப் பற்றிக் கலைக் களஞ்சியம் இரத்தினச் சுருக்கமாகத் தரும் குறிப்புகள் முறையே வருமாறு:

**இரட்டையர்**

சோழநாட்டில் ஆடுதுறைக்கு அருகில் இலந்துறை என்ற இடத்தில் தோன்றினர். இவர்கள் இளஞ்சூரியர், முதுசூரியர் என்ற பெயர்களால் வழங்கப்பட்டனர் என்றும், ஒருவர் குருடராகவும், மற்றொருவர் முடவராகவும் இருந்தவர் என்றும், உறவு முறையில் அத்தை மகனாகவும் அம்மான் மகனாகவும் அமைந்தனர் என்றும் அறிகிறோம். இவர்களுக்குள் ஏற்பட்டிருந்த ஒற்றுமை உணர்ச்சியாலும், அங்கக் குறையினராய் ஒருவர் உறவின்றி ஒருவர் வாழ முடியாத நிலையாலும் நெருங்கிய உறவினாலும் உள்ளத்தாலும் அறிவியல் திறனாலும் ஒன்றி இருந்தாலும் இவர்கட்கு 'இரட்டையர்' என்ற பெயர் வழங்கி வருகிறது. குருடர் தோளில் முடவர் அமர்ந்து வழிகாட்ட, தமிழ்நாட்டின் பல பகுதிகளைக் காலால் கடந்த இவர்களின் சிறப்பு அளவிடற்பாலதன்று. இவர்கள் பல அற்புதங்களை நிகழ்த்தியுள்ளனர் என்பதைக் கேள்வி வழியாகவும், சில பாக்கள் வழியாகவும் அறிகிறோம். இவர்கள் சங்ககாலப் புலவர்களைப் போல் தம்மை மதியாத செல்வர்களைச் சீறிச் சினந்து வெறுத்தனர். நல்ல பண்புடைய உயர்ந்தோரை ஏத்திப் போற்றினர். இவர்கள் சொற்சுவை, பொருட்சுவை, நகைச்சுவை, எள்ளற்சுவை அமையப் பாட வல்லவர்கள் என்பதை இவர்கள் பாக்கள்காட்டுகின்றன.

இப்புலவர் திலகங்கள் பதினைந்தாம் நூற்றாண்டின் இடைப் பகுதியைச் சேர்ந்தவர்கள். சிலர் பதினான்காம் நூற்றாண்டென்பர்.

இரட்டையர்கள் கலம்பகம் பாடுவதில் மிகச் சிறந்தவர்கள். 'கண்பாவு கலம்பகத்திற்கு இரட்டையர்கள்' என்ற வரி இதற்குச் சான்று பகர்கின்றது. இவர்கள் பாடிய நூல்கள் திருவாமுத்தூர்க் கலம்பகம், தில்லைக் கலம்பகம், ஏகாம்பர நாதருலா முதலியன. இவர் காலத்தைச் சேர்ந்த அரசர்கள் சோழ நாட்டையாண்ட ஏகாம்பரச் சம்புவன், திருமுனை பாடி நாட்டையாண்ட வரபதி ஆட்கொண்டான்முதலியோர்.

**அந்தகக்கவி வீரராகவ முதலியார்**

இவர் பிறவியிலேயே குருடர் காஞ்சிக்கருகிலுள்ள பூதூரிலே.. தோன்றிய வடுகநாதர் என்பவரின் மகனாவர்; காஞ்சியிலே கலை பயின்றவர். இவருக்கு யாழ்ப் பயிற்சியும் உண்டு போலும். இவர் நினைவாற்றல் மிக்கவர் என்பதைக் 'கவிவீர ராகவன் கச்சியிலே தன்நெஞ்சம் ஏனெடனக் கற்றான் ஒரு முத்தமிழையுமே' எனப் பரராச சிங்கன் என்னும் அரசன் புகழ்வதால் அறியலாம். இவர் சிறந்த கவிஞர். இவர் செய்யுட்கள் சொற்சுவையும் பொருட்சுவையும் உடையவை.

இவர் சோழநாடு சுற்றிய பின்னர் ஈழநாட்டிற்குச் சென்றார். அப்போது அங்கே பரராச சிங்கன் அரசாண்டு வந்தான். அவன் இவர் குலமையைப் பாராட்டி யானையும் வளநாடும் பொன்னும் அளித்தான்.

இவர் பாடிய நூல்கள். திருவாரூர் உலா. சேயூர் முருகன் பிள்ளைத் தமிழ், திருக்கழுக்குன்றப் புராணம், சேயூர்க் கலம்பகம், சந்திரவாணன் கோவை, கயத்தாற்றரசன் உலா. இவர் மற்றும் சீட்டுக் கவிகளும் பலருக்கு விடுத்துள்ளார்; பல தனிப் பாடல்களும் பாடியுள்ளார். இவர் காலம் பதினாறாம் நூற்றாண்டென்பர்.

இவரியற்றிய நூல்களில் திருவாரூர் உலா நிறைந்த பொருளும் இனிமையும் உடையது. சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ் சொற்சுவை மிகுந்தது.

மில்டனுக்கு நிகராக அவர் காலத்துக்கு முன்பே ஒருவராக இல்லை-இரட்டையராக வாழ்ந்த -இருவர் பற்றியும் (இரட்டையராய் இருந்து இவர் படைத்த இலக்கியங்கட்கு உலக இலக்கியத்தில் ஒப்புக் காண்பதரிது) அந்தககவி வீரராகவர் பற்றியும் நினைக்கும்போதுஅவர்கட்கு





முன்னோடிகளாகத் தொகை நூற்காலத்திலேயே உறுப்புச் குறை உடையோராய் வாழ்ந்த உயர்தமிழ் புலவர்களும் உண்டு என்பது சங்க நூல் கற்றார்க்கு நினைவுக்கு வரும். அவர்கள் பெயரும் அவர்கள் படைப்புகளும் வருமாறு:

1. உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்-புறம். 13, 127, 128, 129, 130, 131, 132, 133, 134, 135, 241, 374, 375,13.

2. ஐயூர் முடவனார் அகம்-216.
குறுந். 123, 206, 322
நற். 206, 334
புறம். 51, 228, 314, 399-10

3. முடங்கிக் கிடந்த நெடுஞ்சேரலாதன் அகம் 30

4. முடத்தாமக் கண்ணியார் பொருநராற்றுப்படை.

5. முடத்திருமாறன் நற்றிணை 105,228.

மேற்கண்ட புள்ளி விவரங்களால் குறைந்தது ஐந்துபேர் சங்கச் சான்றோர்கள் உடற்குறையாளராய் இருந்தனர் என்பதும், அவருள் இருவர் அரசர் என்பதும், அவருள் ஒருவர் சேரன் மற்றவர் பாண்டியன் என்பதும் விளங்கும். மேலும் அரசர் சேர அரசன் செயல்பாடற்ற நிலையில் இருந்தபோதும் அகப்பாடல் ஒன்றை ஆக்கியுள்ளான் என்னும் வியத்தகு செய்தியும் கிடைக்கிறது. இன்னும் எண்ணிப்பார்த்தால் ஐவருள் ஒருவர் 'மூத்தோர் படியருள் பத்துப்பாட்டுள் தலையாய தமிழ்ப்பெரு வேந்தன் கரிகால் பெருவளத்தானைப் பாடிய ஒருவர் என்பதும், அவர் பெண்பாற் புலவர் என்பதும் பலர் கருத்து என்பதும் நினைவுக்கு வருகிறது. அத்துடன் பத்துப்பாட்டுள் மட்டுமே பாடிய முடத்தாமக் கண்ணியார் போலவே புறநானூற்றில் மட்டுமே பாடியவர் உறையூர்ஏணிச்சேரி முடமோசியார் என்பதும், அகநானூற்றில் மட்டுமே பாடியவர் முடங்கிக் கிடந்த நெடுஞ்சேரலாதன் என்பதும், நற்றிணையில் மட்டுமே பாடியவர் முடத்திருமாறன் என்பதும் எண்ணத்தக்கது. மேலும் இந்த ஐவருள் பத்துப்பாட்டுள் ஒரே ஒரே பாட்டைப் பாடியவர் முத்தாமக் கண்ணியார் என்பதும, அகநானூற்றில் ஒரே பாடலைப் பாடியவர் முடங்கிக் கிடந்த நெடுஞ்சேரலாதன் என்பதும். நற்றிணையில் இரண்டு பாடல்களைப் பாடியவர் முடத்திருமாறன் என்பதும், எட்டுத்தொகையுள் நான்கு நூல்களில் பாடியவர் ஐயூர் முடவனார் என்பதும், அவர் பாடல்களில் அகப்பொருளில் ஆறும் புறப்பொருளில் நாலும் உள்ளன என்பதும் புறநானூறு ஒன்றில் மட்டுமே பதின்மூன்று பாடல்கள் பாடியவர் உறையூர் ஏணிச்சேரி முமோசியார் என்பதும் கருதத்தக்கன.

வேறொரு வகையில் விளம்பினால், உடற்குறை உடையவர்களாய்க் கருதத்தகும் சங்கப் புலவர் ஐவருள் நால்வர் எட்டுத்தொகை நூல்களுடன் 26 பாடல்களைப் பாடியுள்ளனர்



இவற்றுள் புறம் 13+4=17 அகம் 1+1=2 குறுந்தொகை 3 நற்றிணை 2+2=4 (புறப்பொருள் 17; அகப்பொருள் 9) அகத்தினும் புறமே சற்றொப்ப இருமடங்கு. இது சங்க இலக்கியத்தில் 3-4 நிலை பெற்றுள்ள அகப்பாடல்களின் எண்ணிக்கை -எண்ணப் போக்குக்கு எதிரானது என்பதும் ஆழ்ந்து எண்ணத்தக்கது.

மாநிலத் தலைமைக் கணக்காயர் 1, தமிழ்நாடு அவர்கள், அரசு ஊழியர்களின் பொது வருங்கால வைப்பு நிதி (ஜி. பி. எப்.) சம்பந்தமாக, கீழ்கண்ட பிரிவுத் தலைப்புகள் கொண்ட 1980-81ஆம் ஆண்டுக்கான கணக்கு அறிக்கைகளை (அக்கவுண்ட் சிலிப்) அனுப்பத் தொடங்கியுள்ளார்.

" G.A., POL., JUDL., C.T., REGN., MISC., S & P., L.R., JAILS., EDN., VETY., IND., ELE., SCI., CO-OP., AGRI., MEDL., P.H., CPF (M) AND A.I.S. "

மேற்கண்ட அறிக்கைகள், அரசு ஊழியர்கள் 1981-ஆம் ஆண்டு மார்ச் மாதம் எந்த அலுவலகத்தில் பணிபுரிந்தார்களோ, அந்த அலுவலக நிர்வாக அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

மேலே கூறப்பட்ட பிரிவுத் தலைப்புகளில் கணக்கு எண்களைக் கொண்டுள்ளவர்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகளைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள், இந்தக் கணக்கு அறிக்கைகள் சம்பந்தமாக ஏதாவது குறைகள் காணப்படுமேயானால் முழு விவரங்களுடன் (சம்பளப் பட்டியல் விவரங்களுடன்) கீழ்க்கண்ட விலாசதாரருக்கு எழுதும்படி கோரப்படுகிறார்கள்.

திரு. க. விஸ்வநாதன்,
கணக்கு அலுவலர் (F. M. I. பிரிவு)
மாநிலத் தலைமைக் கணக்காயர் அலுவலகம்1
261, அண்ணா சாலை
சென்னை - 600018.

# அமோக விளைச்சலுக்கு





## உரத்தைத் திறம்படப் பயன்படுத்துங்கள்



உயர் விளைச்சலுக்கு உரம் மிகவும் அவசியம். உரத்தின் விலையும் சாகுபடி செலவும் அதிகமாக உள்ள இந்நேரத்தில் உரத்தைத் திறம்படப் பயன்படுத்துவது மிகவும் முக்கியம்.

1. முதலில் உங்கள் நிலத்துக்கும் பயிருக்கும் ஏற்ற சரியான உரத்தைத் தேர்ந்தெடுங்கள். மண் பரிசோதனை செய்து, அதன் சிபாரிசுப்படி உரமிடுங்கள்.

2. ஒவ்வொரு பயிருக்கும் உரமிடும் முறைகள் வேறுபடும். அதை அறிந்து முறையாக உரமிட வேண்டும்.

3. பண்ணையில் கிடைக்கக்கூடிய தொழு உரம், பண்ணைக் கழிவுகள் போன்றவற்றையும் சிறந்த முறையில் சேகரம் செய்து பாதுகாத்துப் பயன்படுத்த வேண்டும்.

4. மேலுரமாக யூரியாவை ஒரே தடவையில் இடாமல், இரண்டு-மூன்று தடவைகளில் பிரித்து இட வேண்டும். யூரியாவை வேப்பம் புண்ணாக்குடன் கலந்து இட வேண்டும்.

மேலும் உரத்தைத் திறம்படப் பயன் படுத்துவதற்கான வழிமுறைகளையும், விரிவான சாகுபடி முறைகளையும் அறிய, கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதுங்கள் :

மண்டல மேலாளர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
10 வில்லியம்ஸ் ரோடு
திருச்சி 620 001




சமச்சீர் உரமிட
விஜய்

HTM-MFL-2526




# தத்துவப் பேரொளி
# கோ. வடிவேலனார்

மா. சு. சம்பந்தன்



சென்னை மாநகரில் உள்ள கோமளேசுவரன் பேட்டையானது முற்காலத்தில் புகழ் பெற்ற பகுதியாக விளங்கியது. இங்குதான் வள்ளல் பச்சையப்ப முதலியார் வாழ்ந்து சிறந்தார்; மகாவித்துவான் கோமளபுரம் இராசகோபாலப் பிள்ளை புகழ் பெற்றிருந்தார். இத்தகைய பேட்டையில்தான் தமிழ் ஞாயிறாகவும் தருக்க போதகராகவும் வேதாந்த சிலருமாகவும் விளங்கிய கோ. வடிவேல் செட்டியார் அவர்கள், சுப்பராய செட்டியார்-தனக்கோட்டி அம்மையார்க்குத் திருமகனாய் 1863இல் தோன்றினார். இவரை ஐந்தாம் அகவையில் திண்ணைப் பள்ளிக்கூடத்திற்குப் பெற்றோர் அனுப்பினர். இளமையில் கல்வியின் மீது ஊக்கம் ஏற்படவில்லை. எனவே, பெற்றோர் இவரை தமது மளிகைக் கடையில் தொழில் பயில விட்டனர். தொழிலில் தேர்ச்சியடைந்து வந்தபோது, பூங்காவனம் என்னும் அம்மையை வாழ்க்கைத் துணைவியாகப் பெரியோர் ஆக்கினர்!

வடிவேலருக்கு தமது 26-வது அகவையில் தமிழ்மீது திடீர் காதல் ஏற்படலாயிற்று! இதனால் இவர் திரு இராமானுச நாயக்கரிடம் ஏழாண்டுகள்வரை தமிழ் இலக்கிய இலக்கணங்களை முறையாகக் கற்றார். அதனையும் பெற்றோர் அறியாமல் சாக்குப்பையில் துணியையும் சுவடியையும் மறைத்து வைத்துக் கொண்டு, அக்[illegible]த்தில் கூவம் ஆற்றின்மீது [illegible]பாலம் அமைக்கப்பட்டிராததால் தலை மீது மூட்டையாக வைத்துக்கொண்டு நீந்திக் கரையேறிச் சென்று, ஆர்வம்மீதூர கற்று வரலானார். பின்னர் மகாவித்துவான் மயிலை சண்முகம் பிள்ளை, மகாவித்துவான் இராமசாமி நாயுடு, அப்பன் செட்டியார் ஆகியோருடன் நெருங்கிப் பழகித் தமது கல்வியைப் பெருக்கிக் கொண்டார்.

அடுத்து, வேதாந்தத்திலும், தருக்கத்திலும் சிறந்து விளங்கியவரும், ரிப்பன் அச்சகத்தை நிறுவியவருமான சாது. சை. இரத்தின செட்டியாரிடம் வேதாந்த நூல்களை பன்னிரண்டு ஆண்டுகள்வரை முறையாகக் காலையிலும் மாலையிலும் பாடங்கேட்டு வேதாந்தத்திலும் தருக்கத்திலும் புலமை பெற்றார்.

இவரது கல்வித் தேர்ச்சியை அறிந்த சென்னை இந்து தியாலஜிகல் உயர்நிலைப்பள்ளி, 1896-ஆம் ஆண்டு இவரைத் தமிழாசிரியராக அமர்த்திக் கொண்டது! இங்குத் தமிழாசிரியராக இருந்து தலைமைத் தமிழாசிரியராக உயர்ந்தார். 1933-ஆம் ஆண்டு வரை 37 ஆண்டுகள் ஆசிரியப் பணிபுரிந்து, புகழுடன் ஓய்வு பெற்றார். அவரது இறுதிக் காலம் வரை பள்ளியிலிருந்து ஓய்வூதியம் கிடைத்து வந்தது !

மேற்படி பள்ளியில் பணிபுரிந்து கொண்டிருந்தபோதே சென்னையில் சில குறிப்பிட்ட இடங்களில் இலக்கிய, இலக்கண, தருக்க, வேதாந்த பாடங்களை அவர் கற்பித்து வந்தார். அவரிடம் படித்த மாணவர்கள் பலர்; அவருள் பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரும், டாக்டர் மொ. அ. துரையரங்கனாரும், தை. ஆ. கனகசபாபதி முதலியாரும் குறிப்பிடத்தக்கவராவர். ஆசிரியர் வடிவேலர் பாடங்களை மிக அருமையாக விளக்கிச் சொல்லி, மாணவர் மனத்தில் ஆழமாகப் பதியும்படி செய்துவிடுவாராம்!

பாடம் சொல்லுவதோடு, அவர் பல இடங்களுக்குச் சென்று இலக்கிய, வேதாந்த, சொற்பொழிவுகள் செய்தும் வருவாராம். மேலும், தருக்கமுறை பிசகாமலும் அஞ்சாமலும்வாதிடுவதில் வல்லவராகவும் விளங்கினாராம். அருட்பா மருட்பா கருத்துப்போர் ஏற்பட்டபோது, அவர், அத்வைதியாக இருந்தும், சித்தாந்த அருட்பா கட்சியின் சார்பில் வாதாடி, அருட்பாவின் பெருமைகளை எடுத்தோதி வெற்றிவாகை சூடினாராம். ஒரு சமயம் கந்தகோட்டத்தில் திரு. கதிரைவேற் பிள்ளையுடன் 'காலம்' பற்றி மூன்று மணிநேரம் வரை வாதிட்டு இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்பவற்றுடன் எக்காலத்தையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினாராம்!

திரு. கோ. வடிவேலர் அவர்கள் திருக்குறள் பரிமேலழகர் உரையைத் துருவி ஆராய்ந்து, அவ்வுரைக்கு ஒரு தெளிவுரை எழுதிப் பலவகை ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் வெளியிட்டுள்ளார். இவ்வுரையின் அருமை பெருமை அறிந்த மதுரை-காமராசர் பல்கலைக் கழகம், அதன் இரண்டாம் பதிப்பை மூன்று பாகங்களாக வெளியிட்டுள்ளது.

திருக்குறள் மணக்குடவர் உரையையும் இவர் நன்கு பதித்துள்ளார்.

வேதாந்த சூடாமணி, நாநா சீவவாதக் கட்டளை, பகவத் கீதை வசனம், சித்தாந்த பிந்து, சிவப் பிரகாசப் பெருந்திரட்டு, சிவப் பிரகாசக் குறுந்திரட்டு, மெய்ஞ்ஞானபோதம், பரமார்த்த போத வசனம், தர்மவாசகம்—முதலான வேதாந்த நூல்களைத் திருத்தமுடன் இவர் வெளியிட்டுள்ளார்.

ஸ்ரீ பகவத் கீதையை-மூலத்துக்கியைந்த உரையுடனும், விருத்தியுரை மேற்கோளுடனும், ரிபு கீதைத் திரட்டைக் குறிப்புரையுடனும் வெளிப்படுத்தியுள்ளார். 'தர்க்க பரிபாஷை'யை விரிந்த விளக்கத்துடன் வெளியிட்டுள்ளார். உபநிடதம் 32-ம் விரிவுரை, சாஸ்திர மேற்கோளுடன் வெளிவரச் செய்துள்ளார். திருக்குறள் பரிமேலகழகர் உரைக்குத் தெளிவுரையும், கைவல்ய நவநீதத்திற்கு விளக்கவுரையும் வடிவேலரின் பெருமையை என்றென்றும் பறைசாற்றும் !

## தமிழ்நாடு வாழ்க்கைப்படி வழங்கல் சட்டம் 1981.

**1946**-ஆம் ஆண்டு தொழில் நிறுவனங்கள் (நிலை ஆணைகள்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 20/1946) கீழ் 1675 நிறுவனங்களின் நிலை ஆணைகளுக்குச் சான்றுகள் அளிக்கப்பட்டதாகவும், அவற்றுள் 1631 நிறுவனங்கள், தங்கள் பணியாளர்களைத் தற்காலிகமாகப் பணியிலிருந்து நீக்கம் செய்யும் கால அளவில் அவர்களுக்கு வாழ்க்கைப்படி வழங்க வகை செய்வதற்குரிய முறையில் தங்கள் நிலை ஆணைகளை இன்னும் திருத்தவில்லை என்று அரசுக்கு அறிக்கைகள் வரப்பெற்றது. ஒவ்வொரு தொழில் நிறுவனத்தின் மாதிரி நிலை ஆணைகளிலும் வாழ்க்கைப்படி தொடர்பாக விதித்துறைகளைச் சேர்த்தல் என்பது நடைமுறையில் சிக்கல் மலிந்த ஒன்றாகும் என அரசுக்கு அறிவுறுத்தப்பட்டது. ஆகவே, நிருவாகங்கள் விசாரணை ஒன்றின் போது தமது பணியாளர்களைத் தற்காலிகமாகப் பணியிலிருந்து நீக்கம் செய்யும் கால அளவில், அப்பணியாளர்களுக்கு வாழ்க்கைப்படி வழங்க நிர்வாகங்கள் கட்டாயம் பொறுப்பேற்க வேண்டுமென்ற வகையில் தனிச்சட்டம் ஒன்றை கொண்டு வர மாநில சட்டமன்றத்தால் ஒரு மசோதா நிறைவேறியது. இம் மசோதாவின் மீது, குடியரசுத் தலைவரின் ஒப்புதல் 21-7-81 அன்று கிடைக்கப் பெற்று 25-7-1981-ஆம் நாளிட்ட அரசு பதிவிதழில் தனிப்பிரதியாக வெளியிடப்பட்டுள்ளது.

இச்சட்டம், பணியாளர்கள், தற்காலிகமாகப் பணியிலிருந்து நீக்கப்பட்டிருக்கும் கால அளவில் அவர்களுக்கு கீழ்க்கண்ட விகிதங்களில் வாழ்க்கைப்படி வழங்க வகை செய்கிறது.

(1) முதல் 90 நாட்களுக்கு அப்பணியாளர் பணியிலிருந்து நீக்கப்படுவதற்கு அடுத்து முன்னர் பெற்று வந்த ஊதியத்தில் 50 சதவீத ஊதியத்திற்கு நிகரான தொகையை பெறுவார்.

(2) 90 நாட்களுக்கு அதிகமானாலும் 180 நாட்களுக்கு மிகாமல் இருந்தாலும், இக்கால அளவிற்குப் பிறகு, அப்பணியாளர் அவ்வாறு தற்காலிகமாகப் பணியிலிருந்து நீக்கி வைக்கப்படுவதற்கு அடுத்து முன்னர் அவர் பெற்றுவந்த ஊதியத்தில் 75 சதவீத ஊதியத்திற்கு நிகராக ஒரு தொகையை பெறுவார்.

(3) 180 நாட்களுக்கும் அதிகமானால், முழு ஊதியத்திற்கு நிகரான ஒரு தொகையை வாழ்க்கைப் படியாகப் பெறுவதற்கு உரிமை உடையவர் ஆவார்.

---

ஞானவுவமை வெண்பாவும், மனைவுவமை வெண்பாவும், தத்துவாதத்துவ விவேக போத விடையும் (1932) இவரது மற்ற வெளியீடாகும்.

இவர் தமக்கென ஓர் அச்சகத்தை (சச்சிதானந்த அச்சகம்) நிறுவி, தமது நூல்களை வெளியிட்டு வந்தார். மேலும் 'லோகோபகாரி' 'சக்கரவர்த்தினி' என்னும் வார, மாத இதழ்களைப் பல ஆண்டுகளாக நடத்தி வந்தார்.

சென்னை சிந்தாதிரிப்பேட்டையில், சுவாமி நாயக்கன் தெருவில் 'வேதாந்தச் சங்கம்' என்று ஓர் அமைப்பை நிறுவி, அதற்குத் தலைவராகப் பல ஆண்டுக்காலம் இருந்து, தமிழ் வகுப்புகளும், வேதாந்த வகுப்புகளும் இலக்கியச் சொற்பொழிவுகளும் நடத்தி வந்தார். அவர் 1936-ல் தமது 73ஆம் அகவையில் பழுத்த பழமாய் இயற்கை எய்தினார். என்றாலும் வேதாந்த சங்கம் தொடர்ந்து பணியாற்றி வந்தது!

வடிவேலர் அன்பு நிறைந்தவர் கொள்கையில் அழுத்தமானவர். தமிழ்ப் பணியும் சமூகப் பணியும் அயராது செய்தவர். எந்த நேரத்திலும் பயன் கருதாது பாடம் சொல்லிய பெருமகனாராவர். சென்னை உமாமகேசுவரத் தமிழ் வேதபாராயண பக்த ஜனசபைத் தலைவராக இருந்து சமயப் பணியும் ஆற்றியவர். 'சிவஞான போதத்'திற்குஅத்வைத பரமாய் உரையியற்றி, மறைமலையடிகளாரிடம் தெ. பொ. மீ. மூலம் அனுப்பி வைத்து மறுப்புரை கேட்டவர். இவரைப் பற்றித் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. தமது வாழ்க்கைக் குறிப்பில் குறித்திருப்பதாவது :

''இத்தமிழ் ஞாயிறு, இலக்கியம், இலக்கணம், தருக்கம் வேதாந்தம், பொதுமை ஒழுக்கம் ஒப்பரவு முதலிய கதிர்கள் தோன்ற வண்ணமாயிருக்கிறது. ஒருவிதக் கலையில் பலர் புலவராகலாம்; பலவிதக் கலையில் ஒருவர் புலவராதல் அருமை ; மிகச் சிலரே பல்கலைப் புலவராகின்றார். இப்பேறு அறிஞர் வடிவேல் செட்டியாருக்கு வாய்த்திருக்கிறது. அவர் பல்கலைப் புலவர். கலைகள் அவரது உள்ளத்தில் ஒன்றி, அவர்தம் உள்ளமாய், ஊனாய், உடலாய்ப் பரிணமித்திருக்கின்றன. கலைகளே செட்டியார்; செட்டியாரே கலைகள். அவர் ஒரு பல்கலைக் கழகம்போல் விளங்குகிறார்''.

தமிழ்க் கலைக களஞ்சியத்தில் அவரைப் பற்றி குறிப்பிடப் பட்டிருக்கும்பகுதியையும்அறிந்து கொள்வோம். இவர் தம் வாழ்நாள்களைத் தமிழ்ப் பணிக்கே பெரிதும் பயன்படுத்தினார். சான்றாண்மையும் நட்பும் எளிமையும் இவர் பண்புகள். தருக்கமிடுவதிற் சிறந்தவர். சென்னை சிந்தாதிரிப் பேட்டையில் இவர் அமைத்த வேதாந்த சங்கம் இன்றும் சிறப்புற நடந்து வருகிறது' என்று படத்துடன் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது.

இவரது மார்பளவு உருவச் சிலையை இவரது மாணவரான தை. ஆ. கனகசபாபதி முதலியார் அழகாய் அமைத்துள்ளார். அது வேதாந்த சங்கத்தில் வைக்கப்பட்டிருந்தது.

இளமையில் கல்லாதிருந்தும், இடையில் கற்றுத் தேர்ந்து பெரும் புலமை பெற்று, தருக்க ஆசிரியராய், வேதாந்தப் போதகராய், தமிழ் ஆசிரியராய், நூலாசிரியராய், பதிப்பாளராய், இதழாசிரியராய், பயன்கருதாது தொண்டாற்றும் வித்தகராய் விளங்கிய தருக்கப் பேரொளி- தமிழ் ஞாயிறு கே. வடிவேல் செட்டியார் அவர்களுக்குத் தமிழ் உலகும், வேதாந்த உலகும், தருக்க உலகும் என்றென்றும் தம் நன்றிக் கடனாற்ற கடமைப் பட்டுள்ளன!





# தமிழுக்குத் தமிழர்தான் கதி! தமிழருக்கும் தமிழே கதி!

— மாமூலன்

சாரல் சாமரம் வீசுகின்ற திருக்குற்றாலத்தில் செந்தமிழ்ச் சாரலும் சேர்ந்து விழுந்த திருநாள் ஆகஸ்ட் 23-ஆம் நாள்!

ரசிகமணி டி. கே. சி. யின் நூற்றாண்டு விழா திருக்குற்றாலம் கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற நாளே அத்திரு நாள்! காலை தொடங்கி இரவு வரை தன்னேரில்லா தமிழின்பம் நல்கி அந்தத் திருவிழா குற்றாலத்துப் பெருமைக்குப் பெருமை சேர்ப்பதாக அமைந்திருந்தது.

தமிழ்நாடு அரசின் சார்பில் நடைபெற்ற ரசிகமணி டி. கே. சி அவர்களின் நூற்றாண்டு விழா திருநெல்வேலி மாவட்டம் திருக்குற்றாலத்தில் நாயன இசையுடன் தொடங்கியது. செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. கே. ஏ. சுந்தரம் இ.ஆ.ப. அனைவரையும் வரவேற்றார். மாண்புமிகு உயர்நீதி மன்ற நீதிபதி திரு. ஆர். செங்கோட்டு வேலன் அவர்கள் விழாவை தொடங்கி வைக்கும் முறையில் டி. கே. சி. யின் வர ரசிகமணி டி. கே. சி. யின் வரலாற்றுப் புகைப்படக் கண்காட்சியினைத் திறந்து வைத்து தொடக்க உரை நிகழ்த்தினார்.

திரு. ஆர். செங்கோட்டு வேலன் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது :

''தக்கது எது? தகாதது எது? என்பதை பகுத்துக் காட்டினார் டி. கே. சி. யார் தமிழைப் பேசினாலும் அது ஆனந்தத்தை உண்டாக்க வேண்டும் என்று டி.கே.சி. நினைத்தார் என்று எடுத்துரைத்து தாமும் மாணவப் பருவத்தில் டி. கே. சி. அவர்களை சந்தித்த நிகழ்ச்சிகளை நினைவு கூர்ந்தார்.

''தமிழ்க் கவிதைகளை எப்படி அனுபவித்து ரசிக்க வேண்டும். எப்படி கவியின்பத்தை நுகர வேண்டும் என்பதை எடுத்துரைத்தவர் டி. கே. சி. 'கார் என்று பேர் படைத்தாய்' என்ற பாடலின் வரிகளை எடுத்துரைத்து ரசிகமணி அவர்கள் விளக்கம் கூறியது இன்னும் பசுமையாக நினைவில் உள்ளது'' என்றார் உயர்நீதிமன்ற நீதிபதி.

விழாவிற்குத் தலைமேயேற்ற மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ரசிகமணி டி. கே. சி. நூற்றாண்டு விழா



# தமிழைப் போன்ற உயர்ந்த மொழி—

ரசிகமணி நூற்றாண்டு விழாவை இன்று தமிழக அரசே மேற்கொண்டு நடத்தத் தொடங்கி இருக்கிறதென்றால் இது வெறும் ஆடம்பரம் அல்ல. ரசிகமணி வாழ்க்கையில் உள்ள அருமைப்பாடுகளை நன்றாக உணர்ந்த காரணத்தினால்தான் தமிழகஅரசு இந்தக் கொண்டாட்டத்தில் ஆர்வத்தோடு பங்கெடுத்துக் கொள்ளுகிறது. தமிழக முதல்வர் மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள் ரசிகமணியை எவ்வளவு தூரம் ரசித்து இருக்கிறார்கள் என்பது அவர்களுடைய பேச்சுக்களிலிருந்து நன்றாகத் துலங்குகிறது.

இரண்டாண்டுகளுக்கு முன்னால் ராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் முதல்வரவர்கள் பேசும்போது, ''ரசிகமணி டி.கே.சி. கல்கியில் பல ஆண்டுகள் கம்பராமாயணத்தின் அழகுகளை எடுத்துச் சொல்லாமல் இருந்திருந்தால் கம்பராமாயணம் இருந்த இடம் தெரியாமல் போயிருந்திருக்கும்'' என்று சொன்னார்கள். வள்ளுவர் கோட்டத்தில் வள்ளுவர் விழாவில் சென்ற ஜனவரி மாதம் பேசும்போது முதல்வரவர்கள், ''ரசிகமணி யைப் போல் 'இதுதான் கம்பன், இது கம்பன் இல்லை' என்ற துணிச்சலோடு சொன்ன தமிழ்ப் புலவர் எவராவது உண்டா? ஒவ்வொரு தமிழனும் ரசிகமணியினுடைய வாழ்க்கையிலிருந்து இந்தத் துணிச்சலைக் கற்றுக்கொள்ள வேண்டும்'' என்று உறுதியோடு சொன்னார்கள். அதே விழாவிலே மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்களும் பேசினார்கள். அவர்களுடைய பேச்சிலே ரசிகமணி சொன்னார்கள். ''தமிழுக்குத் தமிழேதுணை என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படி ஒரு ஆழ்ந்த தமிழார்வம் எத்தனை தமிழர்களுக்கு இருக்கிறது'' என்று மிகப் பூரிப்போடு கேட்டார்கள்.

ரசிகமணி மரணப் படுக்கையில் இருந்தபோது என்னிடம விடுத்த் வேண்டுகோளை இங்கு எடுத்துச் சொல்ல வேண்டியது எனது கடமை என்று நினைக்கிறேன். 1953 டிசம்பர் மாதத்தில் குற்றாலம் ஐந்தருவிச் சாலையில் அவர்கள் வாழ்ந்த இல்லத்தில் நோய்வாய்ப்பட்டிருந்த டி.கே.சி. அவர்கள் கட்டிலில் படுத்துக் கொண்டே என்னிடம் சொன்னார்கள்

நான் சென்ற 40-50 ஆண்டுகளாகத் தமிழன் பெருமையைப் பற்றியும் கம்பர் கவிதையின் மேன்மையைப் பற்றியும் தமிழ் மக்களுக்கு எடுத்துச்சொல்லி வந்திருக்கிறேன். ஆனாலும் தமிழ் மக்கள் நான் சொன்னதைச் செவிமடுத்துக் கேட்டதாகத்தெரியவில்லை. ஏதோ என்னோடு நெருங்கிப் பழகிய 5.6 பேர்கள் தான் நான் சொல்லி வந்ததை ஓரளவு உணர்ந்து கொண்டார்கள். அவர்களும் என் கூற்றைப் பூரணமாக உணர்ந்துவிட்டார்கள் என்று சொல்லுவதற்கில்லை. ஆகையால் உங்களை நான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் தமிழ் மக்களிடம் இதைச் சொல்லிக்கொண்டே இருக்கவேண்டும். எதை! 'டி.கே.சி..என்ற ஒருவன் இருந்தான். அவன் சொல்லுவான்; 'தமிழைப் போன்ற உயர்ந்த மொழி உலகத்திலேயே கிடையாது. கம்பனை போன்ற உயர்ந்த கவிஞர் உலக இலக்கியத்திலே கிடையாது என்று டி.கே.சி. சொல்லுவான்' என்பதை நீங்கள்.சொல்லிக்கொண்டே இருக்க வேண்டும். மற்றவர்களையும் சொல்ல செய்ய வேண்டும். 500 ஆண்டுகள் அல்லது 1000 ஆண்டுகள் கழிந்த பின்னாவது நான் சொன்னதை உண்மை என்று உலகமே ஒப்புக் கொள்ளும்.''

இந்த வேண்டுகோளுக்குப் பின் இருக்கிற உறுதிப்பாடுதான் எப்பேர்ப்பட்டது? பன்மொழி ஞானமும், கவிதா ரசனையும் உள்ள ஒரு பேரறிஞருடைய அசைக்க முடியாத நம்பிக்கையை அல்லவா இந்த வேண்டு

மண்டபத்திறகு அடிக்கல் நாட்டினார்கள்.

**கருத்தரங்கம்**

டி. கே. சி. நூற்றாண்டு விழா கருத்தரங்கத்திற்குத் தலைமை வகித்த திரு. அ. ச. ஞானசம்பந்தம் அவர்கள் தமது தலைமை உரையில் டி. கே. சி. ஒரு நிறுவனமாக விளங்கினார்கள் என்பதை எடுத்துக்காட்டினார்.

அவர் தமது தலைமை உரையில் குறிப்பிட்டதாவது :

''பாடல் எந்த உணர்ச்சியை அறிவுக்கு அளிக்க வேண்டும் என்பதை தெளிவாக உணர்த்தினார் டி. கே. சி. தமிழ்ப்பாடலில் வரும் ஓசை நயம்—ரீதம்'இழும்' என வரும் ஓசை அவரை மிகவும் கவர்ந்தது. தமிழ்க் கவிதைகளை ரசித்து அனுபவிக்க கற்றுக் கொடுத்தவர் அவர்.

நாதம் எழுப்பிய எல்லாப் பாடல்களும் அவரைக் கவர்ந்தன ஓசையிலே ஒன்றி கவியின்பம் கண்டவர். நம்மை காண வைத்தவர் அவர்.''



**கு. அருணாசலக் கவுண்டர்**

'டி. கே. சி. யின் பதிப்பு முறை'ப் பற்றி திரு. கு. அருணாசலக் கவுண்டர் குறிப்பிட்டதாவது :—

ராமாயணத்தின் பழைய பதிப்புகளின் படலங்களின் பெயரே வித்தியாசமாக இருந்தன. பதிப்புமுறை தெரியாமல் அச்சிடப்பட்ட அந்த அச்சுப் புத்தகங்களை வைத்துதான் எங்கள் குருநாதர் டி. கே. சி. முதலில் படித்தார்கள். அவைகளை நாற்பது ஐம்பது ஆண்டுகள் ஆராய்ச்சிக்குப் பின்தான் அப்பாடலில்



# கம்பனைப் போன்ற உயர்ந்த கவிஞன்..

கோள் காட்டுகிறது. ஆகவே தான் கடைசிக் காலத்தில் ரசிகமணி என்னிடம் விடுத்த வேண்டுகோளை உங்களுக்கு நினைவூட்டி அதை நிறைவேற்றும்படி கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு டி.கே.சி. வட்டத்தொட்டியின் சார்பிலே என்னுடைய சொந்த வேண்டுகோள் ஒன்றைத் தமிழக அரசுக்குச் சமர்ப்பிக்கிறேன். ரசிகமணி பல ஆண்டுகள் வாழ்ந்து புனிதப்படுத்திய இரண்டு வீடுகளும் குற்றாலம் ஐந்தருவிச்சாலையில் இருக்கின்றன. அவை இரண்டும் எளிமையான ஓடுபோட்ட வீடுகள். அந்த வீடுகளில்தான் எத்தனை எத்தனையோ பெரியார்கள் ரசிகமணியோடு உரையாடி விருந்துண்டு அவர்கள் பரப்பிய ஆனந்தத்தை மாந்திமாந்திச் சென்றிருக்கிறார்கள். கவர்னர் ஜெனரல் ராஜாஜியும் ராமசாமிப் பெரியாரும், ருக்மணி தேவியும், டாக்டர் அருண்டேலும், ஜஸ்டிஸ் என்.சோமசுந்தரம் அவர்களும், பெருந்தலைவர் காமராஜ் அவர்களும், என்.எஸ். கிருஷ்ணன்-- கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களும், ராஜா சர் அண்ணாமலை செட்டியார் அவர்களும், கவர்னர் ஸ்ரீ பிரகாசாஅவர்களும்,சர். ஆர்.கே. சண்முகம் செட்டியார் அவர்களும், திவான் பகதூர் ஆவுடையப்பப் பிள்ளை அவர்களும், தெருத் தெருவாக அலைந்து, வீடு வீடாகச் சென்று By Indian League பொருள்களை விற்று வந்த ஃபாதர் கிருஷ்ண அய்யர் அவர்களும், Hotel waiter தனிநாயகம் அவர்களும், கல்கியும், ராம அய்யங்கார் அவர்களும், பாலசரஸ்வதியும், எஸ்.எஸ். ஸூம் ஜெயம்மாளும், பண்டிதர்களும், பாமரர்களும் அந்த இருவீடுகளில்தான் டி.கே.சி.யோடு அளவளாவி அவர்களுடைய விருந்தோம்பலோடு கவிதையையும், கலையையும் ரசித்து நிறைவு பெற்றிருக்கிறார்கள்.

அந்த வீடுகளின் வாசல்லி ஒரு நாள் ரசிகமணி நின்று கொண்டு குற்றால மலையையும் அருவியையும் அண்ணாந்து பார்த்து ரசித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது தூத்துக்குடி வழக்கரைஞரும் சிறந்த அறிஞருமான ஏ.சி.பால் நாடார் அவர்கள் ரெவரெண்ட் கேய்த்தான் என்ற அமெரிக்க மிஷனரியை டி.கே.சி. யிடம் அறிமுகப்படுத்துவதற்கு அழைத்து வந்தார்கள். ஐந்தருவிச் சாலையில் அவர்கள் ஏறி நடந்து வரும்போது ஏறக்குறைய 100 அடிக்கு அப்பால் நின்று கொண்டிருந்த அமெரிக்கரான கெய்த்தான் இதுயார் என்று பால் நாடாரிடம் கேட்டார். இதுதான் ரசிகமணி டி.கே.சி. என்று பதில் உரைத்தார்கள் பால் நாடார் அவர்கள். உடனே அந்த அமெரிக்கர் ஸ்தம்பித்துப் போய் ஒரு நிமிஷம் நின்றார். பிறகு சொன்னார் : " You cannot see a face like that in the whole of Europe or America'' ஐரோப்பா அல்லது அமெரிக்கா பூராவும் தேடிப்பார்த்தாலும் இப்படி ஒரு முகத்தை பார்க்க முடியாது என்று சொல்லி அதிசயத்தில் மூழ்கினார். ரசிகமணியின் பாதங்கள் பட்டுப் புனிதமான வீடுகள், அவர்களுடைய கவிதையின் இன்ப நாதத்தை எதிரொலித்துக் கொண்டிருக்கும் அவ்வீடுகள் இரண்டுமே திருக்குற்றால தேவஸ்தானத்திற்குப் பாத்தியப்பட்டவை. அவற்றைத் தமிழக அரசு தேவஸ்தானத்திடமிருந்து விலைக்கு வாங்கி அவற்றை டி.கே.சி.யின் நினைவு இல்லங்களாக அல்லது நூல் நிலையங்களாக அமைத்துச் சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

(திருக்குற்றாலத்தில் நடைபெற்ற டி.கே. சி. நூற்றாண்டு விழாவில் உடல்நலக்குறைவால் கலந்துகொள்ள இயலாதிருந்த ஜஸ்டிஸ் மகராஜன் அவர்களின் பதிவு செய்யப்பட்ட உரை ஒலிபரப்பப்பட்டது. அதில் ஒரு பகுதி)

பலவற்றில் கமபனின் தனி முத்திரை இருப்பதை கவனித்தார். அதையே கம்பன் கவிதை என்றார்கள். இடையிலே போலி பாடல்களை எழுதி சேர்த்திருப்பதுப் பற்றி சொல்லுவார்கள்.

எடுத்துக் காட்டாக 'அரியணை அனுமன்தாங்க என்ற பாடல் போலி பதக்கம்போல அமைந்திருப்பதை எடுத்துச் சொல்லி அவைகளைக் களைவதில் முற்பட்டார், பாடல்களை இசையோடு பாட வேண்டும். உரை நடைபோல பாடக்கூடாது என்ற கருத்து உடைய டி. கே. சி பாடும் இசைக்கு ஏற்பவே கம்பன் பாடல்களை பதிப்பித்தார்.

**திரு. மு. அருணாசலம்**

'டி.கே.சி. யின் கவி உருவம்' என்ற தலைப்பில் ஆற்றிய உரையில் குறிபபட்டார.

'கல்சர்' என்று ஆங்கில வார்த்தைக்கு ஏற்ற சொல் தமிழில் ஏதாவது உண்டா என்று ராஜாஜி கேட்டபொழுது 'பண்பாடு' என்ற வார்த்தையை சொன்னவர் டி. கே. சி. அவர் சொன்ன பிறகுதான் 'பண்பாடு' என்ற சொல் தமிழில் வழங்கலாயிற்று.

தமிழில் எதையும் கற்பிக்க



முடியும் என்பதில் மிகுந்த நம்பிக்கை உடையவர் டி. கே. சி. 1936-ஆம் ஆண்டில் வந்த குழு ஒன்றிடம் தமிழில் எதையும் கற்பிக்க முடியும் என்று உறுதியுடன் எடுத்துரைத்தார். திருவள்ளுவர் மாலையில் உள்ள பாடல்களில் இரண்டு கவிவடிவம் இல்லை என்பதை எடுத்துக்கூறி ஒரு சொல்லை மாற்றுவதால் கவிவடிவத்தை உருவாக்கிக் காட்டினார். கொச்சைத் தமிழாக இருந்தாலும் உள்ளத்தில் கவி உணர்வு இருந்தால் கவி வடிவத்தைக் காண முடியும் என்பதை எடுத்துரைத்தார்.

**திரு. எஸ். வி. எஸ்.**

'டி.கே.சி. யின் திருத்தங்கள்' பற்றி உரையாற்றிய திரு. எஸ். வி. எஸ். குறிப்பிட்டதாவது :

டி. கே. சி. செய்தத் திருத்தங்கள் உலகுக்காக அல்ல. அவர் படித்தபொழுது ஏற்பட்ட அனுபவங்களை வைத்து அப்பாடல்களுக்கு உயிர்கொடுக்க திருத்தம் செய்தார். அதனால் அப்பாடல்கள் மிகச் சிறந்ததாக உயர்ந்ததாகக் காணப்பட்டன. டி. கே, சி.யின் திருத்தங்கள் எல்லாம், கம்பனோடு ஒட்டிப் போக வேண்டும். கம்பன்எப்படி எல்லாம் பாடியிருப்பான் என்பதை நினைந்து நினைந்து செய்தவை.

**திரு. ல. சண்முகசுந்தரம்**

டி. கே. சி. யின் மனிதப் பண்பு' என்பது பற்றி திரு. ல. சண்முகசுந்தரம் குறிப்பிட்டதாவது :

'யாருடன் பழகினாலும் அவர்களை தம்மவராக்கி நம்மவராக காணும் மனிதப் பண்பு உடையவர் டி. கே. சி. மனிதப் பண்பு எளிமையிலேயும் பெருமையிலேயும் வரும் என்பதை விளக்கினார்கள்.

காந்தியடிகள் கம்பன் கவிதையை அனுபவித்துப் படிக்க வேண்டும். நீங்களே தமிழை கற்றுத்தாருங்கள் என்று கேட்ட பொழுது, ''நீங்கள் உண்மையான கவியின்பத்தைக் காண வேண்டும் அனுபவிக்க வேண்டும் என்றால் தமிழனாகப் பிறக்க வேண்டும்'' என்று எடுத்துரைத்தவர் ரசிகமணி.

ரசிகமணியின் மனித பண்புகள் தமிழுணர்வோடு ஒடியவை.

**தீபம் நா. பார்த்தசாரதி**

திரு தீபம் நா. பார்த்தசாரதி அவர்கள் 'டி.கே.சி. யின் நூல்கள்' என்ற தலைப்பில் பேசும்பொழுது குறிப்பிட்டார்.

'டி. கே. சி. தமிழே எல்லாரும் ரசிப்பதற்கு ஏற்ற வகையில் அற்புதமான பணிகளைச் செய்தார். அவர் பதிப்பித்த கம்பராமாயண நூலுக்கு எதிர்ப்பு ஏற்பட்டாலும், கம்பர் தரும் ராமாயணக் காட்சிகளை அழகுபட எடுத்துரைத்தார். டி. கே. சி அவர்கள் முத்தொள்ளாயிரத்தைப் பதிப்பித்து வெளியிட்டார்கள்.

நூல் எழுதுவதைவிட பேசுவதில் அவருக்கு அதிக ஆர்வம் இருந்தது. சொல்லின்பத்தாலேயே தமிழ்க் கவிதைஉணர்வை வளர்க்க முடியும் என்று நம்பினார்கள்.

**திரு. பரந்தாமன்**

திரு பரந்தாமன் அவர்கள் 'டி. கே. சி. வளர்த்த கலை' என்னும் தலைப்பில் பேசும் பொழுது கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்களுக்கும் டி. கே. சிதம்பரநாதனார் ஆகியோருக்கும் இடையே உள்ள நெருக்கமான தொடர்புகளை விவரித்தார்.

கல்கி திரு கே. இராஜேந்திரன் அவர்கள் 'டி.கே.சி.யின் கடிதங்களில் இழையோடிய நகைச்சுவை'யை — கலையுணர்வுகளை விளக்கினார்.

திருமதி ராஜேஸ்வரி நடராஜன் 'டி.கே. சி. யும் வட்டத் தொட்டியும்' என்பது பற்றி பேசும்பொழுது வட்டத்தொட்டி வரலாற்றையும் அதன் பழைய நிகழ்ச்சிகளையும் இன்று அது ஜஸ்டிஸ் மகராஜன் போன்றோர் வழிகாட்டுதலுடன் இயங்கி வருவதையும் விளக்கினார் :

**கவியரங்கம்**

பிற்பகல் நிகழ்ச்சியாக 'டி.கே. சி. ஒரு தத்துவம்' என்ற தலைப்பில் கவியரங்கம் நிகழ்ந்தது. கவியரங்கத்திற்கு திருமதி சௌந்தராகைலாசம் அவர்கள் தலைமை ஏற்றார்.

கவியரங்கத்தில் கவிஞர் கம்பராமன் 'தியாக வரலாற்றுத் திருமகன்' எனும் தலைப்பிலும், கவிஞர் அரு. நாகப்பன் 'தேசிய உணர்வுச் செம்மல்' எனும் தலைப்பிலும், கவிஞர் ம. வே. பசுபதி 'பிழை நீக்கிய பெருந்தகை, எனும் தலைப்பிலும், கவிஞர் கு. சிவமணி 'தென்னர் தமிழ் வளர்த்த தேசிகன், எனும் தலைப்பிலும், கவிஞர் புத்தனேரி ரா. சுப்பிரமணியம் 'விருந்து தந்த வள்ளல்' எனும் தலைப்பிலும், திருமதி தங்க அன்புவல்லி 'பக்தி உணர்வளித்த புனிதர்' எனும் தலைப்பிலும் ரசிகமணி டி. கே. சி. அவர்களுக்குப் புகழ் மாலையாகப் பாமாலைகளைச் சூட்டினார்கள்.

**சிறப்புக்கூட்டம்**


மாலை நிகழ்ச்சியாக சிறப்புக் கூட்டம் தொடங்கியது. இந் நிகழ்ச்சிக்கு முன்னாள் உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி டாக்டர் மு.மு. இஸ்மாயில் அவர்கள் தலைமை வகித்தார்கள். அவர் தமது தலைமை உரையில் குறிப்பிட்டதாவது :

''சமீப காலமாக தமிழக அரசு யார் யார் தமிழுக்குப் பாடுபட்டார்களோ அவர்களுக்கு விழா எடுத்து சிறப்பிக்கின்றது. இது மிகவும் பொருத்தமானது நியாயமானதுங்கூட. பாராட்டுக்குரிய இச்செயலை நாம் பாராட்ட வேண்டும் :

''நான் சென்னைக்கு 17-வது வயதில் வந்தேன். அப்பொழுது தமிழ் மேடைகளில் ஏறிபேசியதால் பலருடன் பழகும்வாய்ப்புக் கிட்டியது. தமிழ்த் தென்றல் திரு. வி. க. ரசிகமணி டி. கே. சி. ஆகியோரோடு பழகும் அவர்களின் பாராட்டைப் பெறவும் பல வாய்ப்புகள் கிட்டின. ரசிகமணி மனந்திறந்து பாராட்டுவார்.

'' ராஜாஜி அறிவின் சிகரம் என்றால் ரசிகமணி உணர்வின் உச்சம். அவர் பிறவி ரசிகர். ரசனை ஒரு கலை. வாழ்க்கையின் ஒவ்வொரு மனிதரும் ரசனையை பெற்றிருக்க வேண்டும். ''

கவிதையில் அறிவை நமபுவதைவிட உணர்ச்சியின் ஆழத்தை அவர் நேசித்தார். ரசித்தார். ரசிகமணியின் தமிழுணர்வு நமக்கு ரசிக்கக் கற்றுக் கொடுத்தது. தமிழின் அருமையை, அனைவரையும் உணரவைத்தது.



## திருக்குற்றாலத் திருக்காட்சி

இடிபட்டுப் பொடிபட்டு இறங்கிடும் புழுதிபோல்
எரிபட்டுக் கரிபட்டு இரிந்திடும் புகையேபோல்
வரிபட்டு வரைபட்டு விரைபட்டு வீழ்ந்திடுமே
திரைபட்டு நுரைபட்டுத் தென்காசிக் கங்கையே !

பொற்றாள சம்பந்தர் போற்றிடும்பூம் பொழில்நிறை
குற்றால அருவியிலே குளித்தலினும் குணம்நிறை
நற்றான அருவிக்கும் நல்மலைக்கும் நடுவினில்
பற்றிலார்போல் நிற்றலேதான் பேரின்பம் ! பெருகவே !

'சஞ்சீவி'



# தமிழுலகில் ஒரு வித அறிவுப்புரட்சி நிகழ்த்தியவர்

சித்-அம்பரம் சிதம்பரம். சித்-அறிவு; ஞானம். அம்பரம்-ஆகாசம்; வெளி. நாதம்-ஒலி; ஆகாசத்தினின்றும் பிறப்பது. முதலியார்-முதலையுடையவர். சிதம்பரநாத முதலியார் என்னும் பெயருக்கு ஞானாகாசத்தினின்றும் பிறக்கும் நாதத்தை முதலாக உடையவர் என்று பொருள் கூறலாம்.

உலகமெல்லாம், நாதம் முதல் பிருதிவீறாக உள்ள மாயாகாரியத் தத்துவங்களிலே அடங்கும். இவைகளில் அடங்காத உலகமே இல்லை. இறை இவ்வுலகமெல்லாங் கலந்தும் நிற்கிறது; கடந்தும் நிற்கிறது. முன்னையநிலையில் அசைவு உண்டு. பின்னையதில் அசைவே கிடையாது. அசைவு நாதத்தில் தொடங்குகிறது. அதனால் உலகெலாம் இயங்குகின்றன. 'நாதங் கொண்டாடினான் ஞானானந்தக் கூத்தே' என்பது திருமூலர் திருவாக்கு. ஞானாகாசத்தினின்றும் பிறக்கும் நாதத்தை முதலாகக் உடையவன் சிதம்பரநாதன்; நடராஜன்.

டி. கே. சிதம்பரநாத முதலியாரின் முதன்மை எது? நாதம்; நாதமயமான பாட்டு. சிதம்பரநாத முதலியார் நெஞ்சம் நாதத்திலே ஈடுபடும்; பாட்டாகும் பாட்டுலே ஈடுபாடும் நெஞ்சம் ,இலக்கணம் தர்க்கம் முதலிய துறைகளில் உழலுமோ? ஒரு போதும் உழலாது.

சிதம்பரநாத முதலியாரை யான் முதல் முதல் திருநெல்வேலியில் (1926) கண்டேன். அவர் தலையில் சரிகைக் கீற்றிட்ட தக்கைப் பாகை திகழ்ந்தது; உடல் ஒருவிதச் சாம்பல் நிறச் சட்டையே அணிந்திருந்தது. முகமோ ஒளியைக் கான்றது. எவ்வொளியை? பாட்டொளியை.

சிதம்பர நாதமுதலியார் பாட்டில் யான் ஒருமுறையா ஈடுபட்டேன்! பலமுறை ஈடுபட்டேன். முதலியார் ,பாட்டைத் தொடங்கும்போதே அவர் நெஞ்சம் நாதத்தில் ஒன்றும். கேட்போர் நெஞ்சமும் அதில் திளைக்கும் அவர் ஓவியமாவார். அத்திறம் சிதம்பரநாதரிடத்தில் சிறந்து விளங்குதலை ஈண்டு சிறப்பாகக் குறிக்கிறேன்.

பாட்டாவது சொல்லன்று: எழுத்தன்று: யாப்பன்று; அஃது அனுபவ நுகர்ச்சி, இது சிதம்பரநாதருடன் பழகபழக நன்கு விளங்கும்.

சிதம்பரநாதரின் பாட்டு எது? தமிழிலேயே 'இக்கருத்தையே வெளியிடுதல் முடியும்; பிறமொழிகளால் வெளியிடுதல் முடியுமோ'' என்று முதலியார் சபைகளில் அடிக்கடி கேட்பார். அவர் தமிழை தாமுணர்ந்த முறையில் ஓம்பவேண்டுத் தமிழுலகில் ஒருவித அறிவுப் புரட்சி நிகழ்த்தியுள்ளார் என்றே கூறுவேன்.


சிதம்பரநாத முதலியார் ஒவ்வொரு போது 'நவசக்தி' நிலையம் நோக்குவார். அந்நோக்குப் பாட்டு வருகையை உணர்த்துவது போன்றிருக்கும் முதலியார் பீடத்தில் அமர்ந்தாரோ இல்லையோ அவர் வாய், 'மண்ணுந்தணலாற வானும் புகையா....'' என்ற பாட்டைப்பாடும்; வேறு பாட்டுக்களையும் பாடும். நிலையத்தில் சுழன்றிருந்த அரசியல் அலைகளெல்லாம் அடங்கும்: அமைதியுண்டாகும். எல்லோரும் ஓவியமாவார்.

இலக்கணப் புலவர்சிலர் சிதம்பரநாத முதலியார்மீது பாய்வதுண்டு. : நீங்கள் என் முதலியார் மீது பாய்கிறீர்கள்?' உங்கள் பாய்ச்சலுக்கு இடம் ஏது? முதலியார் மனம் காட்டில் ஈடுபடுவது; அநுபவ நுகச்சியில் மூழ்குவது அதை அவரிடத்தில் எதிர்பாருங்கள். பிறவற்றை ஏன் எதிர்பார்க்கிறீர்கள்' என்று சொல்லி அவரை யான் அடக்குவது வழக்கம்.

தாம் ஈடுபட்டும் பிறரையும் ஈடுபடுத்தியும் வரும் ஒரு தமிழ்ப் பாட்டோவியருடன் பழகும் வாய்பையும் எனது எளிய வாழ்க்கை பெற்றது.

**—தமிழ்த்தென்றல் திரு. வி. க.**

(திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புக்களில்)



## முன்னாள் மத்திய அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம்

டி. கே. சி. யின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்த முன்னாள் மத்திய அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம்அவர்கள் குறிப்பிட்டதாவது :

'தமிழ்நாடு அரசு தமிழ்ப் பெரியவர்களுக்கு விழா எடுப்பதற்கு என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பெரியவர்களின் தோற்றமே அவர்கள் முகத்தில் உள்ள வசீகரமே அவர்கள் பெரியவர்கள் என்பதை காட்டிடும். ரவீந்தர நாத் தாகூரின் முக வசீகரமும், மகாத்மா காந்தியின் உருவமும், ஜவஹர்லால் நேரு அவர்களின் கவர்ச்சியான தோற்றமும் எல்லோரையும் கவரும். ராஜாஜி, ரமண மகரிஷி, காஞ்சிப் பெரியவர், வினோபாஜி போன்றவர்கள் போல பார்த்தவுடன் அவர்களை கவர்ந்திடும் முகப் பொலிவு டி.கே.சி. அவர்களுக்கு உண்டு.

கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய பல பெரியவர்கள் நாட்டுக்கும் மொழிக்கும் ஆற்றியுள்ள தொண்டுகள் அளவிட முடியாதவையாகும். அந்த வகையில் ரசிகமணி அவர்களின் தமிழ்த் தொண்டும் அவர் காட்டிய தமிழுணர்வும் போற்றுதலுக்கு உரியது.

தமிழில் அறிவுச் செல்வங்களைச் சேர்க்க வேண்டும். தமிழிலே எழுதும் எழுத்தாளர்கள் ஆங்கில வாக்கியங்களை அப்படியே எழுதுகிறார்கள். இவை அடியோடு தவிர்க்கப்பட வேண்டும்.

தமிழின் வளர்ச்சியில் கலைச் சொற்களை உருவாக்குவதில் கவனம் செலுத்த வேண்டும்.

திரு. ப. குழந்தையன் செட்டியார் அவர்கள் பழைய நிகழ்ச்சிகளை நினைவு கூர்ந்தார். 'தமிழுக்குத்துணை தமிழர்கள், தமிழர்களுக்குத்துணை தமிழ் தான்' என்ற டி. கே. சி யின் கருத்தை எடுத்து விளக்கினார்

திரு. கம்பன் அடிப்பொடி அவர்கள் ரசிகமணி டி. கே. சி. அவர்களால் கம்பன் பெருமை வளர்ந்த வரலாற்றை விளக்கினார்.

பண்டிதர்கள் தமிழ் பாடல்களை ரசிக்க முடியும் என்பதை மாற்றி பாமரர்களும் தமிழ்க் கவிதையை ரசிக்க முடியும். ரசிக்க வேண்டும் என்ற நிலையை உருவாக்கியவர் ரசிகமணி டி. கே. சி. தான்' என்றும் விளக்கினார் கம்பன் அடிப்பொடி.

## திரு சி. ஆர். நரசிம்மன்

மூதறிஞர் ராஜாஜியின் மைந்தர் திரு. சி. ஆர். நரசிம்மன் அவர்கள் தமது தந்தையும் ரசிகமணி டி. கே. சி. யும் தமிழ்ப் பற்றினாலேயே நண்பர் ஆனார்கள்.

குற்றாலத்திற்குவந்துவிட்டால் ராஜாஜி, ரசிகமணி சொல்வதை எல்லாம் கேட்பார். அவருடைய நூற்றாண்டு விழா கொண்டாடப் படுவதற்கு நான் நன்றி தெரிவிக்க கடமைப்பட்டவன்'' என்றார்.

## டி.கே.சி பெயரில் அறக்கட்டளை

தமிழ்ப் பழங்கலை இயக்ககத்தின் இயக்குநர் திரு மீ. ப. சோமசுந்தரம் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது:

'டி.கே.சி. வட்டத் தொட்டி சார்பில் ரூ. 10,000-ம் முதலீடு செய்து டி. கே. சி. பெயரில் மதுரைப் பல்கலைக் கழகத்தில் ஓர் அறக்கட்டளை நிறுவப்படும். உருவாகவிருக்கும் தமிழ்ப் பல்கலைக் கழகத்திலும் டி. கே. சி. பெயரில் ஓர் அறக்கட்டளை நிறுவப்படும்.

டி. கே. சி. கவிதைகளைப் பார்த்தவுடனேயே அது யார் எழுதியது என்று சொல்லிவிடுவார். ஒருமுறை, பெயரில்லாத மூன்று பாடல்களைப் பார்த்து யார் அது எழுதியிருப்பார் என்று நண்பர்கள் தெரியாமல் தவித்த பொழுது கவிமணிதான் அதை எழுதியிருப்பார் என்றார். உண்மையில் கவிமணிதான் அதனை எழுயிருந்தார்.

மற்றவர்கள் கவிதையை அணுகும்முறையைவிட டி.கே.சி. கவிதையை அணுகும் முறை வித்தியாசமானதாகும். அதிலே கவியின் உள்ளத் துடிப்பை அவர் கண்டுபிடிப்பார்.

திரு. பி. சி. பலராமராஜா டி. கே. சி. யுடன் பணியாற்றிய நாட்களையும் பழைய நிகழ்ச்சிகளையும் விவரித்தார்.

ரசிகமணி டி. கே. சி. யின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்து விழா நிறைவுரையை நிகழ்த்தினார், மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு. இராம வீரப்பன் அவர்கள்.

விழாவின் கடைசி நிகழ்ச்சியாக இசை நிகழ்ச்சி தொடங்கியது. இசைப் பேரறிஞர் கலைமாமணி டாக்டர் எம். எஸ். சுப்புலட்சுமி அவர்கள், ரசிகமணி அவர்களுக்குப் பிடித்த பாடல்களையும் பாரதியார் பாடல்களை! பாடி தமிழிசை விருந்தளித்தார்.

அன்றைய விழா முழுவதும் தமிழ்க் கவிதைகளை ரசிக்கும் கலை எப்படி டி. கே. சி. வளர்த்தார் என்று சொல்லிற்று.

''தமிழ்தான் தமிழர்க்குக் கதி தமிழர்கள்தான் தமிழுக்கும் கதி'' என்று சொன்ன ரசிகமணியின் மொழிகளை விழா முழுவதும் கேட்டோம் !

தமிழ்நாடு அரசு, தமிழ் வளர்த்த பெரியார்களுக்கு விழா எடுத்துப் பெருமைப்படுத்தும் நன்றிமிக்க செயல்களைப் பாராட்டிய நன்மொழிகளைக் கேட்டோம்.

நாளும் வளரவேண்டிய தமிழ் மொழிப் பற்றினை வலியுறுத்திய பெரியார்களும் அறிஞர் பெருமக்களும் எடுத்துரைத்ததின் பொருள் இதுதானே :

**தமிழுக்குத் தமிழர்தான் கதி!**
**தமிழருக்கும் தமிழே கதி !**



# ஊனமும் நிவாரணமும்!

பி. எல். ராஜேந்திரன்

முடநீக்கு இயல்துறையிலும், எலும்பு முறிவு சிகிச்சை முறையிலும் தமிழக மருத்துவத் துறையானது மிக வேகமாக முன்னேறி வருகிறது.

தமிழகத்தில் உள்ள எட்டு மருத்துவக் கல்லூரிகளில்—முட நீக்கு இயல் துறை, எலும்பு முறிவு சிகிச்சைத் துறை ஆகியவற்றிலே பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு நிலைகளில் பயிற்சி தரும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. வட்டார மருத்துவ மனைகளிலும் இத்துறையில் தேர்ச்சியும் திறமையும் பெற்ற மருத்துவர்கள் பணியாற்றுகின்றனர்.

எனவே உடல் ஊனமுற்றோர் உள்ளம் கலங்கவேண்டிய அவசியம் இல்லை.

திரு. சின்னையா பிள்ளை இதற்கு உதாரணம்போல் விளங்குகிறார். திடுமென்று திரு. சின்னையா பிள்ளை என்றால் உங்களுக்குத் தெரியாதல்லவா?

சேலம் மாவட்டத்திலுள்ள ஓலைப்பாடியைச் சேர்ந்தவர் இவர். பஞ்சு மில்லில் பணிபுரிந்து வந்தார். இளமையும், சுறுசுறுப்பும் உடைய இவர் ஒருநாள் பரபரப்போடு பணியாற்றிக் கொண்டிருந்த நேரம்—காடிங் மிஷினில் அடைத்துக்கொண்ட பஞ்சைத் தள்ளிவிட முயன்றபோது இரண்டு கையும் மிஷினில் சிக்கிக்கொண்டது. முடிவு?

இடது கையை அடியோடு இழந்து, வலது கையில் முழங்கைக்குமேல் இழந்த நிலையில் சென்னை கே. கே. நகரிலுள்ள செயற்கை உறுப்புக்கள் பொருத்தும் மையத்தில் (Government Institute of Rehabilitation and Artificial Limb Centre) கொண்டு வந்து சேர்க்கப்பட்டிருக்கிறார் திரு. சின்னையாபிள்ளை.

இப்போது ரணமெல்லாம் ஆறிவிட்டது. இடது கையை அடியோடு இழந்து விட்டதற்காகக் கவலைப்படுகிறவராகத் தெரியவில்லை; வலது கையில் பாதியாவது மிஞ்சியதற்காக மகிழ்கிறவராகவே காணப்படுகிறார் இவர்.


ஊனமடைந்த ஒரு கை எதற்கு உதவும் என்கிறீர்கள்?

அந்தக் கையில் தனி இணைப்பு ஒன்றைச் சீக்கிரமே பொருத்த இருக்கிறார்கள். அதற்குள்—அப்படிப் பொருத்தியானபின் அதை எப்படிப் பயன்படுத்துவது என இப்போதே தக்க பயிற்சி தருகிறார்கள். முடமான கையில் ஒரு துணியைக் கட்டி, அதில் ஒரு பிரஷைச் செருகிவிட்டால் அவராகவே பல் துலக்கிக் கொள்கிறார். ஒரு ஸ்பூனைப் பொருத்தி, சாப்பாட்டுத்தட்டை எதிரே வைத்தால் அவராகவே எடுத்துச் சாப்பிடுகிறார்.

செயற்கை உறுப்புகள் பொருத்தப்பட்ட சின்ன அரும்புகள்.



அரசு புனரமைப்பு மற்றும் செயற்கை உடலுறுப்பு மையம்.



ஊனமுற்றோருக்கு இவ்வளவு அற்புதமாக உதவுகின்ற செயற்கை உறுப்புகள் பொருத்தும் மையம். கே.கே. நகர் அரசு மருத்துவமனைக்கு நேர் எதிரே ரூ. 6,95,594 மதிப்புடைய 103.82 கிரவுண்டு நிலப்பரப்பில் ரூ. 2,34,533.87 மதிப்பீட்டில் 1979ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது.

இது அமையப் பெருமுயற்சி எடுத்துக் கொண்டவர் டாக்டர் திரு. நடராசன் அவர்கள்.

அரசு பொது மருத்துவ மனையில் முட நீக்கு இயல் பிரிவின் இணையாக இந்த மையம் தமிழ்நாடு அரசு உதவியோடும், இந்திய செயற்கை உறுப்புகள் பொருத்தும் கழக (ALIMCO) உதவியோடும் துவக்கப்பட்டதாகும். இதன் கிளை மையங்கள் தஞ்சாவூர், மதுரை, கோவை ஆகிய ஊர்களிலும் இயங்குகின்றன.

சென்னையிலுள்ள அரசினர் புனர்வாழ்வு நிலையம் மற்றும் செயற்கை உறுப்புகள், சாதனங்கள் பொருத்தும் மையம் -செயற்கை உறுப்புகள், சாதனங்கள் செய்வதிலும், பொருத்துவதிலும் பயிற்சி—தகுந்த சிகிச்சையளிப்பதற்கான வசதி ஆகியவைகளைப் பெற்றுள்ளது.

சென்னை மருத்துவக் கல்லூரி முடநீக்கு இயல் துறைப் பேராசிரியரான டாக்டர் திரு.

டாக்டர் திரு. தி.கோ. சண்முகசுந்தரம் அவர்கள் தலைமையில் (Director) இந்த மையம் சிறப்புறச் செயலாற்றி வருகிறது இப்போது.

உடலியல் மருத்துவத்துறை, 40 படுக்கைகளைக் கொண்ட வார்டு, ஒரு அறுவை சிகிச்சை நிலையம், உறுப்புகள் பொருத்தும் மையம் எல்லாம் இங்கே உண்டு.

முடநீக்கு இயலில் பெயர் பெற்ற டாக்டர் திரு. தி.கோ. சண்முகசுந்தரம் அவர்களோடு இயற்கை மருத்துவர், செயற்கை உறுப்புக்கள் பொருந்தும் மருத்துவர், உயிர் இயல் பொறியாளர், தலைமை இயற்கைமுறை மருத்துவர், விரிவுரையாளர், வாழ்க்கைத் தொழில் ஆலோசகர், தொழில்திறன் கணிப்பாளர், மருத்துவ சமூகப் பணியாளர், புனர்வாழ்வுப் பயிற்சி பெற்ற செவிலியர் என ஏறத்தாழ இருநூறு பேர் இம் மையத்தில் அரும்பணி ஆற்றி வருகிறார்கள்.

வருவோர்தம் நோய்களைக் கண்டறிய, நன்முறையில் சிகிச்சை அளிக்க, அறுவைச் சிகிச்சை செய்திட, ஊனமுற்றவர்களுக்குப் புனர்வாழ்வுதர எனப் பல்வேறு துறை ஆற்றலாளர்களையும் பெற்றுள்ள இம்மையத்திலே உடலியல் மருத்துவத்துறை, பயிற்சிச்சிகிச்சை மின்சிகிச்சை பயிற்சிக் கூடம், தொழிலியல் சிகிச்சைப் பகுதி ஆகிய பல பிரிவுகள் உள்ளன.

இளம்பிள்ளை வாதம், மூளை முடக்கு வாதம், தசைநோய் ஆகியவைகள் இங்கே அதிகம் வருகின்றன. - சிறப்பாகக் கவனிக்கப்படுகின்றன. என்றாலும்... நரம்பு மண்டல வாதம், மூட்டு தொடர்பான நோய்கள், எலும்பு - மார்பு நோய்கள், பிறக்கும்போதே ஊனமாகப் பிறத்தல் போன்ற பிறவி நோய்கள் போன்றவைகளும் இம்மையத்திற்கு வராமலிருப்பதில்லை!

செயற்கை உறுப்புகளை வெளியே ஒரு



இயக்குநர், டாக்டர் திரு தி. கோ. சண்முக சுந்தரம் நோயாளியை விசாரிக்கிறார்



காலை மடக்கி நீட்டி ஒரு சிகிச்சை முறை

வர் வாங்குவதானால் இருநூறு ரூபாய் முதல் நானூறு ரூபாய் வரையில் செலவாகும். ஆனால் இங்கே சிகிச்சை பெறுவோருக்குத் தகுந்த செயற்கை உறுப்புகளோ பத்தே பத்து ரூபாய்க்கே பொருத்தப்படுகின்றன.

அரசுத் துறையைச் சேர்ந்தது என்பதால் —எல்லா மருத்துவமனைகளிலும் உள்ளது போலவே, இங்கேயும் 300 ரூபாய்க்குக் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு இலவச மருத்துவ உதவியே அளிக்கப்படுகிறது.

இங்கே சேர்ந்து சிகிச்சை பெறுகிறவர்களுக்கான சத்துமிக்க உணவு இங்கேயே சமைக்கப்படுகிறது. தலைமை மருத்துவர் டாக்டர் திரு.தி.கோ.சண்முகசுந்தரம் நம்மைச் சமையல் கட்டுக்கே அழைத்துப்போய்க் காட்டியது மட்டுமல்ல; சமையலாகியிருந்த காய்கறி வகைகளைச் சிறு கரண்டியால் வாயில் எடுத்துப்போட்டு ருசி பார்த்த பிறகே அவை நோயாளிகளுக்கு வழங்கப்பட அனுமதித்தார்.



உணவு தயாராகிறது கோயுற்றார்க்கு

டாக்டர்கள் திரு.கே. ஜனார்த்தனன், திரு. ஐ. எஸ். சண்முகம் ஆகியவர்களை நமக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறார், அவர். "எனக்கு அடுத்தாப்ல இவங்க ரெண்டுபேரும் தான் இங்கே கவனிச்சுக்கிறாங்க".

வெளியே நோயாளிகள் கவனிக்கப்படும் நேரம் காலை 8 மணிமுதல் 10 மணிவரை என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும், அதுமுடிய 12. மணிக்குமேலேயே ஆகிவிடுகிறது. இதற்கான காரணத்தைக் கேட்டபோது அங்கே பணியாற்றும் திரு. எஸ். இராமன் நமக்கு இப்படி விவரம் தெரிவித்தார்: "திங்கள், புதன், வெள்ளியில் ஒரு யூனிட் டாக்டர்களும் செவ்வாய், வியாழன், சனியில் ஒரு யூனிட் டாக்டர்களும் வந்து பார்த்துறாங்க. மத்த ஆஸ்பத்திரியில் நோயாளிகளைப் பரிசோதிக்க அஞ்சு நிமிஷமோ, பத்து நிமிஷமோ போதுமே சார்; இங்கே வர்ற கேஸ் அப்படிச் சாதாரணமாக இருக்கிறதில்லே. ஒவ்வொரு கேஸையும் பார்த்துப் பரிசோதிக்கவே முப்பது நிமிஷம் ஆயிடுமகளே! முடநீக்கு இயல்னா அவ்வளவு சாதாரணமில்லே பாருங்கோ!"

சமூக ஊழியர்கள் (Social Workers) என டி. சரோஜினி, எஸ். ஜீதா, வி. காந்திமதி, வி.சீனிவாசன் ஆகிய நான்குபேர் இங்கே பணியாற்றுகிறார்கள். மருத்துவர்களின் ஆலோசனைகளை நோயாளிகள் பின்பற்றச் செய்வதிலும், அதை அவர்களுக்கு வலியுறுத்துவதிலும் இவர்கள் பெரு முயற்சி மேற்கொள்கிறார்கள்.

1980ல் மட்டும் இந்த கே. கே. நகர் மருத்துவமையத்தில் வெளியேயிருந்து வந்து 'அட்மிஷன்' ஆன முடநோயாளிகள் ஆண்களும் பெண்களும் குழந்தைகளுமாக 92பேர்களாவர். புதிதாகப் பரிசோதிக்கப்பட்ட நோயாளிகள் 3,912 பேர். உடற்கூறு இயல் பரிசோதித்துச் சென்றவர்கள் 17,287. பேர். நடை பழகும் பள்ளியிலே அனுமதிக்கப்பட்டு பயிற்சி தரப்பட்டவர்கள் 3,370 பேர். தொடர்ந்தாற்போல் வந்து மருந்து வாங்கிச் சென்று குணம் பெற்றோர் 1,122 பேர். செயற்கை உறுப்புகள் பொருத்திக் கொண்டவர்கள் 409 பேர்.

10.9.80ல்தான், உடல் உபாதையுற்றோரைத் தங்கவைத்துச் சிகிச்சையளிக்கத் தக்க பிரிவு (Inpatient Ward) இங்கே துவக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

அறுவை சிகிச்சை முதுநிலைப் பட்டதாரிகள் மட்டுமல்ல; சென்னை மாநகரில் உள்ள 3 பள்ளிகளில் இருந்து சமூகப்பணி பயிலும் முதுநிலைப் பட்டதாரிகளும் 3 மாதப் பயிற்சிக்காக இங்கு வருவதுண்டு. இயற்கை முறை மருத்துவப் பள்ளியில், அரசின் சலுகைப் பணம் பெறும் 30 மாணவர்களும், பிற மாணவர்களும் வந்து படித்துப் பயன் பெறுகிறார்கள்.

மாற்று உடல் உறுப்புகள் செய்யவென இங்கே அமைக்கப்பட்டுள்ள பள்ளியில் (School of Prosthetics and Orthotics) பயிலும் மாணவர்களுக்குச் 'செயற்கை உடல் உறுப்புப் பொறியாளர்' என்ற பட்டம் வழங்கப்படுகிறது.

முதலாண்டு தொழில் நுணுக்கப் படிப்பு (Polytechnic ) படித்துவிட்டு இரண்டாமாண்டும் மூன்றாமாண்டும் இங்கே வந்து படிக்கிறவர்களுக்கே இப்படிப்பட்ட பட்டமளிக்கப்படுகிறது.

இப்போது இதில் 6 பேர் பயிற்சி பெற்று வருகிறார்கள். இது வரை இங்கே படித்துப் பட்டம் பெற்ற மாணவர்கள் எண்ணிக்கை 34 ஆகும்.

"அவர்களில் 20 பேர் அரசுத் தொடர்பான நிறுவனங்களில் சேர்ந்து நல்ல முறையில் பணியாற்றி வருகிறார்கள்." என்றார் டாக்டர் திரு கே. ஜனார்த்தனன். கட்டைக் கால்களும் கைகளும் இங்கே செய்யப்படுகின்றன.


உடற்பயிற்சி மூலமும், மின்சார சிகிச்சை மூலமும் முடமானோரைத் திடப்படுத்தும் பிரிவுக்குச் செல்கிறோம். அவ்வகைத்துறைத் தேர்வில் தேர்ச்சி பெற்றவரான திரு. பி.



திருஷ்ஷன ...ார், கால் ஊனமுற்ற சிறுவர் சிறுமியருக்கு, நடைபழக்கிக் கொண்டிருந்தார். மின்சாரம் மூலம் ஒரு சிறுமிக்கு சிகிச்சை யளிக்கப்பட்டது ஒருபுறம். இன்னொரு சிறுமி யின் ஊனமுற்ற காலை உயர்த்தியும் தாழ்த்தி யும் வளைத்தும் பயிற்சி கொடுத்தார் ஒரு செவிலியர். உருகிய மெழுகில், பழுதான கரத்தை இதமாக நனைத்து...அப்படியொரு சிகிச்சை ஒருபக்கம்!

40 படுக்கைகள் மட்டுமே உள்ள வார்டில் ஆண்கள் ஒரு பக்கம், பெண்கள் இன்னொரு பக்கம், குழந்தைகள் வேறொரு பக்கம் என்று பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்தப் பிரிவில் புகும் தலைமை மருத்துவர் திரு. ஜி.கோ. சண்முகசுந்தரம் அவர்களோடு நாமும் செல்கிறோம்.

ஒலைப்பாடி சின்னையா உணவருந்துகிறார்.



ஒரு படுக்கையின் முன் டாக்டர் நிற்கிறார். அதில் அமர்ந்திருந்தவரின் கைகளைக் கூர்ந்து கவனிக்கிறார். வாதத்தால் வலிவிழந்தவை போலும்!

"எங்கே, என் கையைப் பிடிங்க!" டாக்டர் கை நீட்டுகிறார். அவர் பிடிக்கிறார்.

"சரி, விடுங்க!" அவர் விடுகிறார்.

"எங்கே அந்தக் கையால பிடிங்க!" பிடிக்கிறார்.

"விடுங்க!"

விடுகிறார்.



முழுக்காலும் போனாலும் மிடுக்கோடு நடப்போம்!

"கிட்டத்தட்ட சரியாயிடுச்சு. நீங்களா சாப்பிடறீங்களா இப்ப?" என்கிறார் டாக்டர்.

"ஆமா. நானாதான் சாப்பிடறேன்" என்று மகிழ்வோடு சொல்கிறார் நோயாளி.




உடற்பயிற்சி மூலமும் ஊனத்தைத் தவிர்ப்பது பற்றிய பயிற்சி வகுப்பு

"ஸ்பூனாலயா?"

"ஊகூம்.....கையாலயே!"

அரசினர் புனர்வாழ்வு மற்றும்செயற்கை உறுப்புகள் பொருத்திடவென அமைக்கப்பட்டுள்ள இந்த மையத்திலேயே உடற்பயிற்சி மூலம் ஊனத்தை நீக்குவது பற்றிய பயிற்சி வகுப்பும் (Physiotheraphy Teaching) நடத்தப் படுகிறது. திரு. எம். நாராயணன் என்பார் இவ்வகுப்பின் விரிவுரையாளராக இருந்து வருகிறார்.

செயற்கை உறுப்புகள் செய்யும் பயிற்சி நிலையம்.





## பெரியார் மொழி-கேளீர்!

ஒரு நாட்டிற் பிறந்த மக்களுக்கு வேண்டப்படும் பற்றுகளுக்குள் தலையாய பற்று மொழிப்பற்றே யாகும். மொழிப் பற்று இராதவரிடத்து தேசப்பற்று இராதென்பது நிச்சயம். தேசம் என்பது மொழியை அடிப்படையாகக் கொண்டு இயங்குவது. ஆதலால் தமிழர்களுக்குத் தாய் மொழிப்பற்றுப் பெருக வேண்டும் என்பது எனது பிரார்த்தனை.

தமிழ்நாட்டில் பிறந்தவர்களுக்கு மொழிப்பற்று அவசியம்! அவசியம்! என்று சொல்லுகிறேன். வங்காளிக்கு வங்க மொழியில் பற்றுண்டு; மராட்டியனுக்கு மராட்டிய மொழியில் பற்றுண்டு. ஆந்திரனுக்கு ஆந்திர மொழியில் பற்றுண்டு; ஆனால், தமிழனுக்குத் தமிழில் பற்றில்லை. தாய்மொழியில் பற்றுச் செலுத்தாத வரையில் தமிழர்கள் முன்னேற்றமடைய மாட்டார்கள்.

தாய்மொழி என்பதற்காகவோ, நாட்டு மொழி என்பதற்காகவோ எனக்குத் தமிழ்மொழியிடத்து எவ்விதப் பற்றும் இல்லை. தமிழ் தனிமொழி என்பதற்காகவோ, மிகப் பழைய மொழி, சிவபெருமான் பேசிய மொழி என்பதற்காகவோ, அகத்தியரால் உண்டாக்கப்பட்டது என்பதற்காகவோகூட எனக்கு அதில் பற்றில்லை. குணத்திற்காகவும், குணத்தினால் ஏற்படும் நற்பயனுக்காகவும்தான் நான் எதனிடத்திலும் பற்று வைக்கக்கூடும். எனது மொழி, எனது தேசம், எனது மதம் என்பதற்காகவோ, என்னுடையது பழமையானது என்பதற்காகவோ, நான் பாராட்டுவதில்லை. நான் தமிழனிடத்தில் அன்பு வைத்திருக்கிறேன் என்றால், அதன்மூலம் நான் எதிர் பார்க்கும் நன்மையையும் அது மறைய நேர்ந்தால் அதனால் இழப்பு ஏற்படும் அளவையும் உத்தேசித்தே நான் தமிழனிடத்து அன்பு செலுத்துகிறேன்.

[8-ஆம் பக்கத் தொடர்ச்சி]
களையும், துறைகளையும் பல்கலைக் கழகத்தின் வளர்ச்சியை உட்கொண்டு அவ்வப்போது தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

கீழ்க்கண்ட புலங்களும் அவற்றின் கீழ் குறிப்பிட்ட துறைகளும் முதலில் ஏற்படுத்தப்படும்.

1. கலைப் புலம்.
2. சுவடிப் புலம்.
3. மொழிப் புலம்.
4. அறிவியல் புலம்.
5. வளர் தமிழ்ப் புலம்.

**கலைப் புலம்**

சிற்பத் துறை
ஓவியத் துறை
இசைத் துறை
நாடகத் துறை

**சுவடிப் புலம்**

ஓலைச் சுவடித் துறை
அச்சு சுவடித் துறை (அரிய பழைய நூல்கள்)
கல்வெட்டுத் துறை

**வளர்தமிழ்ப் புலம்**

அயலகத் தமிழ்த் துறை
மொழி பெயர்ப்புத் துறை
தொகுப்புத் துறை

**மொழிப் புலம்**

இலக்கியத் துறை
மொழியியல் துறை

**அறிவியல் புலம்**

சித்த மருத்துவத் துறை
பண்டைய அறிவியல் துறை
தொழில் துறை
கட்டடக் கலைத் துறை

பல்கலைக் கழகம் பல புலங்களாக இயங்கும். புலங்களின் உட்பிரிவு துறைகளாகும். ஒவ்வொரு துறைக்கும், ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பேராசிரியர்கள் இருப்பர். தொடக்கத்தில் 15 பேராசிரியர்கட்கும், 30 துணைப் பேராசிரியர்கட்கும் நிதி வசதி செய்யப்படும். பின்னர் விரிவு செய்யப்படும். ஒவ்வொரு துறையும் ஒரு பேராசிரியரின் தலைமையின்கீழ் இயங்கும். பேராசிரியர்கள் துணைப் பேராசிரியர்களோடு ஆய்வாளர்கள் ஒவ்வொரு துறையிலும் இருப்பர். பேராசிரியர், துணைப் பேராசிரியர் பெரும்பாலும் நிரந்தரமான பதவி வகிப்பவர்கள். ஆனால் ஆய்வாளர்கள் குறிப்பிட்ட திட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்ட கால கட்டத்திற்கு அமர்த்தப்படுவார்கள்.

**புலத் தலைவர்:**

துறைத் தலைவர்களாகப் பொறுப்பேற்றிருக்கும் பேராசிரியர்களில் ஒருவர் புலத் தலைவராகச் சுற்றுமுறையில் பொறுப்பேற்பார். இதற்கான நடைமுறை விதிகளை அவ்வப்பொழுது ஆட்சிக்குழு வரையறுக்கும்.

**ஆய்வாளர்கள்:**

ஆய்வாளர்களின் தொகை பல்கலைக் கழகம் மேற்கொண்டுள்ள பணிகளின் அளவினைப் பொறுத்தது. ஆய்வாளர்கள் எந்தத் திட்டத்தின்கீழ் நியமிக்கப்படுகிறார்களோ அதன் நிதி ஒதுக்கீட்டில் ஊதியம் பெறுவர். எல்லா ஆய்வாளர்களும் அரசின் மானியத்திலேயே ஊதியம் பெற வேண்டுமென்பது இல்லை. ஆய்வுவுப் பணிகள் வளர வளர ஆய்வாளர் பெருகுவர். முதல் கட்டத்தில் 50 ஆய்வாளர் பதவிகட்கு நிதி வசதி செய்யப்படும். ஆய்வாளர் ஆய்வுத் தகுதி பெற்றவர்களாக இருத்தல் வேண்டும் அல்லது துறை அனுபவம் உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

**சிறப்புரையாளர்கள்:**

இந்தியத் துணைக் கண்டத்திலும் அயல் நாடுகளிலும் உள்ள பல்கலைக் கழகங்கள், ஆய்வு நிறுவனங்களில் பணிபுரியும் அறிஞர்களும், தனி அறிஞர்களும் அவ்வப்பொழுது குறுகிய காலத்திற்கு பல்கலைக் கழகத்தின் பணியாற்றும் வாய்ப்புகள் சிறப்பாக இருக்கும். அயல் நாட்டினர் வந்து பணிபுரியும் சூழ்நிலை வளர்க்கப்படும். இதற்குச் சிறப்புரையாளர் என்ற பகுதியில் ஏற்பாடு செய்யப்படும்.

**ஆய்வு மையங்கள்:**

தமிழ்ப் பல்கலைக் கழகம் தஞ்சையில் தனது தலைமை இடத்தைக் கொண்டிருக்குமாயினும், கொள்கையளவில் அதன் பணி தமிழ் கூறும் நல்லுலகைத் தழுவியதாக இருக்கும். எனவே நிலைமைக்கேற்பப் பெரிதாகவோ, சிறிய அளவிலோ, புதிய ஆய்வு மையங்களை அமைக்கவும், இருக்கின்ற நிறுவனங்களை ஆய்வு மையங்களாக ஏற்கவும், தமிழ் பல்கலைக்கழகம் அதிகாரம் பெற்றிருக்கும். ஒரு மாணவர், ஏற்கப்பட்ட எந்த மையத்திலும் ஆய்வு மேற்கொள்ளுவதற்கான வாய்ப்புகள் இருக்கும். இதற்கான நடைமுறை விளக்கங்கள் ஆட்சிக் குழுவால் நிர்ணயிக்கப்படும். கொள்கையளவில், பரந்த அளவில் செயல்படும் தகுதியுடையதாக இப் பல்கலைக் கழகம் அமைக்கப்படும்.

**நூலகம்:**

தமிழ்ப் பல்கலைக் கழகம் தமிழ் ஆய்வின் ஒரு சில கூறுபாடுகளில் மற்றைய பல்கலைக் கழகங்கள், நிறுவனங்கள் எல்லாவற்றையும்விட மிக உயர்ந்த வாய்ப்புகளை உடையதாக இருக்கும். அவற்றில் ஒன்று நூலகம். தமிழ் வரலாறு, தமிழக வரலாறு, பண்பாடு; தொன்மை பற்றி ஆராய்ச்சி, ஆகியவற்றிற்கு வேறு எங்கும் இல்லா அளவிற்கு, சுவடிகள், நூல்கள், பிற சான்றுகள் சான்றுகளின் படிகள் ஆகியவற்றைக் கொண்டதாக இந்நூலகம் அமையும். உலகின் பல பகுதிகளில் தமிழ் ஆய்வில் ஈடுபட்டுள்ளோர் இதனுடன் தொடர்பு கொண்டு

## தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் குறிக்கோள்கள்

தமிழ்நாட்டின் பல்கலைக் கழகங்களில் வளர்ந்து வலுப் பெற்ற தமிழ்த் துறைகளும், தமிழ்க் கல்லூரிகளும், தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டு இயங்கும் கல்லூரிகளும் இருக்கின்றன. இன்றுள்ள பல்கலைக் கழகத் தமிழ்த்துறைகளில் பணியும், அமைய இருக்கும் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் பணியும் சில துறைகளில் பொதுவாக இருந்தாலும், தமிழ்ப் பல்கலைக் கழகம் சிறப்பியல்புகளை உடையதாகவும் ஏனையப் பல்கலைக் கழகங்களின் பணிகளைத் திரும்பச் செய்யாததாகவும், பிற பல்கலைக் கழகங்களின் தமிழ்த் துறைகளின் வளர்ச்சிக்கு உதவுவதாகவும் அமைதல் முறையாகும். மேலே கூறிய அடிப்படைக்கு ஏற்பத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் குறிக்கோள்கள் வருமாறு:

1. தமிழ்ப் பல்கலைக்கழகம் ஓர் உயர் நிலை ஆய்வு நிறுவனமாகச் செயல்படும்.
2. தமிழகத்துக்கு வெளியே இந்தியாவிலும் பிற நாடுகளிலும், தமிழ் பயில விரும்புவோர்களுக்குப் பயிற்சி அளிக்கும்.
3. தமிழர் கலை, பண்பாடு, இசை, கூத்து, ஓவியம், சிற்பம். கட்டடம், இலக்கியம், இலக்கணம், மொழியியல், வரலாறு, சமயம், மெய்ப்பொருளியல், நில நூல், திணை நூல் வானிலைக் கோள்கள், கடற்செலவு, சோதிடம், சித்த மருத்துவம், பொறியியல், அறிவியல், கை வண்ணத் தொழில் போன்ற துறைகளை ஆய்ந்து வரன்முறைப்படுத்தும்.
4. பல்கலைக் கழகக் குறிக்கோள்களுக்கு ஏற்ற தொடர்பான பிறமொழி நூல்களைத் தேவைக்கேற்ப மொழி பெயர்க்கும். தமிழில் சிறந்த நூல்களைப் பிற மொழிகளில் மொழி பெயர்க்கும்.
5. ஓலைச் சுவடிகளையும், பழைய அச்சுச் சுவடிகளையும் பேணி வெளியிடும்.
6. தமிழ் மொழி, தமிழ்ப் பண்பாடு, தமிழர் வரலாறு காட்டும் அனைத்துக் கல்வெட்டுக்களையும், பிற சான்றுகளையும் தேடித்தொகுத்து ஆய்வுக் கருத்துடன் வெளியிடும்.
7. தமிழ் மக்களிடையே தமிழகத்திலும் தமிழ் வழங்கும் மற்றை நாடுகளிலும் வழக்கிலிருக்கும் சொற்கள், சொற்றொடர்கள், மரபுச் செய்திகள், தொழில் துறை, உழவுத் துறைச் சொற்கள், அரிய செயல் முறைகள் இவைகளைத் தொகுத்து விளக்கத்துடன் வெளியிடும்.
8. தொன்மையை ஆராயும்போது, இன்றைய அறிவியல் நோக்கோடும், எதிர்கால வளர்ச்சி நோக்கோடும் ஆராயும்.
9. வளரும் உலகின் அறிவுத் துறைகள் அனைத்தையும் தன்னுள் கொண்ட கல்வி மொழியாகத் தமிழ் வளரவும், வளம் பெறவும் ஏற்ற அணுகு முறை செயல்முறை பற்றி ஆய்ந்து பொருத்தமான செயல்முறைகளை வகுக்கும்.



## தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி பதவி ஏற்பு

டெல்லியில் தமிழ் நாடு அரசின் சிறப்புப்பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ள திரு. இரா. மோகனரங்கம் எம்.பி., அவர்கள் 27.8.1981 காலை 11-30 மணியளவில் தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் முன்னிலையில் பதவிப் பொறுப்பேற்றார்.

தகவல்கள் சேகரிக்கும் தரத்திற்கு உயர்ந்ததாகவும், நவீன கருவிகள், செயல் துறைகள் கொண்டதாகவும் நூலகம் அமைக்கப்படும்.

**அருங்காட்சியகம்**

நூலகம் போன்றே தனிச் சிறப்புடைய மற்றொரு பகுதி அருங்காட்சியகம். சங்க காலத்திற்கு முந்திய காலந்தொட்டு இன்றுவரை அமைந்துள்ள தமிழரின் நீண்ட பயணப் பாதை, மனித இனத்தின் வரலாறு தொடக்கத்தோடும், நாகரீக வளர்ச்சியின் தொடர்போடும் இணைந்த ஒன்று. மனித சமுதாயம் படைத்த எண்ணற்ற கலைகளிலும் அவர்கள் பங்களிப்புச் செய்யாத பகுதிகள் இல்லை. அவையனைத்தையும் காலத்தோடு, சான்றுகளோடு, கற்கும் இளைஞர், கற்றுத் தேர்ந்த அறிஞர் என எல்லாருக்கும் விளக்கும் சாதனமாக இக் காட்சியகம் அமையும். செம்பிலும் மற்றைய உலோகங்களிலும் செய்த கலை நிறைந்த உருவங்கள் முதல் ஓவியம் இசைக் கருவிகள் வரை எண்ணிறந்த தமிழர் பண்பாட்டுச் சின்னங்கள் இங்கு இடம் பெறும். இதற்கான பொருள்கள் இந்திய துணைக் கண்டம் மட்டுமின்றி வெளி நாடுகளில் இருந்தும் சேகரிக்கப்படும்.

**பதிப்பகம்:**

பல்கலைக் கழகத்தின் முக்கியமான பணிகளில், நூல் வெளியீடும், இதழ் வெளியீடும் பதிப்பும் ஒன்றாகும். சுவடிகள், கல்வெட்டுகள் பதிப்பித்தல், அரிய பழைய தமிழ் நூல்களை மீண்டும் பதிப்பித்தல், மற்ற மொழிகளினின்றும் மொழி பெயர்ப்பு நூல்கள் வெளியிடுதல், கலைக் களஞ்சியம், அகராதி முதலியன பதிப்பித்தல் ஆகிய அனைத்துப் பணிகளும் அச்சிடும் பணியை அடிப்படையாகக் கொண்டவை. எனவே பல்கலைக் கழகம் தனக்கென ஒரு பதிப்பகத்தைத் தொடக்கத்திலிருந்தே கொண்டிருக்க வேண்டும். பொதுவாகவே ஆய்வு, உயர் கல்வி, புலமைப் பதிப்புகள் வெளியிடுதல் தொடர்புள்ள கல்வி நிறுவனத்திற்குப் பதிப்பு வசதிகள் சிறந்த முறையில் இருக்க வேண்டும். தனிப் பல்கலைக் கழகம் இந்த முக்கியமான தனது கடமையை நிறைவேற்றுவதற்குத் தன் காலில் நிற்கும் பதிப்புத் தகுதி பெற்றிருக்கும்.

ஒரு பல்கலைக் கழகத்தை அமைப்பதற்கான இடத்தைத் தேர்ந்தெடுக்கும்பொழுது பல கூறுபாடுகள் கவனத்திற்கு கொள்ளப்பட வேண்டும். அவற்றுள், நீர், போக்குவரத்து வசதி, வளர்ச்சி வாய்ப்புள்ள சூழ்நிலை, துணை நிற்கக்கூடிய நிறுவனங்களின் அண்மை, மற்றும் சமுதாய பொருளாதார நோக்கு ஆகியன முக்கியமானவை. பல்கலைக் கழகத்தில் எதிர்காலம் ஆண்டுக் கணக்கில் எண்ணப்படுவது அன்று அவை பல நூற்றாண்டுகள் கடந்து வாழ்வன. எனவே எதிர்காலத் தேவைகளை நீண்ட கால அளவில் மனத்தில் கொண்டு தேவையான பரப்பும், நிலையான வசதிகளும் உள்ள இடம் தேர்ந்தெடுக்கப்பட உள்ளது.

பல்கலைக் கழகம் என்று எண்ணும்பொழுது, பல வசதிகளைத் தன்னுள் தாங்கி நிற்கும் ஒரு கல்விச் சூழ்நிலை கண்முன் வருகிறது. அலுவலகம், நூல் நிலையம், பல புலங்கள், வேற்றின துறைகள், அரங்குகள், பதிப்பகம், வங்கி, உண்டிச்சாலை,

நாடெலாம் புலவர் கூட்டம்
நகரெலாம் பள்ளி ஈட்டம்;
வீடெலாம் தமிழ்த்தாய்க் கோட்டம்;
விழவெலாம் தமிழ்க் கொண்டாட்டம்
பாடெலாந் தமிழில் தேட்டம்
பணையெலாம் தமிழ்க்கூத் தாட்டம்;
மாடெலாம் தமிழ்ச்சொல் லாட்டம்
வண்டமி ழகத்து மாதோ!

—புலவர் குழந்தை
'இராவண காவியம்'

மருத்துவமனை, கடைகள் போன் போன்ற பொது வசதிகள், மாணாக்கர் விடுதிகள், குடியிருப் பிருப்பு, உடற்பயிற்சி வாய்ப்பு கள், போக்குவரத்துச் சாதன மையங்கள், பள்ளி ஆகியன இடம் பெ[illegible]ம்.

25371

பல்கலைக் கழகத்தின் நிதி, கீழ்க்கண்ட வழிகளில் பெறப் படுகிறது:

(அ) மாநில அரசின் மானியம்

(ஆ) பல்கலைக் கழக மானியக் குழுவின் நிதி உதவி

(இ) பல்கலைக் கழகத்தின் சொந்த வருவாய்

பல்கலைக் கழகத்தின் சொந்த வருவாய் என்பது பெரும்பாலும் தேர்வுக் கட்டணம் மூலம் பெறப் படுவதேயாகும். தமிழ்ப் பல்கலை கழகத்திற்கு இந்த வருவாய் வாய்ப்பு இல்லை. நன்கொடை, அறக் கட்டளை போன்ற வழி களில் சில உதவிகள் கிடைக்க லாம். அவை தொடர்ந்த நிதி யுதவியாகாது. எனவே, தமிழ்ப் பல்கலைக் கழகம்-தமிழக அரசு, மானியக்குழு இவற்றின் உதவி யால்தான் நடைபெற வேண்டும். இவற்றில் மானியக் குழுவின் உத விக்கு ஒரு பல்கலைக் கழகம் ஏற் கப்படுவதற்கே, மாநில அரசு, அப் பல்கலைக் கழகத்தின் வளர்ச் சிக்கு ஒரு குறிப்பிட தொகையைச் செலவழித்திருக்க வேண்டும். தமிழ்ப்பல்கலைக்கழகம்அமைக்கப் பெற்று அது ஒரு அளவிற்கு முன் னேறிய நிலையில்தான் மானியக் குழுவின் உதவி கிடைக்கும். எனதே தொடக்கக் காலத்தில் அதற்கான நிதி வசதிகளைப் பெரும்பாலும் தமிழக அரசே அளிக்கும்.

தமிழக அரசின் நிதியுதவி இரண்டு வகைப்படும்:

அடிப்படை வசதிகட்கான தொடரா மானியம் (Non recurring grant)

பல்கலைக் கழக நடைமுறைக்கும் வளர்ச்சிக்குமான தொடர் மானி யம் (Recurring grant)

தொடரா மானியம், நிலம், கட்டடம், நீர், மின்சாரம், சாலை வசதிகள் ஆகியவற்றிற் கானவை. தொடர் மானியம் ஆண்டுதோறும் வழங்கப்படுவது. ஆசிரியர், அலுவலர், பலதரப்பட் பட்ட ஊழியர்கள், பயிற்சி நிலை யங்கள், பயிற்சிப் பொருள்கள், நூல்நிலையம், அடிப்படையில் தேவையான கருவிகள் வாங்குதல் ஆகிய செலவினங்கட்காக ஆண்டு தோறும் வழங்கப்படுவது.

> நாடு என்பது வெறும் பூகோளப் படம் அல்ல; அங்கு வாழும் மக்களின் உணர்ச்சித் தொகுப்பே அது. கிராமங் களுக்கு நாம் உலக அறிவை ஊட்டவில்லை என்றால் அது நாட்டை வாழ வைக் காது.
>
> -பேரறிஞர் அண்ணா

இந்தியப் பண்பாட்டின் அடிப் படைகளை அறிய உதவும் இரு கண்கள் போன்று அமைநதவை தமிழும், வடமொழியும். அவ்விரு மொழிகளின் பங்களிப்பை ஆழ்ந்து நுணுக்கறிந்தாலன்றி, நமது பாரம்பரியத்தை முழுமை யாக அறிய முடியாது. சுருக்க மாகக் கூறுவதானால், எப்படி ஐரோப்பிய நாகரீகத்திற்கு இலத் தீனும், கிரேக்க மொழியும் முக்கி யமோ, அதுபோல இந்தியப் பண் பாட்டிற்கு வடமொழியும், தமி ழும் ஆகும். இதனை உணர்ந்த மேலை நாட்டினர் பலர் இந்த அணுகுமுறையில் தமிழைக் கற்று அதில் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர். நம்நாட்டில் வட மொழி இந்தக் கண்ணோட்டத் துடன் பயிலப்படுகிறது. அதற் கென தனிப் பல்கலைக் கழகங் களும் இருக்கின்றன. தமிழ் வழக் கிலுள்ள மொழியாதலின், அது மற்றைய மாநில மொழிகளில் ஒன்றுபோல கருதப்பட்டு அதன் தற்காலப் பிரச்சினைகளோடு தொடர்புள்ள ஆய்வுகளும்பொது வாக இலக்கிய இலக்கணக் கல்வி யுமே இடம் பெற்று வருகினறன. அது இந்தியாவின் பண்பாட்டு மொழி என்ற தகுதி அவ்வளா வாக இந்நாட்டின் ஆய்வாளர் மனத்தில் முக்கியத்துவம் பெறாது நின்றுவிட்டது. இந்தக் குறையைப் போக்கப் இந்தியப் பண்பாட்டின முழுமையையும் அறிய தமிழின் பங்களிப்பையும் முறையோடு ஆராய வேண்டும்.

தமிழர் உலகின் பல பகுதிகளில் கணிசமான தொகையினராக வாழ்கின்றனர். சில நாடுகளில் தமிழ் தேசிய மொழி அல்லது ஏற்கப்பட்ட மொழி என்ற தகுதி பெற்றிருக்கிறது. ஆகவே, தமிழ் மக்கள் தமிழ்க்கலை, பண்பாடு, மொழி ஆகியவற்றுடன் தமது தொடர்பை வலுப்படுத்திக் கொள்ளவும், தங்கள் பண்பாட் டைப் பாதுகாக்கவும் விரும்புகின் றனர்.

தமிழ் வழங்கும் நாடுகளில் தனித்தனியே, ஆங்காங்கு அறி வியல், தொழிலியல், மருத்துவம் வேளாண்மை, அரசியல், பொரு ளாதாரம் போன்ற அறிவுத்துறை நூல்கள் தமிழில் வெளிவருகின் றன. ஒவ்வொரு சூழ்நிலையில, ஒவ்வொரு வகையான துறைச் சொற்களும் மரபுகளும் உருவாகி வருகின்றன. இவற்றை முறை யாக வழியில் ஒருமைப்படுத்து வதும், சீர்மைப்படுத்துவதும் தேவையான ஒன்று.

தமிழ் வளர்ச்சிக்கான பல பணி களைத் தமிழகம் மேற்கொண்டு இருக்கிறது. கலைக் களஞ்சியம் உருவாக்குதல், அகராதி ஆக்கல், கலைச் சொற்கள் உருவாக்குதல், எழுத்துச் சீர்மை, ஆட்சிமொழி வளர்ப்பு, தமிழ்ப் பயிற்றுமொழி திட்டம் ஆகியன குறிப்பிடத்தக் கவை. இம்முயற்சிகளும் தனித் தனியே தொடர்புள்ள நிறுவ னங்கள், அரசுத் துறைகள், தனி மாந்தர்கள் ஆகியோரால் செய்ய பட்டு வருகின்றன. இவற்றையும் ஓரளவு ஒருமைப்படுத்தவதும், ஊக்குவிப்பதும் தேவையான ஒன்றாகும்.

இதுபோன்ற பல்வகையான ஆக்கப் பணிகளைத் தமிழ்ப் பல் கலைக் கழகம் செயல்படுத்தும். ஆதலின் ஆண்டநாள் ஆண்ட பெருமை எல்லாம் அன்னைத் தமி ழுக்கே உருவாக்கும் திருநாள் மட்டுமல்ல தமிழ்ப் பல்கலைக் கழகத்தொடக்க நாள் —

மொழிகள் குல முதல்விக்கு முடிசூட்டும் இத்திருநாள் -.முன் னைப் பழைமைக்குப் பழைமை யாய், பின்னைப் புதுமைக்குப் புதுமையாக விளங்க புதிய புதிய கலைகள் தமிழில் தோன்ற அடி கோலும் நன்னாளாகும்.

தஞ்சாவூரில் இப்பொழுது அமையும் பல்கலைக் கழகம் தற் காலிகமாக தஞ்சை அரண்மனைப் பகுதியில் ரூபாய் 7.80 இலட்சம் செலவில் செப்பனிடப்பட்ட இடத்தில் இயங்கும்.

## 1000 ஏக்கர் நிலப்பரப்பில்:


தமிழ்ப் பல்கலைக் கழகத்திற் காகத் தஞ்சையை அடுத்துள்ள பிள்ளையார்ப்பட்டி, நீலகிரி தோட்டம் ஆகிய சிற்றூர்களில் ஏறத்தாழ 1000 ஏக்கருக்கு மேல் நிலப் பரப்பளவு கையகப்படுத்த பட்டு, கட்டடங்கள் எழுப்பப்பட விருக்கின்றன.

தமிழுக்குத் தொண்டு செய் தோர் சரித்திரத்தில் நிலைத்து நிற்பது போல - தமிழ்கூறும் நல் லுலகு முழுவதும் 'தமிழாய்வு' மேற்கொள்ள அமையும் தமிழ்ப் பல்கலைக் கழகம் —

பேரறிஞர் அண்ணாவின் புகழ் போல அவர்வழி நடக்கும் அர சுக்கும் புகழ் குவிப்பதும் உறுதி! உறுதி!

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


எழிலான வண்ணங்கள்
இனிதான எண்ணங்கள்!
கண்ணைக் கவரும் கைத்தறித் துணிகள்
வண்ண வண்ண பட்டுச் சேலைகள் ஆடவர்
மகளிா அனைவரும் விரும்பும் அருமை
புதுமை இழையும் ஆடைகள் ஆயிரம்
வகைகள்...அழகார்ந்த ரகங்கள்
அனைத்தும் உண்டு!
கோ-ஆப்டெக்ஸ்


திருக்குறள்
யாதும் ஊரே யாவரும் கேளிர்